1579

# அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்

கலாநிதி ச. பாஸ்கரன்



குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1579

Arasady Public Library
Municipal Council
Batticaloa

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | |
|---|---|
| Acc No | 1579 |

அரசியற் கோட்பாடுகளும்
சிந்தனையாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்

## Political Theories and Thinkers

**கலாநிதி ச.பாஸ்கரன்**

*சிரேஸ்ட விரிவுரையாளர்*

*அரசறிவியற் துறை*

*பேராதனைப் பல்கலைக்கழகம்*

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 1579

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1579

அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்
எழுதியது : கலாநிதி ச.பாஸ்கரன் ©
முதற்பதிப்பு : 2019
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550,
மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026
குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Political Theories and Thinkers
by Dr. S. Baskaran ©
First Edition : 2019
Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026
Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6
வெளியீட்டு எண்: #846
ISBN 978-955-659-658-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்

என் அன்பு அம்மாவுக்கும்

தாயாக இருந்து என்னை வளர்த்தெடுத்த

அன்பு அம்மம்மாவுக்கும்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# முன்னுரை

'அரசியல் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்' என்ற இந்நூலாக்க முயற்சி தொடங்கப்பட்டு ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் ஆகி விட்டது. ஏனைய வேலைகளுக்கு மத்தியில் இதனை எழுதவேண்டும் என்ற கட்டாயம் ஒருபுறம் இருந்தாலும் திருப்தியின்மை என்ற விடயமே இந்நூல் வெளிவருவதை தாமதப்படுத்தி விட்டது என்று நினைக்கின்றேன். 'ஒரு பொழுதில் ஓர் ஆசை' என்பது போல எழுதியதை ஒவ்வொரு முறையும் திரும்பத் திரும்ப பார்க்கின்றபோது இன்னும் கொஞ்சம் எழுதலாம், திருத்தலாம், செம்மைப்படுத்தலாம் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. இது எழுத்தாளர்களுக்கு பலமான ஒரு விடயமாக காணப்பட்ட போதும் சில விடயங்களில் பலவீனமானதும் ஆகும். எந்த அளவில் திருப்திப்படுதல் என்பது எப்பொழுதும் சிக்கலான ஒரு விடயமாகவே இருக்கிறது.

அண்மைக்காலத்தில் அரசறிவியல் கற்கைத் துறையில் பெரு மளவான மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. பொதுத்துறை நிர்வாகம், சர்வதேச அரசியல், முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் போன்ற பல்வேறு உப கற்கைப் பிரிவுகள் அரசறிவியலில் இருந்து தோற்றம் பெற்று தனித் துறைகளாக வளர்ச்சி யடைந்து வருகின்றன. மேலைத்தேச பல்கலைக்கழகங்களில் இந்த வளர்ச்சி ஆக்கபூர்வமாக நோக்கப்பட்டு அரசறிவியலுடன் இணைந்த வகையில் இடம்பெற்று வருகின்றது. ஆனால் கீழைத்தேச நாடுகளில் இந்த வளர்ச்சி அரசறிவியலின் அடிப்படைகளையும் கோட்பாடுக ளையும் கவனத்திற் கொள்ளாது இடம்பெறுகின்றமை கவலைக்குரிய விடயமாகும். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆதங்கமே இந்நூல் வெளிவருவதற்கு தூண்டுகோலாக அமைந்தது.

இந்நூலுக்கான உள்ளடக்கத்தை தெரிவு செய்வதிலும் சிக்கல்கள் காணப்பட்டன. அரசியல் சிந்தனையாளர்களின் அரசியல் கோட்பாட்டு வரலாறு மிக நீண்டது. புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள், கிரேக்கர் கால அரசியல் கோட்பாடுகள், மத்திய கால அரசியல் கோட்பாடுகள், நவீன கால அரசியல் கோட்பாடுகள், தற்கால அரசியல் கோட்பாடுகள் என இதன் பரப்பு நீண்டதாக காணப்பட்ட போதும் இவை எல்லாவற்றையும் ஒரு நூலில் உள்ளடக்கிவிட முடியாது என்ற யதார்த்தம் உணரப்பட்டமையினால் நூலின் செம்மையும் ஆழமும் கருதி முக்கியமான ஒரு சில பகுதிகள் மட்டுமே இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் பற்றிய கட்டு ரைகள் தமிழில் அதிகமாக காணப்படாமையினால் அவை பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரசியல் கோட்பாடுகளுக்கான அடிப்படையை வழங்கிய சிந்தனையாளர்கள் என்ற வகையில் கிரேக்கர் காலத்தின் முக்கியமான இரு அரசியல் சிந்தனையாளர் களான பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்றோரும், அரசியல் சிந்தனை வரலாற்றில் மாற்றங்களையும் புரட்சிகளையும் ஏற்படுத்தி பிற்கால அரசியல் கோட்பாடுகளுக்கு திருப்புமுனையாக அமைந்தவர்கள் என்ற வகையில் நவீன காலத்தில் மாக்கியவல்லி, தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், ரூஸோ மற்றும் கால்மாக்ஸ் போன்றவர்களும் மட்டுமே இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலத்தில் அரசியல் கோட்பாடுகளின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டுள்ளமையினாலும் அரசறிவியலைக் கற்கும் உயர்தர மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தில் அரசியற் கோட்பாடுகளும் சிந்தனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாலும் அரசறிவியலை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பயிலும் மாணவர்களுக்கு அரசியற் கோட்பாடுகள் என்ற பகுதி புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாலும் பல்கலைக்கழக உள்வாரி, வெளி வாரி மற்றும் உயர்தர மாணவர்களுக்கும் அரசியல் கோட்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் சிந்தனைகளிலும் ஆர்வமுள்ள வாசகர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும் என நம்புகின்றேன்.

இந்நூலாக்க முயற்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய எனது குடும்பத்தினர், உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள் கின்றேன். என்னை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் இவர்களுடைய பங்கு அளப்பரியது.

இந்நூலை சிறப்பாக வடிவமைத்து அச்சிட்டு பதிப்பித்த குமரன் புத்தக இல்லத்தினருக்கும் ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

12.10.2019 **கலாநிதி. ச. பாஸ்கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | vii |
| 1. | அரசியற் கோட்பாடுகள் : ஓர் அறிமுகம் | 1 |
| 2. | புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் | 22 |
| 3. | புராதன இந்து மத அரசியல் கருத்துக்கள்: கௌடில்யரின் அர்த்த சாஸ்த்திரம் | 29 |
| 4. | புராதன பௌத்தமத அரசியல் கருத்துக்கள் | 48 |
| 5. | புராதன சீன அரசியல் கருத்துக்கள் : கன்பூசியஸ் | 59 |
| 6. | கிரேக்கர் கால அரசியல் கோட்பாடு | 71 |
| 7. | பிளேட்டோவின் அரசியல் கருத்துக்கள் | 78 |
| 8. | அரிஸ்டோடிலின் அரசியல் கருத்துக்கள் | 95 |
| 9. | நவீன அரசியற் கோட்பாடு : மாக்கியவெல்லி | 115 |
| 10. | சமூக ஒப்பந்தக் கோட்பாடு | 139 |
| 11. | தோமஸ் ஹொப்சின் அரசியல் கருத்துக்கள் | 148 |
| 12. | ஜோன் லொக்கின் அரசியல் கருத்துக்கள் | 171 |
| 13. | ரூசோவின் அரசியல் கருத்துக்கள் | 194 |
| 14. | மார்க்சிசக் கோட்பாடு : கால்மாக்ஸ் | 218 |
| உசாத்துணை நூல்கள் Bibliography | | 241 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 01*

# அரசியற் கோட்பாடுகள் : ஓர் அறிமுகம்
# Political Theory : An Introduction

### அறிமுகம்

அரசியற் கோட்பாடுகள் சமூகத்தில் காணப்படும் மரபு, விழுமியங்கள், மதம், ஒழுக்கம், நீதி, சட்டம் என்பவற்றைப் பற்றி குறிப்பிட்டு அவை எவ்வாறு அரசியல் செயற்பாடுகளில் பாதிப்பு செலுத்து கின்றன என்பதைப் பற்றி விளக்குகின்றது. அத்துடன் சமூகத்தில் அதிகாரம் எவ்வாறு பங்கிடப்படுகின்றது அதன் இயல்பு எத்தகையது அது அரசியலில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன என்பதைப் பற்றியும் விளக்குகின்றது அதுமட்டுமன்றி கடந்தகால அரசியல் வரலாற்றையும் பிரச்சனைகளையும் அரசியற் கோட்பாடுகள் எடுத்து விளக்குகின்றன. இதனோடு தற்கால உலகில் காணப்படுகின்ற பன்மைத்துவ கலாச்சாரம், உலகமயமாக்கம் மற்றும் பிராந்தியவாதம் போன்ற எண்ணக்கருக்கள் பற்றியும் தேசிய அரசின் எல்லைகளைக் கடந்து உலகளாவிய ரீதியில் இடம்பெறும் அரசியல் செயற்பாடுகள் பற்றியும் அரசியற் கோட்பாடுகள் எடுத்துக் கூறுகின்றன.

### அரசியற் கோட்பாட்டின் கருத்து

கோட்பாடு என்ற சொல்லைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான theory என்ற சொல் "theoria" என்ற கிரேக்க சொல்லில் இருந்து வந்தது. இதனது கருத்து விஷேடமாக நோக்குதல், ஆழமாகப் பார்த்தல் (well focus) என்பதாகும். இதனடிப்படையில் பொதுவாக அறிவியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்கம், நடைமுறை அம்சங்களை தன்னகத்தே கொண்டு அரசியல் விடயங்களை ஆழமாக நோக்குவதே அரசியல் கோட்பாடுகள் என குறிப்பிடப்படுகின்றன.

எனவே தினந்தோறும் இடம்பெறுகின்ற அரசியல் நிகழ்வுகளை விபரித்து அவற்றை விளங்கப்படுத்தி தொகுத்து மதிப்பீடு செய்து அரசியல் விடயங்களும் அரசியல் கற்கையியலும் எவ்வாறு இருக்கிறது என்பதையும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் விளக்குவதே அரசியல் கோட்பாடாகும். இது ஒரு காலத்தின் கண்ணாடியாக இருந்து அக்கால சமூகத்தில் இடம்பெற்ற இடம் பெறுகின்ற அத்தனை அரசியல் விடயங்களையும் பிரதிபலிக்கின்றது. அதுமட்டுமன்றி ஒரு சமூகத்தின் இருப்பையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக்கூடிய பிரதானமான சக்தியாகவும் அரசியல் கோட்பாடுகள் விளங்குகின்றன.[1] உண்மையில் முறையான சிந்தனைகளின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகளுக்கான நோக்கத்தையே அரசியல் கோட்பாடுகள் விளக்க முயல்கின்றன. அரசியற் கற்கைத் துறையின் போக்கு எப்படி இருக்கின்றது என்பதையே அரசியற் கோட்பாடுகள் மதிப்பீடு செய்கின்றன. இறுதியாக அரசியல் கோட்பாடுகள் எல்லா விடயங்களையும் விமர்சன அடிப்படையில் ஆய்வு செய்கின்றது. ''இங்கிருந்து எங்கே'' என்ற கேள்வியின் ஊடாக அரசியல் கோட்பாட்டின் நோக்கினையும் போக்கையும் தீர்மானிக்கின்றது.

### அரசியற் கோட்பாடுகளுக்கான அடிப்படை

சமூகமே கோட்பாட்டுக்கான அடித்தளம். சமூகத்திலிருந்தே கோட்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. கோட்பாடுகள் ஒருபோதும் வெறுமையிலிருந்து தோன்றுவதில்லை. சமூகத்தில் தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுக்காண முயலும்போது முன்வைக்கப்படும் சிந்தனைகளே கோட்பாடுகள் ஆகின்றன.[2] கால மாற்றத்திற்கேற்ப

1. Andrew Hacker, (1969) *Political Theory: Philosophy, Ideology, Science.* New York: Macmillan. P.07
2. Birch, A. H. (1993) *The Concepts and Theories of Modern Democracy.* London: Routledge.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளும் மாற்றமுறுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் புதிய பிரச்சினைகளை அக்கால கோட்பாடுகள் பிரதிபலிக்கின்றன.[3]

எண்ணங்களே கோட்பாட்டுக்கான அடிப்படை. ஆயினும் தோற்றம் பெறுகின்ற எண்ணங்கள் எல்லாம் கோட்பாடுகள் ஆவதில்லை. எண்ணங்கள் பகுத்தறிவு அடிப்படையில் பொதுமைப் படுத்தப்பட்டு சமூகத்துக்கு அவசியமான பொருத்தமான விடயங்களே கோட்பாடுகள் ஆகின்றன. எக்காலத்துக்கும் பொருத்தமான கோட்பாடு என்று ஒன்றில்லை. சில சமயங்களில் ஒரு காலத்திற்கு பொருத்தமான கோட்பாடு இன்னொரு காலத்திற்கு பொருத்தமாக அமைவதில்லை.[4] இந்த கோட்பாடுகள் அரசியல் விடயங்களோடு தொடர்புள்ளதாக அமைகின்றபோது அவை அரசியல் கோட்பாடு கள் எனப்படுகின்றன. மார்க்சிசக் கோட்பாடு, பாசிசக் கோட்பாடு, தாராண்மைவாதக் கோட்பாடு, சமூக ஒப்பந்த கோட்பாடு என்பன அரசியல் கோட்பாடுகளுக்கான சில உதாரணங்கள் ஆகும்.

ஆயினும் முக்கியமாக அரசியல் கோட்பாட்டாளர்களது கருத் துக்களை அல்லது அவர்களது சிந்தனைகளை பொதுவாக கற்பதை நாம் அரசியல் கோட்பாடு என்று குறிப்பிட முடியாது. அவர்களது சிந்தனைகள் எப்படி தோற்றம் பெற்றன? தோற்றம் பெற்றதன் சமூகப் பின்னணி என்ன? இதற்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பு யாது? அரசியலில் அரசியல் கோட்பாடுகள் ஏற்படுத்திய தாக்கம் என்ன? என்று விபரமாக ஆழமாக கற்பதே அரசியல் கோட்பாடு ஆகும்.

## அரசியற் கோட்பாட்டின் இயல்பு

அரசியல் கோட்பாடானது பல்வேறு இயல்புகளைக் கொண்டிருக் கிறது. அது பரந்ததாகவும் குறுகியதானதுமான இயல்பைக் கொண்டி ருந்தாலும் மிக ஆழமானது. மரபுரீதியான அம்சங்களையும் நவீன அம்சங்களையும் தன்னகத்தே கொண்டது. எதிர்கால அரசியல் போக்கு

3. Arnold Brecht. (1959) *Political Theory: The Foundation of the Twentieth -Century Political Thought.* Princeton University Press.
4. Gettell. R.G. (1943) *Political Science.* Boston. P.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி எதிர்வு கூறக்கூடியது. நடைமுறை அரசியலை விளங்கிக் கொள்ளவும் அரசியலில் முறையான ஆய்வு வளரவும் வழிவகுக் கின்றது. அரசியலில் நடத்தைவாத பண்பையும் தற்கால அரசியல் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கின்றது. சமூகத்தில் காணப்படும் அரசியல் பொருளாதார சமூக காரணிகளை விளங்கிக்கொள்ளவும் உதவி செய்கின்றது. இத்தகைய இயல்புடைய அரசியல் கோட் பாடானது ஒரு கால சமூகத்தின் அரசியல் பொருளாதார சமூக காரணிகளின் விளைவாகவே தோற்றம் பெற்றது. ஆகவே அரசியல் கோட்பாட்டுக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு மிகவும் இறுக்கமானது. இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஆகவே தான் சமூகப் பின்னணியில் இருந்து கோட்பாட்டையும் கோட்பாட்டில் இருந்து சமூகப் பின்னணியையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

மக்கள் தமது பொதுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கூட்டாக மேற்கொள்கின்ற செயற்பாடுகள் மற்றும் நடைமுறை அம்சங்களையே அரசியல் குறித்து நிற்கின்றது. இந்த பொதுத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற மற்றும் கூட்டாக தீர்மானம் மேற்கொள்கின்ற செயற்பாடு களின் இயல்பு மற்றும் பொதுப்பண்பினையே அரசியல் கோட்பாடுகள் விளக்குகின்றன. அரசியலைப் போலவே அரசியற் கோட்பாடுகளும் விஞ்ஞானமாகவும் கலையாகவும் காணப்படுகின்றன. விஞ்ஞானம் முறையான அறிவைப் பெற்றுக்கொள்வதனையும் கலையானது உலகைச் சுற்றி இடம்பெறுகின்ற அரசியற் செயற்பாடுகளை விளக்கு வதினையும் நோக்காக கொண்டுள்ளன.

ஆரம்பத்தில் அரசியலில் அரசாங்கத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையே முக்கியம் பெற்றது. பின்னர் அரசாங்கம் தவிர்ந்த ஏனைய சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளும் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் முக்கிய பங்கு வகிக்க தொடங்கியது. இதன் காரணமாக அரசியற் கோட்பாடுகள் அரசியலமைப்பு மற்றும் அரசாங்க நிறுவனங்களை மட்டுமன்றி பொருளாதார முறைகள், சமூகத்தின் வளப்பங்கீடு, வரலாறு, கலாச்சார உறவுகள் என்பன போன்ற சமூக அம்சங்களையும் தற்காலத்தில் பிரதிபலிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே விரிவடைந்து வருகின்ற ஆட்சியல் செயன்முறைகள், மனித தேவைகள், கருத்துக்கள் மற்றும் சிந்தனைகள் என்பவற்றை பிரதிபலிப்பதாக அரசியல் கோட்பாடுகள் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது. மக்கள் ஏன் கூட்டாக செயற்படுகின்றார்கள்? அவர்கள் எவ்வாறு கூட்டு அரசியற் செயற்பாடுகளை ஒழுங்கமைக் கின்றார்கள்? மக்களின் கூட்டு அரசியற் செயற்பாடுகள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும்? என்ற வினாக்களின் அடிப்படையில் அரசியற் கோட்பாடுகள் இதற்கு விடை தேட முயற்சிக்கின்றன.

**அரசியல் எண்ணக்கருவும் கோட்பாட்டு உருவாக்கமும்**

ஆய்வுச் செயன்முறைகளிலும் பகுத்தறிவுச் செயற்பாடுகளிலும் எண்ணக்கரு உருவாக்கம் என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏதாவதொரு விடயம் பற்றி சிந்தித்தல், விமர்சித்தல், விவாதித்தல், விளக்குதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் போன்ற செயன்முறைகளை மேற்கொள்வதற்கு எண்ணக்கருக்கள் கருவியாக இருக்கின்றன. ஆகவே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்களை சரியாக விளங்கிக்கொள் வதற்கு எண்ணக்கரு உருவாக்கம் என்பது அவசியமானதொன்றாக குறிப்பிடப்படுகின்றது. உதாரணமாக இலங்கையில் ஜனநாயகம் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்படுகின்ற போது முதலில் ஜனநாயகம் என்றால் என்ன என்பது வரையறை செய்யப்பட வேண்டும். பின்னர் இலங்கையில் ஜனநாயகம் எவ்வாறு காணப்படு கின்றது என்பது விளக்கப்படவேண்டும். இவ்வாறு ஒரு ஆய்வில் எண்ணக்கரு உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே பகுப் பாய்வு செயன்முறையும் கோட்பாட்டு உருவாக்கமும் இடம்பெறும்.

ஒரு அரசியல் எண்ணக்கரு என்பது ஏதாவதொரு அரசியல் விடயம் பற்றிய பொதுமைப்படுத்தப்பட்ட கருத்தாகும். இங்கு ஏதாவதொரு விடயம் பற்றிய விளக்கம் என்பதிலும் பார்க்க கருத்து நிலை என்பது பற்றியே குறிப்பிடப்படுகின்றது. அதாவது ஏதாவதொரு அரசியல் விடயத்தின் இயல்பிலிருந்து பொதுமைப்படுத்தப்பட்டு உருவாக்கப்படுகின்ற கருத்துநிலையே அரசியல் எண்ணக்கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படுகின்றது.[5] உதாரணமாக ஜனாதிபதி தொடர்பான எண்ணக்கரு ஒன்று முன்வைக்கப்படுகின்ற போது பதவியில் இருந்த எந்தவொரு ஜனாதிபதியைப் பற்றியோ அவர்கள் தொடர்பான விபரங்களையோ குறிப்பிடுவது அரசியல் எண்ணக்கருவாக கருதப்படமாட்டாது. மாறாக இங்கு நிறைவேற்று அதிகாரக் கட்டமைப்பு பற்றியே முக்கியமாக குறிப்பிடப்படுகின்றது. இதுவே ஜனாதிபதி தொடர்பான எண்ணக்கருவின் பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துநிலையாகும். எனவே அரசியல் அடிப்படையிலான பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துநிலையே அரசியல் எண்ணக்கரு எனக் குறிப்பிடப்படுகின்றது.

அரசியல் எண்ணக்கருக்களுக்கும் அரசியல் கோட்பாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அரசியல் எண்ணக்கருக்களில் இருந்தே அரசியல் கோட்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.[6] அரசியல் கோட்பாடுகளை கட்டியெழுப்புவதற்கு பொதுமைப்படுத்தப்பட்ட அரசியல் எண்ணக்கருக்கள் மிகவும் அவசியமானதாகும்.[7] ஆயினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல் எண்ணக்கருக்களின் உருவாக்கமானது தவறாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது. அரசியல் எண்ணக்கரு உருவாக்கப்படுகின்ற போது அதனது உண்மையான கருத்து சரியாக விளங்கிக் கொள்ளப் படாமல் பிழையான அனுமானங்களின் அடிப்படையில் அரசியல் எண்ணக்கருக்கள் உருவாக்கப்படுகின்றன. இது முறையான அரசியல் கோட்பாடுகளைக் கட்டியெழுப்புவதை பாதிக்கின்றது.

### அரசியல் எண்ணக்கருக்கள் தொடர்பான பிரச்சனைகள்

அரசியல் எண்ணக்கருக்களை உருவாக்குகின்ற போதும் அவற்றை பயன்படுத்துகின்ற போதும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படு கின்றன பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல் எண்ணக் கருக்களை அரசியல் தொடர்பான ஒழுக்க, தத்துவ மற்றும் கருத்தியல் அடிப்படைகளில் இருந்து பிரிக்கமுடியாமை என்பது பிரச்சனையாக

5. Bellamy, R. and Mason, M. (eds) (2003) *Political Concepts*. Manchester University Press.
6. Held, D. (ed.) (1991) *Political Theory Today*. Oxford: Polity Press.
7. Stirk, P. and Weigall, D. (eds) (1995) *An Introduction to Political Ideas*. London: Pinter.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுகின்றது. இவை ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை யாகவும் பிரிக்கமுடியாதவையாகவும் காணப்படுகின்றன. அரசியல் தொடர்பான நியம எண்ணக்கருக்களில் (Normative Concepts) அரசியல் அடிப்படைகளாக குறிப்பிடப்படுகின்ற பெறுமதிகள் (Values) முக்கிய மானவையாக இருப்பதுடன் அவை ஒழுக்க கொள்கைகளாகவும் குறிப்பிடப்படுகின்றன. உதாரணமாக சமத்துவம், சுதந்திரம், நீதி மற்றும் மனித உரிமைகள் போன்ற அரசியல் பெறுமதிகள் இவ்வாறு அரசியல் ரீதியான ஒழுக்க கொள்கைகளாக காணப்படுகின்றன.[8] இத்தகைய எண்ணக்கருக்கள் சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும் (what should be) என்பது பற்றியே அதிகமாக குறிப்பிடுகின்றன. இவற்றுக்கு மாறாக சமூகத்தின் உண்மை நிலையை விபரிக்கின்ற வேறு சில எண்ணக்கருக்களும் காணப்படுகின்றன. இத்தகைய எண்ணக்கருக்கள் சமூகம் எவ்வாறு இருக்கின்றது (what is) என்பது பற்றியே அதிகமாக குறிப்பிடுகின்றன. உதாரணமாக அதிகாரம், அதிகாரத்துவம் மற்றும் சட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை பக்கச்சார்பற்ற நடுநிலையான தன்மையை வழங்குகின்ற எண்ணக்கருக்களாகவும் காணப்படுகின்றன. இங்கு சமூகத்தின் உண்மை நிலையை விபரிக்கின்ற எண்ணக்கருக்கள் தவிர்க்க முடியாதபடி ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாகவும் நியம எண்ணக் கருக்களில் இருந்து பிரிக்க முடியாததாகவும் காணப்படுகின்றது. சில சமயங்களில் அரசியல் உண்மை நிலையை விபரிக்கின்ற எண்ணக்கருக்கள் அரசியல் பெறுமதிகளில் இருந்து தோற்றம் பெறுகின்றது. உதாரணமாக அதிகாரத்துவம் என்பது '' மற்றவர்களின் நடத்தையில் செல்வாக்கு செலுத்துவதற்குள்ள உரிமையாகும்'' என வரையறை செய்யப்படுகின்றது. இது சமூகத்தின் அரசியல் உண்மை நிலையை குறிப்பிடுகின்ற எண்ணக்கருவாக இருந்தபோதும் ''உரிமை'' என்ற அரசியல் பெறுமதியில் இருந்தே தோற்றம் பெறு கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இத்தகைய எண்ணக் கருக்களை ஒன்றிலிருந்து ஒன்று தெளிவாக பிரிக்கமுடியாமை என்பது பிரச்சினையாக குறிப்பிடப்படுகின்றது.

8. Plant, R. (1991) *Modern Political Thought*. Oxford: Blackwell.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் எண்ணக்கருக்களை தெளிவாக வரையறுக்க முடியாமையும் இவை தொடர்பாக கருத்துக் கூறுவதில் விவாதங்கள் காணப்படுவதும் பிரச்சினையாக காணப்படுகின்றது. சில சமயங்களில் தெளிவாக வரையறுக்க முடியாமை என்பது சரியாக ஒரு எண்ணக்கருவை உருவாக்குவதிலும் பாதிப்பு செலுத்துகின்றது.[9] இதனாலேதான் எது உண்மையான ஜனநாயகம் மற்றும் உண் மையான சமத்துவம் என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு W.B.Gallie என்பவர் சமூக விஞ்ஞானங்களில் அரசியல் எண்ணக்கருக்களை தெளிவாக வரையறுக்க முடியாமை என்பது இயல்பானது என்றும் இத்தகைய விவாதங்கள் அரசியல் எண்ணக்கருக்களின் அபிவிருத்திக்கே உதவும் என்றும் குறிப்பிட்டு அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் சரியாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார். ஆயினும் Ball மற்றும் Birch போன்றவர்கள் எக்காலத்திலும் அரசியல் எண்ணக்கருக்களை தெளிவாக வரை யறுக்க முடியாமை என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்றும் ஏதாவதொரு நிலையில் ஒரு காலத்திற்கு பொருந்தக் கூடிய பொதுவான வரையறையை ஏற்றுக்கொள்வதுதான் எதிர்கால அரசியல் எண்ணக்கரு மற்றும் கோட்பாட்டு உருவாக்கங்களுக்கு பயனுடையதாக அமையும் எனவும் குறிப்பிடுகின்றனர்.[10]

### அரசியற் கோட்பாட்டை விளங்கிக் கொள்வதிலுள்ள மயக்கநிலை

பொதுவாக அரசியல் கோட்பாடு என்ற சொல்லுக்கான அர்த்தத்தை விளங்கிக்கொள்வதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அதாவது அரசியல் சிந்தனைகள், அரசியல் தத்துவம், அரசியல் கருத்தியல் போன்ற எண்ணக்கருக்களோடு அரசியல் கோட்பாட்டை இணைத்து ஒன்றென மயங்கும் ஒரு நிலை காணப்படுகின்றது. உண்மையில் இந்த எண்ணக்கருக்களுக்கிடையில் சில ஒற்றுமைகள் காணப்பட்ட போதும் அவை முற்றிலும் வேறானவை. எனவே இந்த வேறுபாட்டை சரியாக விளங்கிக்கொள்கின்ற போதே அரசியல் கோட்பாடு என்பதற்கான அர்த்தத்தையும் சரியாக விளங்கிக் கொள்ள முடியும்.

9. Berry, C. (1986) *Human Nature*. Basingstoke: Palgrave Macmillan.
10. Heywood, A. (2003) *Political Ideologies:* An Introduction. Basingstoke and New York: Palgrave Macmillan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற் சிந்தனையும் அரசியல் கோட்பாடும்

அரசியல் சிந்தனை என்பது குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம் பெறுகின்ற முழு விடயங்களையும் உள்ளடக்கிய ஆய்வாகும். உதாரணமாக கிரேக்கர் கால அரசியல் சிந்தனையைக் குறிப்பிடலாம். இங்கு இக்காலப்பகுதியில் உள்ள எல்லா சிந்தனையாளர்களின் சிந்தனைகளும் அவர்களால் குறிப்பிடப்பட்ட எல்லா விடயங்களும் உள்ளடக்கப்படுகின்றன. ஆனால் அரசியல் கோட்பாடானது குறிப் பிட்ட காலப்பகுதியில் இடம்பெறுகின்ற குறிப்பிட்ட ஒரு கோட்பாட் டாளரது சிந்தனையை அல்லது குறிப்பிட்ட ஒரு கோட்பாட்டைப் பற்றி கற்கின்ற ஆய்வாகும்.

## அரசியற் தத்துவமும் அரசியல் கோட்பாடும்

அரசியல் தத்துவம் நடைமுறை அரசியல் நிலைமைகளை விளக்கு வதோடு மட்டுமன்றி அரசியல் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் எடுத்து விளக்குகின்றது. அதாவது அரசியலை யதார்த்த கண்ணோட்டத்துடன் மட்டுமல்லாமல் இலட்சிய கண்ணோட்டத்து டனும் நோக்குகின்றது. ஆனால் அரசியல் கோட்பாடானது நடைமுறை அரசியல் நிலைமைகளை யதார்த்த கண்ணோட்டத்துடன் மட்டுமே எடுத்து விளக்குகின்றது. ஆகவேதான் ''ஒரு தத்துவவியலாளர் ஒரு கோட்பாட்டாளராக மாறமுடியும் ஆனால் ஒரு கோட்பாட் டாளர் ஒருபோதும் ஒரு தத்துவவியலாளராக மாறமுடியாது''[11] என குறிப்பிடப்படுகின்றது.

## அரசியற் கருத்தியலும் அரசியல் கோட்பாடும்

அரசியல் கருத்தியல் என்பது கருத்தை அடிப்படையாகக்கொண்டு அறிவுபூர்வமாக மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். ஆயினும் இந்த கருத்து கட்டாயமாக அறிவுபூர்வமாக இருக்கவேண்டும் என்பதில்லை. அறிவுபூர்வமற்ற கருத்துக்களும் அரசியல் கருத்தியலாக கொள்ளப்படலாம். உதாரணமாக பாசிசம் போன்ற கருத்தியல்கள் அறிவுபூர்வமான கருத்தியல்களாக கொள்ளப்படுவதில்லை. ஆனால்

11. Barry, N. (1989) *An Introduction to Modern Political Theory.* Basingstoke: Palgrave Macmillan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கோட்பாடுகள் கட்டாயமாக அறிவுபூர்வமான ஆய்வு அடிப்படையை கொண்டவையாகும். எனவேதான் ''அரசியல் கருத்தியல்கள் அரசியல் கோட்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கமுடியும் ஆனால் அரசியல் கோட்பாடு ஒருபோதும் அரசியல் கருத்தியலாக இருக்க முடியாது''[12] எனக் குறிப்பிடப்படுகின்றது.

**அரசியற் கோட்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்**

அரசியல் கோட்பாடுகள் அதனது தோற்றம் வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு பொதுவாக கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள் எனவும் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள் எனவும் வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன. கீழைத்தேய அரசியல் கோட்பாடுகளாக கௌடில்யரின் அரசியல் சிந்தனைகள், இந்துமதம் கூறும் அரசியல் கோட்பாடுகள் மற்றும் பௌத்தமதம் கூறும் அரசியல் கோட்பாடுகள் என்பனவும் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளாக கிரேக்கர்காலம் தொடங்கி தற்காலம்வரை காணப்படுகின்ற அரசியல் கோட்பாடுகளும் குறிப்பிடப்படுகின்றன.

அரசியல் கோட்பாடுகள் பற்றிய சிந்தனைகளை கிரேக்கர் காலத்துக்கு முன்பே கீழைத்தேய அரசியல் சிந்தனையாளரான கௌடில்யர் கருத்துக்களிலிருந்து அறியமுடிகின்றது ஆயினும் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளில் இருந்துதான் (கிரேக்கர் காலத்தில்) அரசியல் கோட்பாடுகள் பற்றிய கருத்துக்கள் ஆரம்பிக்கின்றன. உண்மையில் கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள் காலத்தால் முந்தியவை. கி.மு காலத்தைச் சேர்ந்தவை. ஆயினும் அவற்றுக்கு பெருமளவிலான முக்கியத்துவம் கிடைத்திருக்கவில்லை. குறிப்பாக மாக்கியவல்லி பிற்காலத்தில் குறிப்பிட்ட அதிகாரம் பற்றிய கருத்துக்கள் அத்தனையையும் கௌடில்யரின் அரசியல் சிந்தனைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டிருந்தன. ஆனாலும் மாக்கியவல்லிக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் கௌடில்யரிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கான முக்கிய காரணம் கீழைத்தேய அரசியல் கோட்

12. Bauman, Z. (1999) In *Search of Politics.* Cambridge: Polity Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள் பெருமளவிற்கு சமயத்துடன் இணைந்திருந்தமையாகும்.[13] ஆயினும் இன்று கௌடில்யரின் கருத்துக்கள் ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும் தற்காலத்தில் மேற் கத்தைய அரசியல் கோட்பாடுகளே அரசியல் கோட்பாடுகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

### மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள்

மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளின் தோற்றுவாயாக கிரேக்கர் காலம் குறிப்பிடப்படுகின்றது. இக்காலத்தில் கிரேக்க நகர அரசுகளில் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு அரிஸ்டோட்டில், பிளேட்டோ போன்ற அரசியல் கோட்பாட்டாளர்கள் தீர்வுகாண முயன்றனர். அதற்காக நீதியோடு கூடிய நல்ல அரசை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி இவர்கள் சிந்தித்தார்கள். அதன் விளைவே பிளேட்டோவின் இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களும் அரிஸ்டோட்டலின் யதார்த்த அரசு அல்லது நடைமுறை அரசு பற்றிய கருத்துக்களும் ஆகும்.

அரசியல் கோட்பாட்டு வளர்ச்சியில் ரோமானியர் காலம் மிக முக்கியமானது. ரோமானிய சாம்ராஜ்சம் நிலைத்திருந்த காலப் பகுதியில் சிசரோ போன்ற அரசியல் சிந்தனையாளர்கள் முதன் முதலில் அரசியலில் சட்டத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துவிளக்கி ஒரு அரசு நிலைத்திருக்கவும் அதை நிர்வகிக்கவும் சட்டம் எந்தளவுக்கு அவசியமானது என்பதை எடுத்துக் கூறினார்கள்.

மத்தியகால அரசியல் சிந்தனைகள் புதிய வகையான பிரச்சி னைகளைப் பிரதிபலித்தன. நிலமானிய சமூக அமைப்பில் மதமும் அரசியலும் எத்தகைய இடத்தை வகித்தன என்ற விடயம் இங்கு பேசப் பட்டது. மதத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மத்தியகால அரசியல் சிந்தனையாளர்கள் முயன்றனர். சிலர் மதத்திற்கு ஆதரவாகவும் சிலர் அரசுக்கு ஆதரவாகவும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இவ்வாறு மத்தியகால அரசியல் சிந்தனைகளை முன்வைத்தோரில் சென் ஒகஸ்டின், சென் தோமஸ் அக்குவனைஸ் போன்றோர் முக்கியமானவர்கள்.

---

13. Barry, B. and Hardin, R. (eds) (1982) *Rational Man and Irrational Society?* Beverley Hills, CA: Sage.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியகாலத்தின் பின்னர் மறுமலர்ச்சிக் காலத்தில் அரசுக்கு ஆதரவான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மதத்தின் செல்வாக்கு அரசியலில் இருக்கக் கூடாது என்று கண்டிக்கப்பட்டது. 16ஆம் நூற்றாண்டில் இத்தகைய கருத்துகள் தேசிய அரசின் தோற்றத்தை ஊக்குவித்தது. இதற்கு மாக்கியவல்லி, ஜீன்போடின் ஆகியோர் முக்கிய பங்களிப்பாற்றினர். அரசினுடைய இறைமை பற்றிய சிந்தனைகள் இக்காலப்பகுதியில் முதன்மை பெற்றன.

17ஆம் 18ஆம் நூற்றாண்டில் தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், ரூஸோ, மொண்டஸ்கியு போன்றோர் முக்கியமான சிந்தனையாளர்களாக காணப்பட்டனர். தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், ரூஸோ போன்றவர்களால் அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்த கோட்பாடு அபிவிருத்தி செய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் மொண்டஸ்கியு அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை முன்வைத்தார்.

19ஆம் நூற்றாண்டில் தாராண்மைவாத சிந்தனைகள் தோற்றம் பெற்றன. ஜே. எஸ். மில், ஜேம்ஸ் மில், ஜெரமி பெந்தம் போன்றோர் இக்கோட்பாட்டின் அபிவிருத்திக்கு பெரிதும் துணை புரிந்தனர். 20ஆம் நூற்றாண்டில் மார்க்ஸிசக் கோட்பாடு மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. இக்கோட்பாட்டின் தந்தையாக கால்மார்க்ஸ் போற்றப்பட்டார். 21ஆம் நூற்றாண்டில் நவ மார்க்ஸிசம், நவ தாராண்மைவாதம் போன்ற புதிய கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. இதற்கு லஸ்கி, கிராம்சி போன்ற அரசியல் சிந்தனையாளர்கள் முக்கிய பங்காற்றினர்.

### 21ஆம் நூற்றாண்டின் அரசியல் கோட்பாடு

21ஆம் நூற்றாண்டின் அரசியல் கோட்பாடு தர்க்க ரீதியான நேர்மறைவாதத்தின் (Logical Positivism) எழுச்சியையும் அரசியல் தத்துவத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவுகளையும் குறிப்பிடுகின்றது. 1956ஆம் ஆண்டு ''தத்துவம், அரசியல் மற்றும் சமூகம்'' (Philosophy Politics and Society) என்ற நூலில் Peter Laslett என்பவர் ''அரசியல் தத்துவம் மரணித்துவிட்டது'' என்று குறிப்பிட்டிருந்தார். இங்கு 'மரணித்துவிட்டது' என்பதன் மூலம் தர்க்க ரீதியான நேர்மறைவாதத்தின் (Logical

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Positivism) எழுச்சியையும் அரசியல் தத்துவத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவுகளையும் குறிப்பிடுகின்றார். ஆரம்பத்தில் வியன்னா வட்டம் என்று அறியப்பட்டிருந்த (Vienna Circle) அறிஞர்கள் குழு ஒன்றினாலேயே தர்க்க ரீதியான நேர்மறைவாதம் தோற்றுவிக்கப் பட்டது. இவர்கள் விஞ்ஞான அடிப்படையிலும் நடைமுறை அனுபவத்தின் அடிப்படையிலும் பெறுகின்ற அறிவில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இதனால் பெரும்பாலான அறிஞர்கள் ஒழுக்க மற்றும் மரபு ரீதியான ஆய்வுகளில் குறைந்தளவான அக்கறையே காட்டினர். சுதந்திரம், சமத்துவம், நீதி மற்றும் உரிமைகள் போன்ற நியதி அடிப்படையிலான எண்ணக்கருக்கள் அர்த்தமற்றவையாக மாறின. இதன் காரணமாக பழைய மரபுரீதியான அரசியல் கோட்பாடுகள் மறுவரையறை செய்யப்பட்டன.[14]

ஆயினும் 1960 களின் பின்னர் அரசியல் கோட்பாடுகள் புதிய உயிர்ப்புடன் மீள்வடிவமைக்கப்பட்டது.[15] இதில் பின் நடத்தைவாத புரட்சி ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானது. இது பல காரணங்களால் ஏற்பட்டது. அரசியலை தூய விஞ்ஞானமாக மாற்றுகின்ற நோக்கு தொடர்பில் ஏற்பட்ட அதிருப்தி, நடத்தைவாதத்தின் மீது காணப்பட்ட நம்பிக்கை குறைவடைந்தமை, அறிவியற் தத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக உண்மைகளைக் கண்டறிதல் தொடர்பாக விஞ்ஞானத்தின் இயலுமை மீது காணப்பட்ட நம்பிக்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களால் ஏற்பட்டன. Kuhn என்பவர் விஞ்ஞான அறிவு என்பது முழுமையான ஒன்றல்ல என்றும் ஆனால் அது பகுப்பாய்வு செயன்முறையைக் கட்டமைப்பதில் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளின் மீது தாக்கம் செலுத்துகின்றது என்றும் குறிப்பிட்டார். அத்துடன் 1960 களில் ஏற்பட்ட புதிய சமூக இயக்கங்களின் தோற்றம் அரசியல் பகுப்பாய்வுகளில் நியதி அடிப்படையிலான கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை குறைத்தது. John Rawls மற்றும் Robert Nozick

14. Owen, R. (1972) *A New View of Society or Essays on the Formation of the Human Character.* Basingstoke: Palgrave Macmillan.

15. Berlin, I. (1969) *'Two Concepts of Liberty' in Four Essays on Liberty.* Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற புதிய தலைமுறை அரசியல் கோட்பாட்டாளர்களின் ஆய்வுகள் இதனைப் பிரதிபலித்தன.

எவ்வாறாயினும் ஆரம்ப கால அரசியற் கோட்பாடுகளிலிருந்து புதுப்பிக்கப்பட்ட 21ஆம் நூற்றாண்டின் நவீன கால அரசியற் கோட்பாடு பல வழிகளில் வேறுபடுகின்றது. ஆரம்ப கால அரசியற் கோட்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட அரசியல் தத்துவ அடிப்படை புராதன காலத்திலிருந்து நவீன காலம் வரையான அரசியல் பிரச்சனைகளின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உதவியிருக்கின்றது. ஆனால் நவீன கால அரசியற் கோட்பாடு பல புதிய போக்குகளைக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. அதில் ஒன்று அரசியல் புரிந்துணர்வையும் தெளிவையும் ஏற்படுத்துவதில் அரசியலில் வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் வகிபங்கு தொடர்பாக அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டமை ஆகும்.[16] ஏனெனில் காலத்துக்கு காலம் மாற்றம் பெறுகின்ற அரசியல் சூழ்நிலையினை புரிந்து கொள்வதற்கு புதிய விளக்கங்கள் தேவைப்பட்டது.

இரண்டாவதாக அரசியற் கோட்பாடுகள் விரிவடைந்து பரவலடையத் தொடங்கியமையும் போட்டித்தன்மை மிக்கதொன்றாக மாற்றமடைந்தமையும் அவதானிக்கப்பட்டது. தாராண்மைவாத அரசியற் கோட்பாடு உலகளாவிய ரீதியில் பரவலடையத் தொடங்கிய போது அதற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்த மார்க்சிச கோட்பாடும் உலகளாவிய ரீதியில் பரவலடையத் தொடங்கியது. இது உலகை இரு வேறான கருத்தியல்களைக் கொண்ட முகாம்களாக மாற்றியமைத்ததுடன் இரு துருவ அரசியல் நிலையையும் தோற்றுவித்தது. அத்துடன் போட்டித்தன்மைமிக்க அரசியல் கோட்பாடுகளின் பரவல் தாராண்மைவாத அரசியற் கோட்பாட்டின் மீது அதிகமான விமர்சனங்களைத் தோற்றுவித்ததுடன் விமர்சனங்களுக்கான மாற்றீட்டை தேட வேண்டிய அவசியத்தையும் உணர்த்தியது. உதாரணமாக தாராண்மைவாதத்தின் மீதான தீவிர பெண்ணியவாதிகளின் பால்நிலை வேறுபாடு மற்றும் சமூகத்துவவாதிகளின் பன்மைத்துவ கலாச்சாரம் பற்றிய விமர்சனங்கள் குறிப்பிடத்தக்கன.

16. Benn, S. and Peters, R. (1959) *Social Principles and the Democratic State.* London: Allen & Unwin.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1579

தாராண்மைவாதம் ஒரு கலாசார மேலாதிக்கவாதமாக செயற்படுகின்றது என விமர்சிக்கப்படுகின்றது. இதனால் தாராண்மைவாதம் தாராள மற்றும் தாரளமற்ற பெறுமதிகளை சமத்துவமாக நோக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இதன் காரணமாக தாராண்மைவாதம் எதிர்நோக்கிய சவால்களை கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் தாராண்மைவாத எண்ணக்கரு மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. எனினும் சில அறிஞர்கள் குறிப்பாக பல்கலாசார பன்மைத்துவ அடிப்படைகள் தாராண்மைவாதக் கட்டமைப்பினுள் உள்வாங்கப்பட முடியுமா என்பது பற்றியும் தீர்மானிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர்.

இறுதியாக வழக்கமான அரசியல் கோட்பாடுகள் பகுத்தறிவுவாதத்திற்கு எதிரானவர்களால் விமர்சிக்கப்பட்டன. அறிவுப் புரட்சியின் விளைவே அரசியல் கோட்பாடுகள் ஆகும். 18ஆம் நூற்றாண்டு கலாச்சாரப் புரட்சி பகுத்தறிவின் மூலம் மனித இனத்தை அறியாமை என்ற அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தது. இந்த பகுத்தறிவு சிந்தனை 20ஆம் நூற்றாண்டில் தாராண்மைவாத மற்றும் மார்க்சிச கருத்தியல்களிலும் உள்வாங்கப்பட்டது. ஆயினும் பகுத்தறிவுவாதத்திற்கு எதிரானவர்களால் பகுத்தறிவு அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசியல் கோட்பாடுகள் விமர்சிக்கப்பட்டன. இவர்கள் பகுத்தறிவின் மூலம் எல்லாவிதமான அறிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் விளங்கிக்கொள்ள முடியும் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக Richard Rorty, John Gray போன்றவர்கள் சமூக விஞ்ஞான அடிப்படையிலான அரசியற் கோட்பாடுகளை பகுத்தறிவின் மூலம் துல்லியமாக மதிப்பீடு செய்ய முடியும் என்பதை மறுக்கின்ற அதே சமயம் கலாச்சார மற்றும் உளவியல் காரணிகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றார்கள்.

### அரசியற் கோட்பாடுகளின் பயன்பாடு

அரசியல் கோட்பாடுகள் தற்கால அரசியல் சமூக நிலையை விளக்குவதால் பொதுக்கொள்கை உருவாக்கத்திற்கும் சட்டவாக்கத்திற்கும் உதவுகின்றன. அத்துடன் அரசியலை எவ்வாறு கற்பது என்பதை அறியவும், அரசியலில் எந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவது

Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அறியவும் துணைபுரிகின்றன. அரசியல் கோட்பாடுகள் புதிய கருதுகோள்களை வழங்குவதால் காலத்திற்கேற்றவாறு புதிய அரசியல் கோட்பாடுகள் தோன்றுவதற்கும் வழிவகுக்கின்றன.[17] இவை ஒரு காலத்தின் சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளை விளக்கி அரசியல் வரலாற்று போக்கை அறியவும் துணைபுரிகின்றன. சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் அரச முறைகளை உருவாக்கவும் உதவுகின்றன. ஆரோக்கியமான அரசியல் விவாதத்திற்கு அடித்தள மிட்டு சமூக அரசியல் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கின்றது. மிக முக்கியமாக நடைமுறையில் உள்ள அரசியல் முறைகளினுடைய குறைபாடுகளை சுட்டிக்காட்டி அவற்றை திருத்தியமைக்க துணை நிற்கின்றது.

**அரசியற் கோட்பாடு பற்றிய விமர்சனங்கள்**

அரசியல் கோட்பாடுகள் காலமாற்றத்திற்கேற்றவாறு அபிவிருத்தி யடைய வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. அதாவது அரசியல் கோட்பாடுகளின் வளர்ச்சி என்பது மரபுரீதியான பழைய விடயங்களை காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பித்தல் என்றல்லாமல் அந்த காலத்திற்குரிய பிரச்சனைகளை பிரதிபலிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. உதாரணமாக அரசியல் கோட்பாடு என்பது சுதந்திரம், நீதி, பொதுநன்மை என்பவற்றின் அடிப்படையில் மட்டுமே ஆரம்பகாலத்தில் பார்க்கப்பட்டு வந்துள்ளது. உண்மையில் இவை அவசியமான அடிப்படையான விடயமாக இருந்தாலும் இவற்றைவிட மேலதிகமான விடயங்கள் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்து விட்டன. இதனால் அரசியல் கோட்பாடு என்பது சுதந்திரம், நீதி, பொது நன்மை என்பவற்றை விட்டு விலகி காலமாற்றத்திற்கேற்றவாறான விடயங்களை உள்வாங்கி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.

தற்கால அரசியல் கோட்பாடுகள் பொதுவாக இடதுசாரி மற்றும் வலதுசாரி அரசியல் கோட்பாடுகள் என்றே வகைப்படுத்தப் படுகின்றன. இடதுசாரி அரசியல் கோட்பாடுகள் சமத்துவத்தை

17. Plamenatz, J. (1960) *'The Use of Political Theory' in Political Studies.* Sage: Vol. 08. P.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்துகின்றன. வலதுசாரி அரசியல் கோட்பாடுகள் சுதந்திரத்தை வலியுறுத்துகின்றன. இவற்றை விட வேறுசில அரசியல் கோட்பாடுகள் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்து கின்றன. ஆயினும் இவை முழுமையாக தற்கால பிரச்சனகளை பிரதிபலிக்க போதுமானவை என்று சொல்வதற்கில்லை.[18] உதார ணமாக இந்த அரசியல் கோட்பாடுகளின் அடிப்படை சுதந்திரம் சமத்துவம் என்பனவாக இருந்தபோதும் இவை அனைத்து மக்க ளுக்குமான சுதந்திரம் சமத்துவத்தை வலியுறுத்துகின்றதா என்று விவாதிக்கப்படுகின்றது. முக்கியமாக பெண்களுக்குரிய சுதந்திரம் சமத்துவத்தை இக்கோட்பாடுகள் உறுதிப்படுத்துகின்றனவா என்பது இக்கோட்பாடுகளின் போதாமையையே உணர்த்தி நிற்கின்றது. சில சந்தர்ப்பங்களில் அரசியல் கோட்பாடுகள் என்பது ஒரு காலத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணுதலை விடுத்து சில குழுக்களின் கருத் தியலை முன்னெடுப்பதற்காக முன்வைக்கப்படுகின்றன என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது.

அரசியல் கோட்பாடுகள் எத்தன்மையினதாக இருக்க வேண்டும் என்பதிலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. மரபு பெறுமதிகள் போன்ற நல்ல விடயங்களை உள்ளடக்கியதான இலட்சிய அடிப்ப டையை பிரதிபலிக்க வேண்டுமா அல்லது யதார்த்த அடிப்படையிலான நடைமுறை விடயங்களை பிரதிபலிக்க வேண்டுமா என்ற வாதம் முக்கியமானதாக இருக்கிறது. இலட்சிய அடிப்படை இல்லாத யதார்த் தமும் யதார்த்த அடிப்படை இல்லாத இலட்சியமும் பயனற்றவை என்ற நோக்கில் அரசியல் கோட்பாடுகள் இலட்சியத்தையும் யதார்த்தத்தையும் இணைத்ததாக அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

### அரசியற் கோட்பாடுகள் பற்றிய மதிப்பீடு

அரசியல் கோட்பாடுகள் சமூகத்தில் இருந்து தோற்றம் பெறுகின்றன. மக்களின் அரசியற் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளிக் கொணரும் ஊடகமாக அரசியற் கோட்பாடுகள் காணப்படுகின்றன.

---

18. Bedau, H. A. (ed.) (1971) *Justice and Equality.* Englewood Cliffs, NJ: Prentice-Hall.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் சிந்தனையாளர்கள் முன்வைக்கின்ற அரசியற் கோட்பாடுகள் எல்லாம் சமத்துவம், சுதந்திரம் மற்றும் உரிமைகள் போன்ற மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைப் பற்றி எடுத்துக் கூறுகின்றன. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகளின் தன்மைக்கு ஏற்ப அரசியல் கோட்பாடுகள் தோன்றி மறைகின்றன. தற்காலத்தில் அரசியல் கோட்பாடுகள் இல்லாமல் 'அரசியல்' இருக்கமுடியுமா என்ற வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆயினும் அரசியல் கோட்பாடு மிகவும் அபாயகரமான ஒரு கற்கைநெறி எனவும் குறிப்பிடப்படுகின்றது. இது பிரதானமாக அரசு மற்றும் அரசாங்கங்களுக்கு வழிகாட்டியாக திகழ்வதால் இதில் தவறான கருத்துக்கள் முன்வைக்கப்படுமாக இருந்தால் அது முழு அரசையும் மக்களையும் பாதிக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. சில சமயங்களில் இது கோட்பாடாக அன்றி தத்துவமாக காணப்படு கின்றமை குறைகூறப்படுகின்றது. உதாரணமாக பிளேட்டோ நடைமுறைத் தீர்வைப் புறக்கணித்து இலட்சிய அடிப்படியிலான தீர்வை முன்வைக்கின்றமையானது தத்துவ அடிப்படையைக் கொண்டிருக்கின்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசியல் கோட் பாடுகள் பக்கச்சார்பான கருத்துக்களைக் கொண்டிருப்பதாகவும் குறைகூறப்படுகின்றன. எவ்வாறாயினும் அரசியல் கல்வியின் நிலைத்தல் தன்மைக்கும் அரசாங்க முறையின் அபிவிருத்திக்கும் ஆரோக்கியமான அரசியல் விவாதத்திற்கும் அரசியல் கோட்பாடுகள் வழிவகுப்பதால் இதன் முக்கியத்துவத்தினை குறைத்து மதிப்பிடவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- பொதுவாக அறிவியல், தர்க்கம், நடைமுறை அம்சங்களை தன்னகத்தே கொண்டு அரசியல் விடயங்களை ஆழமாக நோக்குவதே அரசியல் கோட்பாடுகள் என குறிப்பிடப்படுகின்றன. அரசியற் கோட்பாடுகள் சமூகத்தில் காணப்படும் மரபு, விழுமியங்கள், மதம், ஒழுக்கம், நீதி, சட்டம் என்பவற்றைப் பற்றிக் குறிப்பிட்டு அவை எவ்வாறு அரசியல் செயற்பாடுகளில் பாதிப்பு செலுத்துகின்றன என்பதைப் பற்றியும் சமூகத்தில் அதிகாரம் எவ்வாறு பங்கிடப்படுகின்றது அதன் இயல்பு எத்தகையது அது அரசியலில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன என்பதைப் பற்றியும் விளக்குகின்றது.

- சமூகமே கோட்பாட்டுக்கான அடித்தளம். சமூகத்திலிருந்தே கோட்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. கோட்பாடுகள் ஒருபோதும் வெறுமையிலிருந்து தோன்றுவதில்லை. சமூகத்தில் தோன்றும் பிரச்சனைகளுக்கு தீர்வுக்காண முயலும்போது முன்வைக்கப்படும் சிந்தனைகளே கோட்பாடுகள் ஆகின்றன. கால மாற்றத்திற்கேற்ப கோட்பாடுகளும் மாற்றமுறுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் புதிய பிரச்சனைகளை அக்கால கோட்பாடுகள் பிரதிபலிக்கின்றன.

- அரசியல் கோட்பாடானது பல்வேறு இயல்புகளைக் கொண்டிருக்கிறது. அது பரந்ததாகவும் குறுகியதானதுமான இயல்பைக் கொண்டிருந்தாலும் மிக ஆழமானது. மரபுரீதியான அம்சங் களையும் நவீன அம்சங்களையும் தன்னகத்தே கொண்டது. எதிர்கால அரசியல் போக்கு பற்றி எதிர்வு கூறக்கூடியது. நடைமுறை அரசியலை விளங்கிக்கொள்ளவும் அரசியலில் முறையான ஆய்வு வளரவும் வழிவகுக்கின்றது. அரசியலில் நடத்தைவாத பண்பையும் தற்கால அரசியல் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கின்றது. சமூகத்தில் காணப்படும் அரசியல் பொருளாதார சமூக காரணிகளை விளங்கிக்கொள்ளவும் உதவி செய்கின்றது.

- ஆய்வுச் செயன்முறைகளிலும் பகுத்தறிவுச் செயற்பாடுகளிலும் எண்ணக்கரு உருவாக்கம் என்பது மிகவும் முக்கியமான தொன்றாகும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏதாவதொரு விடயம் பற்றி சிந்தித்தல், விமர்சித்தல், விவாதித்தல், விளக்குதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் போன்ற செயன்முறைகளை மேற்கொள்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருக்கள் கருவியாக இருக்கின்றன. இவ்வாறு ஒரு ஆய்வில் எண்ணக்கரு உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே பகுப்பாய்வு செயன்முறையும் கோட்பாட்டு உருவாக்கமும் இடம்பெறும்.

- அரசியல் எண்ணக்கருக்களுக்கும் அரசியல் கோட்பாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அரசியல் எண்ணக்கருக்களில் இருந்தே அரசியல் கோட்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. அரசியல் கோட்பாடுகளை கட்டியெழுப்புவதற்கு பொதுமைப்படுத்தப்பட்ட அரசியல் எண்ணக்கருக்கள் மிகவும் அவசியமானதாகும்.

- அரசியல் எண்ணக்கருக்களை உருவாக்குகின்ற போதும் அவற்றை பயன்படுத்துகின்ற போதும் பல்வேறு பிரச்சனைகள் எதிர்நோக்கப்படுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல் எண்ணக்கருக்களை அரசியல் தொடர்பான ஒழுக்க, தத்துவ மற்றும் கருத்தியல் அடிப்படைகளில் இருந்து பிரிக்கமுடியாமை என்பது பிரச்சனையாக குறிப்பிடப்படுகின்றது. அரசியல் எண்ணக்கருக்களை தெளிவாக வரையறுக்க முடியாமையும் இவை தொடர்பாக கருத்துக்கூறுவதில் விவாதங்கள் காணப்படுவதும் பிரச்சனையாக காணப்படுகின்றது.

- பொதுவாக அரசியல் கோட்பாடு என்ற சொல்லுக்கான அர்த்தத்தை விளங்கிக்கொள்வதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அதாவது அரசியல் சிந்தனைகள், அரசியல் தத்துவம், அரசியல் கருத்தியல் போன்ற எண்ணக்கருக்களோடு அரசியல் கோட்பாட்டை இணைத்து ஒன்றென மயங்கும் ஒரு நிலை காணப்படுகின்றது. உண்மையில் இந்த எண்ணக்கருக்களுக்கிடையில் சில ஒற்றுமைகள் காணப்பட்ட போதும் அவை முற்றிலும் வேறானவை. எனவே இந்த வேறுபாட்டை சரியாக விளங்கிக்கொள்கின்ற போதே அரசியல் கோட்பாடு என்பதற்கான அர்த்தத்தையும் சரியாக விளங்கிக் கொள்ள முடியும்.

- அரசியல் கோட்பாடுகள் அதனது தோற்றம் வளர்ச்சியை அடிப்படை யாகக்கொண்டு பொதுவாக கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள் எனவும் வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன. கீழைத்தேய அரசியல் கோட்பாடுகளாக கௌடில்யரின் அரசியல் சிந்தனைகள், இந்துமதம் கூறும் அரசியல் கோட்பாடுகள் மற்றும் பௌத்தமதம் கூறும் அரசியல் கோட்பாடுகள் என்பனவும் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளாக கிரேக்கர்காலம் தொடங்கி தற்காலம்வரை காணப்படுகின்ற அரசியல் கோட்பாடுகளும் குறிப்பிடப்படுகின்றன.

- 21 ஆம் நூற்றாண்டின் அரசியல் கோட்பாடு தர்க்க ரீதியான நேர்மறை வாதத்தின் (Logical Positivism) எழுச்சியையும் அரசியல் தத்துவத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவுகளையும் குறிப்பிடுகின்றது. ஆயினும் 1960 களின் பின்னர் அரசியல் கோட்பாடுகள் புதிய உயிர்ப்புடன் மீள்வடிவமைக்கப்பட்டது. இதில் நடத்தைவாத புரட்சி ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானது.
- அரசியல் கோட்பாடுகள் தற்கால அரசியல் சமூக நிலையை விளக்குவதால் பொதுக்கொள்கை உருவாக்கத்திற்கும் சட்டவாக்கத் திற்கும் உதவுகின்றன. அத்துடன் அரசியலை எவ்வாறு கற்பது என்பதை அறியவும், அரசியலில் எந்த அணுகுமுறையைப் பயன்படுத்து வது என்பதை அறியவும் துணைபுரிகின்றன.
- அரசியல் கோட்பாடுகள் காலமாற்றத்திற்கேற்றவாறு அபிவிருத் தியடைய வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. அதாவது அரசியல் கோட்பாடுகளின் வளர்ச்சி என்பது மரபுரீதியான பழைய விடயங்களை காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பித்தல் என்றல்லாமல் அந்த காலத்திற்குரிய பிரச்சனைகளை பிரதிபலிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 02*

# புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள்

# Ancient Asian Political Theory

### அறிமுகம்

அரசியற் கோட்பாடுகளை பிரதானமாக இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம். அவையாவன மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள் மற்றும் கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் என்பனவாகும். மேற் கத்தைய அரசியல் கோட்பாடுகள் கிரேக்கர் காலம் தொடங்கி தற்காலம் வரைக்குமான அரசியற் சிந்தனைகளை உள்ளடக்கியிரு கின்றது. கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் காலத்தால் முந்தியவை ஆகும். கீழைத்தேச அரசியல் கோட்பாடுகளை புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் எனவும் அழைப்பர். இப்புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தினை மையமாகக்கொண்டே வளர்ச்சியடைந்திருந்தது. இதனுள் பொதுவாக புராதன இந்திய அரசியற் சிந்தனைகளும் புராதன சீன அரசியற் சிந்தனைகளும் முக்கியம் பெறுகின்றன. புராதன இந்திய அரசியற் சிந்தனைகளுள் இந்துமத அரசியற் சிந்தனைகள் மற்றும் பௌத்த மத அரசியற் சிந்தனைகள் என்பன உள்ளடங்குகின்றன. புராதன சீன அரசியற் சிந்தனைகளுள் கன்பூசியஸின் அரசியல் கருத்துக்கள் பிரதான இடத்தினை வகிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீழைத்தேச மற்றும் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள்

இவ்விருவகையான அரசியற் கோட்பாடுகளையும் ஒப்பிட்டு நோக்கினால் மேற்கத்தைய அரசியல் கோட்பாடானது உலகளாவிய ரீதியில் ஆதாரங்களின் அடிப்படையில் அரசியல் அறிஞர்களால் ஏற்கப்பட்டு பலம் மிக்கதாக இருப்பதைக் காணலாம். ஆனால் கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் ஆரம்ப காலத்தில் அவ்வாறு உலகளாவிய ரீதியில் அரசியல் அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன.[1] குறிப்பாக மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள் அக்காலத்தில் காணப்பட்ட அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தோன்றியவையாகும். ஆனால் கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் நேரடியாக அரசியற் சிந்தனைகளாகவன்றி சமய சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் நூல்களிலேயே இடம்பெறுவதைக் காணலாம். இது கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்ற பிரதானமான பலவீனமாகும்.[2] அத்தோடு கீழைத்தேச அரசியல் கோட்பாடுகளின் வரலாறு தொடர்பாகவும் உறுதியான உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளின் வரலாறு அரசியல் அறிஞர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு ஏற்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் ஓரளவுக்காவது கீழைத்தேச அரசியல் கோட்பாடுகளை மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளுடன் ஒப்பிடக் கூடிய அளவுக்கு இட்டுச் சென்றிருக்கின்ற பெருமை இந்து மதத்தையே சாரும். கௌடில்யரால் முன்வைக்கப்பட்ட அர்த்த சாஸ்திரம் அரசியல் நோக்கத்திற்காக எழுதப்பட்ட நூலாக இருப்பதன் காரணமாகவும், மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பதனால் மேற்கத்தைய அரசியல் சிந்தனையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளின் தொடக்கத்தினை கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் பிரதிபலிப்பதினை அவதானிக்கலாம்.

---

1. Nisbett , R. (2003) *The Geography of Thought: How Asians and Westerners Think Differently ...and Why*. New York: Free Press.
2. Brannigan , M. C. ( 2010 ) *Striking a Balance: A Primer in Traditional Asian Values* . Lanham, MD: Lexington.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புராதன ஆசிய அரசியற் கோட்பாட்டின் இயல்புகள்

புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் பெருமளவுக்கு மதத்துடன் தொடர்புபட்டவையாக காணப்பட்டபோதும் அவை மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளுடன் சமாந்தரமாக வைத்து நோக்குமளவுக்கு மிகவும் உயர்தரமான அரசியல் சிந்தனைகளை கொண்டிருந்தது. புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் எனும்போது இந்தியாவும் சீனாவுமே இரு தூண்களாக கொள்ளப் பட்டது. ஜப்பான் மற்றும் கொரியா என்பன ஓரளவுக்கே முக்கியத்து வமளிக்கப்பட்டன. உலகளாவிய ஒழுக்க நெறிமுறைகளின் வளர்ச் சிக்கும் அதன் அடிப்படையில் அமைந்த அரசியல் ஒழுக்கம் மற்றும் சட்டம் என்பவற்றின் வளர்ச்சிக்கும் புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் பெரிதும் உதவியிருக்கின்றன.[3]

மிகப் பழமையான மதமான இந்து மதம் பிற்காலத்தில் புராதன கிரேக்கத்தில் காணப்பட்ட அரசியற் கருத்துக்களை ஒத்ததான கருத்து களை கொண்டிருந்தது. இந்திய துணைக் கண்டத்திற்கான இந்தோ ஆரியர்களின் வருகை இந்த ஒற்றுமையை ஏற்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும் ஆசிய மற்றும் இந்திய அரசியல் கலாச்சாரத் தின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் இந்து மதம் மிகப்பெரிய பங்காற்றியிருந்தது. இதிலிருந்து சற்று வேறுபட்டு பௌத்தம் அன்பு அகிம்சை நம்பிக்கை போன்ற விடயங்களை அரசியலில் புகுத்தியது. பின்னர் இது இந்திய துணைக் கண்டத்திற்கான முஸ்லிம்களின் படை யெடுப்பினால் அழிந்து போனது. இதனால் பௌத்தம் சீனா ஜப்பான் கொரியா மற்றும் தென் கிழக்காசிய நாடுகளில் பரவலாயிற்று. அத்துடன் பிற்காலத்தில் அரசியலில் பலவந்த மற்றும் கூட்டுறவு சிந்தனைகள் வருவதற்கு இஸ்லாமிய படையெடுப்பும் அதன் பரவலும் காரணமாக அமைந்தன.

சீனாவில் கன்பூசியத்தினுடைய வளர்ச்சி சட்ட ஒழுங்குள்ள ஒரு அரசியல் சமூகத்தின் வருகைக்கு உதவியது. இருந்தபோதும் மேற்கத்தைய அரசியல் கோட்பாட்டில் வளர்ச்சியடைந்த மதசார்பற்ற அரசியல் கருத்துக்கள் கீழைத்தேய அரசியல் கோட்பாட்டில் தோற்றம்

3. Loy, D. (2003) *Great Awakening: A Buddhist Social Theory.* Boston: Wisdom Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருக்கவில்லை.[4] மதத்தோடு இணைந்த வகையிலேயே இங்கு அரசியல் கருத்துக்கள் வளர்ச்சியடைந்திருந்தன. இந்தியாவில் அதன் அரசியல் முறைமையின் பண்புகளை முழுமையாக மதம் பிரதிபலிக்கின்றது. மதத்தினை விலக்கிவிட்டு இந்தியாவின் அரசியல் கலாச்சாரம் பற்றியும் அரசியல் முறை பற்றியும் தெரிந்து கொள்வது சாத்தியமில்லை. அந்தளவுக்கு இந்தியாவில் அரசியல் மரபுகள் மதத்தோடு இரண்டறக்கலந்துள்ளன. இந்து இலக்கியங்கள் பெருமளவுக்கு அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தி இருக் கின்றன. சிலசமயங்களில் அவை ஒரு அரசியல் நூல் போலவே அமைந்திருக்கின்றது. மகாபாரதம் அரசமுறை பற்றியும் மன்னராட்சி பற்றியும் போர் புரிவதற்கான உபாயங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் அதிகாரம் பற்றியும் அதை பெறுகின்ற தக்கவைக்கின்ற வழிவகைகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்நூல் மாக்கியவல்லியின் இளவரசன் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம் தொடர்பான கருத்துக்களை ஒத்ததாக காணப்படுகின்றது. அதாவது கௌடில்யர் புராதன காலத்தில் குறிப்பிட்ட அதிகாரம் பற்றிய கருத்துக்களையே பின்னர் நவீன காலத்தில் மாக்கியவல்லி குறிப்பிட்டிருக்கிறார். அந்தளவுக்கு இந்து இலக்கியங்களில் அரசியற் கருத்துக்கள் காணப்பட்டிருக்கின்றன. ஆயினும் இந்தியாவை விட சீனாவில் ஓரளவுக்கு மதச்சார்பின்மை என்பது காணப்பட்டிருந்தது. ஏனெனில் கன்பூசியம் ஒருபோதும் கடவுளை வலியுறுத்துகின்ற ஒரு மதமாக காணப்பட்டிருக்கவில்லை. மாறாக அது ஒரு தத்துவமாகவே கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் கன்பூசியம் சட்ட முறைமையின் வளர்ச்சிக்கும் மதச்சார்பின்மை பண்பு வளர்வதற்கும் துணை புரிந்திருக்கின்றது. எவ்வாறாயினும் சீனாவில் மதச்சார்பின்மைப் பண்பு காணப்பட்ட போதும் அங்கு மதத்தினுடைய செல்வாக்கு காணப்படவில்லை எனக் குறிப்பிட்டுவிட முடியாது. சீனாவிலும் மதத்தினுடைய செல்வாக்கு குறைந்தளவுக்கு காணப்பட்டது. அதனடிப்படையிலேயே அரசியல் கருத்துக்களின் வெளிப்பாடும் இடம்பெற்றிருந்தது.

4. Nakamura, H. (1997) *Ways of Thinking of Eastern Peoples.* London: Kegan Paul International.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன இந்திய அரசியற் சிந்தனைகள்

மத நம்பிக்கைகளே புராதன இந்திய அரசியற் சிந்தனைகளின் அடிப்படையாக காணப்பட்டது. மதத்தின் ஊடாகவே புராதன இந்திய அரசியற் சிந்தனைகள் விளங்கிக்கொள்ளப்பட்டன. தெய்வீக உரிமை மற்றும் தெய்வீக தோற்றப்பாடு என்பவற்றின் அடிப்படையிலேயே புராதன இந்திய அரசியற் சிந்தனைகளின் அரசியல் ஒழுங்கும் அரசியல் தலைமைத்துவமும் தீர்மானிக்கப்பட்டன. இந்துமத மற்றும் பௌத்தமத அரசியற் கருத்துக்கள் புராதன இந்திய அரசியற் சிந்தனைகளின் இரு பெரும் தூண்களாக கொள்ளப்பட்டன.[5] இவை பெருமளவுக்கு அரசியல் மற்றும் நிர்வாக கொள்கைகளை விளக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

## புராதன சீன அரசியற் சிந்தனைகள்

வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை சீன கலாச்சாரத்தின் புலமைத்துவ மரபாகவே சீன தத்துவம் இருந்து வருகின்றது. கி.மு 8 ஆம் நூற்றாண்டிலிருந்து 3 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இருந்த மிக முக்கியமான புலமையாளர்களான லாவோசி (Laozi) கன்பூசியஸ் (Confucius) மோசி (Mozi) போன்றவர்களின் செல்வாக்கினால் சீன தத்துவம் வடிவமைக்கப்பட்டிருந்தது. சீன தத்துவத்தின் மிக முக்கியமான பகுதியாக மனித நேயம் குறிப்பிடப்பட்டுள்ளது. சமூகத்தில் மனிதர்களுக்குரிய இடமும் அவர்களது வகிபங்கும் எப்பொழுதும் சீன புலமையாளர்களால் முக்கியம் கொடுத்து பேசப்பட்டுள்ளது. சீன தத்துவத்தில் மனோதத்துவ அம்சங்களை விட உலக விவகாரங்களோடு தொடர்புடைய அரசியல் ஒழுக்கம் மற்றும் நடைமுறை சார்ந்த விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இது மனோதத்துவ விடயங்கள் சீன தத்துவத்தில் இல்லை என்ற அர்த்தத்தை குறிப்பதாகாது. பரந்த எண்ணங்களைக் கொண்ட ஆழமான விடயங்களை இலகுவாக புரிந்து கொள்ளும் விதத்தில் தமது கருத்துக்களை சீன புலமையாளர்கள் சீன தத்துவத்தில் முன்வைத்திருக்கின்றார்கள். இவர்களுள் கன்பூசியஸ் மிகவும் முக்கியமானவர்.

---

5. Spiro, M. E. (1982 [1970]) *Buddhism and Society: A Great Tradition and Its Burmese Vicissitudes.* Berkeley: University of California Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் பற்றிய மதிப்பீடு

மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளில் குறிப்பிடப்படுகின்ற கருத்துக்கள் பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகளில் காணப்பட்டிருந்தன. புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் காலத்தால் முந்தியவை. இவை அக்காலத்தில் செழிப்புற்றிருந்த அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார நிலைகள் பற்றி குறிப்பிடுகின்றன. ஆயினும் ஆரம்ப காலத்தில் புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் பெருமளவுக்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இவை மதத்தோடு இரண்டறக் கலந்திருந்தமையே இதற்கான பிரதானமான காரணமாக குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் வரலாற்று ஆதாரங்களைப் பெறுவதிலும் சிக்கல்கள் காணப்பட்டன. எனினும் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளைப் போலன்றி இவை விசேடமாக அக்கால கலாச்சார சூழமைவில் வைத்து நோக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற அரசியற் கோட்பாடுகளின் தோற்றத்தையும் இயல்பையும் இவை விளக்குகின்றன. இதனால் அரசியல் கோட்பாட்டு வரலாற்றில் புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகளுக்கு முக்கியமான இடம் காணப்படுகின்றது.

### அத்தியாயச் சுருக்கம்

- *அரசியற் கோட்பாடுகளை பிரதானமாக இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம். அவையாவன மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள் மற்றும் கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் என்பனவாகும். மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள் கிரேக்கர் காலம் தொடங்கி தற்காலம் வரைக்குமான அரசியற் சிந்தனைகளை உள்ளடக்கியிருகின்றது. கீழைத்தேச அரசியல் கோட்பாடுகள் காலத்தால் முந்தியவை ஆகும் கீழைத்தேச அரசியல் கோட்பாடுகளை புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் எனவும் அழைப்பர்.*
- *இப் புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தினை மையமாகக்கொண்டே வளர்ச்சியடைந்திருந்தது. இதனுள் பொதுவாக புராதன இந்திய அரசியற் சிந்தனைகளும் புராதன*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சீன அரசியற் சிந்தனைகளும் முக்கியம் பெறுகின்றன. புராதன இந்திய அரசியற் சிந்தனைகளுள் இந்துமத அரசியற் சிந்தனைகள் மற்றும் பௌத்த மத அரசியற் சிந்தனைகள் என்பன உள்ளடங்குகின்றன. புராதன சீன அரசியற் சிந்தனைகளுள் கன்பூசியஸின் அரசியல் கருத்துக்கள் பிரதான இடத்தினை வகிக்கின்றன.*

- *புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் பெருமளவுக்கு மதத்துடன் தொடர்புபட்டவையாக காணப்பட்டபோதும் அவை மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளுடன் சமாந்தரமாக வைத்து நோக்குமளவுக்கு மிகவும் உயர்தரமான அரசியல் சிந்தனைகளை கொண்டிருந்தது. புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் எனும்போது இந்தியாவும் சீனாவுமே இரு தூண்களாக கொள்ளப்பட்டது. ஜப்பான் மற்றும் கொரியா என்பன ஓரளவுக்கே முக்கியத்துவமளிக்கப்பட்டன.*

- *உலகளாவிய ஒழுக்க நெறிமுறைகளின் வளர்ச்சிக்கும் அதன் அடிப்படையில் அமைந்த அரசியல் ஒழுக்கம் மற்றும் சட்டம் என்பவற்றின் வளர்ச்சிக்கும் புராதன ஆசியாவின் அரசியல் கோட்பாடுகள் பெரிதும் உதவியிருக்கின்றன. மிகப் பழமையான மதமான இந்து மதம் பிற்காலத்தில் புராதன கிரேக்கத்தில் காணப்பட்ட அரசியற் கருத்துக்களை ஒத்ததான கருத்துகளை கொண்டிருந்தது. இதிலிருந்து சற்று வேறுபட்டு பௌத்தம் அன்பு அகிம்சை நம்பிக்கை போன்ற விடயங்களை அரசியலில் புகுத்தியது.*

- *சீனாவில் கன்பூசியத்தினுடைய வளர்ச்சி சட்ட ஒழுங்குள்ள ஒரு அரசியல் சமூகத்தின் வருகைக்கு உதவியது. இருந்தபோதும் மேற்கத்தைய அரசியல் கோட்பாட்டில் வளர்ச்சியடைந்த மதசார்பற்ற அரசியல் கருத்துக்கள் கீழைத்தேய அரசியல் கோட்பாட்டில் தோற்றம் பெற்றிருக்கவில்லை. மதத்தோடு இணைந்த வகையிலேயே இங்கு அரசியல் கருத்துக்கள் வளர்ச்சியடைந்திருந்தன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 03*

# புராதன இந்து மத அரசியல் கருத்துக்கள்: கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்

# Ancient Hindu Political Thought: Kautilya's Arthashastra

## அறிமுகம்

மதத்திற்கும் அரசியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவது வெளிப்படை. எண்ணக்கரு அடிப்படையிலும் செயற்பாட்டு அடிப்படையிலும் அரசியற் கல்வியும் செயற்பாடும் மதத்தால் பாதிக்கப்பட்டும் மாற்றம் பெற்றும் வந்திருக்கின்றது. பல்வேறு அரசியல் சிந்தனைகள் மத சிந்தனைகளில் இருந்து தோற்றம் பெற்றிருக்கின்றன. பல்வேறு காலத்து செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் மதம் பாதித்திருக்கின்றது. இன்றும் கூட சில நாடுகளில் அரசியற் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் வழி நடத்தும் கருவியாக மதம் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பின்னணியில் இந்துமதம் அரசியற் கல்விக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கின்றது. இதில் இந்து மத நூலான கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் முக்கியமானதாகும். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் இந்து மத நூலாக கொள்ளப்பட்ட போதும் அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் நூலாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌடில்யர் (Kautilya (371 BC.-283BC.)**



கௌடில்யர் இந்திய மாக்கியவெல்லி என்று அழைக்கப்பட்டவர். மாக்கியவெல்லிக்கு இணையாக அதிகாரம் பற்றிய கருத்துக்களை புராதன காலத்தில் முன்வைத்தவர். கௌடில்யர் கி.மு 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரது இயற்கைப் பெயர் விஷ்ணு குப்தர். இவரை சாணக்கியர் என்றும் அழைப்பர். சந்திர குப்த மௌரியனின் அரசியல் ஆலோசகராக இருந்தவர். ஒற்றுமையின்மையையும் யுத்த நிலையையும் இயல்பாக கொண்டிருந்த சிந்து வெளி நாகரீகப் பிராந்தியத்திற்கு வெளிப் பிராந்தியம் ஒன்றிலிருந்து தோன்றும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது. அலெக்ஸாண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்து தம்மைப் பாதுகாக்க ஒன்றுபட்ட இந்திய சாம்ராஜ்யத்தை நிறுவ வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இப் பெரிய பணிக்காக சந்திர குப்த மௌரியனுக்கு துணை நின்றவரே கௌடில்யர். இதற்காக அவர் எழுதிய நூலே அர்த்த சாஸ்திரம் ஆகும். இந்திய சாம்ராஜ்ஜத்தை நிறுவி ஒரு பலமான ஆட்சியை ஏற்படுத்த கௌடில்யர் முயன்றார். நலன்பேணும் அரசின் ஆதரவாளராக கௌடில்யர் இருந்தார். ஆனால் அதே சமயம் யுத்தத்தினையும் அவர் ஊக்குவித்தார். அரசியல் யதார்த்தவாதம் பற்றிய எண்ணக்கருவின் முன்னோடியாகவும் இவரே குறிப்பிடப்படுகின்றார்.

## கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்

கௌடில்யர் கி.மு 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரது இயற்கைப் பெயர் விஷ்ணு குப்தர். இவரை சாணக்கியர் என்றும் அழைப்பர். சந்திர குப்த மௌரியனின் அரசியல் ஆலோசகராக இருந்தவர். இவரது நூல்களில் சிறந்தது அர்த்த சாஸ்திரமாகும். கௌடில்யர் வாழ்ந்த கி.மு 4ஆம் நூற்றாண்டு கால இந்திய சூழ்நிலையை நோக்கின் அக்கால அரசமைப்பு முறை முடியரசாக இருந்தது. அங்கு பல்வேறு முடியரசுகள் காணப்பட்டன. ஆனால் இம் முடியரசுகளுக்கிடையே ஒற்றுமை காணப்பட்டிருக்கவில்லை. இதனால் முரண்பாடும் உள்நாட்டு யுத்தமும் அமைதியின்மையும் இப்பிராந்தியத்தின் இயல்பாக இருந்தது. இந்நிலையில் மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸ்சாண்டர் கி.மு 327இல் சிந்துவெளியை நோக்கிப் படையெடுத்தார். ஒற்றுமையின்மையையும் யுத்த நிலையையும் இயல்பாக கொண்டிருந்த இச் சிந்துவெளி நாகரீகப் பிராந்தியத்திற்கு வெளிப் பிராந்தியம் ஒன்றிலிருந்து தோன்றும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருந்தது. அலெக்ஸ்சாண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்து தம்மைப் பாதுகாக்க ஒன்றுபட்ட இந்திய சாம்ராஜ்யத்தை நிறுவ வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இப் பெரிய பணிக்காக சந்திர குப்த மௌரியனுக்கு துணை நின்றவரே கௌடில்யர். இதற்காக அவர் எழுதிய நூலே அர்த்த சாஸ்திரம் ஆகும்.

## இரு வேறுபட்ட தத்துவ நிலைகள்

இக்காலப்பகுதியில் சிந்துவெளிப் பிரதேசத்தில் இரு வேறுபட்ட தத்துவ நிலைகள் காணப்பட்டன. பௌத்த தத்துவ நிலையும் பகுத்தறிவு தத்துவ நிலையும் இப்பிராந்தியத்தினை ஆக்கிரமித்தன. பௌத்த தத்துவம் ''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்'' என்று இவ்வுலகில் இருந்து விடுபடும் வழியை மக்களுக்கு போதித்தது. இவ்வுலக யதார்த்த நிலை இவ் பௌத்த தத்துவ பிரச்சாரத்தில் மறைந்து போனது. அதேசமயம் பகுத்தறிவு தத்துவ நிலையானது இதற்கு எதிர்மாறாக உலகம் உண்மை என போதிக்கலாயிற்று. இதுவும் உலகை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டி உலக யதார்த்தத்தை மறைத்தது. ஆனால் இவ்விரு தத்துவ நிலைகளும் உண்மையான சூழ்நிலைகளுக்கு பொருத்தமாக காணப்படவில்லை. அலெக்ஸ்சாண்டரின் படையெடுப்பை முறியடிக்க இத்தத்துவ நிலைகள் பயனுடையவையாக இருக்கவில்லை. இதனால் புதிய தத்துவ நிலையொன்றை ஏற்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கௌடில்யர் அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதினார்.

## அர்த்த சாஸ்திரம் : நூல் அமைப்பு

அர்த்த சாஸ்திரம் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்திருக்கின்றது. அதிகாரம், அத்தியாயம், பிரகரணம் என இது பிரிக்கப்பட்டிருக் கின்றது. 15 அதிகாரங்களையும் 150 அத்தியாயங்களையும் 180 பிரகரணங்களையும் கொண்டு மொத்தம் 6000 சுலோகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அர்த்த சாஸ்திரம் (Arthashastra)**




*கௌடில்யரின் நூல்களில் சிறந்தது அர்த்த சாஸ்திர மாகும். அர்த்த சாஸ்திரம் சமய நூலாக இருந்தபோதும் சமயத்தை விட்டு விலகி அரசியல் பிரச்சனைகளுக்கு பதில் சொல்வதை நோக்காகக் கொண்டிருக்கின்றது. அர்த்த சாஸ்திரம் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்தி ருக்கின்றது. அதிகாரம், அத்தியாயம், பிரகரணம் என இது பிரிக்கப்பட்டிருக்கின்றது. 15 அதிகாரங்களையும் 150 அத்தியாயங்களையும் 180 பிரகரணங்களையும் கொண்டு மொத்தம் 6000 சுலோகங்கள் அர்த்த சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. இவரது நூல் இரு பெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன தந்திரம் மற்றும் ஆலாபம் என்பனவாகும். தந்திரம் என்பது மக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாத்து அவர்களின் நல்வாழ்விற்கு வழி செய்வதாகும். ஆலாபம் என்பது நாட்டையும் எல்லைகளையும் பகைவர்களிடமிருந்து பாதுகாத்தல் ஆகும். 15 அதிகாரங்களில் முதல் 5 அதிகாரங்களும் தந்திரம் பற்றியும் அடுத்த 9 அதிகாரங்களும் ஆலாபம் பற்றியும் இறுதியாகவுள்ள 15ம் அதிகாரம் கலைச்சொற்களின் பொருள் விளக்கங்களாகவும் அமைந்துள்ளன. மேற்கத்தைய மாக்கியவல்லி என்று அழைக்கக்கூடிய அளவுக்கு கௌடில்யரின் அர்த்த சாஸ்திர சிந்தனைகள் அமைந்திருக்கின்றன.*

அர்த்த சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. இவரது நூல் இரு பெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன தந்திரம் மற்றும் ஆலாபம் என்பனவாகும். தந்திரம் என்பது மக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாத்து அவர்களின் நல்வாழ்விற்கு வழி செய்வதாகும். ஆலாபம் என்பது நாட்டையும் எல்லைகளையும் பகைவர்களிடமிருந்து பாதுகாத்தல் ஆகும். 15 அதிகாரங்களில் முதல் 5 அதிகாரங்களும் தந்திரம் பற்றியும் அடுத்த 9 அதிகாரங்களும் ஆலாபம் பற்றியும் இறுதியாகவுள்ள 15ம் அதிகாரம் கலைச் சொற்களின் பொருள் விளக்கங்களாகவும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரப் பகுதி எனப்படும் முதல் 5 அதிகாரங்களில் 95 பிரகரணங்கள் காணப்படுகின்றன. இவை அரசனின் ஒழுக்கம், கல்வி, பயிற்சி ஆகியன பற்றியும் அரசாங்க நிர்வாக அமைப்பு, நிதி முகாமைத்துவம் என்பன பற்றியும், அரசின் சட்டத்துறை மற்றும் நீதித்துறை என்பன பற்றியும் விரிவாக விளக்குகின்றன.[1] ஆலாபப் பகுதி எனப்படும் அடுத்த 9 அதிகாரங்களில் 84 பிரகரணங்கள் காணப்படுகின்றன. இவை அரசின் அடிப்படைப் பண்புகள், வெளிநாட்டு உறவுகள், இராணுவம், போர்ப் பயிற்சி, பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் உளவு அமைப்புக்களின் செயற்பாடுகள் என்பன பற்றி குறிப்பிடுகின்றன.

அர்த்த சாஸ்திரம் என்பதன் பொருளை கொடுமுடி இராஜ கோபாலன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''மனிதர்கள் நிறைந்த பூமியைப் பற்றியதும் இராஜ்ஜியங்களை சம்பாதித்து அவற்றைக் காப்பது பற்றியதுமான விஞ்ஞானமே அர்த்த சாஸ்திரம்'' என்கிறார். அர்த்த சாஸ்திரம் சமய நூலாக இருந்தபோதும் சமயத்தை விட்டு விலகி அரசியல் பிரச்சனைகளுக்கு பதில் சொல்வதை நோக்காகக் கொண்டிருக்கின்றது. முற்கால அரசியல் சிந்தனையாளர்கள் ஆட்சியமைப்பைப் பற்றி பேசும் போது இவர் ஆட்சியை எப்படிக் கைப்பற்றலாம், கைப்பற்றிய ஆட்சியை எப்படி பராமரிக்கலாம், அதை எப்படி பலப்படுத்தலாம் என்பதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

### இந்திய சாம்ராஜ்யத்தினை நிறுவுதல்

இந்திய சாம்ராஜ்ஜத்தை நிறுவி ஒரு பலமான ஆட்சியை ஏற்படுத்த கௌடில்யர் முயன்றார். இதற்காக கௌடில்யர் சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தல், பராமரித்தல், பலப்படுத்தல் என்பவற்றைப் பற்றி குறிப்பிடுகின்றார். சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தி பலப்படுத்துவதற்கு பக்தி மூடநம்பிக்கை அறம் இன்பம் வீடு என்பன தடையானவை என்று கூறி அவற்றை நிராகரிக்கின்றார். பொருளை மட்டுமே ஏற்கின்றார். பொருள் மட்டுமே சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்த உதவும் என்கின்றார். சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தும் போது நீதி அறநெறி

1. Gupta, V.K. (1987) *Kautilyan Jurisprudence.* Kanpur: B.D.Gupta Publishers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் போன்றவைகளைக் கையாள்வதால் எவ்வித பயனுமில்லை என்றும் அதிகார பலம் அதிகார செல்வாக்கு போன்ற வழிமுறைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டு அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும் என்கின்றார்.

சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தும் வழிமுறைகளையும் தெளிவுபடுத்தியிருக்கின்றார். முதலில் எதிரிக்கு வெறுப்பூட்டி, சண்டைக்கிழுத்து எதிரியின் உபாயங்களை உபயோகித்து ஒற்றரை அனுப்பி தகவல் சேகரித்து கோட்டையை முற்றுகையிடுவதன் மூலம் எதிரியின் நடவடிக்கைகளை முடக்கி கோட்டையைத் தாக்கி சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்த வேண்டும் என்கின்றார். சாம்ராஜ்ஜியத்தை கைப்பற்றினால் மட்டும் போதாது அதைப் பராமரிக்கவும் வேண்டும் அப்போதுதான் நீண்ட காலத்திற்கு உறுதியான ஆட்சியை நடாத்த முடியும் எனக் குறிப்பிட்டு கைப்பற்றிய இராஜ்ஜியத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைத் தெளிவுபடுத்துகின்றார். கைப்பற்றிய இராஜ்ஜியத்தில் ஆட்சி நடாத்துபவர்கள் தம்மை நல்லவர்களாக காட்டிக்கொள்ளவேண்டும், கல்விமான்களுக்கு பட்டம் வழங்க வேண்டும், மதத்திற்கு மதிப்பு கொடுத்தல் வேண்டும், நோயாளர்களை பராமரித்தல் போன்ற வழிமுறைகளினூடாக இராஜ்ஜியத்தை பராமரிக்க வேண்டும் என்கிறார். ஆயினும் பயம், பேராசை, வெறுப்பு, பொறாமை என்பன இராஜ்ஜியத்தில் இருக்கக் கூடாதவை என்று கூறி இவை இருந்தால் இராஜ்ஜியத்தை பாதுகாக்க முடியாது என குறிப்பிடுகின்றார். இவ்வாறு மிக யதார்த்தமாக சாம்ராஜ்த்தை உருவாக்குவதற்கான வழிவகைகள் பற்றி கௌடில்யர் குறிப்பிடுகின்றார்.

### அரசின் தோற்றம்

அரசின் தோற்றம் பற்றி விளக்க முற்படும் போது மனிதனின் இயற்கை நிலை பற்றி விளக்குகின்றார். இது சமூக ஒப்பந்த கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்ற இயற்கை நிலையை ஒத்ததாக இருக்கின்றது. மனிதர்கள் சுயநலம் மிக்கவர்கள். இதனால் ஒருவருக்கொருவர் போட்டியும் பொறாமையும் கொண்டு செயற்படுகின்றவர்களாக இருக்கின்றார்கள் எனக் குறிப்பிடுவதுடன் மனிதனின் இயற்கை நிலையில் மீன் விதி செயற்படுகின்றது எனவும் குறிப்பிடுகின்றார். ''பலவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனனை விழுங்குவான்'' என்பதை மீன் விதி தெளிவுபடுத்து கின்றது. இத்தகைய இயற்கை நிலையில் மக்கள் தம்மைப் பாது காக்க தெய்வத்திடம் முறையிட்டார்கள். இது தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை ஒத்ததாக இருக்கின்றது. மக்கள் தெய்வத்திடம் முறையிட்டதன் பலனாக தெய்வம் உலகைப் பாதுகாக்க ஒருவரை அனுப்பியது. இவரே ஆட்சியாளர் என்கின்றார். இவ்வாறே அரசு தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடுகின்றார்.

### அரசின் இயல்பு

சிறந்த இராஜ்ஜியம் ஒன்றுக்கு எவ்வகையான பண்புகள் இருக்க வேண்டும் என குறிப்பிடுவதன் ஊடாக அரசின் இயல்பை கௌடில்யர் தெளிவுபடுத்துகின்றார். குறிப்பாக தலைநகரங்கள் காணப்பட வேண்டும், உற்பத்திப் பொருட்களைப் பெருக்க வேண்டும், எதிரி களை எதிர்கொள்ளும் வல்லமையுடையதாக பலமுள்ளதாக இருக்க வேண்டும், தேர்ச்சி பெற்ற இராணுவம் இருக்கவேண்டும் என ஓர் அரசு எவ்வகையான இயல்புள்ளதாக இருக்கவேண்டும் என குறிப்பிடுகின்றார்.

### அரசின் அதிகாரம்

ஒரு நாட்டில் அரச அதிகாரம் பேணப்பட வேண்டும் எனவும் அரச அதிகாரத்தைப் பேணுகின்ற அம்சங்கள் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். மன்னன், அமைச்சர்கள், பிரதேசம், கோட்டை, பொக்கிஷம், இராணுவம், நேசநாடுகள் என்பன ஒரு நாட்டின் அரச அதிகாரத்தைப் பேணுகின்ற மூலங்கள் என தெளிவுபடுத்தி ஒரு நாடு இவற்றைப் பேணவேண்டும் என்கின்றார்.

### யுத்தமும் அதிகாரமும்

நலன்பேணும் அரசின் ஆதரவாளராக கௌடில்யர் இருந்தார். ஆனால் அதேசமயம் யுத்தத்தினையும் அவர் ஊக்குவித்தார். அரசின் அதிகாரத்தை பாதுகாப்பதற்கு யுத்தம் அவசியம் என அவர் குறிப்பிடுகின்றார். ஒரு அரசு யுத்தம் புரிந்து அதிகாரத்தை தக்கவைப்பது ஒரு நாட்டின் சமாதானமான இருத்தலுக்கு அவசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது என்பது அவரது கருத்து ஆகும்.[2] இது ''சர்வதேச அரசியலில் நீதிக்கு இடமில்லை'' என்று மாக்ஸ்வெபர் (Max Weber) குறிப்பிட்ட கருத்தை ஒத்ததாக இருக்கின்றது.[3] யுத்தமில்லாமல் ஒரு நாடு இருக்க முடியாது மற்றும் யுத்தம் புரிவது இயல்பானது என கௌடில்யர் குறிப்பிடுகின்றார். அதிகாரத்தை பாதுகாத்தல், பெற்றுக்கொள்ளல், பேணுதல் என்பவற்றுக்கு யுத்தம் அவசியமாகும். தோமஸ் ஹொப்சை போன்று அரசு வரம்பற்ற முழு அதிகாரமுடையதாக இருக்க வேண்டும் என கௌடில்யர் குறிப்பிடுகின்றார்.[4] எனவே அதிகாரத்தை பெருக்குவதே நாட்டினை செழிப்புடையதாக்குவதற்கான ஒரே வழி என்பது இவரது கருத்தாகும். யுத்தம் பற்றிய கருத்தில் இவர் மாக்கியவல்லியுடன் பெரிதும் ஒத்துப்போகின்றார். மூன்று வகையான யுத்தங்கள் பற்றி குறிப்பிடுகின்றார். அவையாவன பகிரங்க யுத்தம், அமைதியான யுத்தம் மற்றும் இரகசிய யுத்தம் என்பனவாகும். பகிரங்க யுத்தம் நாடுகளுக்கிடையில் இடம்பெறும் யுத்தமாகும். இரகசிய யுத்தமானது மறைந்திருந்து தாக்குகின்ற கொரில்லா முறை யுத்தம் ஆகும். அமைதியான யுத்தம் அதிகாரத்தை தக்கவைக்க நாட்டுக்குள் தொடர்ச்சியான முறையில் இடம்பெறும் யுத்தமாகும். ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் சரியான விடயங்களுக்காக மட்டும் யுத்தம் இடம்பெறும் என்பதில்லை. பேராசைக்காகவும் ஆதிக்கத்தினை மேற்கொள்வதற்காகவும் யுத்தம் இடம்பெறலாம் என இவர் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும் பெண்கள் யுத்தத்தில் ஆயுதமாக பயன்படுத்தப்படுவர் என இவர் குறிப்பிட்ட கருத்து பலமாக கண்டிக்கப்படுகின்றது.

---

2. Roger Boesche. (2003) *Kautilya's Arthashastra on War and Diplomacy in Ancient India.* The Journal of Military History, Vol. 67. P 9-38.
3. Max Weber. (1958) *'Politics as a Vocation' in H.H. Gerth and C.W. Mills, From Max Weber: Essays in Sociology.* N.Y.: Oxford University Press. P. 77-127.
4. Walter, E. V. (1964) *Power and Violence.* The American Political Science Review, Vol. 58, No. 2. P. 350-360.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆட்சியாளரின் தன்மை**

ஆட்சியாளர் பயிற்றுவிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டு குழந்தைப் பருவத்தில் இருந்து பத்து வயது வரைக்கும் விஞ் ஞானம், பொருளாதாரம், அரசியல் அறிவு என்பன புகட் டப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். இது பிளேட்டோ ஆட்சியாளர்களைப் பயிற்றுவிக்க முன்வைத்த வழிமுறைகளைப் போன்று காணப்படுகின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆட்சியாளன் பயிற்றுவிக்கப்பட்டவனாக மட்டும் இருந்தால் போதாது அவன் அதிகாரம் மிக்கவனாகவும் இருக்கவேண்டும் எனக் கூறி ஆட்சியாளனுக்கு அதிகாரத்தை வழங்கும் கருவியாக தண்டனைச் சட்டங்களை கௌடில்யர் குறிப்பிடுகின்றார்.[5]

ஆட்சியாளன் பின்வரும் தண்டனைச் சட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தியே தண்டனை வழங்க வேண்டும். அவையாவன அரச சட்டங்கள், மரபுகள், பிரயோகச் சட்டங்கள், தர்ம சாத்திரங்கள் என்பனவாகும். அரச சட்டங்கள் என்பது அரசனின் கட்டளைகளைக் குறிக்கும். மரபுகள் என்பது நீதியின் ஒரு பகுதியைக் குறிக்கும். பிரயோகச் சட்டங்கள் என்பது பரம்பரையாக வரும் கட்டுப்பாடு களைக் கருதும். தர்ம சாத்திரம் என்பது உலகப் பொதுவான தர்மத்தைக் குறிக்கும். இந்நான்கு தண்டனைச் சட்டங்களுக்கிடையிலும் மோதல் ஏற்பட்டால் அரச சட்டத்தை ஏற்க வேண்டும் என கௌடில்யர் குறிப்பிடுகின்றார். இங்கு அரசனின் இறைமையையும் அரசின் இறைமையையும் தெளிவுபடுத்துகின்றார். அத்துடன் அரசு எப்படி உருவாகின்றது என்பதையும் விளக்குகின்றார்.

**நீதியும் சட்டத்தின் ஆட்சியும்**

ஒரு அரசின் செழிப்புநிலைக்கு அந்த நாட்டில் உள்நாட்டு முரண்பாடு இல்லாமல் இருப்பதும் அரசனின் கட்டுப்பாடு காணப்படுவதும் அவசியம் என கௌடில்யர் குறிப்பிடுகின்றார். இதற்காக ஒரு நாடு நீதியின் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சியை கொண்டிருக்க வேண்டும் எனவும் சட்டம் மன்னனின் கைகளில் காணப்பட வேண்டும்

5. Agrawal, K.M. (1990) *Kautilya on Crime and Punishment.* Uttarakhand: Shree Almora Book Depot Publishing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் தண்டனைகள் மன்னனால் வழங்கப்பட வேண்டும் என்றும் கௌடில்யர் வலியுறுத்துகின்றார். அப்போதுதான் சமூக நீதியை பாதுகாப்பாக பேணமுடியும் என்பது அவரது கருத்து ஆகும். அதேசமயம் தண்டனைகள் ஒரு குற்றவாளியை சீர்திருத்துவதாகவும் சமூகத்தை நல்வழிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும் எனவும் ஒரு அரசு தன்னை பலப்படுத்திக்கொள்வதற்கும் மேலும் அதிகாரத்தை பெறுவதற்கும் சட்ட ஒழுங்கை பேணுவது மிகவும் அவசியமானது எனவும் இவர் குறிப்பிடுகின்றார்.

**மனித உரிமைகள்**

மனித உரிமைகளுக்கு கௌடில்யர் மிக முக்கியமான இடம் வழங்கி யிருக்கின்றார். எவ்வாறு ஒரு ஆட்சியாளன் போர் புரிய வேண்டும் மற்றும் போர்க்களத்தில் எதிரிகளை எவ்வாறு நடாத்தவேண்டும் என்பது போன்ற பல விடயங்களைப் பற்றி இவர் குறிப்பிட்டுள்ளார். இது தற்காலத்தில் காணப்படுகின்ற மனிதாபிமான சட்டத்தை ஒத்ததாக இருக்கின்றது. குற்றவியல் நீதி மற்றும் யுத்த நீதி பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டவர்கள் மீது போர் புரிபவர்கள் நீதியும் மனிதத்துவமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது இவரது கருத்து ஆகும். யுத்தத்தில் தோற் கடிக்கப்படுகின்ற மன்னனை மதிக்க வேண்டும் என்றும் அவனுடன் நட்புபாராட்டி கூட்டு சேர வேண்டும் என்றும் இவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு மனித உரிமைகளுக்கு முக்கியம் கொடுத்து பல கருத்துக் களை கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார்.

**ஆட்சிமுறை பற்றிய கருத்துக்கள்**

ஆட்சிமுறை பற்றிய கருத்துக்களையும் கௌடில்யர் குறிப்பிடுகின்றார். குடியாட்சி முடியாட்சி போன்ற ஆட்சிமுறைகளைப் பற்றி குறிப்பிட் டுள்ள போதும் முடியாட்சியே சிறந்தது என்பது இவரது கருத்து. முடியாட்சி பரம்பரையாக வரவேண்டும் என இவர் குறிப்பிட்டுள்ளார். அதனோடு இணைந்த வகையில் உள்நாட்டு நிர்வாகம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மத்திய பிரிவுகள், உள்நாட்டு பிரிவுகள், வெளி நாட்டு பிரிவுகள் என பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் உப பிரிவுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி உள்நாட்டு நிர்வாகம் செயற்படுத்தப்படவேண்டும் என்பது இவரது கருத்தாகும்

**அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு**

ஒரு நாடு அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை சிறப்பாக பேணவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். மக்களின் உரிமைகளை சிறப்பாக பேணும்போதே மக்களுடனான உறவை சிறப்பாக பேணமுடியும் எனவே ஆட்சியாளருக்கு வழங்கும் பயிற்சி தான் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரே வழி என குறிப்பிடுகின்றார். ஆயினும் ஆட்சியாளருக்கு எதிராக மக்கள் செயற்படலாமா? இல்லையா? என்பது பற்றி எதுவிதமான குறிப்பும் கௌடில்யரின் நூலில் இடம்பெறவில்லை.

**இராஜதந்திரம் மற்றும் சர்வதேச உறவுகள்**

சர்வதேச உறவுகள் தொடர்பான கொள்கையையும் இவர் விளக்கி யுள்ளார். இராஜதந்திரம் மற்றும் வெளிநாட்டுக் கொள்கையானது மீன் விதியின் அடிப்படையிலேயே செயற்படுகின்றது என்பது இவரது கருத்து.[6] பலமான நாடுகள் பலவீனமான நாடுகளை ஆக்கிர மிக்கும் என்கிறார். உள்நாட்டு வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைப் பாதுகாக்க உதவுவதே வெளிநாட்டு கொள்கை என இவர் குறிப்பிடுகின்றார். கௌடில்யர் இராஜதந்திரம் மற்றும் வெளி நாட்டுக் கொள்கையை ஆறு விதமாகப் பிரிக்கின்றார்.[7] அவையாவன

1. ஸந்தி : சமாதானக் கொள்கைக்கான பரஸ்பர உதவி ஒப்பந்தம்
2. விக்கிரக : எதிரி நாடுகள் தமக்கிடையே ஏற்படுத்துகின்ற உறவை அழித்து யுத்தக் கொள்கையை ஏற்படுத்துவது.
3. ஆஸன : தேசப் பிரச்சனைகளில் இருந்து ஒதுங்கி நின்று நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிப்பது.

---

6. Bharati Mukherjee. (1976) *Kautilya's Concept of Diplomacy.* Calcutta: Minerva Associates Publications.
7. Hoffmann, S. (1981) *Duties Beyond Borders: On the Limits and Possibilities of Ethical International Politics.* N.Y.: Syracuse University Press. P. 1-43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. யான : பலவீனமான அயல் நாட்டின் மீது போர்தொடுத்து போர் புரிதல் கொள்கையைக் கடைப்பிடிப்பது.

5. சமாஸ்ரய : தன்னுடன் சேரும் எல்லா நாடுகளையும் சேர்த்து கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்துதல்.

6. துவைதீபாவம் : ஒழுங்கற்ற நாட்டை விடுத்து ஒழுங்குள்ள நாட்டுடன் இணைந்து நிற்றல்.

இவ் ஆறுவிதமான கொள்கைகளிலும் தீவிர கவனம் செலுத்தாத எந்த தேசமும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பது இவர் கருத்து. கௌடில்யருடைய இராஜதந்திரமும் வெளிநாட்டுக் கொள்கையும் அரசனையும் அவனது அதிகாரத்தையும் மையமாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரது இராஜதந்திர மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் இந்து மரபின் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.[8]

### கௌடில்யரும் பிளேட்டோவும்

கௌடில்யரும் பிளேட்டோவும் பல விடயங்களில் ஒன்றுபடுவதைக் காணலாம். குறிப்பாக சமூக அமைப்பு, சர்வாதிகாரம், ஒழுக்கம் மற்றும் உயர்குடியானவர்களுக்கான ஆதரவு என்பவற்றில் இருவரும் பெரிதும் ஒன்றுபடுகின்றனர்.[9] கௌடில்யர் சாதிமுறை அடிப்படையில் அமைந்த சமூக அமைப்பு பற்றி குறிப்பிடுகின்றார். அதில் கீழ் சாதியினர் மற்றவர்களுக்கு சேவகம் செய்கின்ற பணியை புரிவதாக சொல்கின்றார். இதேபோன்று இதற்கு சமாந்தரமாக பிளேட்டோவும் அடிமைகள் வகுப்பை உருவாக்கி அடிமைகள் மற்றவர்களுக்கு சேவகம் செய்கின்ற பணியை புரிவதாக குறிப்பிடுகின்றார். ஆயினும் இருவரும் அடிமைகள் பற்றி (சேவகம் செய்வோர் பற்றி) அதிகமாக எதுவும் விவாதித்திருக்கவில்லை. பிளேட்டோவும் கௌடில்யரும் ஜனநாயகத்தை புறக்கணித்து (மக்களாட்சி) படித்த உயர்வர்க்கத்தினரே

8. George Modelski. (1964) *Kautilya: Foreign Policy and International System in the Ancient Hindu World.* The American Political Science Review, Vol. 58, No. 3. P. 549-560.
9. Spengler, J. J. (1969) *Kautilya, Plato and Lord Shang.* Comparative Political Economy, Vol. 113, No. 6. P.450-457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை ஆட்சி புரிய வேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தார்கள். இருவரும் ஜனநாயகம் காலப்போக்கில் அராஜக ஆட்சிக்கு வழிவகுக்கும் என்று நம்பினார்கள். இவ்வாறு இவர்கள் இருவரும் ஒரே மாதிரியான கருத்தைக் கொண்டிருந்த போதும் பல்வேறு விடயங்களில் வேறுபடுவதைக் காணலாம். பிளேட்டோ ஒரு அரசியல் தத்துவவியலாளராக இருந்து அரசியல் கருத்துக்களை வெளியிட்டார். ஆனால் கௌடில்யர் ஒரு அரசியல் ஆலோசகராக இருந்து அரசியல் கருத்துக்களை வெளியிட்டவர். இதனால் பிளேட்டோவின் கருத்துக்கள் இலட்சிய அடிப்படையைக் கொண்டதாகவும் கௌடில்யரின் கருத்துக்கள் யதார்த்த அடிப்படையானதாகவும் காணப்பட்டது. மேலும் பிளேட்டோ கிரேக்க நகர அரசுகளை அடிப்படையாக கொண்டு கருத்துக்களை வெளியிட கௌடில்யர் சாம்ராஜ்யத்தை அடிப்படையாக கொண்டு கருத்துக்களை வெளியிட்டுள்ளார். எவ்வாறாயினும் ஒரு சில வேறுபாடுகள் காணப்பட்டபோதும் கௌடில்யரின் கருத்துக்களும் பிளேட்டோவின் கருத்துக்களும் பெருமளவிற்கு ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம்.

### கௌடில்யரும் மாக்கியவல்லியும்

கௌடில்யர் தான் சார்ந்த மத நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு தனது கருத்துக்களை முன்வைக்க மாக்கியவல்லி அனுபவங்களையும் வரலாற்று முன்னுதாரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு தனது கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையில் மாக்கியவல்லியின் கருத்துக்கள் கௌடில்யரின் கருத்துக்களை விட யதார்த்தமானதாக அமைந்திருந்திருக்கின்றது. ஆயினும் பல விடயங்களில் இருவரும் ஒன்றுபட்டு காணப்படுகின்றார்கள்.[10] இருவரும் பலமுள்ள சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க முனைந்தார்கள். அத்துடன் இராஜதந்திர செயற்பாடுகளின் அவசியத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனினும் இராஜதந்திர முயற்சிகள் செயலற்று போகும்போது யுத்தம் அவசியமானது என்பதனை இருவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அதேசமயம் உறுதியான

10. Roger D. Spegele. (1987) *Three forms of Political Realism.* Political Studies: Vol. 35.P.189-210

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு நாட்டுக்குள் காணப்படும் பல்லின கலாச்சார தன்மை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பதனையும் மக்கள் சகிப்புத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதனையும் இருவரும் குறிப்பிட்டுள்ளனர். இருவரும் அரசின் உறுதித்தன்மைக்காக மதங்கள் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்ற போதும் மாக்கியவல்லி மதத்தை கண்டிக்கின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. ஆனால் கௌடில்யர் மத அடிப்படையில் இருந்து கருத்து தெரிவிப்பதால் மதத்தை ஒருபோதும் கண்டித்திருக்கவில்லை. ஒழுக்கம் என்பது அவசியமானது என்பதனை இருவரும் ஏற்றுக்கொள்கின்ற அதேநேரம் அந்த ஒழுக்கம் அரசின் செயற்பாடுகளுக்கு பயனுடையதாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர். ஆயினும் கௌடில்யர் குறிப்பிட்டது போன்று பல்வேறு விதமான இராஜதந்திர முறைகளை வெளிநாட்டு உறவில் பயன்படுத்துவது பற்றி மாக்கியவல்லி பெரிதாக எதனையும் குறிப்பிட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் கௌடில்யரின் பல்வேறு கருத்துக்களுடன் நவீன அரசியல் கோட்பாட்டாளரான மாக்கியவல்லியின் கருத்துக்கள் ஒத்துப்போவதையும் நவீன அரசியல் கருத்துக்களுக்கு சமாந்தரமாக கௌடில்யரின் கருத்துக்கள் அமைத் திருப்பதையும் காணலாம்.[11]

### கௌடில்யர் சிந்தனைகளில் காணப்படும் சாதக பாதகங்கள்

கௌடில்யர் சிந்தனையின் பெருமை பற்றி பல்வேறு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தண்டி, காமந்தகன் போன்ற அறிஞர்கள் இவர் தம் கல்விப் பரப்பையும் அரசியல் அறிவையும் நூலின் பெருமையையும் போற்றியிருக்கின்றாகள். அரச தந்திரம் வல்லோரை ''சாணக்கியர்'' என்று கூறும் வழக்கம் இன்றும் இருந்து வருவது இவரது பெருமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. வெளிநாட்டுத் தூது வர்கள் தங்குவதற்காக புதுடில்லியில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு ''சாணக்கிய புரி'' என்று இந்திய அரசு பெயர் சூட்டியுள்ளமை இவரது சிறப்பையே எடுத்துக்காட்டுகின்றது. பிளிட் என்ற மேற் கத்தைய அறிஞர் ''அர்த்தசாஸ்திரம் இந்தியாவுக்கு மட்டுமல்ல

11. Roger Boesche. (2002) *Moderate Machiavelli? Contrasting The Prince with Arthshastra of Kautilya*. Critical Horizons: Vol. 3.P. 253, 24p

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுமைக்கும் நிர்வாகத்துறைக் கலையினையும் அரசியல் சூழ்ச்சித் திறன்களையும் சுட்டிக்காட்டும் மிக அழகான கையேடு'' எனக் குறிப்பிட்டுள்ளமை இவர் கீழைத்தேச அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சிக்கு எந்தளவுக்கு பங்களிப்பாற்றியுள்ளார் என்பதை விளக்கு வதாக இருக்கின்றது. பௌத்த மதத்தை பின்பற்றிய தர்மபாலன் என்ற அரசன் ஹிமாலயப் பிரதேசங்களையும் தென்னாட்டையும் ஜெயிக்க சாணக்கிய சாஸ்த்திரங்களையே பின்பற்றினான் எனக் குறிப்பிடப்படுகின்றமை பிற்கால அரசியல் சிந்தனை விருத்திக்கும், செயற்பாட்டுக்கும் இவரது கருத்து எந்தளவுக்கு துணை புரிந்துள்ளது என்பதையே எடுத்துச்சொல்கின்றன.

ஆயினும் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் கௌடில்யரின் சிந்தனைகள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்றன. நீதி, அறம், மதம், ஒழுக்கம் என்பவற்றினை மறுப்பது கண்டிக்கப்படுகின்றது. பொருளின் மூலமும் பகுத்தறிவின் மூலமும் அடையக்கூடியவற்றையும் அதேசமயம் அடைய முடியாதவற்றையும் ஒழுக்கம், மதப்பற்று என்பவற்றின் மூலம் அடையக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது. உண்மையாக இல்லாமல்; சில விடயங்களில் உண்மையினைப்போல் நடிக்க வேண்டும் எனக் கூறுவது கண்டிக்கப்படுகின்றது. ஏனெனில் மக்கள் விழிப்படை கின்றபோது, உண்மை தெரியவரும்போது மக்கள் அரசுக்கெதிராக கிளர்ந்தெளுவார்கள். இது ஆரோக்கியமான செயற்பாடல்ல ஆகவே பொருத்தமற்றது என குறைகூறப்படுகின்றது. குறுகிய நோக்க முடையதாக இருப்பது குறைபாடாக குறிப்பிடப்படுகின்றது. ஏனெனில் இவரது கருத்து அக்கால சூழ்நிலைக்கு பொருத்தமானதாக இருக்கலாம் ஆனால் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியதல்ல எனக் கண்டிக்கப்படுகின்றது. அத்தோடு இவரது கருத்துக்கள் அரசியற் தந்திரமே தவிர அரசியற் கொள்கையல்ல எனவும் குற்றஞ்சாட்டப் படுகின்றது. ''அர்த்தசாஸ்திரத்தை நான் ஒரு சாஸ்திரமாகவே ஒப்புக் கொள்ள தயாராகவில்லை'' என கலாநிதி விண்டர் நிட்ஸ் என்ற மேற்கத்தைய அறிஞர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல்வேறு அடிப் படையில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் தொடர்பாக முன்வைக்கப்படுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கௌடில்யரின் முக்கியத்துவம்

அரசியல் கோட்பாட்டு வரலாற்றில் கௌடில்யருக்கு மிக முக்கியமான இடம் காணப்படுகின்றது. மாக்கியவல்லி 'இளவரசன்'' என்ற நூலை எழுதுவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்னரே அதற்கு சமாந்தரமான நவீன அரசியல் கருத்துக்களை முன்வைத்துள்ள சிறப்பு இவருக்குண்டு. இவர் முன்வைத்த அரசியற் கருத்துக்கள் மிகவும் யதார்த்தமானவையாக அமைந்ததுடன் தற்காலத்திற்கும் பொருத்தமானவையாகவும் காணப்படுகின்றது. இராஜதந்திர முறைகள் பற்றி இவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தற்கால நவீன மேற்கத்தைய இராஜதந்திர செயன்முறைகளுடன் ஒத்தவையாக காணப்படுகின்றன. குறிப்பாக தற்காலத்தில் முக்கியத்துவமுடைய யுத்தமும் சமாதானமும், மனித உரிமைகள், சர்வதேச உலக ஒழுங்கு மற்றும் பொருளாதார சமத்துவம் பற்றிய பல்வேறு விடயங்கள் தொடர்பான கருத்துக்களை இவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் யதார்த்தவாதம் பற்றிய எண்ணக்கருவின் முன்னோடியாகவும் இவரே குறிப்பிடப்படுகின்றார். இதனால் அரசியல் கோட்பாட்டு வரலாற்றில் இவருக்கு மிக முக்கியமான இடம் வழங்கப்படுவதுடன் இவரது கருத்துக்கள் தற்காலத்திலும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றன.

### கௌடில்யரின் சிந்தனைகள் பற்றிய மதிப்பீடு

குறைபாடுகள் தவிர்க்கமுடியாதவை. வளர்ச்சியடைகின்ற சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு சிந்தனையும் தவிர்க்கமுடியாத படி குறைபாடுடையதாகவே இருக்கும். ஒரு காலத்து சிந்தனைகள் இன்னொரு காலத்திற்கு பொருத்தமற்றதாகவும் அமையலாம். ஆனால் குறைபாடுடையது என்பதற்காக அங்கு நன்மைகள் இல்லை என்று அர்த்தம் கொண்டுவிடக் கூடாது. இவ்வடிப்படையை வைத்துக் கொண்டு கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தை நோக்கினால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் மேற்கத்தைய சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அரசு, அதிகாரம், நிர்வாகம், வெளிநாட்டு உறவுகள் போன்ற பல்வேறு விடயங்களை எடுத்துச்சொல்கின்றமையானது இதன் கனதியையே எடுத்துக்காட்டுகிறது. மேற்கத்தைய மாக்கியவல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கக்கூடிய அளவுக்கு கௌடில்யரின் சிந்தனைகள் அமைந்திருப்பதும், கீழைத்தேய அரசியல் சிந்தனையின் எழுச்சிக்கு வழிவகுத்தமையும் இவரது அரசியல் சிந்தனை எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

*"ஒரு மனிதனின் சிறந்த நண்பன் கல்வியே ஆகும். கல்வியறிவுடைய மனிதன் சென்ற இடமெல்லாம் சிறப்பு இருக்கும்."........... "பலவான் பலவீனனை விழுங்குவான் எனவே பலமுடையதாக இருத்தலே அவசியமானது"*

*(கௌடில்யர் - "அர்த்த சாஸ்திரம்")*

## அத்தியாயச் சுருக்கம்

- *இந்துமதம் அரசியற் கல்விக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கின்றது. இதில் இந்துமத நூலான கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் முக்கியமானதாகும். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் இந்து மத நூலாக கொள்ளப்பட்ட போதும் அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் நூலாகவே காணப்படுகின்றது.*
- *இக்காலப்பகுதியில் சிந்துவெளிப் பிரதேசத்தில் இரு வேறுபட்ட தத்துவ நிலைகள் காணப்பட்டன. பௌத்த தத்துவ நிலையும் பகுத்தறிவு தத்துவ நிலையும் இப்பிராந்தியத்தினை ஆக்கிரமித்தன. அலெக்ஸ்சாண்டரின் படையெடுப்பை முறியடிக்க இத்தத்துவ நிலைகள் பயனுடையவையாக இருக்கவில்லை. இதனால் புதிய தத்துவ நிலையொன்றை ஏற்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கௌடில்யர் அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதினார்.*
- *அர்த்த சாஸ்திரம் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்திருக் கின்றது. அதிகாரம், அத்தியாயம், பிரகரணம் என இது பிரிக்கப்பட்டிருக் கின்றது. 15 அதிகாரங்களையும் 150 அத்தியாயங்களையும் 180 பிரகரணங்களையும் கொண்டு மொத்தம் 6000 சுலோகங்கள் அர்த்த சாஸ்திரத்தில் காணப்படுகின்றன.*
- *இந்திய சாம்ராஜ்ஜத்தை நிறுவி ஒரு பலமான ஆட்சியை ஏற்படுத்த கௌடில்யர் முயன்றார். இதற்காக கௌடில்யர் சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தல், பராமரித்தல், பலப்படுத்தல் என்பவற்றைப் பற்றி குறிப்பிடுகின்றார்.*

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசின் தோற்றம் பற்றி விளக்க முற்படும் போது மனிதனின் இயற்கை நிலையில் மீன் விதி செயற்படுகின்றது எனவும் ''பலவான் பலவீனனை விழுங்குவான்'' என்பதை மீன் விதி தெளிவுபடுத்துகின்றது எனவும் குறிப்பிடுகின்றார். இத்தகைய இயற்கை நிலையில் மக்கள் தம்மைப் பாதுகாக்க தெய்வத்திடம் முறையிட்டதன் பலனாக தெய்வம் உலகைப் பாதுகாக்க ஒருவரை அனுப்பியது. இவரே ஆட்சியாளர் என்கின்றார். இவ்வாறே அரசு தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடுகின்றார்.

- சிறந்த இராஜ்ஜியம் ஒன்றுக்கு எவ்வகையான பண்புகள் இருக்க வேண்டும் என குறிப்பிடுவதன் ஊடாக அரசின் இயல்பை கௌடில்யர் தெளிவுபடுத்துகின்றார். குறிப்பாக எதிரிகளை எதிர்கொள்ளும் வல்லமையுடையதாக பலமுள்ளதாக இருக்க வேண்டும், தேர்ச்சி பெற்ற இராணுவம் இருக்கவேண்டும் என ஓர் அரசு எவ்வகையான இயல்புள்ளதாக இருக்கவேண்டும் என குறிப்பிடுகின்றார்.

- ஒரு நாட்டில் அரச அதிகாரம் பேணப்பட வேண்டும் எனவும் அரச அதிகாரத்தைப் பேணுகின்ற அம்சங்கள் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். நலன்பேணும் அரசின் ஆதரவாளராக கௌடில்யர் இருந்தார். ஆனால் அதேசமயம் யுத்தத்தினையும் அவர் ஊக்குவித்தார். அரசின் அதிகாரத்தை பாதுகாப்பதற்கு யுத்தம் அவசியம் என அவர் குறிப்பிடுகின்றார்.

- ஆட்சியாளர் பயிற்றுவிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டு குழந்தைப் பருவத்தில் இருந்து பத்து வயது வரைக்கும் விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் அறிவு என்பன புகட்டப்படவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

- ஒரு அரசின் செழிப்புநிலைக்கு அந்த நாட்டில் உள்நாட்டு முரண்பாடு இல்லாமல் இருப்பதும் அரசனின் கட்டுப்பாடு காணப்படுவதும் அவசியம் என கௌடில்யர் குறிப்பிடுகின்றார். இதற்காக ஒரு நாடு நீதியின் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சியை கொண்டிருக்க வேண்டும் என கௌடில்யர் வலியுறுத்துகின்றார்.

- மனித உரிமைகளுக்கு கௌடில்யர் மிக முக்கியமான இடம் வழங்கியிருக்கின்றார். எவ்வாறு ஒரு ஆட்சியாளன் போர் புரிய வேண்டும் மற்றும் போர்களத்தில் எதிரிகளை எவ்வாறு நடாத்த வேண்டும் என்பது போன்ற பல விடயங்களைப் பற்றி இவர் குறிப்பிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளார். இது தற்காலத்தில் காணப்படுகின்ற மனிதாபிமான சட்டத்தை ஒத்ததாக இருக்கின்றது.

- ஆட்சிமுறை பற்றிய கருத்துக்களையும் கௌடில்யர் குறிப்பிடு கின்றார். குடியாட்சி முடியாட்சி போன்ற ஆட்சி முறைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ள போதும் முடியாட்சியே சிறந்தது என்பது இவரது கருத்து. முடியாட்சி பரம்பரையாக வரவேண்டும் என இவர் குறிப்பிட் டுள்ளார்.
- ஒரு நாடு அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை சிறப்பாக பேணவேண்டும் எனவும் மக்களின் உரிமைகளை சிறப்பாக பேணும்போதே மக்களுடனான உறவை சிறப்பாக பேணமுடியும் எனவும் குறிப்பிடுகின்றார்.
- சர்வதேச உறவுகள் தொடர்பான கொள்கையையும் இவர் விளக்கி யுள்ளார். பலமான நாடுகள் பலவீனமான நாடுகளை ஆக்கிரமிக்கும் மீன் விதியின் அடிப்படையிலேயே வெளிநாட்டுக்கொள்கையானது செயற்படுகின்றது என்கிறார். உள்நாட்டு வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைப் பாதுகாக்க உதவுவதே வெளிநாட்டு கொள்கை என இவர் குறிப்பிடுகின்றார்.
- கௌடில்யரும் பிளேட்டோவும் குறிப்பாக சமூக அமைப்பு, சர்வாதிகாரம், ஒழுக்கம் மற்றும் உயர்குடியானவர்களுக்கான ஆதரவு என்பவற்றில் பெரிதும் ஒன்றுபடுகின்றனர். ஆயினும் பல்வேறு விடயங்களில் வேறுபடுவதையும் காணலாம்.
- மாக்கியவல்லியின் கருத்துக்கள் கௌடில்யரின் கருத்துக்களை விட யதார்த்தமானதாக அமைந்திருந்திருக்கின்றது. ஆயினும் பல விடயங்களில் இருவரும் ஒன்றுபட்டு காணப்படுகின்றார்கள். இருவரும் பலமுள்ள சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க முனைந்தார்கள். அத்துடன் இராஜதந்திர செயற்பாடுகளின் அவசியத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனினும் இராஜதந்திர முயற்சிகள் செயலற்று போகும்போது யுத்தம் அவசியமானது என்பதனை இருவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 04*

# புராதன பௌத்தமத அரசியல் கருத்துக்கள்
# Ancient Buddist Political Thought

## அறிமுகம்

புராதன பௌத்த மத சிந்தனைகளில் அரசியற் கருத்துகள் காணப் படுகின்றன. பௌத்த மத சிந்தனைகள் மத ரீதியான சிந்தனைகளையும் தத்துவங்களையும் குறிப்பிட்டிருந்த போதும் அவை அரசியற் கருத்துக்களையும் கொண்டிருந்தன. பௌத்த மத சிந்தனைகளில் காணப்படுகின்ற அரசியற் கருத்துகள் அக்கால அரசியற் செயற் பாடுகளை நெறிப்படுத்துவதில் மிகப் பெரிய பங்களிப்பினை வழங்கியிருக்கின்றது. அக்காலத்தில் அரசியல் மதத்துடன் இரண்டற கலந்திருந்தது. அத்துடன் அரசியல் செயல்பாடுகளைத் தீர்மானிப்பதில் மதம் முக்கிய பங்கு வகித்தது. இதனால் பௌத்தமத சிந்தனைகளில் பெருமளவுக்கு அரசியற் கருத்துக்கள் காணப்பட்டன. சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத்தை மதித்தலும் பேணுதலும், ஆட்சியியல் செயன் முறைகள், ஆட்சியாளர்களின் சமூக கொள்கைகள் போன்ற பல்வேறு அரசியற் கருத்துக்களை பௌத்தம் கொண்டிருந்தது.

## பௌத்தம் ஒரு மத அடிப்படையிலான தத்துவம்

பௌத்தம் உலகத்தை பற்றி விளக்குகின்ற மத அடிப்படையிலான ஒரு தத்துவம் என குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் பௌத்தம் ஒரு மதமா அல்லது தத்துவமா என்ற விவாதங்கள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன.[1] கௌதம புத்தர் மத அடிப்படைகளை நிராகரித்து

1. Walshe, M.O.C (1987) *Thus Have I Heard: The Long Discourses of the Buddha.* London: Wisdom.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்தின் மூலம் பௌத்த தத்துவ கருத்துக்களை உலகுக்கு வழங்கியுள்ளார் என்று ஒரு தரப்பினர் வாதிடுகின்றனர். எனினும் இன்னொரு தரப்பினர் கௌதம புத்தரினால் முன்வைக்கப்பட்ட தத்துவக் கருத்துக்கள் காலவோட்டத்தில் பௌத்த மதமாகவும் மதக் கருத்துக்களாகவும் மாற்றம் பெற்றுவிட்டன என குறிப்பிடுகின்றனர்.[2] எவ்வாறாயினும் இது அரசுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மதத்துக்கும் இடையிலான தொடர்பை விளக்குகின்றது. பிற்காலத்தில் பௌத்த மதத்தை பரவச்செய்து அதன் அரசியல் கருத்துக்களை பயன்படுத்தி அதனை உலகறியச் செய்த பெருமை அசோகச் சக்கரவர்த்தியையே சாரும்.

### தேராவாத மற்றும் மகாயான பௌத்தம்

இந்தியாவில் பௌத்தம் தோற்றம் பெற்றதிலிருந்து சகிப்புத்தன்மையையும் விடுதலையையும் அகிம்சையையும் அது போதிக்கின்றது.[3] பௌத்தம் தேராவாத மற்றும் மகாயான பௌத்தம் என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. தேராவாத பௌத்தம் மிகப் பழமையானதாக குறிப்பிடப்படுகின்றது. இலங்கை, கம்போடியா, பர்மா மற்றும் தாய்லாந்து ஆகிய இடங்களில் தேராவாத பௌத்தம் காணப்படுகின்றது. இது பொதுவாக சுதந்திரம் பெறுவதற்கான தியான அடிப்படைகளைப் பற்றி போதிக்கின்றது. மகாயான பௌத்தம் இந்தியாவில் இருந்து தோற்றம் பெற்றிருந்தாலும் சீனா, வியட்னாம், ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் பிரபல்யம் பெற்று காணப்படுகின்றது.[4] இது தேராவாத பௌத்தம் போலல்லாமல் சமூக விடயங்களிலும் செயற்பாடுகளிலும் அதிக அக்கறை கொண்டதாக காணப்படுகின்றது. இவ்வாறு பௌத்தமத கருத்துக்கள் ஒரு நாட்டினுடைய சமூக, வரலாறு மற்றும் கலாச்சார அடிப்படைகளை தீர்மானிப்பதன் ஊடாக அரசியலில் செல்வாக்கு

2. Ling, T. (1981) *The Buddha's Philosophy of Man:* Early Indian Buddhist Dialogues. London: Everyman Library.
3. Warder, A.K. (1970) Indian Buddhism. New Delhi.
4. Williams. P.M. (1989) *Mahayana Buddhism: The Doctrinal Foundations.* London: Routledge.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துகின்றது.[5] அதுமட்டுமன்றி பௌத்தமத நிறுவனங்கள் அமுக்கக் குழுக்களாகவும் அரசியல் கட்சிகளாகவும் செயற்பட்டு அரசியற் செயன்முறைகளில் பங்கெடுக்கின்றன. சில நாடுகளில் காலனித்துவ எதிர்ப்பிற்கான குறியீடாகவும் பௌத்தமத கருத்துக்கள் காணப்பட்டிருக்கின்றன.

### மன்னராட்சிக்கான வழிகாட்டியாக பௌத்தம்

பௌத்த மத கருத்துக்களின் மிக முக்கியமான அரசியற் பங்களிப்பாக அரசியற் கருத்துக்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவியமை மற்றும் ஆட்சியியல் செயற்பாடுகளுக்கு வழிகாட்டியாக இருந்தமை என்பன குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக மன்னராட்சிக்கான வழிகாட்டியாக பௌத்தம் செயற்பட்டிருக்கிறது.[6] அசோக சக்கர வர்த்தியின் மன்னராட்சி பௌத்த மத ஆட்சியாக வர்ணிக்கப் பட்டமையும் பிற்காலத்தில் பௌத்தம் செல்வாக்கு பெற்ற நாடுகளில் அசோக சக்கரவர்த்தியின் பௌத்த மத ஆட்சி இலட்சிய மாதிரியாக கொள்ளப் பட்டமையும் இதற்கு சிறந்த உதாரணமாகும். பௌத்தம் ஏனைய பண்டைய மதங்களும் இலக்கியங்களும் போதித்த அரசியற் கருத்துக்களில் இருந்து மாறுபட்டு அகிம்சை மற்றும் அறக் கருத்துக் களினூடாக அரசியல் சிந்தனைகளை வெளிப்படுத்தியது. இது அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சியினை செம்மைப்படுத்துவதில் பெரிய பங்கை ஆற்றியிருந்தது. இதன்பின்னர் மகாயான பௌத்தம் (Ariyasatya Parivarta Sutta) அரசியலில் வன்முறையையும் யுத்தத்தையும் தவிர்த்து அகிம்சையை போதித்தது மட்டுமல்லாமல் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மற்றும் பாதுகாப்பு கூட்டணி களையும் ஏற்படுத்தியிருந்தது.[7] கௌதம புத்தர் ஒரு மத சிந்தனையாளர் என்பதைக் காட்டிலும் ஒரு 'அரசியல் தத்துவவியலாளர்' என்றே பல அறிஞர்களினால் குறிப்பிடப்பட்டார்.

---

5. Suzuki, B.L. (1963) Mahayana Buddhism: A Brief Outline. New York: Collier.
6. Gokhale, B. G. (1987) *The Concept of Disorder in Early Buddhist Political Thought.* Sri Lanka Journal of Buddhist Studies: Vol. I.P. 128.
7. Pande, G. C. (1974) *Studies in the Origin of Buddhism*, Delhi: Motilal Banarsidass.P. 12-16.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பௌத்த மத அரசியற் கருத்துக்களுக்கான அடிப்படைகள்

மன்னராட்சி, ஆட்சிமுறை, அரசு, அரசாங்கம், அரசின் தோற்றம், நிர்வாக கட்டமைப்பு மற்றும் அரசியல் ஒழுங்கின் அவசியம் என்பன பற்றி பௌத்தமத இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.[8] பௌத்தமத இலக்கியங்களான நிகாயா (Nikiiyas) யாதாக (Jiitakas) சுத்த பிடக (Sutta Pitaka) திக்க நிகாய (Digha Nikiiya) வினைய பிடக (Vinaya Pitaka) போன்ற பௌத்தமத இலக்கியங்கள் அரசியற் கருத்துக்களுக்கான அடிப்படைகளாக குறிப்பிடப்படுகின்றன.[9]

### மன்னராட்சி பற்றிய கருத்துக்கள்

பௌத்த இலக்கியங்களில் மன்னராட்சியின் தோற்றம் மற்றும் இயல்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. பௌத்த மத இலக்கியங்களான அக்கண சூத்திரம் (Agganna Sutta) திக்க நிகாயா (Digha Nikaya) மற்றும் ஜாதக கதைகள் (Jatakas) என்பன மன்னராட்சியின் தோற்றம் மற்றும் இயல்பு பற்றி குறிப்பிடுகின்றன. அக்கண சூத்திரம் (Agganna Sutta) மனித சமூகத்தின் பல்வேறு படிநிலைகளினூடாக அரசும் மன்னராட்சியும் தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடுகின்றது. ஆரம்பத்தில் மக்களிடையே அமைதியும் செழிப்பும் காணப்பட்டது. இது பின்னர் திருப்தியின்மையையும் பூரணமற்ற தன்மையையும் ஏற்படுத்தி பல்வேறு வேறுபாடுகளை மக்களிடையே தோற்றுவித்தது. இதனால் உணவுத் தேடுதலிலும் அதனைப் பாதுகாப்பதிலும் மக்கள் முதலில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்கள். இதன் பின்னர் தம்மை குடும்பமாக ஒழுங்கமைத்துக் கொண்ட அவர்கள் தமக்கிடையே நிலங்களைப் பங்கீடு செய்து கொண் டார்கள். இருந்தும் சமத்துவமின்மை காரணமாக களவும் பொய்யும் ஒருவரை ஒருவர் வஞ்சிப்பதும் காணப்பட்டது. இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு அரசனைத் தோற்றுவித்து மன்னராட்சியை ஏற்படுத்தினார்கள் என்று பௌத்தம் குறிப்பிடுகின்றது. இதன்மூலம் மக்களுக்காக சட்டம் ஒழுங்கு

---

8. Wijesekera, O.H. A. (1952) *Buddhism and Society. Kandy:* Buddhist Publication Society.
9. Benoychandra Sen. (1974) *Studues in the Buddhist Jiitakas,* Calcutta: Saraswati Library.P. ii.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் நீதியை அரசன் ஏற்படுத்துவான் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கான அதிகாரம் மக்களால் மன்னனுக்கு வழங்கப்பட்டுள்ளது என பௌத்தம் குறிப்பிடுகின்றது. (mahajanasammata) ஆயினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மன்னன் பற்றிய செய்திகளையும் பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. முக்கியமாக பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்ற ஜாதக கதைகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மன்னன் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இதனால் மக்களை வழிநடத்துகின்ற தலைவனாக மன்னனை பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு மன்னன் பற்றியும் மன்னராட்சி பற்றியும் குறிப்பிடுகின்ற பௌத்த இலக்கியங்கள் சர்வாதிகாரத்தன்மைமிக்க மன்னராட்சி பற்றியும் ஜனநாயகத் தன்மை மிக்க மன்னராட்சி பற்றியும் குறிப்பிடுகின்றன. இது தற்கால அரசு மற்றும் அரசின் தோற்றம் பற்றிய கருத்துக்களின் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றது என குறிப்பிடப்படுகின்றது.

**இலட்சிய உலகளாவிய மன்னன் பற்றிய கருத்துக்கள்**

முழு உலகத்தையும் ஆளுகின்ற இலட்சிய அடிப்படையிலான உலகளாவிய மன்னன் (Cakkavatti or Dhammiko Dhamma Raja) பற்றி பௌத்தம் குறிப்பிடுகின்றது. முழு உலகையும் அமைதியுடனும் சமாதானமாகவும் பேணக்கூடிய இயல்புள்ளவனாக இந்த உலகளாவிய மன்னன் (Universal Monarch) இருப்பான் என புத்தர் கூறியதாக சொல்லப்படுகின்றது.[10] அத்துடன் மத்திய அரசு (Central State (Cakkavattirajja)) மற்றும் பிராந்திய அரசு (Regional States (Padesarajja)) பற்றியும் பௌத்தம் குறிப்பிடுகின்றது. மத்திய அரசையும் பிராந்திய அரசையும் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ளவனாகவும் பொது நலனை வழங்கக்கூடிய சக்தி மிக்கவனாகவும் இந்த உலகளாவிய மன்னன் காணப்படுவான் என திக்க நிகாயவிலுள்ள இலக்கான சுத்த (Lakkana Sutta of the Dlgha Nilkiiya) குறிப்பிடுகின்றது.

10. Zirruner, H. (1951) *The Philosophy of India.* London: Princeton University Press. P.129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பௌத்த உலகளாவிய மன்னனின் இயல்புகள்

பௌத்தம் குறிப்பிடுகின்ற உலகளாவிய மன்னனின் இயல்புகள் பற்றி திக்க நிகாயவிலுள்ள மகாசுத்தஸ்சன சுத்த, சக்கவத்திசிஹான சுத்த, அம்பட்ட சுத்த (Mahasudassana Sutta, Cakkavattisihanada Sutta, Ambbatta Sutta in the Digha Nikaya) என்பன குறிப்பிடுகின்றன. உலகளாவிய மன்னன் மனிதர்களின் நன்மை மகிழ்ச்சி மற்றும் பொதுநலன் என்பவற்றுக்காக மட்டுமல்லாமல் கடவுள்களின் நன்மைக்காகவும் பிறப்பெடுத்துள்ளான் என பௌத்தம் குறிப்பிடுகின்றது.[11] நன்மை தீமையை பகுத்தறியும் தன்மை, சரியானதை தீர்மானிக்கும் ஆற்றல், தண்டனைகளைத் தீர்மானிக்கும் ஆற்றல், நாட்டுக்கு தேவை யானவற்றை உய்த்தறியும் தன்மை, ஞானத் தன்மை வாய்க்கப் பெற்ற நிலை, வீரம், செல்வம் மற்றும் ஒழுக்கம் போன்ற இயல்புள்ளவனாக உலகலாவிய மன்னன் காணப்படுகின்றான்.

### உலகலாவிய மன்னனின் ஆட்சிமுறை

உலகலாவிய மன்னனின் ஆட்சி பற்றி பௌத்தம் குறிப்பிடுகின்ற பொழுது ஆயுதமில்லாமல் வன்முறையில்லாமல் தர்மத்தின் வழியில் உலகை ஆட்சி செய்யும் வழிமுறைகளை இது கொண்டிருக்கின்றது என குறிப்பிடுகின்றது.[12] தர்மத்தின் வழி மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதனூடாக ஒரு ஒழுங்கு முறைக்குட்பட்ட சமுதாய கட்டமைப்பை ஏற்படுத்தி அதனூடாக ஆட்சி முறைக்கான அடிப்படைகளை பௌத்தம் விளக்குகின்றது. முக்கியமாக நீதி, நியாயம் மற்றும் சமத்துவத்தின் படி ஆட்சி புரிய வேண்டும் என்று பௌத்தம் வலியுறுத்துகின்றது.[13] இத்தகைய ஆட்சியின் மூலம் பாதுகாப்பும் சமாதானத்துடனும் கூடிய அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்படும். அத்துடன் மக்களின் வாழ்க்கைத் தரமும் உறுதிப்படுத்தப்படும் (Ayyam cakkavattivattam). இவ்வாறான ஆட்சி

11. Swaris, N. (1999) *The Buddha's Way to Human Liberation.* Colombo: Siridevi.
12. Schecter, J. (1967) *The New Face of Buddha: Buddhism and Political Power in Asia. London:* Victor Galancz.
13. Kam, P. V. (1973) *History of Dharmasiistra.* Poona: Bhandarkar Oriental Research Institute.P.66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை அதிகாரத்துவம் மிக்க பலம் பொருந்திய ஆட்சியாகவும் ஒருமைப்பாட்டோடு கூடிய உறுதியான ஆட்சியாகவும் இருக்கும் என பௌத்தம் குறிப்பிடுகின்றது.[14]

### பௌத்தமும் மதச்சார்பற்ற ஆட்சிமுறையும்

உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்பட்ட மதச்சார்பற்ற ஆட்சி முறையொன்றினையே பௌத்தம் வலியுறுத்துகின்றது (Dighanikaya). தனியார் சொத்துடமையையும் பொருளாதார அபிவிருத்திக்கான தனிமனித முயற்சிகளையும் அனுமதிக்கின்ற பௌத்தம் பொதுநல ஆட்சியுடன் கூடிய சமூக சமத்து வத்தையும் வலியுறுத்துகின்றது. அத்துடன் வறுமை ஒழிப்பிற்கான வழிவகைகள் பற்றியும் வரிவிதிப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது (Aggana Sutta of the Digha Nikaya).

### பௌத்தம் கூறும் தர்மம் என்ற எண்ணக்கரு

அரசியலில் தர்மம் என்ற எண்ணக்கரு முதன்மை பெறுவதற்கு பௌத்தம் வழிவகுத்திருக்கின்றது. தர்மத்தை அரசியல் செயற் பாட்டை வழிநடத்திச் செல்கின்ற அடிப்படைச் சட்டமாக பௌத்தம் குறிப்பிடுகின்றது. அத்துடன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் பெறுவதற்கான வழியாகவும் தர்மம் இருக்கின்றது. இன்னொரு வகையில் உண்மையானதும் நீதியானதுமான ஆட்சி முறையாக தர்மம் இருக்கின்றது. ஆயினும் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றபடி தர்மமாகவும் தர்மம் இல்லாமலும் அரசன் செயற்படவேண்டும் என்றும் பௌத்தம் குறிப்பிடுகின்றது.

### அரசாங்கம் பற்றிய பௌத்த மதக் கருத்துக்கள்

சிறந்த அரசாங்கம் எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை விளக்கு வதற்கு பௌத்தம் பத்து கடமைகளை குறிப்பிடுகின்றது. இந்த பத்து கடமைகளையும் சிறப்பாக கடைப்பிடிக்கின்ற அரசாங்கமே சிறந்த அரசாங்கமாக கொள்ளப்படும் என பௌத்தம் குறிப்பிடுகின்றது.

14. Kam, P. V. (1973) *History of Dharmasiistra. Poona:* Bhandarkar Oriental Research Institute.P.66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன பொதுமக்களின் நலனைப் பேணுதல் (charity (dana), தர்மத்தின் அடிப்படையிலான ஆட்சி நிலவுதல் (morality (sila in Pali), தியாக மனப்பான்மையை கொண்டிருத்தல் (Self-sacrifice (paricagga), நேர்மையாக இருத்தல் (integrity (ajjava), அன்பாக நடத்தல் (kindness (maddava), எளிமையாக இருத்தல் (austerity (tapa), பொறுமையைக் கடைப்பிடித்தல் (patience (akkodha), அகிம்சை வழியில் நடத்தல்; (nonviolence (avihamsa), சகிப்புத்தன்மையோடு இருத்தல் (tolerance (khanti), மக்களின் விருப்பை மதித்தல் (Avirodha (non opposition to the will of the people) என்பனவாகும். இவற்றுள் பத்தாவது கடமையான மக்களின் விருப்பை மதித்தல் என்பதே மிக முக்கியமான கடமையாக கொள்ளத்தக்கது என பௌத்தம் குறிப்பிடுகின்றது. பிற்காலத்தில் இந்த பத்து கடமைகளும் ஆசிய சமூகங்களினையும் அரசுகளையும் வடிவமைப்பதில் பெருமளவுக்கு செல்வாக்கு செலுத்தியிருக்கின்றது.[15] குறிப்பாக தற்காலத்தில் உலக நாடுகளில் காணப்படுகின்ற ஜனநாயக மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயக எண்ணக்கருக்களின் அடிப்படை அம்சங்களை இவை பெருமளவுக்கு ஒத்திருக்கின்றன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

### பௌத்தமத அரசியற் கருத்துக்கள் பற்றிய மதிப்பீடு

பௌத்தமதக் அரசியற் கருத்துக்கள் மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளைப் போல கோட்பாட்டு அடிப்படைகளை அதிகமாகக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் சமூகத்தில் தனிமனிதனின் நலன் பற்றிய சமூகக் கருத்துக்களையும் சமூகத்தில் தனிமனிதனின் நல்வாழ்வுக்கு அடிப்படையான அரசியற் கருத்துக்களையும் அதிகம் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி அரசியல் மற்றும் சமூக கருத்துக்களுக்கு அடிப்படையான மரபுரீதியான நியதிகளையும் பெறுமதிகளையும் பௌத்தம் குறிப்பிடுகின்றது. இவை நவீன ஜனநாயக சிந்தனைகளின் அடிப்படையாகவும் காணப்படுகின்றன. ஆயினும் பிற்காலத்தில் சில நாடுகளில் பௌத்தம் அரச மதமாகவும் சமூக வன்முறைக்கான அடிப்படையாகவும் கொள்ளப்பட்டமை

15. Sukumaran, S. (1977) *Political Buddhism in South East Asia: the Role of the Sangha in the Modernization of Thailand.* London: Hurst.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் விமர்சிக்கப்படுகின்றது. பௌத்தம் ஒரு மதமாக அன்றி தத்துவமாக இருந்து நவீன அரசியற் கருத்துக்களின் வளர்சிக்கு பங்களித்திருக்கிறது என்று வாதிடுவோரும் காணப்படுகின்றனர். ஆயினும் ஆரம்பத்தில் பௌத்தம் மதக் கருத்துக்களை அதிகம் கொண்டிருந்ததனால் மேற்கத்தைய அரசியல் சிந்தனைவாதிகளினால் ஏற்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பிற்கால ஐரோப்பிய சிந்தனை களின் வளர்ச்சிக்கும் ஜனநாயக புரட்சிக்கும் பௌத்தமதக் கருத் துக்கள் பெரிதும் உதவியிருக்கின்றன.

**அத்தியாயச் சுருக்கம்**

- *புராதன பௌத்த மத சிந்தனைகளில் அரசியற் கருத்துகள் காணப்படு கின்றன. பௌத்த மத சிந்தனைகள் மத ரீதியான சிந்தனைகளையும் தத்துவங்களையும் குறிப்பிட்டிருந்த போதும் அவை அரசியற் கருத்துக்களையும் கொண்டிருந்தன. பௌத்த மத சிந்தனைகளில் காணப்படுகின்ற அரசியற் கருத்துகள் அக்கால அரசியற் செயற் பாடுகளை நெறிப்படுத்துவதில் மிகப் பெரிய பங்களிப்பினை வழங்கியிருக்கின்றது.*
- *பௌத்தம் உலகத்தை பற்றி விளக்குகின்ற மத அடிப்படையிலான ஒரு தத்துவம் என குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் பௌத்தம் ஒரு மதமா அல்லது தத்துவமா என்ற விவாதங்கள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. இது அரசுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மதத் துக்கும் இடையிலான தொடர்பை விளக்குகின்றது.*
- *பௌத்தம் தேரவாத மற்றும் மகாயான பௌத்தம் என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. தேரவாத பௌத்தம் மிகப் பழமையானதாக குறிப்பிடப்படுகின்றது. இலங்கை, கம்போடியா, பர்மா மற்றும் தாய்லாந்து ஆகிய இடங்களில் தேரவாத பௌத்தம் காணப்படுகின்றது. மகாயான பௌத்தம் இந்தியாவில் இருந்து தோற்றம் பெற்றிருந்தாலும் சீனா, வியட்னாம், ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் பிரபல்யம் பெற்று காணப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *பௌத்த மத கருத்துக்களின் மிக முக்கியமான அரசியற் பங்களிப்பாக அரசியற் கருத்துக்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவியமை மற்றும் ஆட்சியியல் செயற்பாடுகளுக்கு வழிகாட்டியாக இருந்தமை என்பன குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக மன்னராட்சிக்கான வழிகாட்டியாக பௌத்தம் செயற்பட்டிருக்கிறது.*
- *மன்னராட்சி, ஆட்சிமுறை, அரசு, அரசாங்கம், அரசின் தோற்றம், நிர்வாக கட்டமைப்பு மற்றும் அரசியல் ஒழுங்கின் அவசியம் என்பன பற்றி பௌத்தமத இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பௌத்தமத இலக்கியங்களான நிகாயா* (Nikiiyas) *யாதாக* (Jiitakas) *சுத்த பிடக* (Sutta Pitaka) *திக்க நிகாய* (Digha Nikiiya) *வினைய பிடக* (Vinaya Pitaka) *போன்ற பௌத்தமத இலக்கியங்கள் அரசியற் கருத்துக்களுக்கான அடிப்படைகளாக குறிப்பிடப்படுகின்றன.*
- *பௌத்த இலக்கியங்களில் மன்னராட்சியின் தோற்றம் மற்றும் இயல்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. பௌத்த மத இலக்கியங்களான அக்கண சூத்திரம்* (Agganna Sutta) *திக்க நிகாயா* (Digha Nikaya) *மற்றும் ஜாதக கதைகள்* (Jatakas) *என்பன மன்னராட்சியின் தோற்றம் மற்றும் இயல்பு பற்றி குறிப்பிடுகின்றன.*
- *முழு உலகத்தையும் ஆளுகின்ற இலட்சிய அடிப்படையிலான உலகளாவிய மன்னன்* (Cakkavatti or Dhammiko Dhamma Raja) *பற்றி பௌத்தம் குறிப்பிடுகின்றது. முழு உலகையும் அமைதியுடனும் சமாதானமாகவும் பேணக்கூடிய இயல்புள்ளவனாக இந்த உலகளாவிய மன்னன்* (Universal Monarch) *இருப்பான் என புத்தர் கூறியதாக சொல்லப்படுகின்றது.*
- *பௌத்தம் குறிப்பிடுகின்ற உலகளாவிய மன்னன் மனிதர்களின் நன்மை மகிழ்ச்சி மற்றும் பொதுநலன் என்பவற்றுக்காக மட்டுமல்லாமல் கடவுள்களின் நன்மைக்காகவும் பிறப்பெடுத்துள்ளான் என பௌத்தம் குறிப்பிடுகின்றது.*
- *உலகலாவிய மன்னனின் ஆட்சி பற்றி பௌத்தம் குறிப்பிடுகின்ற பொழுது ஆயுதமில்லாமல் வன்முறையில்லாமல் தர்மத்தின் வழியில் உலகை ஆட்சி செய்யும் வழிமுறைகளை இது கொண்டி ருக்கின்றது என குறிப்பிடுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு உரிமைகள் உத்தரவாதப்படுத்தப் பட்ட மதச்சார்பற்ற ஆட்சி முறையொன்றினையே பௌத்தம் வலியுறுத்துகின்றது* (Dighanikaya). *தனியார் சொத்துடமையையும் பொருளாதார அபிவிருத்திக்கான தனிமனித முயற்சிகளையும் அனுமதிக்கின்ற பௌத்தம் பொதுநல ஆட்சியுடன் கூடிய சமூக சமத்துவத்தையும் வலியுறுத்துகின்றது.*
- *அரசியலில் தர்மம் என்ற எண்ணக்கரு முதன்மை பெறுவதற்கு பௌத்தம் வழிவகுத்திருக்கின்றது. தர்மத்தை அரசியல் செயற் பாட்டை வழிநடத்திச் செல்கின்ற அடிப்படைச் சட்டமாக பௌத்தம் குறிப்பிடுகின்றது. அத்துடன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் பெறுவதற்குமான வழியாகவும் தர்மம் இருக்கின்றது.*
- *சிறந்த அரசாங்கம் எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை விளக்குவதற்கு பௌத்தம் பத்து கடமைகளை குறிப்பிடுகின்றது. இந்த பத்து கடமைகளையும் சிறப்பாக கடைப்பிடிக்கின்ற அரசாங்கமே சி றந்த அரசாங்கமாக கொள்ளப்படும் என பௌத்தம் குறிப்பிடுகின்றது. பிற்காலத்தில் இந்த பத்து கடமைகளும் ஆசிய சமூகங்களினையும் அரசுகளையும் வடிவமைப்பதில் பெருமளவுக்கு செல்வாக்கு செலுத்தி யிருக்கின்றது.*
- *பௌத்தமத அரசியற் கருத்துக்கள் மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளைப் போல கோட்பாட்டு அடிப்படைகளை அதிகமாகக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் சமூகத்தில் தனிமனிதனின் நலன் பற்றிய சமூகக் கருத்துக்களையும் சமூகத்தில் தனிமனிதனின் நல்வாழ்வுக்கு அடிப்படையான அரசியற் கருத்துக்களையும் அதிகமாகக் கொண்டிருக்கின்றது. ஆயினும் பிற்காலத்தில் சில நாடு களில் பௌத்தம் அரச மதமாகவும் சமூக வன்முறைக்கான அடிப்படை யாகவும் கொள்ளப்பட்டமை பெரிதும் விமர்சிக்கப்படுகின்றது. எனினும் பிற்கால ஐரோப்பிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் ஜனநாயக புரட்சி க்கும் பௌத்தமதக் கருத்துக்கள் பெரிதும் உதவியிருக்கின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 05*

# புராதன சீன அரசியற் கருத்துக்கள் : கன்பூசியஸ்
# Ancient Chinese Political Thought : Confucius

## அறிமுகம்

கன்பூசியஸ் ஒரு சீன அரசியல் சிந்தனையாளர் ஆவார். இவரது கருத்துக்கள் கன்பூசியவாதம் (Confucianism) என குறிப்பிடப்படுகின்றன. சீனாவில் சின் ஆட்சி முறை (Qin dynasty) நிலவிய காலத்தில் இவரது கருத்துக்கள் பிரபல்யம் பெற்று காணப்பட்டன. பிற்காலத்தில் நவ கன்பூசியவாதம் (Neo-Confucianism) என இவரது கருத்துக்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இவர் அறநெறி, ஒழுக்கம், நீதி மற்றும் சமத்துவம் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சி முறை பற்றி கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.[1] "The Analects of Confucius" என்பது இவரது பிரபல்யமான நூலாகும்.

கன்பூசியஸ் உயர்குடும்பத்தைச் சேர்ந்த பின்னணியைக் கொண்டவராக இருந்தபோதும் அவர் மிகவும் ஏழைக்குடும்பத்திலேயே பிறந்தார். பின்னர் இவர் தனது சொந்தக்கிராமத்தில் பொலிஸ் ஆணையாளராக பணிபுரிந்தார். ஆயினும் இவரது கருத்துக்கள் எதுவும் இவரது மேலதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படாததால் வெறுப்படைந்து இவர் பதவியை விட்டு விலகி கட்டுரைகள் மற்றும் நூல்கள் எழுதுவதில் தனது கவனத்தை செலுத்தினார். இவரது கருத்துக்கள் புராதன சமுதாயத்தை மட்டுமின்றி பிற்காலத்தில்

---

1. Hsiao, K.G. (2016) *History of Chinese Political Thought.* London: Princeton University Press. P.114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன சமூகத்தை உருவாக்கவும் பயன்பட்டிருக்கின்றன.[2] குறிப்பாக பிற்கால அரசியல் கோட்பாட்டு வளர்ச்சிக்கு இவரது கருத்துக்கள் பெருமளவுக்கு பங்களித்துள்ளன.

**வாழ்க்கைப் பின்னணி**

கன்பூசியஸின் காலத்தில் (551–479 B.C.) சீன அரசாங்கம் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டது. அரசியல் மற்றும் பொருளாதார நிலைகளில் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில் சிறிய அரசுகள் ஒருவருக்கொருவர் போரிட்டனர். இதனால் வன்முறைகளும் இழப்புகளும் அதிகமாயின. பழைய பிரபுத்துவ சமூக அமைப்பும் ஆட்சி முறையும் பெருகிவரும் புதிய சவால்களை எதிர்கொள்ள முடியாமல் சிக்கித்தவித்தது. இந்நிலையில் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கன்பூசியஸ் தனது அரசியற் கருத்துக்களை முன்வைத்தார். புதிய அரசியல் மற்றும் சமூக ஒழுங்கை மீள கட்டமைப்பதன் ஊடாக பகுத்தறிவுள்ள ஆட்சியாளனையும் ஆட்சி முறையையும் ஏற்படுத்தி இப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண கன்பூசியஸ் முயன்றார். பகுத்தறிவுள்ள மனிதனால் மட்டுமே அரசியல் ஒழுங்குள்ள ஆட்சிமுறையையும் சமுதாயத்தையும் படைக்க முடியும் என கன்பூசியஸ் நம்பினார்.

கன்பூசியஸின் காலத்து அரசியல் நிலை மிகவும் மோசமாக காணப்பட்டது. ஆட்சியாளர்கள் பலமற்று மற்றவர்களுக்கு அடிமையாக இருக்கின்ற நிலை காணப்பட்டது. உறுதியான ஆட்சி அங்கு இருக்க வில்லை. இதனைத்தான் கன்பூசியஸ் ''ஆட்சியாளன் ஆட்சியாளனாக இருக்க வேண்டும்'' (let the ruler be a ruler) என்று குறிப்பிட்டார்.[3] அக்காலத்து சமூகநிலையும் பிரச்சினைகள் நிறைந்ததாக இருந்தது. தகுதிக்கும் சமூக நிலைக்கும் ஏற்ற தொழில் அங்கு காணப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக பிரபுக்களின் நிலை கீழ்நிலையில் காணப்பட்டது. இதனால் கன்பூசியஸ் அரசியல் மற்றும்

2. Young, W. K. (1994) '*The Legacy of Confucian Culture and South Korean Politics and Economics: An Interpretation*', Paper presented at the 8th International Conference on Korean Studies.
3. Schwartz, B.I. (1985) *World of Thought in Ancient China*. Belknap Press: An Imprint of Harvard University Press. P.108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்பூசியஸ் (Confucius (551 BC.- 479 BC.)**



கன்பூசியஸ் ஒரு சீன அரசியல் சிந்தனையாளர் ஆவார். இவரது கருத்துக்கள் கன்பூசியவாதம் (Confucianism) என குறிப்பிடப்படுகின்றன. நவீன அரசியலில் சட்டம், அரசியல் ஒழுக்கம் போன்ற சிந்தனைகள் முதன்மை பெறுவதற்கு கன்பூசியஸின் கருத்துக்கள் உதவியிருக்கின்றன. அரசியல் ஒழுங்குள்ள சட்ட ரீதியான அரசியல் சமூகம் ஒன்றை படைப்பதில் கன்பூசியஸ் முக்கியமான பங்காற்றியுள்ளார். அத்துடன் மதச்சார்பற்ற கருத்துக்கள் அரசியலில் இடம்பெறுவதற்கு முக்கிய வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். சீனாவில் சின் ஆட்சி முறை (Qin Dynasty) நிலவிய காலத்தில் இவரது கருத்துக்கள் பிரபல்யம் பெற்று காணப்பட்டன. இவர் அறநெறி, ஒழுக்கம், நீதி மற்றும் சமத்துவம் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சி முறை பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். "The Analects of Confucius" என்பது இவரது பிரபல்யமான நூலாகும். பகுத்தறிவுள்ள மனிதனால் மட்டுமே அரசியல் ஒழுங்குள்ள ஆட்சிமுறையையும் சமுதாயத்தையும் படைக்க முடியும் என கன்பூசியஸ் நம்பினார். கன்பூசியஸ் உறுதியற்ற குழப்பமான ஆட்சியை இல்லாதொழித்து உறுதியான ஆட்சியை ஏற்படுத்த உழைத்தார். கன்பூசியஸ் ''ஜனநாயகம்'' என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இதனால் மக்களாட்சி யை மறுத்து நல்ல மன்னராட்சியே சிறந்தது என்று கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.

சமூகநிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டார். குறிப்பாக கடவுள், மதநம்பிக்கை மற்றும் ஆன்மா போன்ற விடயங் களில் இருந்து மக்களை விடுவித்து மனிதத்துவத்தையும் சமூகத்தையும் நோக்கி மக்களை திருப்பும் பணியில் இவர் முன்னின்றார். இது பற்றி கன்பூசியஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் ''உனக்கு முன்னால் உள்ள வாழ்க்கையையே உன்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எவ்வாறு உன்னால் இறப்பை விளங்கிக் கொள்ள முடியும்'' (you do not understand life;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

how can you understand death?) எனக் குறிப்பிடுகின்றார். எனினும் கடவுளினதும் மதத்தினதும் இருப்பை அவர் தடைசெய்ய வில்லை. ஆனால் மக்களை மதத்திலிருந்து விடுவித்து சமூகத்தை நோக்கி திருப்புகின்ற பணியை அவர் மேற்கொண்டார்.[4]

### அரசியல் தத்துவம்

கன்பூசியஸின் அரசியல் தத்துவமானது நீதிநெறிமுறை (ethical) அடிப்படையில் அமைந்ததாகும். நீதிநெறிமுறை என்பது சட்டங்க ளினால் வழிநடத்தப்படும் ஒன்றாக காணப்படுகின்றது. சட்டங்களை நடைமுறைப்படுத்தும் மூலமாக தண்டனைச் சட்டம் அமைந்திருக்கிறது. ஆயினும் தண்டனைகளின் மூலமாக அன்றி நல்லொழுக்கம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலம் சட்டரீதியான நீதிநெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கம்பூசியஸ் குறிப்பிடு கின்றார்.

### அரசியல் கருத்துக்களின் அடிப்படை

கன்பூசியஸ் உறுதியற்ற குழப்பமான ஆட்சியை இல்லாதொழித்து உறுதியான ஆட்சியை ஏற்படுத்த உழைத்தார். அதற்காக இரு முக்கிய மான விடயங்கள் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். அவையாவன ஆட்சிமுறை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் மற்றும் ஆட்சியாளனின் தன்மையை மாற்றியமைத்தல் என்பதாகும் இதனடிப் படையில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்த அவர் முனைந்தார்.

### ஒழுக்கமும் ஆட்சிமுறையும்

ஒழுக்கத்தின் அடிப்படையில் இடம்பெறும் ஆட்சிமுறையே சிறப்பான ஆட்சிமுறையாக இருக்கும் என கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார். இதனை அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''ஒழுக்கத்தின் படி ஆட்சி புரிகின்ற ஆட்சியாளன் வடதுருவ நட்சத்திரத்திற்கு ஒப்பானவன்'' (a ruler who governs by virtue is like the north polar star) என்கிறார். தண்டனைகளும் சட்டதிட்டங்களும் மக்களுக்கு பிரச்சி னையற்ற வாழ்வை ஏற்படுத்தும். ஆனால் ஒழுக்கம் அதனை

4. Joseph Chan. (2007) "Democracy and Meritocracy: Toward a Confucian Perspective," Journal of Chinese Philosophy 34.no.2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட மேலானது. அது அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதுடன் புரட்சிகரமாகவும் மாற்றியமைக்கும் என ஒழுக்கத் தின் சிறப்பை அவர் குறிப்பிடுகின்றார். இதனை கன்பூசியஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் ''சரியாக ஆட்சி புரிய வேண்டும். நீ சரியாக இருப்பதற்கு முன்னுதாரணமாக இருந்தால் யார் பிழைவிட துணிவார்கள்?'' (To govern is correct, if you set an example by being correct who would dare to remain incorrect?) என குறிப்பிடுகின்றார். எனவே ஆட்சியாளன் ஒருவன் தன்னை ஆளுதலும் மற்றவர்களை ஆளுதலும் ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.

### சிறப்பான ஆட்சிமுறை

ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைந்த நேர்த்தியான விதிமுறை களுக்குட்பட்ட சட்டரீதியான ஆட்சி முறையையே கன்பூசியஸ் சிறப்பான ஆட்சிமுறையென குறிப்பிட்டார். இவ்வாறான ஆட்சி முறையின் மூலமே கலாச்சார ஒருமைப்பாட்டை அடைந்து கொள்ள

**கன்பூசியஸ் கருத்துக்களின் தொகுதி**

**(The Analects of Confucius)**




*சீன அரசியற் சிந்தனையாளரான கன்பூசிய சின் கருத்துக்களின் தொகுதியாக இந்நூல் காணப்படுகின்றது. கன்பூசியசின் சீடர்களால் பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட நூல் இது வாகும். ஹான் ஆட்சியின் (Han Dynasty) போது தொகுக்கப்பட்ட இந்நூல் பின்வந்த ஆட்சிக்காலங்களின் போது அபிவிருத்தி செய்யப்பட்டு சீன கலாச்சாரத்தின் குறியீடாக பயன்படுத்தப்பட்டது. கன்பூசியஸ் இந்நூலில் ஒரு நாட்டினுடைய செழிப்பு நிலையானது மக்களினுடைய ஒழுக்கத்திலே தங்கியுள்ளது எனவும் அது நாட்டின் தலைமைத்துவத்தினால் வளர்க்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். இந்நூலில் சமூக தத்துவம், அரசியல் தத்துவம் மற்றும் கல்வித் தத்துவம் போன்ற விடயங்களும் பொருளாதாரத்தின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்றும் வலியுறுத்தினார். இவரது கருத்துப்படி சிறந்த அரசாங்கமானது மரபுகள் மற்றும் மக்களின் இயல்பான அறநெறி என்பவற்றினை கொண்டிருப்பதோடு லஞ்சம், ஊழல் மற்றும் சர்வாதிகாரத்தன்மை என்பவற்றுக்கு எதிரானதாகவும் காணப்படும் என குறிப்பிடுகின்றார்.

கன்பூசியஸ் ''ஜனநாயகம்'' என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. தனிமனிதர்கள் தமது ஆட்சியாளனை தெரிவு செய்வதனையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அதேசமயம் மக்கள் தமது ஆட்சியாளனைத் தெரிவு செய்யக் கூடிய இயலுமையை கொண்டிருப்பார்கள் என்பதனையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்கள் எல்லோரும் சமமானவர்களாகவும் சமமான அறிவுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்று கூற முடியாததால் ஜனநாயக அடிப்படையை அவர் நம்பவில்லை. இதனால் மக்களாட்சியை மறுத்து நல்ல மன்னராட்சியே சிறந்தது என்று கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.[5]

மக்களாட்சியை மறுத்து நல்ல மன்னராட்சியை அவர் ஏற்றுக் கொண்டிருந்த போதும் ஆட்சியாளர்களின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்தும் பல்வேறு வழிவகைகள் பற்றியும் அவர் குறிப்பிட் டுள்ளார். அத்துடன் ஆட்சியாளன் நல்லாட்சியை மேற்கொண்டால் தண்டனை மூலம் மக்களை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் மக்கள் மன்னனுக்கு கட்டுப்படுவார்கள் எனவும் குறிப்பிடுகின்றார்.

**ஆட்சியாளனின் தன்மை**

ஆட்சியாளனின் தன்மை எவ்வாறிருக்க வேண்டும் என்றும் அதனை மாற்றியமைக்கும் வழிவகைகள் பற்றியும் கன்பூசியஸ் குறிப்பிட் டுள்ளார். முக்கியமாக பிரபுத்துவ ஆட்சியை இல்லாதொழித்து சட்ட ரீதியான ஆட்சியை ஏற்படுத்துவதன் அவசியம் பற்றி இவர் வலியுறுத்துகின்றார். அத்துடன் ஆட்சியாளனின் கடமை சட்ட ரீதியாக தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும்

5. Graham, A.C. (1989) *Disputers of the Tao: Philosophical Argument in Ancient China.* Chicago: Open Court. P.116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் குறிப்பிட்டுள்ளார். இது பிற்காலத்தில் அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது. இவ்வாறு சட்டரீதியாக ஆட்சியாளனின் கடமைகள் வரையறுக்கப்படுமானால் ஒரு நாட்டில் ஒழுங்கான ஆட்சியும் மற்றும் சமாதான நிலையும் காணப்படும் என கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.[6] அதேபோன்று உறுதியற்ற ஒரு அரசாங்கத்தால் உறுதியான ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது எனவும் மக்களினுடைய நலனுக்காக ஆட்சியாளன் ஆட்சியாளனாக இருக்க வேண்டும் எனவும் இவர் குறிப்பிடுகின்றார்.

### இலட்சிய உயர்ந்த மனிதனும் ஆட்சியாளனும்
### (Chün-tzu - Superior Man)

உயர்ந்த பண்புடைய இலட்சிய மனிதனைப் படைப்பதில் கன்பூசியஸ் அதிக ஆர்வம் காட்டினார். இத்தகைய ஒரு பகுத்தறிவுள்ள மனிதனா லேயே சிறந்த அரசியல் ஒழுங்குள்ள சமுதாயத்தைப் படைக்க முடியும் என அவர் நம்பினார். இதனால் பிற்காலத்தில் கன்பூசியஸின் அரசியற் கொள்கை, ஆட்சிமுறை மற்றும் கலாச்சாரம் என்பன சீனாவில் பிரபல்யம் பெற்றது. கன்பூசியஸின் ''உயர்ந்த மனிதன்'' என்ற எண்ணக்கரு பாரம்பரிய சீன சமூகத்தின் சுய அடையாளமாக மாற்றம் பெற்றது.

### பொருளாதாரக் கொள்கை

சமூக அரசியல் கட்டமைப்பினைத் தீர்மானிப்பதில் பொருளாதாரக் கொள்கை மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது என கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார். ஆகையால் சமூக அரசியல் கட்டமைப்பினை மேம்படுத்தும் தனியார் சொத்துடமையை இவர் ஆதரிக்கின்றார். இதனடிப்படையில் தனியார் சொத்துடமைக்கு பாதகமான மேலதிக மான வரிவிதித்தல், சுரண்டல் போன்ற அரசாங்க செயற்பாடுகளை இவர் பலமாக கண்டிக்கின்றார். அரசாங்கத்தின் கடமை மக்களை செழிப்புடையவர்களாக்குவதற்காக அவர்களுக்கு உதவுவதே என

6. Herrlee, G. C. (1953) *Chinese Thought: from Confucius to Mao Tse- Tung.* Chicago: University of Chicago Press. P. 86–87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார். மக்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் இருப்பதற்காக சமமான வளப்பங்கீடு பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார்.[7] எனவே மக்கள் செழிப்பாக வாழ்வதற்கான வழிவகையை அரசு செய்ய வேண்டும் என்றும் ஒரு நாட்டின் பொருளாதார கொள்கையே அந்நாட்டின் அரசியல் சமூக கட்டமைப்பை தீர்மானிக்கின்றது எனவும் கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.

**அறநெறிக் கருத்துக்கள்**

கன்பூசியஸ் "Jen" என்ற வார்த்தையூடாக அறநெறிக் கருத்துக்கள் பற்றி குறிப்பிடுகின்றார். அவரது நூலான Confucian Analects என்பதில் Jen என்பது மனிதனை குறிக்கின்றது என்கிறார். (Jen is Man) அதாவது Jen மனிதனை மனிதனாக்குகின்றது என குறிப்பிடுகின்றார். அறநெறி மற்றும் ஒழுக்க கருத்துக்களின் மொத்த வடிவமாக Jen ஐ இவர் படைத்திருக்கின்றார்.[8] Jen குறிப்பிடுகின்ற சமூக நீதி மற்றும் தனிமனித நீதி என்பனவற்றின் அடிப்படையில் அரசியல் நீதி ஏற்படுகின்றது எனவும் தனிமனித ஒழுக்கம், தனிமனிதர்களுக்கிடையேயான உறவுகள், சமூக ஒழுக்கம் மற்றும் அரசியல் கட்டமைப்பு என்பவற்றை தீர்மானிக்கின்ற காரணியாக அறநெறி ஒழுக்கம் காணப்படும் எனவும் கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.

**கல்வி பற்றிய கருத்துக்கள்**

கல்வியின் முக்கியத்துவம் பற்றி கன்பூசியஸ் எடுத்துக் கூறியுள்ளார். கற்றல் என்பது இடம்பெறுகின்ற சம்பவங்களில் இருந்து உண்மையை அறிதல் ஆகும் என அவர் குறிப்பிடுகின்றார். அறிவு என்பது தொடர்ச்சியான கற்றலின் மூலமே பெறப்படுகின்றது என்பது இவரது கருத்து.[9] கல்வி எவ்விதமான வர்க்க வேறுபாடுமின்றி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என கன்பூசியஸ் வலியுறுத்தினார். மக்களுக்கும் மற்றும் ஆட்சியாளர்களுக்கும் இலக்கிய அறிவு

---

7. Chan, W.T. (1969) Source *Book in Chinese Philosophy. London:* Princeton University Press. P.64
8. Tan, S.H. (2012) *Democracy in Confucianism.* Philosophy Compass: Blackwell Publishing Ltd. P.295.
9. Lau, D.C. (2000) *Confucius: Introduction to the Analects.* Columbia: Columbia University Press. P.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகட்டுதல் முக்கியமானது என்பதை ஒத்துக்கொள்கின்ற இவர் அதைவிட ஒழுக்க கல்வி புகட்டுதலே மிக முக்கியமானது எனக் குறிப்பிடுகின்றார். அதேபோன்று தத்துவம் மற்றும் வரலாறு பற்றிக் கற்பது அவசியமானது ஆனால் அதைவிட ஒருவரது நடத்தை பற்றிக் கற்பது மிக முக்கியமானது என இவர் குறிப்பிடுகின்றார். இது கன்பூசியஸ் மிகவும் யதார்த்தமாக எல்லா விடயங்களையும் நோக்கியிருக்கின்றார் என்பதினை எடுத்துக்காட்டுகின்றது. பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த நடத்தைவாத எண்ணக்கருவின் வளர்ச்சிக்கும் இவரது கருத்துக்கள் வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன.[10] இவ்வாறு கன்பூசியஸ் ஒழுக்கத்தினை முதன்மைப்படுத்தி கல்வியானது அறிவை பெற்றுக்கொள்வதற்காக மட்டுமன்றி ஒழுக்கத்தையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

**கன்பூசியஸின் கருத்துக்கள் பற்றிய மதிப்பீடு**

நவீன அரசியலில் சட்டம், அரசியல் ஒழுக்கம் போன்ற சிந்தனைகள் முதன்மை பெறுவதற்கு கன்பூசியஸின் கருத்துக்கள் உதவியிருக் கின்றன. அரசியல் ஒழுங்குள்ள சட்ட ரீதியான அரசியல் சமூகம் ஒன்றை படைப்பதில் கன்பூசியஸ் முக்கியமான பங்காற்றியுள்ளார். அத்துடன் மதச்சார்பற்ற கருத்துக்கள் அரசியலில் இடம்பெறுவதற்கு முக்கிய வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். தற்காலத்தில் கன்பூசிய கருத்துக்கள் சீனாவில் பெருமளவிற்கு மதிக்கப்படுகின்றன. பிற்கால சீன சமூகம் வன்முறையில் இருந்து விடுபட்டு ஸ்திரத்தன்மையுடையதாக மாறுவதற்கு இவரது சிந்தனைகள் வழிவகுத்திருக்கின்றன.

*''எமது பொற்காலம் எப்பொழுதும் வீழ்ச்சியடையாமல் இருப்பதில் அல்ல இருக்கிறது. அது ஒவ்வொரு முறையும் வீழ்ச்சியடையும் போது எழுச்சியடைவதிலேயே இருக்கின்றது'' ........ ''ஒழுக்கத்தின் படி ஆட்சி புரிகின்ற ஆட்சியாளன் வடதுருவ நட்சத்திரத்திற்கு ஒப்பானவன் ''*

*(கன்பூசியஸ் - ''கன்பூசியஸ் கருத்துக்களின் தொகுதி'')*

10. Michael Collins. (2008) *China's Confucius and Western Democracy.* Contemporary Review. P.161–72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- *கன்பூசியஸ் ஒரு சீன அரசியல் சிந்தனையாளர் ஆவார். இவரது கருத்துக்கள் கன்பூசியவாதம்* (Confucianism) *என குறிப்பிடப்படுகின்றன. சீனாவில் சின் ஆட்சி முறை* (Qin Dynasty) *நிலவிய காலத்தில் இவரது கருத்துக்கள் பிரபல்யம் பெற்று காணப்பட்டன. பிற்காலத்தில் நவ கன்பூசியவாதம்* (Neo-Confucianism) *என இவரது கருத்துக்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இவர் அறநெறி, ஒழுக்கம், நீதி மற்றும் சமத்துவம் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சி முறை பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.* 'The Analects of Confucius" *என்பது இவரது பிரபல்யமான நூலாகும்.*
- *கன்பூசியஸின் காலத்தில்* (551–479 B.C.) *சீன அரசாங்கம் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டது. அரசியல் மற்றும் பொருளாதார நிலைகளில் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில் சிறிய அரசுகள் ஒருவருக்கொருவர் போரிட்டனர். இதனால் வன்முறைகளும் இழப்புகளும் அதிகமாயின. பழைய பிரபுத்துவ சமூக அமைப்பும் ஆட்சி முறையும் பெருகிவரும் புதிய சவால்களை எதிர்கொள்ள முடியாமல் சிக்கித்தவித்தது. இந்நிலையில் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கன்பூசியஸ் தனது அரசியற் கருத்துக்களை முன்வைத்தார்.*
- *கன்பூசியஸின் அரசியல் தத்துவமானது நீதிநெறிமுறை* (Ethical) *அடிப்படையில் அமைந்ததாகும். நீதிநெறிமுறை என்பது சட்டங்களினால் வழிநடத்தப்படும் ஒன்றாக காணப்படுகின்றது. ஆயினும் நல்லொழுக்கம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலம் சட்டரீதியான நீதிநெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கம்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.*
- *கன்பூசியஸ் உறுதியற்ற குழப்பமான ஆட்சியை இல்லாதொழித்து உறுதியான ஆட்சியை ஏற்படுத்த உழைத்தார். அதற்காக இரு முக்கியமான விடயங்கள் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். அவையாவன ஆட்சிமுறை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் மற்றும் ஆட்சியாளனின் தன்மையை மாற்றியமைத்தல் என்பதாகும் இதனடிப்படையில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்த அவர் முனைந்தார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுக்கத்தின் அடிப்படையில் இடம்பெறும் ஆட்சிமுறையே சிறப்பான ஆட்சிமுறையாக இருக்கும் என கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார். உயர்ந்த பண்புடைய இலட்சிய மனிதனைப் படைப்பதில் கன்பூசியஸ் அதிக ஆர்வம் காட்டினார். இத்தகைய ஒரு பகுத்தறிவுள்ள மனிதனாலேயே சிறந்த அரசியல் ஒழுங்குள்ள சமுதாயத்தைப் படைக்க முடியும் என அவர் நம்பினார்.
- ஆட்சியாளனின் தன்மை எவ்வாறிருக்க வேண்டும் என்றும் அதனை மாற்றியமைக்கும் வழிவகைகள் பற்றியும் கன்பூசியஸ் குறிப்பிட்டுள்ளார். முக்கியமாக பிரபுத்துவ ஆட்சியை இல்லாதொழித்து சட்டரீதியான ஆட்சியை ஏற்படுத்துவதன் அவசியம் பற்றி இவர் வலியுறுத்துகின்றார். ஆட்சியாளனின் கடமை சட்டரீதியாக தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் இவர் குறிப்பிட்டார். இது பிற்காலத்தில் அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது.
- சமூக அரசியல் கட்டமைப்பினைத் தீர்மானிப்பதில் பொருளாதாரக் கொள்கை மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது என கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார். ஆகையால் சமூக அரசியல் கட்டமைப்பினை மேம்படுத்தும் தனியார் சொத்துடமையை இவர் ஆதரிக்கின்றார். எனவே மக்கள் செழிப்பாக வாழ்வதற்கான வழிவகையை அரசு செய்ய வேண்டும் என்றும் ஒரு நாட்டின் பொருளாதார கொள்கையே அந்நாட்டின் அரசியல் சமூக கட்டமைப்பை தீர்மானிக்கின்றது எனவும் கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.
- கன்பூசியஸ் "Jen" என்ற வார்த்தையூடாக அறநெறிக் கருத்துக்கள் பற்றி குறிப்பிடுகின்றார். அவரது நூலான Confucian Analects என்பதில் Jen என்பது மனிதனை குறிக்கின்றது என்கிறார். (Jen is man) அதாவது Jen மனிதனை மனிதனாக்குகின்றது என குறிப்பிடுகின்றார்.
- கல்வியின் முக்கியத்துவம் பற்றி கன்பூசியஸ் எடுத்துக் கூறியுள்ளார். கற்றல் என்பது இடம்பெறுகின்ற சம்பவங்களில் இருந்து உண்மையை அறிதல் ஆகும் என அவர் குறிப்பிடுகின்றார். அறிவு என்பது தொடர்ச்சியான கற்றலின் மூலமே பெறப்படுகின்றது என்பது இவரது கருத்து. கல்வி எவ்விதமான வர்க்க வேறுபாடுமின்றி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என கன்பூசியஸ் வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *நவீன அரசியலில் சட்டம், அரசியல் ஒழுக்கம் போன்ற சிந்தனைகள் முதன்மை பெறுவதற்கு கன்பூசியஸின் கருத்துக்கள் உதவியிருக்கின்றன. அரசியல் ஒழுங்குள்ள சட்ட ரீதியான அரசியல் சமூகம் ஒன்றை படைப்பதில் கன்பூசியஸ் முக்கியமான பங்காற்றியுள்ளார். அத்துடன் மதச்சார்பற்ற கருத்துக்கள் அரசியலில் இடம்பெறுவதற்கு முக்கிய வழிகாட்டியாகவும் இருந்துள்ளார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 06*

# கிரேக்கர் கால அரசியல் கோட்பாடு
# Greek Political Theory

## அறிமுகம்

மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளைப் பொறுத்தளவில் கிரேக்கர் காலம் மிக முக்கியமானது. ஏனெனில் பிற்கால அரசியல் சிந்தனைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக கிரேக்கர்கால அரசியல் சிந்தனைகளே காணப்படுகின்றன. இதனால்தான் "மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளினுடைய தோற்றம் பிளேட்டோ அரிஸ்டோட்டிலில் இருந்து தொடங்குகின்றது என்பதை விட அது அவர்கள் மூலம் உயிர்வாழ்கின்றது" என்று சொல்லப்படுகின்றது. [1]பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் தாம் வாழ்ந்த கிரேக்கர்கால சமூகத்தில் காணப்பட்ட பிரச்சனைகளை தீர்க்கும் விதமாக தமது சிந்தனைகளை அமைத்துக் கொண்டனர். இவர்களது சிந்தனைகள் அக்கால சமூக பிரச்சனைகளுக்கு தீர்வாக அமைந்தது. பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் ஒரே காலத்தில் வாழ்ந்த போதும் 20 வருடமாக ஒன்றாக கல்விகற்ற போதும் அவர்களது சிந்தனைகள் ஒரே மாதிரியாக காணப்பட்டிருக்கவில்லை. அவர்களின் சிந்தனைகளில் வேறுபாடு காணப்படுகின்றது. அதேசமயம் தவிர்க்கமுடியாதபடி ஒற்றுமையும் இருக்கின்றது. இவர்களது அரசியல் சிந்தனையில் அரசு பற்றிய கருத்துக்கள் முதன்மை பெற்றிருந்த போதும் அது தற்கால தேசிய அரசுகள் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கவில்லை. கிரேக்கத்தில் அக்காலத்தில்

1. Wells, H.G. (1951) *The Outline of History.* Cassell & Co Limited. P.335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட நகர அரசுகள் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.[2]

**கிரேக்கர் கால நகர அரசுகளின் நிலை**

600 B.C காலப்பகுதியில் கிரேக்க நகர அரசுகள் மிகவும் செழிப்பாக இருந்தது. ஆனால் நகர அரசுகளுக்கிடையில் ஒற்றுமை காணப்பட்டிருக்கவில்லை. இது ஒவ்வொரு நகர அரசுகளுக் கிடையிலும் ஒருவிதமான கலாச்சார நடைமுறை வேறுபாட்டை தோற்றுவித்திருந்தது. இதன்பின்னர் 500 B.C ல் பேர்சியன் யுத்தம் இடம்பெற்றது. இது ஏறக்குறைய ஐம்பது வருடங்களாக கிரேக்க நகர அரசுகள் மீது இடம்பெற்ற வெளியாரின் யுத்தமாகும். இந்த யுத்தம் நகர அரசுகளுக்கிடையிலான ஒற்றுமையையும் ஒருங்கிணைந்த தன்மையையும் வலியுறுத்தியது. இப்போர் முறியடிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் செழிப்பான நிலை கிரேக்க நகர அரசுகளில் ஏற்பட்டது.

ஆயினும் மீண்டுமொருமுறை கிரேக்கத்தில் 431 B.Cல் பெலோபோனேசியன் யுத்தம் இடம்பெற்றது. இந்த யுத்தம் முப்பது வருடங்களாக இடம்பெற்ற யுத்தமாகும். ஆனால் இந்த யுத்தம் கிரேக்க நகர அரசுகளுக்கு வெற்றியாக அமைந்திருக்கவில்லை. அதுமட்டுமன்றி மிகப்பெரிய அழிவையும் ஏற்படுத்தியிருந்தது. இந்த அழிவு வெறுப்பு, விரக்தி, அமைதியின்மை என்பவற்றை கிரேக்கத்தில் ஏற்படுத்தியிருந்தது. இந்த யுத்தத்தில் பெலோபோனேசியர்களை எதிர்கொள்ள பேர்சியர்கள் இவர்களுக்கு உதவியிருந்தார்கள். இதனால் பெலோபோனேசியன் யுத்தம் முறியடிக்கப்பட்டது. ஆனால் பெலோபோனேசியன் சண்டை முடிந்தபின்னர் பேர்சியர்கள் கிரேக்கத்தை தாக்கினார்கள். மீண்டும் கிரேக்கர்களுக்கும் பேர்சியர் களுக்குமிடையில் யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் கிரேக்கம் பேர்சியர் கைகளில் வீழ்ச்சியடைந்தது.

இந்த பெலோபோனேசியன் யுத்தம் கிரேக்கத்தின் வீழ்ச்சியின் தொடக்கமாக கருதப்படுகின்றது. இதன் பின்னர் நகர அரசுகள்

2. Hegel, G.W.F. (1956) *The Philosophy of History.* Dover Publications. P.237

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தேவைகளுக்காக தமக்குள் சண்டையிடத் தொடங்கின. இது கிரேக்கத்தில் மேலும் அழிவையும் அமைதியின்மையையும் தோற்றுவித்ததுடன் சமூக அரசியல் உறுதித்தன்மையையும் இல்லாதாக்கியது. இந்த சூழ்நிலையில்தான் பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் தமது அரசியல் சிந்தனைகளை முன்வைத்தனர். இவர்களது சிந்தனைகள் கிரேக்கர் கால செழிப்பு நிலையை மீண்டும் மீட்டெடுப்பதையே நோக்கமாக கொண்டிருந்தன.

### கிரேக்கர் கால சமுதாய அமைப்பு

கிரேக்கர் கால சமுதாய அமைப்பானது மூன்று விதமான சமூக வகுப்புக்களை கொண்டிருந்தது. அவையாவன முதலாம் வகுப்பினரான அடிமைகள், இரண்டாம் வகுப்பினரான ஏலியென்ஸ், மூன்றாம் வகுப்பினரான குடியுரிமையாளர் என்பனவாகும். இங்கு அடிமைகளுக்கு சமூக பொருளாதார அரசியல் உரிமைகள் காணப்படவில்லை. ஏலியென்ஸ்க்கு சமூக பொருளாதார உரிமைகள் காணப்பட்டது. ஆனால் அரசியல் உரிமைகள் காணப்பட்டிருக்க வில்லை. எனினும் குடியுரிமையாளர் வகுப்பிற்கு சமூக பொருளாதார அரசியல் உரிமைகள் அனைத்தும் காணப்பட்டது. இந்த சமூக அமைப்பில் ஒருவிதமான சமத்துவமின்மை காணப்பட்ட போதும் கிரேக்கர் கால பிரச்சனைகளுக்கும் ஒற்றுமையின்மைக்கும் இது ஒரு காரணமாக இருந்தபோதும் கிரேக்கர் கால அரசியல் சிந்தனையாளர்கள் இச்சமூக அமைப்பில் எந்தவிதமான அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்த முன்வரவில்லை. மாறாக அறக் கருத்து க்களை போதிப்பதன் மூலம் இச் சமூக வகுப்புக்களுக்கிடையிலான உறவையே மேம்படுத்த முயற்சித்திருந்தார்கள்.[3]

அதேசமயம் இக்காலப்பகுதியில் காணப்பட்ட Sophists தத்துவ வாதிகள் இயக்கம் அது முன்னெடுத்த போராட்டங்கள் என்பன கிரேக்க நகர அரசுகளில் அமைதியின்மையை ஏற்படுத்தி யிருந்தது.[4] இவர்கள் கிரேக்கத்தின் வீழ்ச்சிக்கு கிரேக்க நகர அரசுகளின்

3. Bertrand Russell. (1967) *A History of Western Philosophy.* Simon & Schuster. P.21
4. Earnest Barker. (2009) *Greek Political Theory.* Routledge. P.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திறனின்மையே பிரதானமான காரணம் என்று சொல்லி கிரேக்க நகர அரசுகளின் சமூகக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்றும் சமூகத்தில் சமத்துவம் நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்றும் வாதிட்டார்கள். ஆயினும் பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் இவர்களுக்கும் (Sophists) கிரேக்க நகர அரசுகளுக்குமிடையில் ஒருவித தத்துவ சமரசத்தை ஏற்படுத்தி கிரேக்கத்தில் அமைதியை நிலைநாட்ட விரும்பினர்.

**கிரேக்கர் கால சமுதாய பிரச்சனைகளுக்கான தீர்வு**

பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் கிரேக்கர் கால சமுதாய பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயன்றபோது பெருமளவுக்கு அடிப்படை மாற்றங்கள் எதையும் செய்திருக்கவில்லை. ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்ற முறைமையில் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டவே விரும்பியிருந்தார்கள்.[5] ஆயினும் கிரேக்கர் கால சமுதாய அமைப்பானது குறைபாடுடையது என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

இதனடிப்படையில் பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் தமது அரசியல் சிந்தனையில் நல்ல அரசு எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இதில் பிளேட்டோ ''இலட்சிய அரசு'' பற்றி குறிப்பிட அரிஸ்டோட்டில் ''யதார்த்த அரசு'' பற்றி குறிப்பிட்டார். அதாவது பிளேட்டோ இருக்கின்ற அரசியல் முறைமையை முற்றிலுமாக நிராகரித்து புதிய இலட்சிய அரசை அமைக்க விரும்பினார். ஆனால் அரிஸ்டோட்டில் இருக்கின்ற அரசியல் முறையில் உள்ள குறைகளை நிவர்த்திசெய்வதன் மூலம் அதை மேம்படுத்தி புதிய யதார்த்த அரசை காண விரும்பினார். இவ்வாறு பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் தமது கால சமூக பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதை நோக்கமாகக் கொண்டு தமது அரசியல் சிந்தனைகளை முன்வைத்தார்கள்.

5. Sabine, G.H. (1980) *A History of Political Theory.* Thomson Learning. P.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிரேக்கர் கால அரசியல் கோட்பாட்டின் இயல்புகள்**

அரசியல் ஆய்வுகளின் பரிசோதனைக் கூடமாக கிரேக்கர் காலம் குறிப்பிடப்படுகின்றது. அரிஸ்டோட்டில் 158 நகர அரசுகளில் காணப்பட்ட 158 அரசியலமைப்புக்களை ஒப்பீடு செய்து சிறந்த அரசினை அமைக்க முயன்றார். பிளேட்டோ இலட்சிய அடிப்படையிலான சிறந்த அரசை முன்மொழிந்தார்.[6] உறுதியற்று காணப்பட்ட கிரேக்கர் கால சூழ்நிலையை மாற்றி உறுதியான ஆட்சிமுறையை ஏற்படுத்த பகுத்தறிவு ரீதியிலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறு கிரேக்கர் கால அரசியல் கோட்பாட்டின் இயல்புகள் பலவகைத் தன்மையினதாக காணப்பட்டது. அவையாவன

1. இக்காலத்தில் காணப்பட்ட அரசியல் தத்துவமானது அரசைப் பற்றிய ஆய்வாக மட்டுமன்றி ஒழுக்கம் மற்றும் பொதுநன்மை என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. கிரேக்கர் கால நகர அரசுகளில் காணப்பட்ட நடைமுறைப் பிரச்சனைகளை பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டல் போன்றவர்கள் இலட்சிய மற்றும் யதார்த்த அடிப்படையில் நோக்கினார்கள்.

2. பகுத்தறிவு அடிப்படை கிரேக்கர் கால ஆய்வுகளின் முக்கிய அம்சமாக அமைந்தது. அரசியலமைப்புக்கள், அரசாங்க முறைகள் மற்றும் அரசின் தன்மை என்பன பகுத்தறிவு ரீதியான விசாரணைகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டன.

3. நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு அக்கால பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயன்றமை குறிப்பிடப்படுகின்றது. பிளேட்டோவின் குடியரசு நூல் இலட்சிய அரசு பற்றி குறிப்பிட்டாலும் அவரின் இன்னொரு நூலான ''சட்டங்கள்'' நடைமுறைப் பிரச்சனையை பற்றியதாக காணப்பட்டது. அரிஸ்டோட்டில் யதார்த்த ரீதியாக நல்ல அரசை அமைக்க முயன்றார்.

4. புவியியற் செல்வாக்குக்கு உட்பட்டதாக காணப்பட்டமை. இக்கால அரசியற் கோட்பாடுகள் அனைத்தும் கிரேக்கர் கால நகர அரசுகளை மையமாக கொண்டிருந்தது. அத்துடன் வெளியார்

---

6. Taylor, A.E. (2011) *Plato: The Man and His Works.* Dover Publications. P.273

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுப்புக்களால் ஏற்பட்ட தாக்கமும் அதனால் ஏற்பட்ட அரசியல் பிரச்சனையும் அரசியல் கோட்பாடுகளில் தாக்கம் செலுத்தியது.

5. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தனிமனிதப் பெறுமதிகள் இங்கு கவனத்திற் கொள்ளப் பட்டன. மக்களின் நல்வாழ்க்கையே கிரேக்கர் கால அரசியற் கோட்பாட்டின் மிக முக்கியமான குறிக்கோளாக காணப்பட்டது. இதனால் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் நல்ல அரசினை உருவாக்கவே பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் முயன்றார்கள்.

6. சட்டங்களில் நம்பிக்கை கொண்டிருந்த பண்பு இங்கு காணப்பட் டது. அறிஸ்டோட்டலின் கருத்துப்படி அரசின் மிக முக்கிய மான அம்சமாக சட்டங்களே காணப்பட்டன. பிளேட்டோவும் ''சட்டங்கள்'' என்ற நூலின் மூலம் இதன் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளார். சட்டங்களின் படி ஒழுங்கமைந்த ஒரு சமுதாயத்தையும் அதன்வழியான நல்ல அரசையும் அமைக்க இவர்கள் முயன்றார்கள்.

### கிரேக்கர் கால அரசியல் கோட்பாடுகள் பற்றிய மதிப்பீடு

பிற்கால அரசியல் கோட்பாடுகளின் தோற்றுவாயாக கிரேக்கர் காலமே காணப்படுகின்றது. தற்காலத்தில் காணப்படும் நவீன அரசியற் கருத்துக்கள் அனைத்தும் கிரேக்கர் காலத்திலிருந்தே தோற்றம் பெற்றன. ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம், அரசியலமைப்பு, பகுத்தறிவு மற்றும் மதச்சார்பின்மை போன்ற கருத்துக்கள் தற்காலத்தில் காணப்படுவதற்கு கிரேக்கர் காலமே பங்களித்திருக்கின்றது. ஆயினும் இக்கருத்துக்கள் நகர அரசுகளை மையமாகக் கொண்டே வெளியிடப் பட்டன. தற்கால தேசிய அரசுகளை அடிப்படையாகக் கொண்டு இவை தோற்றம் பெற்றிருக்கவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் கிரேக்கர் காலத்தை விடுத்து நவீன அரசியற் கோட்பாடுகள் பற்றி சிந்திக்க முடியாது என்னுமளவுக்கு கிரேக்கர் கால அரசியற் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- *மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளைப் பொறுத்தளவில் கிரேக்கர் காலம் மிக முக்கியமானது. ஏனெனில் பிற்கால அரசியல் சிந்தனைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக கிரேக்கர்கால அரசியல் சிந்தனைகளே காணப்படுகின்றன.*
- *600* B.C *காலப்பகுதியில் கிரேக்க நகர அரசுகள் மிகவும் செழிப் பாக இருந்தது. ஆனால் நகர அரசுகளுக்கிடையில் ஒற்றுமை காணப்பட்டிருக்கவில்லை. இதன்பின்னர் 500* B.C *ல் பேர்சியன் யுத்தம் இடம்பெற்றது. மீண்டுமொருமுறை கிரேக்கத்தில் 431* B.C *ல் பெலோபோனேசியன் யுத்தம் இடம்பெற்றது. இந்த பெலோபோனேசியன் யுத்தம் கிரேக்கத்தின் வீழ்ச்சியின் தொடக்கமாக கருதப்படுகின்றது.*
- *கிரேக்கர் கால அரசியல் கோட்பாட்டின் இயல்புகள் பலவகைத் தன்மையினதாக காணப்பட்டது. அவையாவன இக்காலத்தில் காணப்பட்ட அரசியல் தத்துவமானது அரசைப் பற்றிய ஆய்வாக மட்டுமன்றி ஒழுக்கம் மற்றும் பொதுநன்மை என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. பகுத்தறிவு அடிப்படை கிரேக்கர் கால ஆய்வுகளின் முக்கிய அம்சமாக அமைந்தது. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தனிமனிதப் பெறுமதிகள் இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டன.*
- *கிரேக்கர் கால சமுதாய அமைப்பானது மூன்று விதமான சமூக வகுப்புக்களை கொண்டிருந்தது. அவையாவன முதலாம் வகுப்பினரான அடிமைகள், இரண்டாம் வகுப்பினரான ஏலியென்ஸ், மூன்றாம் வகுப்பினரான குடியுரிமையாளர் என்பனவாகும்.*
- *பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் கிரேக்கர் கால சமுதாய பிரச்ச னைகளுக்கு தீர்வு காண முயன்றபோது பெருமளவுக்கு அடிப்படை மாற்றங்கள் எதையும் செய்திருக்கவில்லை. ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்ற முறைமையில் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டவே விரும்பியிருந்தார்கள். ஆயினும் கிரேக்கர் கால சமுதாய அமைப்பானது குறைபாடுடையது என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.*
- *இதனடிப்படையில் பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் தமது அரசியல் சிந்தனையில் நல்ல அரசு எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இதில் பிளேட்டோ ''இலட்சிய அரசு'' பற்றி குறிப்பிட அரிஸ்டோட்டில் ''யதார்த்த அரசு'' பற்றி குறிப்பிட்டார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 07*

# பிளேட்டோவின் அரசியல் கருத்துக்கள்

## Plato (427 B.C – 347 B.C)

### அறிமுகம்

பிளேட்டோ தலைசிறந்த ஒரு கிரேக்க தத்துவ ஞானி. இவர் கி.மு 427 இல் ஒரு பிரபுத்துவ செல்வந்த குடும்பத்தில் பிறந்தார். அக்கால வழக்கப்படி முதலில் பல்வேறு ஆசிரியர்களிடம் இசை, கவிதை, கலை, தத்துவம் என்பனவற்றைப் படித்து பின்னர் கி.மு 407 இல் தனது இருபதாம் வயதில் சோக்கிரடீசின் மாணவன் ஆனார். சோக்கிரடீஸ் இறக்கும் வரைக்கும் எட்டு வருடங்கள் அவருடைய விருப்பத்திற்குரிய மாணவனாக இருந்து கல்வி கற்றார். அதன்பின்னர் கி.மு 388 இல் எகிப்து இத்தாலி என்று உலகின் பல பாகங்களுக்கும் பத்து வருடங்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன்மூலம் தனது கலந்துரையாடல் வடிவிலான நூல்களுக்கான பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டார். சிலகாலம் போர்க் கைதியாக சிறைப் பிடிக்கப்பட்டு அடிமையாகவும் நடத்தப்பட்டார். ஆயினும் பிற்காலத்தில் "The Academy" என்ற கல்விக் கழகத்தை நிறுவி கணிதம் தத்துவம் என்பவற்றை கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராகவும் விளங்கினார். ஒரு தத்துவ ஞானியாக பிற்காலத்தில் இவர் போற்றப்படுவதற்கு இதுவே இவருக்கு வழிவகுத்தது.[1] இதன்மூலம் அரிஸ்டோட்டில் என்ற சிறந்த மாணவனையும் இவர் பெற்றுக்கொண்டார். ஏறக்குறைய 40 வருடங்கள் ஆசிரியராக

---

1. Grube, G.M.A. (1935) *Plato's Thought.* London: Methuen&Co.Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அவர் 82 வயதில் இறக்கும் வரைக்கும் கல்விக் கழகத்தை சிறப்பாக நடத்தினார். இவரது எழுத்துக்களில் பெரும்பாலானவை கலந்துரையாடல் வடிவிலும் (Dialogues) கடித வடிவிலுமே காணப்படு கின்றன. ஏறக்குறைய 35 கலந்துரையாடல்களையும் 13 கடிதங் களையும் இவர் எழுதியிருக்கின்றார். இவற்றுள் பிரதானமான நூல்களாக குடியரசு (The Republic) சட்டங்கள் (The Laws) என்பவை குறிப்பிடப்படுகின்றன. பிளேட்டோவின் மிகப் புகழ் பெற்ற நூல் "குடியரசு" (The Republic) ஆகும். எட்டு அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலில் நீதி பற்றியும், நீதியான நகர அரசு பற்றியும், கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், ஆட்சியாளர் வகுப்பிற்கான கல்வி முறை பற்றியும், அவர்களது வாழ்க்கை முறை பற்றியும், பெண்களது நிலை பற்றியும், யுத்தமும் சமாதானமும் பற்றியும் பிளேட்டோ எடுத்து விளக்குகின்றார். இந்த நூலே இவரது அரசியல் கோட்பாடு களுக்கான அடிப்படை. இதிலேயே இவர் தனது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை முன்வைக்கிறார்.

### பிளேட்டோவின் எழுத்துக்களில் சோக்கிரடீசின் செல்வாக்கு

பேராசிரியர் சபைன் (Sabine) குறிப்பிட்டது போல "சோக்கிரடீசின் தொடர்பு பிளேட்டோவிற்கு இல்லாதிருந்தால் புலமைமிக்க தத்துவ ஞானியாக இவர் மிளிர்ந்திருக்க முடியாது"[2] என்பது உண்மையாகவே இருக்கிறது. முற்றுமுழுதாக சோக்கிரடீசோடு பிளேட்டோ ஒத்துப் போகாவிட்டாலும் பிளேட்டோவின் பல்வேறு கருத்துக்களில் சோக்கிரடீசின் தாக்கம் காணப்படுகின்றது. குறிப்பாக அறிவு பற்றிய கருத்துக்களிலும், இலட்சிய அடிப்படையிலும், தத்துவார்த்த அணுகு முறையிலும்,அரசாங்கம் பற்றிய கருத்துக்களிலும் சோக்கிரடீசின் பாதிப்பு இவரிடம் இருப்பதைக் காணலாம்.

### இலட்சிய அரசு பற்றிய கருத்துக்கள்

இலட்சிய அரசு என்கின்ற போது அது யதார்த்தமற்றது நடைமுறைக்கு பொருந்தாதது என பொதுவாக சொல்லப்படுவதுண்டு. ஆயினும் இலட்சிய அரசானது முற்று முழுதாக நடைமுறைக்கு பொருத்த

2. Sabine, G.H. (1980) *A History of Political Theory.* Thomson Learning.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிளேட்டோ (PLATO (427-347 BCE)**



*பிளேட்டோ ஒரு கிரேக்கர் கால அரசியல் சிந்தனை யாளர் ஆவார். இவர் ஒரு பிரபுத்துவ செல்வந்த குடும்பத்தில் பிறந்தார். இவர் சோக்கிரட்டீசின் மாணவர். அரிஸ்டோட்டலுக்கு ஆசிரியராக இருந்தவர். பிற்காலத்தில் "The Academy" என்ற கல்விக் கழகத்தை நிறுவி கணிதம் தத்துவம் என்பவற்றை கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராக விளங்கினார். இவரது எழுத்துக்களில் பெரும்பாலானவை கலந்துரையாடல் வடிவிலும் (Dialogues) கடித வடிவிலுமே காணப்படுகின்றன. பிளேட்டோ நீதியின் அடிப்படையிலான இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார். இதன் மூலம் இவர் தத்துவ அடிப்படையிலான ஆட்சியாளன் ஒருவனை வலியுறுத்துகின்றார். ஜனநாயகத்தை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இவரது பிரதானமான நூல்களாக குடியரசு (The Republic) சட்டங்கள் (The Laws) என்பவை குறிப்பிடப்படுகின்றன.*

மற்றது என்றும் குறிப்பிட்டு விடமுடியாது. ஏனெனில் இலட்சியத்திலிருந்தே யதார்த்தங்கள் தோற்றம் பெறுகின்றன. ஒரு காலத்து இலட்சியம் இன்னொரு காலத்து யதார்த்தமாகவும் ஒரு காலத்து யதார்த்தம் இன்னொரு காலத்து இலட்சியமாகவும் உருமாற்றம் பெறுகின்றன. எனவே இலட்சிய அரசானது அக்கால நடைமுறைக்கு சிலவேளைகளில் பொருத்தமற்றதாக இருக்கலாம் ஆனால் எதிர்கால நடைமுறைக்கு பொருத்தமற்றது என்று சொல்லி விடமுடியாது. Amal kumar mukoupathya என்பவர் ''பிளேட்டோ கூட தனது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்கள் நடைமுறைக்கு முற்றுமுழுதாக சாத்திய மானது என நம்பியிருந்தார் என்பதற்கு ஆதாரமேதுமில்லை''[3] எனக் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும் பிளேட்டோ எதிர்காலத்தில் ஒரு நல்ல அரசை எப்படி உருவாக்குவது என்பது பற்றியே சிந்தித்தார்.

3. Mukoupathya, A. k. (2019) *An Introduction to Political Theory.* SAGE Publications India Pvt Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை பற்றிய தேடல்

பிளேட்டோ தனது அரசியல் கோட்பாட்டை எது உண்மை என்ற தேடலுடனேயே ஆரம்பிக்கின்றார். புறவுலகத்து நிகழ்ச்சிகள் உண்மையா அல்லது அகவுலகத்து கருத்துக்கள் உண்மையா என்பதில் இருந்தே பிளேட்டோ தனது வாதத்தினை தொடங்குகின்றார். பிளேட்டோவின் கருத்துப்படி புறவுலகத்து நிகழ்ச்சிகள் நிலையற்றவை. அகவுலகத்து கருத்துக்களே நிலையானது. எனவே அகவுலகத்து கருத்துக்களே உண்மையானது என்பது இவரது நிலைப்பாடு. அகம் உண்மையா? புறம் உண்மையா? என்ற நீண்ட விவாதத்தின் பின்னர் அகமே உண்மை என்ற முடிவுக்கு வருகின்றார். ஏனெனில் புறவுலகத்து நிகழ்ச்சிகள் இல்லாமல் போகலாம் ஆனால் அகவுலகத்து கருத்துக்கள் என்றும் நிலைத்து நிற்கக்கூடியது என்று பிளேட்டோ நம்பினார். இதனால்தான் பிளேட்டோ அகவுலகத்து கருத்துக்கள் உண்மையென்று கூறி கருத்து ரீதியான இலட்சிய அரசை வேண்டி நிற்கின்றார். ஆனால் யதார்த்தமாக நோக்குமிடத்து அகவுலகத்து கருத்துக்கள் மட்டுமல்ல புறவுலகத்து நிகழ்ச்சிகளும் உண்மையானதே. சில சந்தர்ப்பங்களில் புறவுலகத்து நிகழ்ச்சிகள் மூலமே அகவுலகத்து கருத்துக்கள் தோன்றுகின்றன. அதேபோன்று அகவுலகத்து கருத்துக்களும் புறவுலகத்து நிகழ்ச்சிகளைத் தீர்மானிக்கின்றன. இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டும் ஒன்றை ஒன்று தீர்மானிக்கின்றது. ஆயினும் பிளேட்டோ அகவுலகத்து கருத்துக்களே உண்மையென்று கூறி தனது கருத்தை முன்வைக்கின்றார்.

## நீதியான சமூகம்

எது நீதி என்பது பற்றியும் பிளேட்டோ அதிகமாக விவாதித்திருக்கிறார். ஏனெனில் நீதியான சமூகம் ஒன்றிலிருந்தே இலட்சிய அரசு தோன்ற முடியும் என பிளேட்டோ நம்பினார். எனவே இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை நீதியான சமூகத்தில் இருந்தே தொடங்குகின்றார். ஒரு சமூகத்தில் மனிதனுக்கு பல்வேறு வகையான தேவைகள் காணப்படுகின்றன. இத் தேவைகள் அனைத்தையும் மனிதன் தனியொருவனாக நின்று பூர்த்திசெய்ய முடியாது. ஒவ்வொருவருக்கும் மற்றவர்களது உதவிகள் தேவைப்படுகின்றன. ஆகவே நீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் ஒன்றிலிருந்து தோற்றம் பெறுகின்ற இலட்சிய அரசில் இத்தகைய தங்கியிருத்தல் தன்மை காணப்படவேண்டும் என்று பிளாட்டோ குறிப்பிடுகின்றார். நீதியான சமூகத்தில் கலைஞர்கள், போர்வீரர்கள், ஆட்சியாளர்கள் என்ற மூன்று சமூக வகுப்புக்கள் காணப்படும் என்றும் அவர்களுக்கிடையே தங்கியிருத்தல் தன்மை காணப்பட வேண்டும் என்றும் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர் கடமைகளை சரியாக செய்வதே நீதி என்றும் பிளேட்டோ குறிப்பிடுகின்றார். பிளேட்டோவைப் பொறுத்தவரை இந்த வகைப்பாடு இயல்பானதும் நீதியானதுமாகும். எனவே இத்தகைய சமூக வகைப்பாடு தவிர்க்கமுடியாதது என்பது இவரது கருத்து.

### சமூக வகுப்புக்கள்

நீதியான சமூகத்தில் கலைஞர்கள், போர்வீரர்கள், ஆட்சியாளர்கள் என்ற மூன்று சமூக வகுப்புக்கள் காணப்படும் என பிளேட்டோ குறிப்பிடுகின்றார். சமூகத்திற்கு தேவையான சகலவற்றையும் நிறைவேற்றுபவர்களாக கலைஞர்கள் வகுப்பினர் காணப்படுகின்றனர். சகலவற்றையும் நிறைவேற்றுபவர்களாக இருந்தாலும் எல்லாத் தேவைகளையும் இவர்களால் நிறைவேற்றிவிட முடியாது. ஆகவே வெளியாரிடமிருந்து வரும் போர்களிலிருந்து நாட்டைக் காப்பாற்றவும் தேவைப்படின் நாட்டுக்காக போர் புரியவும் போர்வீரர்கள் வகுப்பினர் காணப்படுகின்றனர். இவர்களால் நாட்டைக் காப்பாற்றவும் போர் புரியவும் முடியுமே தவிர நாட்டை ஆட்சி புரிய முடியாது. எனவே நாட்டை ஆட்சி செய்வதற்காக ஆட்சியாளர்கள் வகுப்பு காணப் படுகின்றது. நாட்டின் பொதுநலனை இவர்களே கவனிப்பர். இவ்வாறு நீதியான சமூகம் ஒன்றிலிருந்து தோற்றம் பெறுகின்ற இலட்சிய அரசு தங்கியிருத்தல் தன்மை கொண்டதாக காணப்படுகின்றது என பிளேட்டோ குறிப்பிடுகின்றார். இதன்படி சமூகத்திலுள்ள எல்லோரும் இந்த மூன்று வகுப்புக்களில் ஏதோ ஒன்றில் கட்டாயமாக அங்கம் வகிக்க வேண்டும். ஒருவர் எந்த வகுப்பிற்குரியவர் என்பது செல்வத்தாலோ பிறப்பாலோ அன்றி அவருடைய இயல்பான திறமையினாலும் கல்வியினாலுமே தீர்மானிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சமூக வகுப்புக்கள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய பண்பு களைக் கொண்டுள்ளன. இந்தவகையில் மூன்று அடிப்படைப் பண்புகளைப் பற்றி பிளேட்டோ குறிப்பிடுகின்றார். அவையாவன தன்னடக்கம் துணிவு ஞானம் என்பனவாகும். கலைஞர்கள் தன்ன டக்கத்தையும் போர்வீரர்கள் துணிவையும் ஆட்சியாளர்கள் ஞானத் தையும் கொண்டிருப்பார்கள். அதுமட்டுமன்றி எல்லா வகுப்புக்களும் சமூகத்தில் கொண்டிருக்க வேண்டிய நான்காவது பண்பாக நீதி குறிப்பிடப்படுகின்றது. எனவே இந்த பண்புகள் எல்லாம் சமூகத்தில் காணப்படும்போதே இலட்சிய அரசு சிறப்பாக செயற்பட முடியும் என பிளேட்டோ வாதிடுகின்றார்[4].

நீதி பற்றி விவாதித்த பிளேட்டோ சமூகத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு வகுப்புக்களும் தத்தமது கடமைகளை சரியாக செய்கின்ற போதே அங்கு நீதி இருக்கமுடியும் என்கின்றார். இச்சமூக நீதியே எல்லாவற்றுக்கும் அடிப்படை என்றும் இச்சமூக நீதி சிறப்பாக செயற்படும்போதுதான் இலட்சிய அரசு சிறப்பாகவும் நீதியாகவும் செயற்பட முடியும் எனவும் பிளேட்டோ குறிப்பிடுகின்றார்.[5] ஆயினும் நீதியான சமூக அமைப்பும் சிறப்பான இலட்சிய அரசும் நீண்டகாலத் திற்கு அமைதியாக செயற்படவேண்டுமென்பதற்காக ஆட்சியாளர் வகுப்பிற்கு மிகுந்த கட்டுப்பாட்டோடு கூடிய சிறப்பான கல்விப் பயிற்சியை பிளேட்டோ வலியுறுத்துகின்றார்.

### ஆட்சியாளர் வகுப்பிற்கான கல்விப் பயிற்சி

ஆட்சியாளர்கள் ஞானத்தோடு பிறப்பதில்லை என்றும் அவர்களுக்கு ஞானத்தை ஏற்படுத்துவதற்காக கல்விப் பயிற்சியளிக்கவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். ஒருவர் ஆட்சியாளர் வகுப்பினுள் வரவேண்டுமாயின் நீண்டகால கல்விப் பயிற்சியை பிளேட்டோ வலியுறுத்துகின்றார். பிள்ளைப் பருவத்தில் இருந்து இருபது வயது வரை நல்ல பழக்கவழக்கங்களையும் துணிவையும் பெறுவதற்கு

4. David Grene. (1950) *Greek Political Theory*: The Image of Man in Thucydides and Plato. University of Chicago Press.
5. Earnest Barker. (1959) *The Political Thought of Plato and Aristotle*. NewYork: Dover Publications.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடியரசு (The Republic)**




*பிளேட்டோவின் மிகப் புகழ் பெற்ற நூல் "குடியரசு" (The Republic) ஆகும். எட்டு அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலில் நீதி பற்றியும், நீதியான நகர அரசு பற்றியும், கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், ஆட்சியாளர் வகுப்பிற்கான கல்வி முறை பற்றியும், அவர்களது வாழ்க்கை முறை பற்றியும், பெண்களது நிலை பற்றியும், யுத்தமும் சமாதானமும் பற்றியும் பிளேட்டோ எடுத்து விளக்குகின்றார். இந்த நூலே இவரது அரசியல் கோட்பாடுகளுக்கான அடிப்படை. இதிலேயே இவர் தனது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார்.*

இசை, கலை, கலாச்சார கல்வியை வலியுறுத்துகின்றார். பின்னர் இருபதில் இருந்து முப்பது வயதுவரை பத்து வருடங்களுக்கு விஞ்ஞான உயர்கல்வியை பெறவேண்டும் என குறிப்பிடுகின்றார். முப்பதில் இருந்து முப்பத்து ஐந்து வயதுவரை ஐந்து வருடங்களுக்கு தத்துவக் கல்வியை வலியுறுத்துகின்றார். பின்னர் ஐம்பது வயது வரை பதினைந்து வருடங்களுக்கு ஆட்சியாளர்களுக்குரிய பயிற்சியைப் பெறவேண்டும் எனவும் குறிப்பிட்டு ஐம்பது வயதுவரை இந்த அனைத்து கல்வியையும் நிறைவு செய்தபின்னர் ஒருவர் ஆட்சியாளராக இருக்க தகுதியுடையவர் என பிளேட்டோ குறிப்பிடுகின்றார். எனவே இலட்சிய அரசின் ஆட்சியானது இத்தகைய ஞானமுள்ள பயிற்றுவிக்கப்பட்ட ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது பிளேட்டோவின் கருத்து. இதனைப் பிளேட்டோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

> "அரசர்கள் தத்துவ ஞானிகளாகவோ அல்லது தத்துவ ஞானிகள் அரசர்களாகவோ மாறவேண்டும். ஆட்சியாளர்கள் ஞானத்தை அடைவதில் உண்மையான விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அரசியல் அதிகாரமும் அரசியல் தத்துவமும் ஒன்றிணையா விட்டால் மனித இனத்திற்கும் மற்றும் அரசுகளுக்கும் பிரச்சனைகளில் இருந்து விடுதலையே இல்லை."[6]

---

6. Plato. (1941) *From The Republic of Plato.* Translated by Francis MacDonald Cornford. NewYork: Oxford University Press. P.25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர் வகுப்பிற்கான நீண்டகால கல்விப் பயிற்சியை மட்டுமன்றி அவர்களுக்கான வாழ்க்கை முறையையும் பிளேட்டோ வகுத்துள்ளார். ஆட்சியாளர் வகுப்பிலுள்ள ஆண்களும் பெண்களும் இறுக்கமான இராணுவ கட்டுப்பாடோடமைந்த முகாம் வாழ்வே வாழ வேண்டும் என்றும் அவர்களுக்கான உணவு வகைகள் அனைத்தும் வழங்கப்படும் என்றும் அவர்களுக்கு தனியார் சொத்துடமை தனிப்பட்ட குடும்ப வாழ்க்கை முறை என்பன இருக்காது என்றும் குறிப்பிட்டு பொதுவான வாழ்க்கை முறையை அவர்களுக்கு வலியுறுத்தி பொதுவுடமைப் பண்புள்ள ஒரு ஆட்சியாளர் வகுப்பை பிளேட்டோ வலியுறுத்துகின்றார். இவ்வாறு ஆட்சியாளர்கள் இருந்தாலே சிறப்பானதும் நீதியானதுமான ஆட்சி நிலவும் என்று குறிப்பிட்டு தமது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை பிளேட்டோ முன்வைக்கிறார்.

### அரசாங்க முறைகள்

அரசாங்க முறைகள் பற்றியும் இவர் பேசியிருக்கிறார். அரசாங்க முறைகள் பற்றி பேசியிருக்கிறார் என்பதால் இவர் ஜனநாயகத்தை ஆதரிக்கின்றார் என்று பொருள் கொள்ளமுடியாது. பிளேட்டோ ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிரானவர். அவர் ஜனநாயக ஆட்சி முறையை ஒரு சிறந்த ஆட்சி முறையாக கருதியிருக்கவில்லை. ஆயினும் இவர் தற்கால ஜனநாயக ஆட்சி முறையை மனதிற் கொண்டு இதை குறிப்பிடவில்லை. இவர் குறிப்பிட்ட ஜனநாயக ஆட்சி முறையும் தற்கால ஜனநாயக ஆட்சி முறையும் ஒன்றல்ல. எனவே பிளேட்டோ கிரேக்கர் கால நடைமுறையில் இருந்த அரசாங்க முறைகளை வகைப்படுத்தி அதன் குறை நிறைகளை சுட்டிக்காட்டி இலட்சிய அரசின் சிறப்பை எடுத்துவிளக்குகின்றார். இதற்காக ஐந்து விதமான அரசாங்க முறைகளை வகைப்படுத்தி விளக்குகின்றார்.

1. பிரபுக்கள் ஆட்சி (Aristocracy)
2. புகழ் விரும்பும் ஆட்சி (Timocracy)
3. தன்னல ஆட்சி (Oligarchy)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கொடுங்கோல் ஆட்சி (Tyranny)

5. ஜனநாயக ஆட்சி (Democracy)

இங்கு பிரபுக்கள் ஆட்சியையே சிறப்பான ஆட்சி முறையாக பிளேட்டோ குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடுகின்ற தத்துவ அரச னுக்கு பொருத்தமான ஆட்சி முறையாகவும் இலட்சிய அரசின் அரசாங்க முறையாகவும் பிரபுக்கள் ஆட்சி முறையையே பிளேட்டோ ஏற்றுக்கொள்கின்றார். இவ்வாறு கூறுவதால் அவர் ஒரு பரம்பரை உயர் குடியினர் ஆட்சியையோ ஒரு முடியாட்சியையோ ஆதரிக்க வில்லை. மாறாக தலைமை வாய்ந்த ஓர் உயர் குடியினர் ஆட்சியை அதாவது நாட்டில் உள்ளவர்களில் அறிவிலும் திறமையிலும் மிகச் சிறந்தவர்களால் நடத்தப்படும் ஆட்சியையே அவர் விரும்பினார். இந்த ஆட்சியாளர் குடி மக்கள் வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப் படலாகாது. ஒரு அமைப்பின் உறுப்பினர்கள் தங்களுக்குள் மனம் ஒத்துத் தேர்ந்தெடுக்கும் ஒரு முறையின்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும் எனவும் விரும்பினார். அதேசமயம் புகழ் விரும்பும் ஆட்சியை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்கின்ற பிளேட்டோ ஏனைய ஆட்சி முறைகளான தன்னல ஆட்சி, கொடுங்கோல் ஆட்சி, ஜனநாயக ஆட்சி என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

### ஜனநாயகம் பற்றிய பிளேட்டோவின் கருத்து

சோக்கிரடீஸ் கிரேக்க நகர ஆட்சியாளர்களினால் கொலை செய்யப் பட்டமையானது ஜனநாயகத்தின் மீது மிகவும் கசப்பான அனுபவத்தை பிளேட்டோவிற்கு ஏற்படுத்தியிருந்தது. இதனால் பிளேட்டோ ஜனநாயக ஆட்சியை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அதற்கு எதிராகவே செயற்பட்டார்.[7] பிளேட்டோ ஜனநாயகத்தினை ஒரு கும்பல் ஆட்சியாகவே கருதினார். ஜனநாயக ஆட்சியில் சமூகத்திற்கும் ஆட்சியாளனுக்கும் இடையில் ஒழுங்குமுறையோ ஒருமைப்பாடோ காணப்படாத போது அது அராஜக ஆட்சியாக மாற்றமுறக் கூடிய ஆபத்து உள்ளதாக கூறி அதை எதிர்த்தார். ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களாக சுதந்திரமும் சமத்துவமும் காணப்படுகின்றன. ஆனால்

7. Guthrie, W.K.C. (1971) *Socrates*. Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை வரம்பற்றதாக காணப்படுமாயின் சமூகத்தில் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு ஜனநாயகமற்ற தன்மையே ஏற்படும் என பிளேட்டோ குறிப்பிடுகின்றார். ஜனநாயகம் திறமையைக் கருத்தில் கொள்ளவில்லை எனக் கூறி அதை மறுக்கின்றார். திறமையைக் கருத் திற் கொள்ளாமல் எல்லாருக்கும் சமத்துவ உரிமைகள் கிடைப்பதை பிளேட்டோ ஏற்றுக்கொள்ளவில்லை. ஒவ்வொரு வகுப்பினரும் தத்தமது திறமை அடிப்படையில் கடமைகளை சரிவர செய்வதே நீதி என்று கூறுகின்ற பிளேட்டோ ஜனநாயகம் நீதியற்ற சமுதாயத்தை ஏற்படுத்துகின்றது என குறிப்பிடுகின்றார். ஜனநாயக முறையில் எவரும் ஆட்சியாளனாக வரலாம் என குறிப்பிடுகின்ற பிளேட்டோ அங்கு ஒரு சிறந்த ஆட்சியாளனைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் மிகக்குறைவானது என வாதிடுகின்றார். இவ்வாறு பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் ஜனநாயகத்தை பிளேட்டோ எதிர்க்கின்றார்.

### பிளேட்டோ ஒரு பாசிசவாதி

ஜனநாயகத்தை எதிர்ப்பதன் காரணமாக பிளேட்டோ ஒரு பாசிசவாதியா என்ற கேள்வியை பல அரசியல் அறிஞர்கள் முன்வைக்கின்றார்கள். சிலர் வரலாற்றின் முதல் பாசிசவாதியாக பிளாட்டோவை அடையாளம் காண்கின்றனர். வேறுசில அறிஞர்கள் பிளேட்டோவின் கருத்துகள் பாசிச கருத்துக்களில் இருந்து வேறுபட்டவை என்று வாதிடுகின்றனர்.[8] பிளேட்டோவை பாசிசவாதியாக குறிப்பிடுகின்றவர்கள் பாசி சத்தைப் போன்று அரசின் சட்டங்களே முடிந்த முடிபானவை என்றும் இதன்மூலம் அரசின் சட்டங்களுக்கு மக்கள் எல்லோரும் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அவை மக்களால் மாற்றப்பட முடியாதவை என்றும் பிளேட்டோ குறிப்பிடுவதாக வாதிடுகின்றனர். அதேபோன்று மக்களின் உரிமைகளை வலியுறுத்தாமல் கடமைகளை மட்டுமே பிளேட்டோ வலியுறுத்துகின்றார். பாசிசத்தைப் போல பிளேட்டோவின் ஆட்சி முறையும் சிறுபான்மை ஆட்சியாக காணப்படுகின்றமை மற்றும் பாசிசத்தைப் போலவே வரம்பற்ற அதிகாரங்களை ஆட்சி யாளனுக்கு வழங்குகின்றமை, ஜனநாயகத்தை எதிர்க்கின்றமை, ஒரு

8. Wayper, C.L. (1958) *Political Thought.* The English Universities Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்துவமிக்க அரசை அமைக்க முயன்றமை, பாசிசத்தைப் போல அரசுக்கு எதிரான தனிமனித உரிமைகள் பிளேட்டோவின் இலட்சிய அரசிலும் காணப்பட்டிருக்காமை, அரசின் குடிமக்களை வகுப்புக்களாக வகுத்ததன் மூலம் குடிமக்கள் எல்லோருக்குமான பொதுவான சமத்துவத்தை பிளேட்டோ ஏற்றுக்கொண்டிருக்காமை என்பன போன்ற காரணங்களின் அடிப்படையில் பிளேட்டோவை ஒரு பாசிசவாதியாக அடையாளம் காண்கின்றனர்.

இவ்வாறு பாசிச கருத்துக்களோடு இணைந்த வகையில் பிளேட்டோவின் கருத்துக்கள் காணப்படுகின்றன என்ற வாதம் முன் வைக்கப்பட்ட போதும் வேறுசில அறிஞர்கள் பிளேட்டோவின் கருத்துகள் பாசிச கருத்துக்களில் இருந்து வேறுபட்டவை என்ற வாதத்தையும் முன்வைக்கின்றனர்.[9] அவ்வாறு குறிப்பிடுவோர் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு பிளேட்டோ பாசிசவாதி இல்லை என குறிப்பிடுகின்றனர். பாசிசம் என்பது முதலாம் உலகப் போரின் பின்னர் தோற்றம் பெற்ற ஒரு தத்துவமாகும். ஆனால் பிளேட்டோவின் கருத்துக்களோ கி.மு 4ஆம் நூற்றாண்டின் போது தோற்றம் பெற்றவை. ஆகவே இதை பாசிச கருத்துக்களாக கொள்ள முடியாது என இவர்கள் வாதிடுகின்றார்கள். பாசிசவாதிகள் போன்று அரசு பலமுள்ளதாக இருக்கவேண்டும் என்பதை பிளேட்டோ வலியுறுத்தியபோதும் அரசினுடைய பலத்தை பெருக்கி அதை விரிவாக்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. பாசிசம் யுத்தத்தை வலியுறுத்துகின்றபோதும் பிளேட்டோ ஒருபோதும் யுத்தத்திற்கு ஆதரவானவராக இருந்திருக்கவில்லை. பாசிசம் கம்யூனிச தத்துவத்தை எதிர்க்கின்ற போதும் பிளேட்டோ கம்யூனிச அடிப்ப டையை தனது இலட்சிய அரசுக்கு ஆதரவாக கொண்டிருந்தார். பாசிசமும் பிளேட்டோவும் ஜனநாயகத்தை எதிர்க்கின்றபோதும் அவை இரண்டும் வேறுவேறு தளங்களில் பயணிக்கின்ற இருவேறு தத்துவங்களாகவே இருந்தன. பிளேட்டோவின் அரசாங்க முறை மற்றும் சட்டங்கள் பற்றிய கருத்துக்களும் பாசிச அடிப்படையை பிளேட்டோ கொண்டிருக்கவில்லை என்பதையே தெளிவுபடுத்து

9. Warmington, E.H. (1950) *Great Dialogues of Plato.* New York: Signet Classic. P.335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இவையாவும் பிளேட்டோவின் கருத்துகள் பாசிச கருத்துக் களில் இருந்து வேறுபட்டவை என்பதினையே உணர்த்தி நிற்கின்றது.

## பிளேட்டோவின் கருத்துக்கள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள்

நீதி பற்றி இவர் கூறிய கருத்துக்கள் கண்டிக்கப்படுகின்றது. இவர் குறிப்பிடுகின்ற நீதி என்பது தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற நீதி என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக சமூக வகுப்புக்களைக் கொண்டே பிளேட்டோ நீதியை வரையறுக்கின்றார். அவரவர் தமது கடமைகளை சரியாக செய்வதே நீதி என்பது பிளேட் டோவின் கருத்து. இது தற்கால நடைமுறைக்கு பொருத்தமற்றது என குறைகூறப்படுகின்றது.

தனிமனித உரிமைகளை இவர் மறுக்கிறார் எனவும் விமர்சிக் கப்படுகின்றது. சமூக வகுப்புக்களையும் அவர்களுக்கான கடமை களையும் வகைப்படுத்துவதன் மூலம் இலட்சிய அரசுக்காக மக்களே தவிர மக்களுக்காக இலட்சிய அரசு இல்லை என்று இவர் கூறுவது ஒருவிதமான பாசிச அடிப்படையை வலியுறுத்துகின்றது என கண்டிக் கப்படுகின்றது.

பொதுவுடமைவாதிகளாலும் இவர் குறைகூறப்படுகின்றார். பிளேட்டோ ஆட்சியாளர் வகுப்புக்கு ஒருவிதமான பொதுவுடைமை சார்ந்த அமைப்பினடிப்படையில் கடமைகளை வரையறுத்திருந்த போதும் இது உண்மையில் பொதுவுடைமை அல்ல அராஜகமே என விமர்சிக்கப்படுகின்றது. பொதுவுடைமை என்ற பெயரில் ஒருவனுடைய மனைவியை எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்வது அராஜகம் அன்றி வேறில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

அறக்கட்டமைப்பில் அதிகம் நம்பிக்கை கொண்டிருப்பதாக இவரது கருத்து விமர்சிக்கப்படுகின்றது. உதாரணமாக உண்மை நீதி என்பவற்றின் அடிப்படையில் இவரது இலட்சிய அரசு கட்டியெழுப் பப்படுகின்றபோது அங்கு ஆட்சியாளன் மிகவும் சிறந்தவனாக இருப்பான் என்பது இவரது நம்பிக்கை. ஆனால் அந்த ஆட்சியாளன் தவறு செய்யலாம் என்ற எண்ணம் பிளேட்டோவுக்கு கொஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட ஏற்பட்டிருக்கவில்லை. இது நடைமுறைக்கு பொருத்தமற்றது என குறிப்பிடப்படுகின்ற அதேசமயம் அறக் கருத்துக்கள் மட்டுமே அரசியலைத் தீர்மானிக்கும் எனவும் குறிப்பிட முடியாது என விமர்சிக்கப்படுகின்றது.

இவரது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களும் கண்டிக்கப் படுகின்றன. பிளேட்டோ ஏற்கனவே இருந்துகொண்டிருக்கின்ற அரசியல் முறையை அல்லது சமூக முறையை புறக்கணித்து இலட்சிய அரசு என்ற புதிய சமூக முறையை கட்டியெழுப்ப முயல்கின்றமை நடைமுறைக்கு பொருத்தமற்றது என குறைகூறப்படுகின்றது. இலட்சிய அரசை ஏற்படுத்துவதற்காக ஆட்சியாளர் வகுப்பிற்கு இவர் குறிப்பிடுகின்ற கடமைகள் மிகவும் கடினமானதாக இருப்பது டன் நடைமுறைக்கு சாத்தியமற்றதாகவும் காணப்படுகின்றன.

எது உண்மை என்ற விசாரணையின் போது முற்றுமுழுதாக புறத்தை புறக்கணித்து அகமே உண்மை என்று கூறுவது பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல எனக் குறிப்பிடப்படுகின்றது. அறக் கருத்துக்கள் புறத்தை தீர்மானிக்கின்ற அதே சமயம் புறக்கருத்துக் களும் அகத்தை தீர்மானிக்கின்றது என்பதை இவர் மறந்துவிட்டார் எனவும் குறைகூறப்படுகின்றது. அத்துடன் சட்டத்தின் அவசியத்தை இவர் முக்கியமானதாக கொள்ளவில்லை எனவும் சட்டத்தை விட அறத்திலேயே பிளேட்டோ கூடிய நம்பிக்கை கொண்டிருந்தார் எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

### பிளேட்டோவின் அரசியல் கருத்துக்கள் தொடர்பான மதிப்பீடு

பிளேட்டோவினுடைய கருத்துக்கள் விமர்சிக்கப்படுகின்ற போதும் அவர் கிரேக்கர் கால சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சி த்தமை வரவேற்கப்படுகின்றது. ஒரு நன்மையானதும் நீதியானதுமான அரசொன்றை உருவாக்க பிளேட்டோ முயற்சித்தார். கொள்கையாக்கம் பற்றிய கற்கை அபிவிருத்திக்கும் இவரது கருத்துக்கள் உதவியி ருக்கின்றது. உதாரணமாக எவ்வாறு ஒரு நல்ல அரசை ஏற்படுத்த வேண்டும் அதற்கு என்ன செய்யவேண்டும் என சிந்தித்தமை சிறந்த கொள்கையாக்கத்திற்கான வழிகாட்டியாக கொள்ளப்படுகின்றது. பிற்கால பொதுவுடைமை பற்றிய சிந்தனைகள் வருவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுத்திருக்கிறது. முழுமையாக பிற்கால பொதுவுடைமைக் கருத்துக்களோடு ஒத்துப் போகாவிட்டாலும் பொதுவுடமைச் சித்தாந்த சிந்தனை வளர்சிக்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. நல்லாட்சி பற்றிய சிந்தனைகள் வரவும் வர்க்கம் தொடர்பான ஆய்வுகளுக்கும் பிற்கால அரசியல் முறைமையினுடைய வளர்ச்சிக்கும் இவரது கருத்துக்கள் பங்களிப்பாற்றியிருக்கின்றன. பிளேட்டோ ஆட்சியாளன், போர்வீரர்கள் மற்றும் அவர்களது கடமைகள் பற்றி அதிகம் பேசியது பிராந்திய பாதுகாப்பு தொடர்பான சிந்தனைகள் வளர அதிகம் துணைபுரிந்திருக்கிறது. அதேபோன்று அரசியல் பொறுப்புடைமை, நீதி போன்ற கருத்துக்கள் அரசியல் கற்கையில் முதன்மை பெறவும் இவர் வழிகாட்டியாக விளங்கியி ருக்கின்றார். எவ்வாறாயினும் அரசியல் சிந்தனை வரலாற்றில் இருந்து பிளேட்டோவை தவிர்த்துவிட முடியாது. அத்துடன் பிளேட்டோ இல்லாமல் நவீன அரசியல் சிந்தனை வரலாற்றை கற்கவும் முடியாது. அந்தளவுக்கு நவீன அரசியல் சிந்தனைகளுக்கு இவரது கருத்துக்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. இன்றும் அரசியல் கற்கைநெறியில் பிளேட்டோவின் செல்வாக்கு குறைத்துமதிப்பிட முடியாத ஒன்றாகவே இருந்துகொண்டிருக்கின்றது.

*''அரசியல் அதிகாரமும் அரசியல் தத்துவமும் ஒன்றிணையாவிட்டால் மனித இனத்திற்கும் மற்றும் அரசுகளுக்கும் பிரச்சனைகளில் இருந்து விடுதலையே இல்லை.'' ..... ''எல்லா சூழ்நிலைகளிலும் அரசியல் அதிகாரமே உரிமைகளைப் பாதுகாக்கின்றது''*

*(பிளேட்டோ - ''குடியரசு'')*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- *பிளேட்டோ தலைசிறந்த ஒரு கிரேக்க தத்துவ ஞானி. இவர் கி.மு 427 இல் ஒரு பிரபுத்துவ செல்வந்த குடும்பத்தில் பிறந்தார். பின்னர் கி.மு 407 இல் தனது இருபதாம் வயதில் சோக்கிரடீ சின் மாணவன் ஆனார். பிற்காலத்தில்* "The Academy" *என்ற கல்விக் கழகத்தை நிறுவி கணிதம் தத்துவம் என்பவற்றை கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராக விளங்கினார். இதன்மூலம் அரிஸ்டோட்டில் என்ற சிறந்த மாணவனையும் இவர் பெற்றுக்கொண்டார்.*
- *இவரது எழுத்துக்களில் பிரதானமான நூல்களாக குடியரசு* (The Republic) *சட்டங்கள்* (The Laws) *என்பவை குறிப்பிடப்படுகின்றன. பிளேட்டோவின் மிகப் புகழ் பெற்ற நூல் ''குடியரசு''* (The Republic) *ஆகும். இந்த நூலே இவரது அரசியல் கோட்பாடுகளுக்கான அடிப்படை. இதிலேயே இவர் தனது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை முன்வைக்கிறார்.*
- *பிளேட்டோவின் பல்வேறு கருத்துக்களில் சோக்கிரடீசின் தாக்கம் காணப்படுகின்றது. குறிப்பாக அறிவு பற்றிய கருத்துக்களிலும், இலட்சிய அடிப்படையிலும், தத்துவார்த்த அணுகுமுறையிலும், அரசாங்கம் பற்றிய கருத்துக்களிலும் சோக்கிரடீசின் பாதிப்பு இவரிடம் இருப்பதைக் காணலாம்.*
- *பிளேட்டோ தனது அரசியல் கோட்பாட்டை எது உண்மை என்ற தேடலுடனேயே ஆரம்பிக்கின்றார். புறவுலகத்து நிகழ்ச்சிகள் உண் மையா அல்லது அகவுலகத்து கருத்துக்கள் உண்மையா என்பதில் இருந்தே பிளேட்டோ தனது வாதத்தினை தொடங்குகின்றார். பிளேட் டோவின் கருத்துப்படி புறவுலகத்து நிகழ்ச்சிகள் நிலையற்றவை. அகவுலகத்து கருத்துக்களே நிலையானது. எனவே அகவுலகத்து கருத்துக்களே உண்மையானது என்பது இவரது நிலைப்பாடு.*
- *எது நீதி என்பது பற்றியும் பிளேட்டோ அதிகமாக விவாதித்திருக்கிறார். ஏனெனில் நீதியான சமூகம் ஒன்றிலிருந்தே இலட்சிய அரசு தோன்ற முடியும் என பிளேட்டோ நம்பினார். எனவே இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களை நீதியான சமூகத்தில் இருந்தே தொடங்குகின்றார்.*
- *நீதியான சமூகத்தில் கலைஞர்கள், போர்வீரர்கள், ஆட்சியாளர்கள் என்ற மூன்று சமூக வகுப்புக்கள் காணப்படும் என பிளேட்டோ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார். சமூகத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு வகுப்புக் களும் தத்தமது கடமைகளை சரியாக செய்கின்ற போதே அங்கு நீதி இருக்கமுடியும் என்கின்றார். இச்சமூக நீதியே எல்லாவற்றுக்கும் அடிப்படை என்றும் இச்சமூக நீதி சிறப்பாக செயற்படும்போதுதான் இலட்சிய அரசு சிறப்பாகவும் நீதியாகவும் செயற்பட முடியும் எனவும் பிளேட்டோ குறிப்பிடுகின்றார்.

- ஆட்சியாளர்கள் ஞானத்தோடு பிறப்பதில்லை என்றும் அவர்களுக்கு ஞானத்தை ஏற்படுத்துவதற்காக கல்விப் பயிற்சியளிக்கவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். ஒருவர் ஆட்சியாளர் வகுப்பினுள் வரவேண்டுமாயின் நீண்டகால கல்விப் பயிற்சியை பிளேட்டோ வலியுறுத்துகின்றார். இலட்சிய அரசின் ஆட்சியானது இத்தகைய ஞானமுள்ள பயிற்றுவிக்கப்பட்ட ஆட்சியாளரிடம் ஒப்படைக் கப்பட வேண்டும் என்பது பிளேட்டோவின் கருத்து.

- அரசாங்க முறைகள் பற்றியும் இவர் பேசியிருக்கிறார். பிளேட்டோ ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிரானவர். அவர் ஜனநாயக ஆட்சி முறையை ஒரு சிறந்த ஆட்சி முறையாக கருதியிருக்கவில்லை. ஆயினும் இவர் தற்கால ஜனநாயக ஆட்சி முறையை மனதிற் கொண்டு இதை குறிப்பிடவில்லை. பிரபுக்கள் ஆட்சியையே சிறப்பான ஆட்சி முறையாக பிளேட்டோ குறிப்பிடுகின்றார். புகழ் விரும்பும் ஆட்சி யை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்கின்ற பிளேட்டோ ஏனைய ஆட்சி முறைகளான தன்னல ஆட்சி, கொடுங்கோல் ஆட்சி, ஜனநாயக ஆட்சி என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

- பிளேட்டோ ஜனநாயக ஆட்சியை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அதற்கு எதிராகவே செயற்பட்டார். பிளேட்டோ ஜனநாயகத்தினை ஒரு கும்பல் ஆட்சியாகவே கருதினார். ஜனநாயக ஆட்சியில் சமூகத்திற்கும் ஆட்சியாளனுக்கும் இடையில் ஒழுங்குமுறையோ ஒருமைப்பாடோ காணப்படாத போது அது அராஜக ஆட்சியாக மாற்றமுறக் கூடிய ஆபத்து உள்ளதாக கூறி அதை எதிர்த்தார்.

- ஜனநாயகத்தை எதிர்ப்பதன் காரணமாக பிளேட்டோ ஒரு பாசிசவாதியா என்ற கேள்வியை பல அரசியல் அறிஞர்கள் முன் வைக்கின்றார்கள். சிலர் வரலாற்றின் முதல் பாசிசவாதியாக பிளாட்டோவை அடையாளம் காண்கின்றனர். வேறுசில அறிஞர்கள் பிளேட்டோவின் கருத்துகள் பாசிச கருத்துக்களில் இருந்து வேறுபட்டவை என்று வாதிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *நீதி பற்றி இவர் கூறிய கருத்துக்கள் கண்டிக்கப்படுகின்றது. தனிமனித உரிமைகளை இவர் மறுக்கிறார் எனவும் விமர்சிக்கப்படுகின்றது. பொதுவுடமைவாதிகளாலும் இவர் குறைகூறப்படுகின்றார். இவரது இலட்சிய அரசு பற்றிய கருத்துக்களும் கண்டிக்கப்படுகின்றன.*
- *பிளேட்டோவினுடைய கருத்துக்கள் விமர்சிக்கப்படுகின்ற போதும் அவர் கிரேக்கர் கால சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற் சித்தமை வரவேற்கப்படுகின்றது. ஒரு நன்மையானதும் நீதியானது மான அரசொன்றை உருவாக்க பிளேட்டோ முயற்சித்தார். நவீன அரசியல் சிந்தனைகளுக்கு இவரது கருத்துக்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. இன்றும் அரசியல் கற்கைநெறியில் பிளேட் டோவின் செல்வாக்கு குறைத்துமதிப்பிட முடியாத ஒன்றாகவே இருந்துகொண்டிருக்கின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 8*

# அரிஸ்டோடிலின் அரசியல் கருத்துக்கள்
# Aristotle (384 B.C - 322 B.C)

## அறிமுகம்

அறிவியல் அடிப்படையை அரசியல் ஆய்வில் பயன்படுத்தியவர்களுள் முக்கியமானவர் அரிஸ்டோடில் ஆவார். பிளேட்டோவின் கருத்துக் களைக் காட்டிலும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் மிகவும் யதார்த்த மானதாக காணப்பட்டன. பிளேட்டோ இலட்சிய அரசு பற்றி சிந்தித்த போது அரிஸ்டோட்டில் நடைமுறைக்கு சாத்தியமான சிறந்த அரசாங்க முறை பற்றி சிந்தித்தார். இதற்கு பிளேட்டோவைக் காட்டிலும் சிறப்பாக அமைந்திருந்த அரிஸ்டோட்டிலின் சமூகப் பின்னணியும் ஒரு காரணமாக குறிப்பிடப்படுகின்றது. மசொடோனிய (Macedonia) எல்லைக்கருகில் அமைந்துள்ள ஸ்டாகிரா (Stagira) என்ற நகரத்தில் கி.மு 384ல் அரிஸ்டோட்டில் பிறந்தார். அவரது தந்தையார் மசொடோனிய மன்னரான இரண்டாம் அமின்ட்ராஸ் (King Amyntas) என்பவருக்கு அரசவை மருத்துவராக பணிபுரிந்தார். அதேபோன்று பிற்காலத்தில் அரிஸ்டோட்டில் மசொடோனிய இளவரசனான மகா அலெக்ஸ்சாண்டருக்கு ஆசிரியராக இருந்து கல்வி போதித்தார். இதனால் பிற்காலத்தில் அரிஸ்டோட்டிலின் கருத்துக்களை அடிப்ப டையாகக் கொண்டே மகா அலெக்ஸ்சாண்டரின் ஆட்சி முறை இடம்பெற்றிருந்தது. பின்னர் பிளேட்டோவின் கல்விக்கழகத்தில் (Academy) மாணவனாக சேர்ந்து கொண்ட அரிஸ்டோட்டில் பிளேட் டோவின் தலைசிறந்த மாணவனாகவும் திகழ்ந்தார். ஆயினும் சில காலத்தின் பின்னர் சிறிது சிறிதாக பிளேட்டோவிடமிருந்து விலகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய அரிஸ்டோட்டில் பிளேட்டோவின் இறப்புக்கு பின்னர் அவரது கல்விக் கழகத்திலிருந்து முற்றாக வெளியேறினார். இவ்வாறு வெளியேறியமைக்கான பிரதான காரணம் பிளேட்டோவின் அர்ப்பணிப்புடன் கூடிய ஒழுங்கு விதிகளையும் மற்றும் 'அரசியல் சிந்தனையாளர்கள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள்' என்ற கருத்தையும் மறுத்தமையே ஆகும். இதனாலேயே அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் பிளேட்டோவின் கருத்துக்களை அதிகமாக விமர்சிப்பதாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும் அரிஸ்டோட்டில் பிளேட்டோவின் கல்விக் கழகத்தை விட்டு வெளியேறிய பின்னர் பல்வேறு இடங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் அத்துடன் மகா அலெக்ஸ்சாண்டருக்கு ஆசிரியராக இருந்து கல்வி போதித்தார். பின்னர் கி.மு 335ல் கிரேக்கத்தின் அதென்ஸ்க்கு திரும்பி தனது சொந்த கல்விக் கூடமான லைசியத்தை (Lyceum) நிறுவினார். அரசியல் காரணங்களுக்காக அவர் வெளியேற்றப்படும் வரை கல்விக் கூடத்தினை நடாத்தினார். அதன்பின்னர் வெளியேற்றப்பட்டு சிறிது காலத்தில் கி.மு 322இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### அரசியல் தத்துவ கொள்கைகளும் நோக்கங்களும்

அரசியல் தத்துவ கொள்கைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் ஒருவருடைய வாழ்க்கை தியாகம் செய்யப்படவேண்டும் என்ற சோக்ரடீசின் கருத்தை அரிஸ்டோட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை. அரிஸ் டோட்டில் அரசியல் தத்துவ கொள்கைகள் மக்களின் வாழ்விற்கான அவர்களின் செயற்பாட்டிற்கான வழிகாட்டியாக இருக்கவேண்டுமே யொழிய அதற்கு மேல் அவர்களது வாழ்வை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது எனக் குறிப்பிடுகின்றார். இதனாலேயே அரிஸ்டோட்டிலின் அரசியற் கருத்துக்கள் பிளேட்டோவைக் காட்டிலும் அதிகமாக நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது. அரிஸ்டோட்டில் அரசியலில் சமத்துவமின்மைக்கு எதிராக குரல் கொடுத்திருந்த போதும் பிளேட்டோவைப் போல பூரணமான சமத்துவத்தை எதிர் பார்க்காமல் சமத்துவமின்மை நிலைமைகளில் இருந்து படிப்படியாக சமத்துவத்தை அடைவதினையே இலக்காக கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிஸ்டோட்டல் (Aristotle (384-322 BC)**



அரிஸ்டோட்டல் கிரேக்க சிந்தனையாளர்களுள் முதன்மையானவராக காணப்படுகின்றார். இவர் பிளேட்டோவின் மாணவர் ஆவார். அலெக்ஸ் சாண்டரின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அவரது தந்தையார் மசொடோனிய மன்னரான இரண்டாம் அமின்ட்ராஸ் (King Amyntas) என்பவருக்கு அரசவை மருத்துவராக பணிபுரிந்தார். அதேன்சில் தனது சொந்த கல்விக் கூடத்தை நிறுவி மாணவர்களுக்கு கல்விப் பயிற்சி வழங் கியவர். அறிவியல் அடிப்படையை அரசியல் ஆய்வில் பயன்படுத்தியவர்களுள் முக்கியமானவர் அரிஸ்டோடில் ஆவார். இவரது முக்கியமான நூல் ''அரசியல்'' (Politics) ஆகும்.

### இலட்சிய அடிப்படையும் யதார்த்தமும்

பிளேட்டோ குறிப்பிடுகின்ற இலட்சிய அடிப்படையை அரிஸ் டோட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்து கொண்டிருக்கின்ற யதார்த்த நடைமுறைகளில் இருந்து இருக்கப்போகின்ற எதிர்கால இலட்சிய நிலையை முற்றாக பிரிக்கமுடியும் என்று அரிஸ்டோட்டில் நம்பியிருக்கவில்லை. இரண்டு நிலைகளுக்குமிடையே தொடர்புகள் காணப்பட வேண்டும் என்று அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார். இருக் கின்ற நடைமுறை நிலையிலிருந்தே இருக்கவேண்டிய இலட்சிய நிலையை அடைய முடியும் எனவும் அரிஸ்டோட்டில் கருதினார். ஆனால் பிளேட்டோ இருக்கின்ற நடைமுறை நிலையினை முற்றாக புறக்கணித்து இருக்கவேண்டிய இலட்சிய நிலையை அடைய முயன்றார்.

### மாற்றமும் அபிவிருத்தியும்

மாற்றம் மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களை பிளேட்டோ ஏற்றுக்கொள்ளவில்லை. இலட்சிய மற்றும் பூரண நிலையைப் பற்றி சிந்தித்த பிளேட்டோ இலட்சிய மற்றும் பூரண நிலையில் மாற்றம் ஒன்று ஏற்படமுடியும் என்று நம்பவில்லை. அவர் கருதிய இலட்சிய நிலையே முடிந்த முடிவானது என்றும் சிறந்தது என்றும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பினார். ஆனால் அரிஸ்டோட்டில் இதற்கு மாறாக மாற்றம் மற்றும் அபிவிருத்தி என்பன சாத்தியமானது என்றும் யதார்த்தமானது என்றும் குறிப்பிட்டார். அவரது கருத்துப்படி எதுவுமே நிலையானது இல்லை எல்லாமே மாறிக்கொண்டிருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார். எல்லா விடயங்களிலும் இரண்டு நிலைகள் காணப்படுகின்றன என குறிப்பிடுகின்ற அரிஸ்டோட்டில் அவற்றை ஏற்கனவே இருந்த நிலை (Potentiality) தற்போது உள்ள நிலை (Actuality) என்று இரண்டாக வகைப்படுத்துகின்றார்.[1] உதாரணமாக ஒரு மரம் ஏற்கனவே இருந்த நிலை எனக் கொள்ளப்பட்டால் சில சூழ்நிலை மாற்றங்களுக்கு பின்னர் அந்த மரத்திலிருந்து இன்னொரு சிறிய மரம் உருவாவது தற்போது உள்ள நிலை என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். எனவே எல்லா விடயங்களும் ஏதோ ஒரு வகையில் மாற்றத் துக்கு உட்பட்டுகொண்டே இருக்கின்றன என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். இதனால் மாற்றங்களுக்கு உட்படும் அரசியல் விடயங்களை நடைமுறைக்கு ஏற்ப விளக்கியதால் அரசியலை விஞ்ஞான தன்மையுடையதாக மாற்றிய பெருமை இவருக்குரியது. இவருடைய 'அரசியல்' என்ற நூலில் அபிவிருத்தி மற்றும் மாற்றம் தொடர்பாக இவர் தெரிவித்த கருத்துக்கள் அரசியல் கல்வியை விஞ்ஞான தன்மையுடையதாக மாற்ற பெரிதும் உதவின.

### அரசியல் ஒழுக்கம்

அரிஸ்டோட்டிலைப் பொறுத்தவரை ஒழுக்கத்தையும் அரசியலையும் பிரித்து பார்க்க முடியாது என்று குறிப்பிடுகின்றார். ஒருவருடைய வாழ்க்கையின் இறுதி நோக்கம் ஒழுக்கமாகும் என்றும் இதனால் அரசியற் கற்கை நெறி ஒழுக்கம் சார்ந்த பிரச்சனைகளைப் பற்றிப் பேசுகின்றது என்றும் குறிப்பிட்டு இரண்டையும் பிரிக்க முடியாது என்று குறிப்பிடுகின்றார்.[2] அரிஸ்டோட்டிலைப் பொறுத்தவரை ஒழுக்கத்தினை அரசியலின் ஒரு பகுதியாகவே அவர் காண்கின்றார். மக்களின் நல்வாழ்வுக்காக நல்ல அரசாங்கத்தையும் நல்லாட்சி

1. Marjorie Grene. (1963) *A Portrait of Aristotle.* University of Chicago Press. P.211
2. Thomson, J.A.K. (1955) *The Ethics of Aristotle.* Penguin Books Ltd. P.27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**''அரசியல்'' (POLITICS)**




*அரிஸ்டோட்டலினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தத்துவங்கள் பற்றிய தொகுப்பே ''அரசியல்'' நூல் ஆகும். இது கி.பி 4ம் நூற்றாண்டு கிரேக்கர் கால அரசியல் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட தாகும். அரிஸ்டோட்டல் அரசியல் ஒழுக்கத்தை இந்நூலில் வலியுறுத்துகின்றார். இந்நூல் எட்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதியில் நகர அரசு பற்றியும் அரசியல் சமுதாயம் பற்றியும் விளக்குகின்றார். சிறந்த ஆட்சி முறை பற்றி இரண்டாவது பகுதியில் விளக்கியுள்ளார். மூன்றாம் பகுதியில் குடியுரிமையாளரின் கடமைகள் பற்றியும் நான்காவது பகுதியில் அரசாங்கங்களின் வகைப்பாடு பற்றியும் விளக்கியுள்ளார். ஐந்தாவது பகுதி அரசியலமைப்பின் வகைப்பாடு பற்றியும் அதனது மாற்றமுறும் இயல்பு பற்றியும் விளக்குகின்றது. ஆறாவது பகுதி ஜனநாயகம் பற்றியும் ஏழாவது பகுதி சிறந்த அரசு பற்றியும் எட்டாவது பகுதி சிறந்த அரசில் கல்வியின் அவசியம் பற்றியும் குறிப்பிடுகின்றது.*

யையும் ஏற்படுத்த ஒழுக்கம் அவசியமானது என்றும் ஆதலால் அது அரசியலின் ஒரு பகுதி என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

### நன்மை பற்றிய தேடல்

ஒழுக்கத்தை அரசியலில் வலியுறுத்துகின்ற அரிஸ்டோட்டில் எது நல்லது என்ற கேள்வியுடன் தனது விசார ணையைத் தொடங்குகின்றார். அவரது கருத்துப்படி மக்கள் எல்லோரினதும் நோக்கமாக எது இருக்கின்றதோ அதுவே நல்லது என்று குறிப்பிடுகின்றார். அதன்படி மக்கள் எல்லோரினதும் நோக்கமாக இருப்பது இன்பம் (Happiness) என்றும் அதுவே நல்லது என்றும் குறிப்பிடுகின்றார். இந்த விடயத்தில் அவர் பிளேட்டோவுடன் ஒத்துப்போகின்றார். ஆனால் இந்த இன்பத்தை மக்கள் எப்படி பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதைக் குறிப்பிடுவதில் இவர் பிளேட்டோவில் இருந்து வேறுபடுகின்றார். பகுத்தறிவு அடிப்படையில் காரணங்களை அறியக்கூடிய இயலுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள வர்களும் அதை நடைமுறையில் பயன்படுத்தக்கூடியவர்களுமே இன்பத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்று அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். இந்த இன்பம் பற்றி அரிஸ்டோட்டில் Virtue என்ற சொல்லின் மூலம் தனது அரசியல் நூலில் விளக்கியுள்ளார்.[3] அரிஸ்டோட்டில் குறிப்பிடுவதன்படி Virtue என்பது மக்கள் பகுத்தறிவு அடிப்படையில் திறமையாக செயற்படுதல் ஆகும்.

**அரசு பற்றிய கோட்பாடு**

அரசின் பிரதானமான பணி பகுத்தறிவு அடிப்படையில் குடியுரிமை யாளர்களை அரசின் நோக்கங்களை அடையச் செய்தலாகும் என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். அரசின் நோக்கங்களாக ஒழுக்க அடிப்படையிலான இன்பத்தையும் திருப்தியையும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து அரிஸ்டோட்டிலின் அரசு பற்றிய கோட்பாட்டை நாம் அறிந்து கொள்ளலாம். அரிஸ்டோட்டில் தனது அரசு பற்றிய கோட்பாட்டை ''அரசியல்'' நூலில் பின்வருமாறு விளக்குகின்றார்.

> ''ஒவ்வொரு அரசும் ஒரு சமூகமாக இருக்கிறது. ஒவ்வொரு சமூகங்களும் நல்ல விடயங்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. சமூகத் திலுள்ள மக்கள் எப்பொழுதும் நல்லதைப் பெற்றுக்கொள்வதற்காகவே செயற்படுகின்றார்கள். ஆனால் அரசு என்ற அரசியல் சமுதாயம் எல்லாவற்றிலும் மிக உயர்ந்ததான நல்லதை உயர்ந்த அளவில் பெற்றுக் கொள்வதையே நோக்கமாக கொண்டுள்ளது''.[4] (Aims at a good in a greater degree than any other and at the highest good)

எனவே அரிஸ்டோட்டில் குறிப்பிடும் அரசு நல்லதைப் பெற்றுக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மக்கள் இன்பத்தை பெறுவதற்கான வழி ''நல்ல அரசை உருவாக்குதலே'' என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். இதுவே அரிஸ்டோட்டிலின் அரசு பற்றிய கோட்பாட்டின் நோக்கமாகும்.

---

3. Henry.B.V. (1974) Aristotle: *A Contemporary Apprecian.* Indiana University Press. P.106.
4. Benjamin Jowett. (1953) *Aristotle's Politics.* (translation) New York: Random House. P.51.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமுதாயக் கோட்பாடு

நல்ல அரசை உருவாக்குவதை இறுதி நோக்கமாக கொண்டிருந்த அரிஸ்டோட்டில் நல்ல அரசானது சமூதாயத்தில் இருந்து தோற்றம் பெற வேண்டும் என குறிப்பிடுகின்றார். இதை அவர் தனது சமுதாயக் கோட்பாட்டின் (Theory of Community) மூலம் விளக்குகிறார். சமுதாயமானது மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது என்றும் அவையாவன குடும்பம் (Family), குலம்/கிராமம் (Village), அரசு (State) என்பனவாகும் என்றும் குடும்பத்திலிருந்தே அரசு தோற்றம் பெறுகின்றது என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். பல குடும்பங்கள் சேர்ந்து குலமாகி பல குலங்கள் சேர்ந்து அரசு தோற்றம் பெறுகின்றது என்றும் இதுவே சமுதாயத்தின் இறுதி இலக்கு என்றும் சமுதாய மக்களின் பொது நன்மைக்காக நல்ல அரசு சமுதாயத்தில் இருந்து தோற்றம் பெறுகிறது எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

### சமூகப் பிராணியான மனிதன்

பிளேட்டோ மக்களை சுயநலம் மிக்கவர்கள் என்று குறிப்பிட அரிஸ்டோட்டில் அவர்களை சமூகப் பிராணி என குறிப்பிடுகின்றார். பிளேட்டோவின் கருத்துப்படி தனிமனிதர்கள் சுயநலம் மிக்கவர்களாக இருப்பதால் அவர்கள் சமூகமாக ஒன்றுபட மாட்டார்கள் என்றும் அவர்களை பலம்மிக்க ஆட்சியாளனே கட்டுப்படுத்துவான் என்றும் குறிப்பிட்டு இலட்சிய அரசு உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் அரிஸ்டோட்டில் அரசு என்பது சமூகத்தில் இருந்து இயற்கையாக தோற்றம் பெற்ற ஒன்று எனக் குறிப்பிடுகின்றார். சமூகப் பிராணியான மனிதன் அரசியல் பிராணியாக மாறுகின்ற போது அரசு தோற்றம் பெறுகின்றது என அரிஸ்டோட்டில் குறிப்பிடு கின்றார். இதை அவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

> ''ஒரு அரசு வாழ்க்கைக்காக அன்றி நல்ல வாழ்வு வாழ்வதற்கே இருக்கின்றது. ஒரு அரசின் நோக்கம் வாழ்வு மட்டும் என்றால் அடிமைகளும் மிருகங்களும் கூட ஒரு அரசினை உருவாக்க வேண்டி யிருக்கும். ஆனால் இது சாத்தியமற்றது. ஒழுக்கமுள்ளவர்களாகவும் பகுத்தறிவுள்ளவர்களாகவும் அவர்களால் இருக்கமுடியாது. இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமான தெரிவும் சந்தோஷமான வாழ்வும் அவர்களுக்கு கிடையாது.''[5]

ஒரு மனிதனின் சமூகமயமாதல் செயற்பாட்டின் மிக உயர்ந்த பகுதியாக அரசியல் காணப்படுகின்றது. அரசியல் ரீதியாக மனிதன் சமூகமயமாகும் போதே ஒழுக்கமுள்ள குடிமகனாக மாறக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் பகுத்தறிவுள்ளவனாகவும் அவனால் இருக்கமுடியும். இதனாலேதான் அரிஸ்டோட்டில் அடிமைகளாலும் மிருகங்களாலும் ஒரு அரசை உருவாக்க முடியாது என்று குறிப்பிடுகின்றார். ஏனெனில் அவற்றால் சுதந்திரமான தெரிவை மேற்கொள்ள முடியாது என்றும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் பகுத்தறிவுள்ளவர்களாகவும் இருக்கமுடியாது என்றும் குறிப்பிட்டு ஒழுக்கமுள்ள வாழ்க்கையே நல்ல அரசையும் சந்தோஷமான வாழ்க் கையையும் ஏற்படுத்தும் என்று அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.[6]

**சுதந்திரமான தெரிவும் சந்தோஷமான வாழ்வும்**

அரிஸ்டோட்டில் குடும்பம் மற்றும் குலம் போன்றவற்றில் சுதந்திரமான தெரிவையும் சந்தோஷமான வாழ்வையும் மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலை காணப்படமாட்டாது என்றும் அரசில் மட்டுமே சுதந்திரமான தெரிவும் சந்தோஷமான வாழ்வும் இருக்க முடியும் என்றும் குறிப்பிடுகின்றார். எனவே ஒழுக்கமுள்ளவர்களாகவும் பகுத்தறிவுள்ளவர்களாகவும் இருக்கக்கூடியவர்களால் மட்டுமே சுதந்திரமான தெரிவையும் சந்தோஷமான வாழ்வையும் மேற்கொள்ள முடியும் என்றும் நல்வாழ்வை ஏற்படுத்தக்கூடிய நல்ல அரசை உருவாக்க முடியும் எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

ஆயினும் துரதிஸ்டவசமாக அடிமைகளும் ஆணாதிக்கமும் ஒரு சமூகத்தில் இயல்பானது என்று அரிஸ்டோட்டில் நம்பினார். இதனால் அடிமைகளையும் பெண்களையும் அரசியல் வாழ்வில் இருந்து ஒதுக்கி வைத்தார். அரசியல் வாழ்வு என்பது பகுத்தறிவுடன்

5. Benjamin Jowett. (1953) *Aristotle's Politics.* (translation) New York: Random House. P.142.
6. Richard Robinson. (1969) *Essays in Greek Philosophy.* Oxford: Clarendon Press. P.147.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புள்ளது என்றும் பெண்களும் அடிமைகளும் முழுமையாக பகுத்தறிவு இல்லாதவர்கள் என்றும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் என்றும் குறிப்பிட்டு இவர்கள் அரசியல் வாழ்வுக்கு தகுதியற்றவர்கள் என இவர் குறிப்பிட்டார். எனினும் இந்த விடயத்தை தவிர்த்துவிட்டு பார்த்தால் அரசியல் நல்வாழ்வுக்கான முக்கியமான பல விடயங்களை அரிஸ்டோட்டில் குறிப்பிட்டுள்ளார். அரசாங்க முறைகளை வகைப் படுத்தி எந்த அரசாங்க முறையில் நல்வாழ்வுக்கான அடிப்படைகள் காணப்படுகின்றன என்பதை விளக்கியுள்ளார். அரிஸ்டோட்டிலைப் பொறுத்தளவில் அரசியலமைப்பு என்பது அரசின் ஆட்சியில் பங்குபெறக்கூடியவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் சட்ட ரீதியான ஆவணம் ஆகும். இதனால் ஒரு அரசினுடைய அரசியல மைப்பின் அடிப்படையிலேயே அரசாங்க முறைகள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

**அரசாங்க முறைகள் தொடர்பான வகைப்பாடு**

அரிஸ்டோட்டிலின் அரசாங்க முறைகள் தொடர்பான வகைப்பாட்டை நோக்கினால் இது எண்ணிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டி ருக்கவில்லை. எண்ணிக்கையோடு ஆட்சியின் தரத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஒருவருடைய ஆட்சியில் இரு வேறுபட்ட ஆட்சி முறைகளும் தரமும் காணப்படலாம். ஒருவருடைய ஆட்சி சுய நலனை நோக்காக கொண்டதாகவும் இருக்கலாம். அதே போன்று பொது நலனை நோக்காக கொண்டதாகவும் இருக்கலாம். இதனால்தான் ஆட்சி முறைகள் தொடர்பான வகைப்பாடு ஆட்சி யாளர்களின் எண்ணிக்கை மற்றும் ஆட்சி முறையின் தரம் ஆகிய இரண்டு வகையான பரிசீலனைகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

இந்த பரிசீலனைகளின் அடிப்படையில் ஆறு வகையான ஆட்சி முறைகளைக் கொண்ட அரசியலமைப்பின் வகைகளைப் பற்றி விளக்குகிறார். இவற்றுள் மூன்று வகையானவை நன்மையான ஆட்சி முறைகளாகவும் மற்றைய மூன்று வகையானவை தீமையான ஆட்சி முறைகளாகவும் காணப்படுகின்றன. நன்மையான ஆட்சி முறைகளாக மன்னராட்சி (Monarchy (Rule by One), பிரபுக்கள் ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Aristocracy (Rule by the few), நன்மக்களாட்சி (Polity (Rule by the Many) போன்ற மூன்று வகையான ஆட்சி முறைகள் குறிப்பிடப்படுகின்றன. தீமையான ஆட்சி முறைகளாக கொடுங்கோல் ஆட்சி (Tyranny (Rule by One), தன்னல ஆட்சி (Oligarchy (rule by the few), ஜனநாயக ஆட்சி (Democracy ( Rule by the Many) என்பன போன்ற ஏனைய மூன்று வகையான ஆட்சி முறைகள் குறிப்பிடப்படுகின்றன. இந்த வகைப்படுத்தலின் அடிப்படையில் மிகச்சிறந்த ஆட்சி முறையாக மன்னராட்சி (Monarchy (Rule by One) யையும் மிக தீமையான ஆட்சி முறையாக கொடுங்கோல் ஆட்சி (Tyranny (Rule by One) யையும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். இங்கு பிளேட்டோ 'குடியரசு' என்ற நூலில் குறிப்பிட்ட ஆட்சி முறைகள் பற்றிய வகைப்பாட்டை அரிஸ்டோட்டில் அப்படியே ஏற்றுக்கொள்கின்றார். இலட்சிய அரசு தொடர்பாக பிளேட்டோ குறிப்பிட்ட ஆட்சி முறை தொடர்பான அரசியலமைப்பு வகைப்பாடுகளை அரிஸ்டோட்டிலின் வகைப்பாடு கள் பெரிதும் ஒத்திருப்பதை காணலாம்.

அரிஸ்டோட்டிலும் பிளேட்டோவும் அவர்கள் முன்வைத்த கோட்பாடுகள் தொடர்பில் பெரிதும் வேறுபட்டிருந்த போதும் ஒரு அரசுக்கு எத்தகைய ஆட்சி முறை அவசியம் என்பதைக் கூறுவதில் குறிப்பாக மிகவும் சிறந்த மற்றும் தீமையான அரசியலமைப்புக்களை வகைப்படுத்துவதில் பெருமளவுக்கு ஒன்றுபட்டிருப்பதனைக் காணலாம். இருவரும் பொது நன்மையை நோக்கமாகக் கொண்ட நீதியின் அடிப்படையிலான ஆட்சிமுறையொன்றினை ஏற்படுத்த முனைந்தமை இதற்கான காரணமாக குறிப்பிடப்படுகின்றது. இருவருமே தனியார் நலனை அடைய முயற்சிக்கின்ற ஆட்சி முறைகளை நிராகரித்திருந்தார்கள்.

### அரசியலமைப்புக்கள் பற்றிய ஆய்வு

அரிஸ்டோட்டில் ஆட்சி முறைகள் பற்றி குறிப்பிடும்போது நடைமுறைச் சாத்தியம் என்ற விடயத்திற்கு முன்னுரிமை வழங்கினார். எந்த ஆட்சி முறை சிறந்தது மற்றும் தீமையானது என்பதனை விட அது நடைமுறைச் சாத்தியமானதா என்பதே முக்கியமானது என குறிப்பிட்டார். எனவேதான் நடைமுறைச் சாத்தியமான ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளைக் கொண்ட அரசியலமைப்புக்கள் பற்றி அரிஸ்டோட்டில் அதிகம் ஆய்வு செய்தார்.[7] ஆனால் பிளேட்டோ இலட்சியமான நல்ல ஆட்சி முறையை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றார். இதனால் சாத்தியமான ஏனைய ஆட்சி முறைகள் பற்றி பிளேட்டோ அதிகம் கருத்தில் கொள்ளவில்லை.

அரிஸ்டோட்டில் தனது 'அரசியல்' நூலில் மிகவும் சிறந்த சாத்தியமான ஆட்சி முறையைக் கொண்ட அரசியலமைப்பு பற்றியே அதிகம் விவாதித்திருந்தார். பிளேட்டோ சிறந்த ஆட்சி முறையைக் கொண்ட அரசியலமைப்பை பற்றி குறிப்பிட்டாரே தவிர அதன் நடைமுறைச் சாத்தியத் தன்மை பற்றி எதனையும் குறிப்பிடவில்லை. எனவே அரிஸ்டோட்டில் பிளேட்டோவைப் போல மன்னராட்சியை (monarchy (rule by one)) சிறந்த ஆட்சி முறையாக ஏற்றுக்கொண்டிருந்த போதும் ஏனைய ஆட்சி முறைகளை நிராகரித்திருக்கவில்லை. சிலசமயங்களில் கால மாற்றத்திற்கேற்ப ஏனைய ஆட்சி முறைகளும் நல்ல ஆட்சிமுறையாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படலாம் என அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார். இவரது கருத்து சிறந்த ஆட்சி முறையோடு கூடிய அரசியலமைப்பானது நீதியும் நடைமுறைச் சாத்தியமும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் பிளேட்டோ சிறந்த ஆட்சி முறையை மட்டும் இலட்சிய ஆட்சி முறையாக ஏற்றுக் கொண்டதனால் ஏனைய ஆட்சி முறைகளை நிராகரிக்கின்றார்.

கலப்பு அரசியலமைப்பின் முக்கியத்துவத்தையும் அரிஸ் டோட்டில் வலியுறுத்துகின்றார்.[8] சிறந்த ஆட்சிமுறை என்பது பெரும்பான்மையின் அடிப்படையில் இடம்பெறுகின்ற ஜனநாயக ஆட்சிமுறை மட்டுமென்று குறிப்பிட முடியாது. அது வர்க்கங்களை, பொருளாதார மற்றும் சமூக நலன்களை சமப்படுத்துவதாக அமைய வேண்டும் எனக் கூறி கலப்பு அரசியலமைப்பின் முக்கியத்து வத்தை அரிஸ்டாட்டில் எடுத்துக்காட்டுகிறார். அதுவே நீதியையும்

7. Werner Jaeger. (1934) Aristotle: *Fundamentals of the History of His Development.* Oxford: Clarendon Press. P.292.
8. Kraut, R. (2003) Aristotle: *Political Philosophy.* Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தையும் கொண்ட நல்ல ஆட்சி முறையாக அமையும் எனவும் குறிப்பிடுகின்றார்.

### அரசியலின் பொருளாதார அடிப்படை

அரசியலின் பொருளாதார அடிப்படை பற்றியும் அரிஸ்டோட்டில் கவனம் செலுத்தியுள்ளார். இதன்மூலம் கால்மாக்சின் சிந்தனைகளுக்கான முன்னோடியாகவும் இவர் விளங்கியிருக்கின்றார். பல்வேறு அரசுகளில் காணப்படும் பொருளாதார முறைகள் பற்றி குறிப்பிட்டுள்ள அரிஸ்டோட்டில் சமூகங்களில் காணப்படும் அடிப்படை முரண்பாடுகளுக்கு பொருளாதார சமத்துவமின்மையே காரணம் என்பதை குறிப்பிடுகின்றார்.[9] ஒரு அரசியலமைப்பின் இயல்பைத் தீர்மானிப்பதில் வளப்பங்கீடு பிரதான இடத்தை வகிக்கின்றது. இதனடிப்படையில் செல்வந்தர்களின் சிறு குழு ஆட்சி முறை என்பது (தன்னல ஆட்சி oligarchy) செல்வந்தர்களால் அவர்களது குழு நலனை பேணுவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சி முறையெனவும் ஜனநாயகம் என்பது எல்லா மக்களிடையேயும் பொருளாதார மற்றும் அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான ஆட்சி முறை என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். பொதுவாக பொதுநலன் மற்றும் ஆட்சிமுறை என்று குறிப்பிடுகின்ற போது மக்கள் இவற்றின் மூலம் தமது வர்க்க நலனையே அடைந்துகொள்ள முயற்சிக்கின்றார்கள் என்பது அரிஸ்டோட்டிலின் கருத்து.[10]

### சொத்துடமை

சொத்துடமை பற்றி குறிப்பிடுகின்ற போது பிளேட்டோவில் இருந்து அரிஸ்டோட்டில் வேறுபடுகின்றார். அரிஸ்டோட்டில் சொத்துடமை என்பது இயல்பானது என்று ஏற்றுக்கொள்கின்றார். சரியான முறையில் பயன்படுத்தப்படுமாக இருந்தால் அது மக்களின் ஒழுக்கத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்தும் கருவியாக இருக்கும் எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். ஆனால் ஆட்சியாளர்களுக்கு

9. Miller, F.D. (1995) Nature, *Justice and Rights in Aristotle's Politics.* Oxford Clarendon Press.
10. Rose, W.D. (1941) *The Basic Works of Aristotle* (Translation), New York: Random House.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவுடைமை கொள்கையை வலியுறுத்துவதன் மூலம் சொத்து டமையை பிளேட்டோ மறுக்கின்றார். சொத்துடமை இல்லாத ஒரு சமூகத்தில் வர்க்க முரண்பாடு என்பது காணப்பட மாட்டாது என்பது இவரது கருத்தாகும். எனினும் மக்கள் அவர்களுடைய சொந்த பொருளாதார முன்னேற்றத்தை அடைவதினை நோக்கமாக கொண்டு செயற்படுவதனால் வர்க்க முரண்பாடு என்பது ஒரு சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

### மத்தியதர வர்க்கத்தின் அவசியம்

அரசியலின் பிரதான நோக்கம் நன்மையை அடைந்து கொள்கின்ற நல்ல அரசை ஏற்படுத்துவதே எனவும் அரசியல் தலைமைத்துவத் தின் முக்கியமான பணி மக்களை தீமையில் இருந்து மீட்டெடுத்து நல்லதை நோக்கி வழிப்படுத்துவதே எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். மனிதர்கள் நல்லது மற்றும் தீமையின் கலவையாக இருக்கின்றார்கள் அதேபோன்று சொத்துடமையும் நல்லது மற்றும் தீமையின் கலவையாக இருக்கின்றது. எனவே வர்க்க வேறுபாட்டை இல்லாமல் செய்வதை விட அவற்றை சமப்படுத்துவதே நல்ல அரசினை அமைப்பதற்கான சிறந்த வழியாக இருக்கும் என அரிஸ்டோட்டில் கருதினார். இதன்மூலம் முதன் முதலில் மத்தியதர வர்க்கத்தின் அவசியத்தை அரிஸ்டோட்டில் வலியுறுத்தினார்.[11]

### சட்டமும் சட்டத்தின் ஆட்சியும்

சட்டத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் அரிஸ்டோட்டில் முக்கியத்துவம் வழங்கியுள்ளார். அதுவே நீதியையும் நல்லாட்சியையும் ஏற்படுத்து வதற்கான சிறந்த வழி என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். இதை அரிஸ்டோட்டில் 'அரசியல்' நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "மனிதர்கள் மிருகங்களைப் போல விருப்பு வெறுப்புக்கு உட்பட் டவர்கள். மனிதர்களை மிருகங்களிலிருந்து வேறுபடுத்துகின்ற ஒரே ஒரு காரணி அவர்களுக்கு இருக்கின்ற விருப்பு வெறுப்புகளை

11. Baker, E. (1958) *Aristotle's Politics* (translated), London: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்துகின்ற ஆற்றலாகும். மனிதனின் பகுத்தறிவு ஆற்றல் இதற்கு பெரிதும் துணைபுரிகின்றது. ஆயினும் சட்டம் அவனை கடவுள் நிலைக்கே கொண்டு செல்கின்றது''[12]

இவ்வாறு அரிஸ்டோட்டில் நீதியை நிலைநாட்டுவதற்கான முக்கிய கருவியாக சட்டத்தையும் சட்ட ஆட்சியையும் குறிப்பிடுகின்றார். ஆனால் பிளேட்டோ நீதியையும் பகுத்தறிவையும் ஏற்றுக்கொண்ட போதும் தனது குடியரசு நூலில் சட்டத்தை நிராகரிக்கின்றார். ஞான முள்ள ஆட்சியாளனின் சூழ்நிலைகேற்ப முடிவெடுக்கும் ஆற்றலை இது தடுக்கின்றது என பிளேட்டோ குறிப்பிட்டார். பிளேட்டோவின் கருத்துப்படி சட்டம் என்பது பூரணமற்றது மற்றும் அது பொதுவான விடயங்களையே கவனத்திற் கொள்கின்றது என குறிப்பிடுகின்றார். ஆயினும் சிறந்த சாத்தியனமான தெரிவுக்கும் யதார்த்தமான ஆட்சி முறைக்கும் சட்டம் மிகவும் இன்றியமையாதது என அரிஸ்டோட்டில் வாதிடுகின்றார். எவ்வாறாயினும் பிளேட்டோவின் இறுதிக் காலங் களில் அவர் சட்டத்தின் அவசியம் பற்றி குறிப்பிட்டு அதனை ஏற்றுக்கொண்டிருந்தார்.

### அரசியல் நீதியும் சமத்துவமும்

அரசியல் நீதி பற்றி அரிஸ்டோட்டில் குறிப்பிடும் போது சட்டத்தின் ஆட்சியுடன் தொடர்புபடுத்தி அதற்கு விளக்கமளிக்கின்றார். சட்டத் தின் அடிப்படையில் ஆட்சி இடம்பெறுகின்ற போதுதான் அங்கு நீதி இருக்கும் என்றும் இவ்வாறான நீதியின் அடிப்படையிலேதான் சமத்துவம் நிலவ முடியும் என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். அதாவது எல்லோருக்கும் சட்டத்தின் அடிப்படையில் சம சந்தர்ப்பமான வாய்ப்பு வழங்கப்படுகின்ற போதுதான் அங்கு சமத்துவமும் நீதியும் நிலவ முடியும் என்றும் இதற்கு சட்டவாட்சி அவசியம் என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

சட்டவாட்சி தத்துவத்தின்படி ஒழுங்கமைக்கப்பட்ட அரசில் சட்டத்தின் படியான சமத்துவம் காணப்படும். சட்டத்தின் முன் யாவரும் சமமானவர்களாக இருப்பர். எல்லோருக்கும் சமமான சட்டம்

12. Earnest Barker. (1959) The Political Thought of Plato and Aristotle. NewYork: Dover Publications. P.163.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிக்கப்படும். ஆட்சியாளர்கள் யார் மற்றும் அவர்கள் எவ்வாறு ஆட்சி புரிவர் என்பது சட்டத்தினாலேயே தீர்மானிக்கப்படும். அதிகார துஸ்பிரயோகம் இடம்பெறுதல் சட்டத்தினால் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும். இதனால் ஆட்சியாளன் தமது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப செயற்படுதல் காணப்படமாட்டாது என அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார். இதன்படி மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளின் முக்கிய தொடக்கமாக அரிஸ்டோட்டில் கருதப்படுகின்றார். அரசியல் பங்குபற்றுதல், சட்டவாட்சி, கலப்பு அரசியலமைப்பு என்பன நவீன அரசியல் சிந்தனைகளின் முக்கிய விடயங்களாக இன்றும் குறிப்பிடப்படுகின்றன.

**பிளேட்டோவின் கருத்துக்கள் மீதான அரிஸ்டோட்டிலின் விமர்சனம்**

அரிஸ்டோட்டிலும் பிளேட்டோவும் கிரேக்கர் காலத்தை சேர்ந்தவர்க ளாக இருந்தபோதும் பிளேட்டோவின் மாணவனாக அரிஸ்டோட்டில் விளங்கியபோதும் இருவருடைய கருத்துக்களிலும் ஒற்றுமைகள் காணப்பட்ட அதேவேளை வேற்றுமைகளும் காணப்பட்டன. இதனால் பிளேட்டோவின் கருத்துக்கள் தொடர்பாக அரிஸ்டோட்டில் பல்வேறு விடயங்களில் விமர்சனத்தை முன்வைத்திருந்தார். இலட்சிய அரசு, சட்டங்கள், கம்யூனிச சிந்தனை, கல்வி, தத்துவ அரசன் என்பவை தொடர்பாக பிளேட்டோ தெரிவித்த கருத்துக்களை அரிஸ்டோட்டில் கடுமையாக விமர்சித்திருந்தார்.[13]

அரிஸ்டோட்டில் அரசு பற்றிய கோட்பாட்டை முன்வைக்கின்ற போது பிளேட்டோவின் கருத்துக்களில் இருந்து மாறுபட்டு புதிய விளக்கங்களை முன்வைக்கின்றார். அரிஸ்டோட்டில் பிளேட்டோவின் அரசு பற்றிய கோட்பாடு தொடர்பாக முன்வைக்கின்ற பிரதானமான விமர்சனம் யாதெனில் பிளேட்டோவின் இலட்சிய குடியரசானது மிக அதிகமான ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றது என்பதாகும். ஆனால் அரிஸ்டோட்டில் அரசின் யதார்த்தமான இயல்பானது பன்மைத்துவமே அன்றி ஒருமைப்பாடு அல்ல என்று வலியுறுத்து கின்றார். பிளேட்டோ அரசினை குடும்பத்திற்கு இணையானதாக

13. Eduard Zeller. (2009) *Outlines of the History of Greek Philosophy*. BiblioLife. P.158.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்க முயன்றார். ஆனால் அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி அரசு எப்பொழுதும் முழுவதுமாக குடும்பத்திற்கு இணையானதாக காணப்படமாட்டாது. குடும்பம் அதிகாரத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒருமைப்பாடுடையது என்றும் ஆனால் அரசில் மக்களுடைய பங்குபற்றுதல் காணப்படும் என்றும் குறிப்பிட்டு அரசு குடும்பத்திற்கு இணையானதாக காணப்படமாட்டாது என அரிஸ்டோட்டில் விளக்குகின்றார். இதனாலேயே தனிமனிதவாதத்திற்கு எதிரான பிளேட்டோவின் கம்யூனிச அடிப்படையை அரிஸ்டோட்டில் நிராகரித்தார்.

தனியார் மற்றும் பொது செயற்பாடுகளுக்கு இடையிலான தெளிவான வேறுபாட்டை பிளேட்டோ விளக்க தவறிவிட்டார் எனவும் அரிஸ்டோட்டில் விமர்சிக்கின்றார். பிளேட்டோவின் இலட்சிய அரசு பொதுச் சொத்துக்களுக்காக தனிமனிதவாதத்தை நிராகரிக்கின்றது. ஆட்சியாளர்களுக்கான பொதுவுடைமை அமைப்பு தனியார் சொத்துடைமையை மறுக்கின்றது. இதன்மூலம் மக்களுடைய வாழ்க்கை அமைப்பையே பிளேட்டோ அழித்து விட்டார் என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். பன்மைத்துவத்தை மறுத்து ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதன் மூலம் ஒருவிதமான சர்வாதிகார அடிப்படையை பிளேட்டோ முன்வைக்கிறார் எனவும் அரிஸ்டோட்டில் விமர்சிக்கின்றார்.

**அரிஸ்டோட்டிலின் அரசியல் கருத்துக்கள் தொடர்பான மதிப்பீடு**

பிளேட்டோவின் கருத்துக்களே அரிஸ்டோட்டிலின் கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன. பிளேட்டோ அரிஸ்டோட்டிலின் ஆசிரியராக இருந்தும் இலட்சிய கருத்துக்களின் மூலம் யதார்த்தத் திற்கான அடிப்படையை வழங்கியும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் வர உதவியிருக்கின்றார். பிளேட்டோவின் கருத்துக்களைவிட அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் பெருமளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்ற அடிப்படையில் வரவேற்கப்படுகின்றது. ஆயினும் கோட்பாட்டு அடிப்படையில் அரிஸ்டோட்டிலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் எந்தளவுக்கு பெறுமதியானவை என்று நோக்குகின்ற போது பிளேட்டோவின் கோட்பாட்டு அடிப்படை அளவுக்கு இவரது கருத்துக்கள் அமையவில்லை எனவும் குறை கூறப்படுகிறது.

அரிஸ்டோட்டில் யதார்த்த அடிப்படையில் கருத்துக்களை முன் வைத்தவர் என்ற அடிப்படையில் வரவேற்கப்பட்டாலும் பெரு மளவுக்கு அவர் மரபு ரீதியான கருத்துக்களிலேயே தங்கியிருந்தார் எனவும் விமர்சிக்கப்படுகின்றார். நல்ல அரசை உருவாக்குதல், நன்மை மற்றும் தீமை பற்றிய வகைப்பாடு, ஆண் மேலாதிக்கம் மற்றும் அடிமைகளின் இருப்பு என்பன இயல்பானது என குறிப் பிட்டமை போன்ற விடயங்களின் மூலம் அரிஸ்டோட்டில் உண்மை யில் யதார்த்தத்தினை பிரதிபலித்திருக்கின்றாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. எவ்வாறாயினும் அரிஸ்டோட்டில் மற்றும் பிளேட்டோ இருவரின் கருத்துக்களுமே பிற்கால அரசியல் கோட் பாடுகளின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்திருக்கிறது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

*''நாம் பார்க்கும் உலகம் வேறு நம்மால் அறியப்படும் உலகம் வேறு''* ..... *''அரசு என்ற அரசியல் சமுதாயம் எல்லாவற்றிலும் மிக உயர்ந்ததான நன்மையானதை உயர்ந்த அளவில் பெற்றுக் கொள்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.''*

*(அரிஸ்டோட்டில் - ''அரசியல்'')*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- அறிவியல் அடிப்படையை அரசியல் ஆய்வில் பயன்படுத்தியவர் களுள் முக்கியமானவர் அரிஸ்டோடில் ஆவார். பிளேட்டோவின் கருத்துக்களைக் காட்டிலும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் மிகவும் யதார்த்தமானதாக காணப்பட்டன. பிளேட்டோ இலட்சிய அரசு பற்றி சிந்தித்த போது அரிஸ்டோட்டில் நடைமுறைக்கு சாத்தியமான சிறந்த அரசாங்க முறை பற்றி சிந்தித்தார்.
- அரசியல் தத்துவ கொள்கைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் ஒருவருடைய வாழ்க்கை தியாகம் செய்யப்படவேண்டும் என்ற சோக்ரடீசின் கருத்தை அரிஸ்டோட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை. அரிஸ்டோட்டில் அரசியல் தத்துவ கொள்கைகள் மக்களின் வாழ்விற்கான அவர்களின் செயற்பாட்டிற்கான வழிகாட்டியாக இருக்கவேண்டுமேயொழிய அதற்கு மேல் அவர்களது வாழ்வை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது எனக் குறிப்பிடுகின்றார்.
- பிளேட்டோ குறிப்பிடுகின்ற இலட்சிய அடிப்படையை அரிஸ் டோட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்துகொண்டிருக்கின்ற யதார்த்த நடைமுறைகளில் இருந்து இருக்கப்போகின்ற எதிர்கால இலட்சிய நிலையை முற்றாக பிரிக்கமுடியும் என்று அரிஸ்டோட்டில் நம்பியிருக்கவில்லை. இரண்டு நிலைகளுக்குமிடையே தொடர்புகள் காணப்பட வேண்டும் என்று அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார்.
- இலட்சிய மற்றும் பூரண நிலையைப் பற்றி சிந்தித்த பிளேட்டோ இலட்சிய மற்றும் பூரண நிலையில் மாற்றம் ஒன்று ஏற்படமுடியும் என்று நம்பவில்லை. அவர் கருதிய இலட்சிய நிலையே முடிந்த முடிவானது என்றும் சிறந்தது என்றும் அவர் நம்பினார். ஆனால் அரிஸ்டோட்டில் இதற்கு மாறாக மாற்றம் மற்றும் அபிவிருத்தி என்பன சாத்தியமானது என்றும் யதார்த்தமானது என்றும் குறிப் பிட்டார்.
- ஒருவருடைய வாழ்க்கையின் இறுதி நோக்கம் ஒழுக்கமாகும் என்றும் இதனால் அரசியற் கற்கை நெறி ஒழுக்கம் சார்ந்த பிரச்ச னைகளைப் பற்றிப் பேசுகின்றது என்றும் குறிப்பிட்டு இரண்டையும் பிரிக்க முடியாது என்று அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுக்கத்தை அரசியலில் வலியுறுத்துகின்ற அரிஸ்டோட்டில் எது நல்லது என்ற கேள்வியுடன் தனது விசாரணையைத் தொடங்குகின்றார். அவரது கருத்துப்படி மக்கள் எல்லோரினதும் நோக்கமாக எது இருக்கின்றதோ அதுவே நல்லது என்று குறிப்பிடுகின்றார்.
- அரசின் பிரதானமான பணி பகுத்தறிவு அடிப்படையில் குடியுரிமை யாளர்களை அரசின் நோக்கங்களை அடையச் செய்தலாகும் என்கின்றார். அரசின் நோக்கங்களாக ஒழுக்க அடிப்படையிலான இன்பத்தையும் திருப்தியையும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.
- நல்ல அரசை உருவாக்குவதை இறுதி நோக்கமாக கொண்டிருந்த அரிஸ்டோட்டில் நல்ல அரசானது சமூதாயத்தில் இருந்து தோற்றம் பெறவேண்டும் என குறிப்பிடுகின்றார். சமுதாயமானது மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது என்றும் அவையாவன குடும்பம் (Family), குலம்/கிராமம் (Village), அரசு (State) என்பனவாகும் என்றும் குடும்பத்திலிருந்தே அரசு தோற்றம் பெறுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார்.
- மக்களை சமூகப் பிராணி என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார். சமூகப் பிராணியான மனிதன் அரசியல் பிராணியாக மாறுகின்ற போது அரசு தோற்றம் பெறுகின்றது. ஒழுக்கமுள்ளவர்களாகவும் பகுத்தறிவுள்ளவர்களாகவும் இருக்கக்கூடியவர்களால் மட்டுமே சுதந்திரமான தெரிவையும் சந்தோஷமான வாழ்வையும் மேற்கொள்ள முடியும் என்றும் நல்வாழ்வை ஏற்படுத்தக்கூடிய நல்ல அரசை உருவாக்க முடியும் எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.
- அரிஸ்டோட்டிலின் அரசாங்க முறைகள் தொடர்பான வகைப் பாட்டை நோக்கினால் இது எண்ணிக்கையை மட்டும் அடிப்ப டையாகக் கொண்டிருக்கவில்லை. எண்ணிக்கையோடு ஆட்சியின் தரத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஆட்சி முறைகள் பற்றி குறிப்பிடும்போது நடைமுறைச் சாத்தியம் என்ற விடயத்திற்கு முன்னுரிமை வழங்கினார். எனவேதான் நடைமுறைச் சாத்தியமான ஆட்சி முறைகளைக் கொண்ட அரசியலமைப்புக்கள் பற்றி அரிஸ்டோட்டில் அதிகம் ஆய்வு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசியலின் பொருளாதார அடிப்படை பற்றியும் அரிஸ்டோட்டில் கவனம் செலுத்தியுள்ளார். பல்வேறு அரசுகளில் காணப்படும் பொருளாதார முறைகள் பற்றி குறிப்பிட்டுள்ள அரிஸ்டோட்டில் சமூகங்களில் காணப்படும் அடிப்படை முரண்பாடுகளுக்கு பொருளாதார சமத்துவமின்மையே காரணம் என்பதை குறிப்பிடுகின்றார்.
- சொத்துடமை பற்றி குறிப்பிடுகின்ற போது பிளேட்டோவில் இருந்து அரிஸ்டோட்டில் வேறுபடுகின்றார். அரிஸ்டோட்டில் சொத்துடமை என்பது இயல்பானது என்று ஏற்றுக்கொள்கின்றார். சரியான முறையில் பயன்படுத்தப்படுமாக இருந்தால் அது மக்களின் ஒழுக்கத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்தும் கருவியாக இருக்கும் எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.
- சட்டத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் அரிஸ்டோட்டில் முக்கியத்துவம் வழங்கியுள்ளார். அதுவே நீதியையும் நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்கான சிறந்த வழி என்றும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.
- பிளேட்டோவின் கருத்துக்களைவிட அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் பெருமளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்ற அடிப்படையில் வரவேற்கப்படுகின்றது. ஆயினும் கோட்பாட்டு அடிப்படையில் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் எந்தளவுக்கு பெறுமதியானவை என்று நோக்குகின்ற போது பிளேட்டோவின் கோட்பாட்டு அடிப்படை அளவுக்கு இவரது கருத்துக்கள் அமையவில்லை எனவும் குறை கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1579
Arasady Public Library
Municipal Council
Batticaloa

*அத்தியாயம் - 9*

# நவீன அரசியற் கோட்பாடு : மாக்கியவெல்லி
# Modern Political Theory : Niccolo Machiavelli

**அறிமுகம்**

நவீன அரசியல் கோட்பாட்டின் தந்தையாக மாக்கியவெல்லி குறிப்பிடப்படுகின்றார். கால சூழ்நிலைக்கேற்ப மரபு ரீதியான அரசியல் கருத்துக்களில் இருந்து விடுபட்டு நவீன அரசியற் கருத்துக்களின் அபிவிருத்திக்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர். நீண்ட காலமாக மத்திய காலத்தில் கிறீஸ்தவ மதத்தின் ஆதிக்கம் அரசின் மீதும் அரசியல் விடயங்கள் மீதும் காணப்பட்டு வந்தது. இத்தகைய ஆதிக்கத்தில் இருந்து அரசினையும் அரசியல் அதிகாரத்தையும் விடுவித்து மதச் சார்பற்ற அரசாங்கத்தை ஏற்படுத்துவதிலும் புதிய தேசிய அரசுகளின் நிலையை உறுதிப்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தவர்.

நவீன சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப மரபு ரீதியான அரசியற் கருத்துகளை மாற்றியமைத்த பெருமை இவருக்குரியது. அச்சியந்திரத்தின் வருகை, பதிப்புத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம், அமெரிக்காவின் கண்டுபிடிப்பு, வர்த்தக விரிவாக்கத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி என்பன மரபு ரீதியான அரசியற் கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் புதிய பிரச்சனைகளையும் தோற்றுவித்தது. இப் புதிய பிரச்சனைகளை விளங்கிக் கொள்வதற்கும் தீர்ப்பதற்குமான வழிகாட்டியாக மாக்கியவல்லியின் கருத்துக்கள் காணப்பட்டன.

இவரது கருத்துக்கள் அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த நடைமுறை ரீதியான மற்றும் விஞ்ஞான ரீதியான கருத்துக்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. முதன் முதலில் முற்றிலும் மாறுபட்ட வழிமுறையில் நன்மை மற்றும் தீமை என்ற அடிப்படையில் அரசியலை நோக்குவதை விடுத்து விஞ்ஞான ரீதியாக அரசியலை நோக்கத் தொடங்கினார். நன்மையோ தீமையோ நோக்கத்தை அடைவதற்கு எவ்வாறான வழிகளையும் பயன்படுத்தலாம் என்று கூறி நடைமுறை ரீதியாக அரசியல் அதிகாரத்தினைப் பெறுவதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டினார்.

**வாழ்க்கைப் பின்னணி**

இத்தாலியிலுள்ள புளோரன்சில் 1469 ஆம் ஆண்டில் மாக்கியவெல்லி பிறந்தார். இவருடைய தந்தை ஒரு வழக்கறிஞர். அவர் ஓர் உயர் குடியினராயினும் செல்வ நிலையில் செழிப்பாக இருக்கவில்லை. இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது மாக்கியவெல்லி வாழ்ந்தார். அவருடைய ஆயுட்காலம் முழுவதிலும் இத்தாலி பல சிறிய சிற்றரசுகளாகப் பிளவுபட்டுக் கிடந்தது. அதே சமயம் பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து போன்றவை ஒருங்கிணைந்த பலமான நாடுகளாக விளங்கின. எனவே மாக்கியவெல்லியின் காலத்தில் இத்தாலி பண்பாட்டில் உயர்ந்திருந்த போதிலும் இராணுவ வலிமையில் மிகவும் ஆற்றல் குன்றியிருந்தது.

மாக்கியவெல்லியின் இளமைப் பருவத்தின் போது புகழ் பெற்ற மெடிசி அரசர் புளோரன்சை ஆண்டு வந்தார். ஆனால், 1492 ஆம் ஆண்டில் அவர் இறந்து விடவே, சில ஆண்டுகளுக்குப் பிறகு மெடிசி குடும்பத்தினர் புளோரன்சிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். புளோரன்ஸ் ஒரு குடியரசாகியது. 1498 ஆம் ஆண்டில் 29 வயதான மாக்கியவெல்லி புளோரன்ஸ் குடியரசுக்காகப் பணி புரிந்தார். அக்குடி யரசின் சார்பில் தூதுப் பணியாக பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார். இத்தாலியிலும் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்தார்.

புளோரன்ஸ் குடியரசு 1512 ஆம் ஆண்டில் கவிழ்க்கப்பட்டது. மெடிசி மரபினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். மாக்கியவெல்லியும் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் புதிய மெடிசி ஆட்சியாளர்களுக்கு எதிராகச் சதி செய்ததாக அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாக்கியவல்லி (Niccolò Machiavelli (1469 – 1527)**



*மாக்கியவல்லி இத்தாலிய அரசியல் சிந்தனை யாளர்களுள் முக்கியமானவர் ஆவார். இவரது தந்தை ஒரு சட்டத்தரணியாக பணியாற்றியவர். உள்நாட்டு குழப்பங்களும் போர்களும் நிறைந்து காணப்பட்ட, அரசியல் ரீதியாக உறுதியற்றிருந்த இத்தாலிய நகர அரசான புளோரன்சில் வாழ்ந்தவர். 1498 - 1512 காலப்பகுதியில் புளோரன்ஸ் குடியரசின் செயலாளராகவும் இரண்டாவது சான்சல ராகவும் இவர் பணியாற்றியுள்ளார். ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டவர். மெடிசி ஆட்சியில் குறுகிய கால சிறைத்தண்டனையைப் பெற்றுக்கொண்ட இவர் பல நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் முக்கியமானது ''இளவரசன்'' என்ற நூலாகும். இது ஒன்றுபட்ட இத்தாலியை கட்டியெழுப்புவதற்காக எழுதப்பட்டதாகும். தற்காலத்தில் இராஜதந்திரிகளின் கைநூலாக இந்நூல் காணப்படுகின்றது.*

கைது செய்யப்பட்டார். எனினும் அவர் தாம் குற்றமற்றவர் என்று வலியுறுத்தியதால் அதே ஆண்டில் விடுதலையடைந்தார். அதன் பின்பு புளோரன்ஸ்க்கு அருகிலிருந்த சான்காசியோனோ என்ற ஒரு பண்ணையில் அவர் தனிமையில் வாழ்ந்து வந்தார். இங்கிருந்தே புளோரன்ஸ் குடியரசின் மீள்வருகைக்காக மிகவும் புகழ்பெற்ற 'இளவரசன்' என்ற நூலை எழுதினார்.

### மாக்கியவெல்லியின் நூல்கள்

அடுத்த 14 ஆண்டுகளில் மாக்கியவெல்லி ஏராளமான நூல்களை எழுதினார். அவற்றுள் ''இளவரசன்'' (1513), ''போர்க்கலை'' ''பிளாரன்ஸ் வரலாறு'' ஆகியவை மிகவும் புகழ் பெற்றவை. இந்த நூல்கள் அனைத்திலும் அவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்தது ''இளவரசன்'' என்ற நூலேயாகும். மாக்கியவெல்லி 1527 ஆம் ஆண்டில் தமது 58 ஆம் வயதில் காலமானார். மாக்கியவெல்லி தனது எழுத்துக்களில் அரசியல் கோட்பாடுகளை முன்வைப்பதில் பெருமளவுக்கு ஆர்வம் கொண்டிருந்திருக்கவில்லை. அவர் அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளைப் பற்றி எழுதினார். அரசுகள் பலப்படுத்தப்படவேண்டிய அவசியம் பற்றி எழுதினார். கடந்தகால தவறுகளைத் திருத்தி தற்கால அரச அதிகாரத்தினை விரிவுபடுத்தும் கொள்கைகள் பற்றி எழுதினார். பிற்காலத்தில் பேராசிரியர் லஸ்கி குறிப்பிடும்போது ''பதினாறாம் நூற்றாண்டு இத்தாலியின் அதிகாரப் பிரயோகத்திற்கான இலக்கணமாக'' இவரது நூல்கள் காணப்பட்டன என குறிப்பிடுகின்றார்.

### 'இளவரசன்' நூல் பற்றிய கருத்துக்கள்

மாக்கியவெல்லியின் மிகச்சிறந்த நூல்களில் ஒன்றாக இளவரசன் குறிப்பிடப்படுகின்றது. மாக்கியவல்லியின் அரசியல் தத்துவத்தை இந்நூல் பிரதிபலிக்கின்றது. அரசாங்கத்தை எவ்வாறு ஆட்சி புரிவது என்பது பற்றிய ஆட்சியாளனுக்கான வழிகாட்டியாக இது இருக்கின்றது. இதை ஒரு அரசியல் தத்துவ நூல் என்பதிலும் பார்க்க ஆட்சியாளனுக்கான கைநூல் என்பதே பொருத்தமானது எனக் குறிப்பிடப்படுகின்றது.[1] இது 26 அத்தியாயங்களைக் கொண்டமைந்துள்ளது. எல்லா அத்தியாயங்களும் முக்கிய விடயங்கள் தொடர்பாக மன்னனுக்கு ஆலோசனை வழங்குவதையே நோக்கமாக கொண்டிருக்கின்றன. சிறந்த ஆட்சிக்கு அவசியமான முக்கிய விடயங்கள் தொடர்பான ஆழமான கலந்துரையாடல்கள் இதில் காணப்படுகின்றன. யுத்தமா அல்லது சமாதனமா அவசியம் என்பது பற்றியும், ஒரு இளவரசன் ஏன் புகழப்படுகின்றான் அல்லது இகழப் படுகின்றான் என்பது பற்றியும், மக்களுக்கு சுதந்திரம் வழங்குவது நல்லதா அல்லது அவர்களைக் கட்டுப்படுத்துவது நல்லதா என்பது பற்றியும், மக்கள் மீது அன்பு செலுத்துவது சிறந்தததா அல்லது அவர்களை பயமுறுத்தி வைத்திருப்பது சிறந்ததா என்பது பற்றியது மான ஆழமான விவாதங்கள் இதில் இடம்பெற்றுள்ளன

1. John Plamenatz.(1963) *Machiavelli: Man and Society.* New York:Mc-Graw-Hill.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளவரசன் (THE PRINCE)**




இத்தாலிய இராஜதந்திரியும் அரசியல் கோட்பாட்டாளருமான மாக்கியவெல்லியினால் 16ம் நூற்றாண்டில் எழுதி வெளியிடப்பட்ட அரசியல் நூலே ''இளவரசன்'' ஆகும். 1513ல் லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இந்நூல் மாக்கியவல்லி இறந்ததன் பின்னர் 1532 லேயே பதிப்பிக்கப் பட்டது. அரசாங்கத்தை எவ்வாறு ஆட்சி புரிவது என்பது பற்றிய ஆட்சியாளனுக்கான வழிகாட்டியாக இது இருக்கின்றது. இது 26 அத்தியாயங்களைக் கொண்டமைந்துள்ளது. எல்லா அத்தியாயங்களும் முக்கிய விடயங்கள் தொடர்பாக மன்னனுக்கு ஆலோசனை வழங்குவதையே நோக்கமாக கொண்டிருக்கின்றன.

### இளவரசனுக்கான அறிவுரைகள்

ஓர் அரசுத் தலைவருக்கு நடைமுறைக்கு உகந்த அறிவுரைகளைக் கூறும் ஒரு பாட நூலாக ''இளவரசன்'' நூலைக் கொள்ளலாம். இந்த நூலில் வலியுறுத்தப்படும் அடிப்படைக் கருத்தை மாக்கியவல்லி பின்வருமாறு விபரிக்கின்றார்

> ''ஆட்சியைப் பிடிக்க விழையும் ஓர் இளவரசன், அறநெறிக் கொள்கைகளை அடியோடு புறக்கணித்து விட வேண்டும். அனைத்திற்கும் மேலாக ஓர் அரசு மிகுந்த ஆயுத பலம் கொண்டதாக இருக்க வேண்டும். தன் சொந்த நாட்டுக் குடிமக்களிலிருந்து திரட்டப்பட்ட இராணுவம் மட்டுமே நம்பத்தக்கது. மற்ற அரசுகளின் படைகளை நம்பியிருக்கும் அரசு எப்போதும் ஆற்றலற்றதாகவும், ஆபத்துக் குள்ளாகக் கூடியதாகவுமே இருக்கும்.''[2]

இளவரசன் தன் குடிமக்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என மாக்கியவெல்லி அறிவுறுத்துகிறார். இல்லையெனில் ஆபத்துக் காலத்தில் அவனுக்குப் புகலிடம் இருக்காது. சில சமயம் ஒரு புதிய அரசன் தன் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக

2. Niccolo Machiavelli. (1950) *The Prince (Translation:* The Prince and the Discourses). New York: Random House.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்கள் விரும்பாத சில செயல்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்பதையும் மாக்கியவெல்லி பின்வருமாறு உணர்த்துகிறார்.

> ''ஆட்சியைப் பிடித்ததும் ஓர் அரசன் எல்லாக் கொடுமைகளையும் உடனடியாகச் செய்து முடித்துவிட வேண்டும். அன்றாடம் கொடுமைகளைச் செய்யக் கூடாது. குடிமக்களுக்கான நன்மைகளை அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவிக்கும் வகையில் சிறிது சிறிதாக அளிக்க வேண்டும்.''[3]

ஓர் இளவரசன் வெற்றிகரமாக ஆட்சிபுரிய வேண்டுமானால் தன்னைச் சுற்றித் திறமையும் பற்றுறுதியும் வாய்ந்த அமைச்சர் களை வைத்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் முகப் புகழ்ச்சி செய்பவர்களைத் தவிர்த்து ஒதுக்கி விட வேண்டும் என்று மாக்கிய வெல்லி எச்சரிக்கை செய்கிறார். அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அவர் கூறுகிறார். தனது ''இளவரசன்'' நூலில் 17 ஆம் அத்தியாயத்தில் இளவரசன் அன்புக்குப் பாத்திரமாவது நல்லதா, அச்சத்தை விளைவிப்பது நல்லதா என்பது குறித்து மாக்கியவெல்லி விவாதிக்கிறார். ''இதற்கு விடை இது தான். ஒருவர் அன்புக்கு ஆட்படவும் வேண்டும்; அச்சத்தை விளைவிக்கவும் வேண்டும். ஆனால், இவ்விரண்டில் எது நல்லது எனக் கேட்பின் அன்புக்கு ஆட்படுவதைவிட அச்சத்தை விளைவிப்பதே பாதுகாப்பானது. ஏனெனில், அன்பு என்பது சங்கிலித் தொடர் போன்ற கடப்பாடுகளைக் கொண்டது. மனிதர் தன்னலம் வாய்ந்தவராக இருப்பதால் அவர்களின் நோக்கங்கள் நிறைவேறியதும் அன்பும் அறுந்து போய்விடுகிறது. ஆனால், உறுதியாகத் தண்டனை கிடைக்கும் என்ற அச்சுறுத்தல் மூலம் அச்ச உணர்வு என்றென்றும் நிலைபெறுகிறது''[4] என விவாதிக்கிறார்.

இதன் 18 ஆம் அத்தியாயம் ''இளவரசர்கள் நம்பிக்கையைப் பேணுவதற்கான வழிமுறை'' என்பதைப்பற்றி குறிப்பிடுகின்றது. இதில் மாக்கியவெல்லி பின்வருமாறு கூறுகிறார்

---

3. Ibid, P.56
4. Sydney Anglo. (1969) *Machiavelli: A Dissection*. New York: Harcourt Brace.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நம்பிக்கையைக் காப்பாற்றுவது தமது நலனுக்கு எதிரானதாக இருக்கும் என்றால் ஒரு விவேகமுள்ள அரசன் நம்பிக்கையைக் காப்பாற்றாமல் இருத்தலே நலம்'', ..... ''ஓர் இளவரசன் தன் வாக்குறுதியை நிறைவேற்றாததற்குச் சட்டப்படியான காரணங்களைக் கொண்டே போதிய சாக்குப் போக்குகள் கூறலாம். ஏனெனில், மனி தர்கள் மிகவும் அப்பாவிகள் ஆகவே மற்றவர்களின் வாக்குறுதிகளை இளவரசன் எப்பொழுதும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டும்.''[5]

## சர்வாதிகாரிகளுக்கான வழிகாட்டி

இந்த ''இளவரசன்'' நூலை ''சர்வாதிகாரிகளுக்கான வழிகாட்டி'' என்றும் அழைப்பதுண்டு. மாக்கியவெல்லி பொதுவாகச் சர்வாதி காரத்தை விடக் குடியரசு முறை அரசாங்கத்தையே ஆதரித்தார் என்பது அவருடைய வாழ்க்கையிலிருந்தும் மற்ற நூல்களிலிருந்தும் தெரிகிறது. ஆனால் இத்தாலியின் அரசியல் மற்றும் இராணுவ இயலாமையைக் கண்டு அவர் ஆத்திரம் கொண்டார். நாட்டை ஒற்றுமைப்படுத்து வதற்கும், பலப்படுத்துவதற்கும் வல்லமை வாய்ந்த ஓர் இளவரசன் தேவை என அவர் விரும்பினார். இளவரசன் நடைமுறையில் எப்போதும் சீற்றங் கொள்பவராகவும், ஈவிரக்கமற்றவராகவும் இருக்க வேண்டும் என்று மாக்கியவெல்லி வலியுறுத்தியபோதிலும் அவர் தம் வாழ்வில் ஆழ்ந்த நாட்டுப் பற்று வாய்ந்தவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இளவரசன் நூல் பற்றிய விமர்சனங்கள்

'இளவரசன்' நூல் விசேட நோக்கம் ஒன்றை மனதிற் கொண்டு அதனை நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட மாக்கியவல்லியின் கருத்துக் களாகும் எனவே அது அறிவியல் பூர்வமாக முன்வைக்கப்பட்ட அரசியற் கோட்பாடல்ல என விமர்சிக்கப்படுகின்றது. இந்த நூலின் மூலம் மாக்கியவல்லி இளவரசனுக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கியமையானது கொடுங்கோன்மையான வன்முறையை தூண்டு

5. Niccolo Machiavelli. (1950) *The Prince* (Translation: The Prince and the Discourses). New York: Random House. P.27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற ஒன்றாக காணப்படுகின்றது என கண்டிக்கப்படுகின்றது.[6] இளவரசன் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மாக்கியவல்லியின் கருத்துக்கள் ஏற்கனவே அரிஸ்டாட்டில் முன்வைத்த கருத்துக்களாகும் என்றும் அரசுக்கு வரம்பற்ற அதிகாரங்களை மாக்கியவல்லி வழங்கியமை மூலம் அரசின் மீயுயர் தன்மையை குறிப்பிட்டிருந்தாலும் அரசே மிகவுயர்ந்த அமைப்பு என்று அதனை அரிஸ்டாட்டில் ஏற்கனவே குறிப்பிட்டுவிட்டார் எனவும் கூறி கண்டிக்கப்படுகின்றது. அத்துடன் ஆட்சியாளனின் வரம்பற்ற அதிகாரம் ஒரு மக்கள் புரட்சிக்கு வழிவகுக்கும் என்றும் குறைகூறப்படுகின்றது.

### மனித இயல்பு பற்றிய கருத்துக்கள்

மனித இயல்பு பற்றி மாக்கியவல்லி குறிப்பிடுகின்ற போது மிருகங்களோடு ஒத்ததான பேராசை கொண்ட சுயநலமிக்க ஒருவனாகவே மனிதனை இவர் காண்கின்றார். மனிதன் சுயநலம், ஆக்கிரமிப்பு, பேராசை, தீய குணம், பயம், பிறர் பொருளை அபகரித்தல், அறியாமை மற்றும் திருப்தியின்மை போன்ற இயல்புகளைக் கொண்டுள்ளதாக மாக்கியவல்லி குறிப்பிடுகின்றார். ஆயினும் மனித இயல்பு பற்றிய மாக்கியவல்லியின் கருத்துக்கள் பிற்கால அறிஞர்களால் பலமாக கண்டிக்கப்பட்டது. மாக்கியவல்லி குறிப்பிடுவது போல அந்தளவுக்கு மனிதன் கெட்டவன் அல்ல என்றும் மனிதனிடம் கெட்ட இயல்புகள் காணப்படுவது போல நல்ல இயல்புகளும் காணப்படுகின்றன என்றும் விமர்சிக்கப்பட்டது. அதேபோன்று மனிதனை கெட்டவனாக சித்தரிக்க முயன்ற மாக்கியவல்லி அவன் ஏன் அவ்வாறு இருக்கிறான் என்பதை குறிப்பிடவில்லை என்றும் குறை கூறப்படுகின்றது. அத்தோடு எல்லா மனிதர்களும் அறிவிலிகள் என்று குறிப்பிடுவதும் யதார்த்தத்திற்கு புறம்பானது எனக் குறிப்பிடப்படுகின்றது. எனினும் மனித இயல்பு பற்றிய மாக்கியவல்லியின் கருத்துக்கள் அரசியலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியது. அரச கட்டுப்பாடு வருவதற்கும், வரம்பற்ற அதிகாரம் பயன்படுத்தப்படுவதற்கும் மற்றும் அரசியல் என்பது ஒரு சாக்கடை என்ற மதிப்பிழந்த நிலை ஏற்படுவதற்கும் வழிவகுத்தது.

---

6. Ernst Cassirer. (1946) *The Myth of State.* London: Yale University Press. P.153.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்க் கலை (THE ART OF WAR)**




*இத்தாலிய மறுமலர்ச்சி சிந்தனையாளர் மாக்கிய வல்லியினால் எழுதப்பட்ட முக்கியமான நூல் களில் இதுவும் ஒன்றாகும். இந்நூல் சோக்கிரடீ சின் கலந்துரையாடல் வடிவில் அமைந்துள்ளது. இத்தாலிய பிரபு கொல்லோனா* (Fabrizio Colonna) *என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இராணுவமே மக்களினது பாதுகாப்பிற்கான அடிப்படை என்பதினை வலுயுறுத்தி எழுதப்பட நூல் இதுவாகும். இது 1520ல் பதிப்பிக்கப்பட்டது. மாக்கியவல்லி உயிரோடிருந்த பொழுது பதிப்பிக்கப்பட்ட ஒரேயொரு நூல் இதுவேயாகும். இது ஏழு பகுதிகளைக் கொண்டது. ஒரு இளவரசனுக்கு யுத்தமா அல்லது சமாதானமா அவசியம் என்பது பற்றி இந்நூல் விளக்குகின்றது.*

**மதமும் ஒழுக்கமும்**

மத்தியகாலத்தில் அரசின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக மதம் கருதப்பட்டது. மத சிந்தனைகளில் ஏற்படும் அபிவிருத்தியே அரசின் அபிவிருத்தியை ஏற்படுத்தும் என நம்பப்பட்டது. மதமும் அரசும் மற்றும் அரசியலும் ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தது. திருச்சபையின் ஒரு பகுதியாகவே அரசு கருதப்பட்டது. இதனால் திருச்சபையின் போபாண்டவர் அரச செயற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் நிலைமை காணப்பட்டது. அரிஸ்டாட்டில் திருச்சபையின் செயற்பாடுகளை அரச செயற்பாடுகளில் இருந்து வேறுபடுத்த முயற்சித்திருந்த போதும் அவை வெற்றியளித்திருக்கவில்லை. எனினும் மாக்கியவல்லி மதத்திலிருந்து அரசியலை முற்றாக பிரித்து தனது கருத்துக்களை முன்வைத்தார். ஆயினும் இவர் அரசியலில் இருந்து மத செயற்பாடுகளை முற்றாக பிரித்திருந்த போதும் மதத்தை புறக்கணித்திருக்கவில்லை.[7] அத்துடன் அரச செயற்பாடுகளுக்கு துணைபுரியும் விதமாக மதச் செயற்பாடுகளை மாற்றியமைத்தார். பொதுவாக மதத்தையும் மத செயற்பாடுகளையும் மாக்கியவல்லி

7. Federico Chabod. (1958) *Machiavelli and The Renaissance.* New York: Harper & Row. P. 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டிருந்தார். ஆனால் கிறீஸ்தவ மதத்தினுடைய ஆதிக்கத்தினை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கிறீஸ்தவ மத நிறுவனம் கிறீஸ்தவ மதத்தின் உயர்வுக்காக செயற்படுவதை விடுத்து அரசியல் செயற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதை இவர் விரும்பியிருக்கவில்லை.

சமூகத்தில் ஒழுக்க கருத்துக்களின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்ட மாக்கியவல்லி நோக்கத்தை அடைவதற்கான கருவியாக ஒழுக்கத்தை கருதவில்லை. பயனுடமைவாதத்தின் அடிப்படையில் ஒழுக்க கருத்துக்களை அரசியலில் பயன்படுத்திய பெருமை மாக்கிய வல்லியையே சாரும். இதனடிப்படையில் ஒழுக்கத்தை பொது ஒழுக்கம் மற்றும் தனியார் ஒழுக்கம் என பிரித்து தனது கருத்துக்களை முன்வைத்தார். நல்ல குடியுரிமையாளன் ஒருவனுக்கு தேசியப்பற்றை வளர்ப்பதற்கு பொது ஒழுக்கத்தை மாக்கியவல்லி பயன்படுத்தினார்.

### ஒழுக்கமும் அதிகாரமும்

மரபுரீதியாக கிரேக்கர் காலத்திலிருந்து அரசியல் சிந்தனைகளில் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. நோக்கத்தை அடைவதற்கான கருவியாக ஒழுக்கம் காணப்பட்டது. ஆயினும் முதன் முதலில் ஒழுக்கத்தைக் கருத்திற் கொள்ளாமல் அதிகாரத் தினை முதன்மைப்படுத்தி அதனை அடைவதையே நோக்கமாக மாற்றியவர் மாக்கியவல்லி. இவர் அதிகாரத்தை அடைவதை நோக்கமாக கொண்டது மட்டுமல்லாமல் அதனை அடைவதற்கான கருவியாகவும் அதிகாரத்தைக் குறிப்பிட்டு அதனது முக்கியத்துவத் தினை வெளிப்படுத்தினார்.[8]

### அதிகாரத்தினை தக்கவைத்துக்கொள்வதற்கான படிமுறைகள்

ஒரு இளவரசன் அதிகாரத்தைப் பெறுதல், பெருக்குதல், தக்கவைத்தல் மற்றும் பேணுதல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதன் மூலமே அவனால் பலமானதும் உறுதியானதுமான அரசை

8. Jacob Burckhardt. (1958) *The Civilaization of the Renaissance in Italy.* New York: Harper & Row.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க முடியும் எனவும் மாக்கியவல்லி குறிப்பிடுகின்றார்.[9] இதற்காக இளவரசன் எவ்வாறு இருக்க வேண்டும் மற்றும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனவும் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார். அவையாவன

1. இரக்கமற்ற தன்மையுடையவனாக இருத்தல் வேண்டும். இளவரசன் தனது அதிகாரத்துவத்திற்கு சவால் ஏற்படுகின்ற போது இரக்கமற்ற வகையில் அதிகாரத்தைப் பாவிக்க வேண்டும்.

2. சிங்கத்தைப் போலவும் நரியைப் போலவும் தேவையேற்படின் இரண்டும் போலவும் இருக்கத் தெரிய வேண்டும். ஒரு நல்ல இளவரசன் சிங்கத்தைப்போல பலத்தைப் பிரயோகிக்க வேண்டும். அதேசமயம் நரியைப் போல தந்திரங்களைப் பயன்படுத்தி மக்களின் ஆதரவினையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவும்படி செய்தல் வேண்டும்.

4. ஒழுக்க நெறிகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தேவையேற்படின் பணிவுடையவனாகவும் அர்ப்பணிப்புள்ளவனாகவும் மத நம்பிக்கையுடையவனாகவும் இருந்து மக்களின் ஆதரவைப் பெறவேண்டும்.

5. எந்த நிலையிலும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் உறுதியான தீர்மானம் மேற்கொள்ளக் கூடியவனாக இருக்க வேண்டும்.

6. பலமுள்ள இராணுவ கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். பலமான இராணுவம் இல்லாமல் எந்தவொரு நாடும் நீண்டகாலத்திற்கு நிலைக்க முடியாது என்பதினை இளவரசன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

7. நல்ல படைவீரராகவும் தலைவனாகவும் இருக்க வேண்டும். அத்துடன் போர் நுட்பங்களையும் நவீன போர் ஆயுதங்கள் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்.

---

9. Quentin Skinner. (1978) *The Foundation of Modern Political Thought.* Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கடமையுணர்வும் தேசப்பற்றும் மிக்கவனாக இருக்க வேண்டும்.

9. நாட்டின் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் தேவையேற்படின் வாக்குறுதிகளை மீறவும் தெரிய வேண்டும். இதில் நீதி மற்றும் நியாயம் என்பனபற்றி எல்லாம் கவனத்திற் கொள்ள வேண்டியதில்லை.

10. இளவரசன் இயலுமான வரைக்கும் மக்களின் அனுதாபத்தையும் நம்பிக்கையையும் பெற வேண்டும்.

11. மக்களை பயமுடையவர்களாக வைத்திருக்க வேண்டும். மக்கள் மேல் அன்பு செலுத்துவதைக் காட்டிலும் அவர்களைப் பயமுறுத்தி வைத்திருப்பதே நாட்டை சிறப்பாக ஆட்சி புரிவதற்கான வழி எனக் குறிப்பிடுகின்றார்.

12. தேவையேற்படின் நேர்மையற்றவனாகவும் கெட்டவனாகவும் இருக்க வேண்டும். ஒரு இளவரசன் எல்லா சந்தர்ப்பத்திலும் நல்லவனாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

13. சொத்துடமை மற்றும் பெண்கள் தொடர்பாக அளவோடு கவனமாக இருக்க வேண்டும். தேவையேற்படின் இரண்டையும் தவிர்க்க வேண்டும்.

14. இரகசியம் பேணக்கூடியவனாக இருக்க வேண்டும்

15. ஒரு அரசுக்கு நிரந்தர நண்பர்களுமில்லை நிரந்தர எதிரிகளு மில்லை என்பதை இளவரசன் உணர்ந்து செயற்பட வேண்டும். நாட்டின் நன்மைக்காக எவருடனும் இணைந்து செயற்பட தயாராக இருக்க வேண்டும்.

16. சுயநலமுள்ளவனாக இருக்க வேண்டும். தனது நாட்டின் நன்மையை கருத்திற்கொண்டு கல்வி,பிரச்சாரம் அனைத்தையும் பயன்படுத்த வேண்டும்.

17. மற்றவர்களுக்கு துதி பாடுதலையும் தனது புகழ் விரும்புதலையும் தவிர்க்க வேண்டும்.

18. நல்லவனாக நடிக்கத் தெரிய வேண்டும். ஒரு இளவரசன் எல்லா சந்தர்ப்பத்திலும் நல்லவனாக இருக்க வேண்டிய அவசியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஆனால் மக்களுக்கு எப்போதும் நல்லவனாக காட்டிக் கொள்ள வேண்டும்.

19. சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள கூடியவனாக இருக்க வேண்டும். தன்னைப் பற்றியும் தனது நாட்டைப் பற்றியும் எதிரியைப் பற்றியும் சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒழுக்கக் கருத்துக்களைக் கவனத்திற் கொள்ளாமல் அதிகாரத் தினைத் தக்க வைப்பதற்கான வழிமுறைகளை மாக்கியவல்லி குறிப்பிட்டுள்ளார். நவீன காலத்தில் இன்றும் கூட இவரது கருத்துக்கள் அரசியலிலும் அரசியல்வாதிகளாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**அரசாங்கம் பற்றிய வகைப்படுத்தல்**

அரிஸ்டாட்டில் போன்று மாக்கியவல்லியும் அரசாங்கங்களை வகைப்படுத்தியிருக்கின்றார். சாதாரண மற்றும் தீமையான அரசாங்க வகைகளை இவர் விளக்கியுள்ளார். சாதாரண அரசாங்க வகையாக மன்னராட்சி, பிரபுக்கள் ஆட்சி மற்றும் வரையறைக்குட்பட்ட ஜன நாயகம் அல்லது அரசியலமைப்பிற்குட்பட்ட ஜனநாயகம் என்பவற்றை குறிப்பிடுகின்றார். சிறந்த அரசாங்க முறையாக சிசரோவைப் போன்று கலப்பு அரசாங்க முறையையே இவர் வலியுறுத்துகின்றார்;. ஒரு யதார்த்தவாதியாக மாக்கியவல்லி அரசு ஒன்றில் பொருளாதார அபிருத்திக்கும் அரசியல் உறுதிப்பாட்டுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படவேண்டும் என குறிப்பிட்டார். அரசியல் உறுதிப் பாடு பொருளாதார அபிவிருத்தியையும் பொருளாதார அபிவிருத்தி அரசியல் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தும் என இவர் நம்பினார். சட்ட ஒழுங்கின் அவசியத்தையும் மாக்கியவல்லி வலியுறுத்தியிருக்கிறார். பலமான அரசினை ஏற்படுத்தவும் வன்முறையை கட்டுப்படுத்தவும் சட்டம் அவசியம் என இவர் குறிப்பிடுகின்றார். சட்டத்தினை நிலைநாட்ட பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தின் அவசியத்தினை இவர் வலியுறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவது நவீன அரசியல் சிந்தனையாளர்**

வரலாற்றில் முதல் தடவையாக மத சிந்தனைகளைப் புறக்கணித்து அதிகாரமே வழிமுறைகளைத் தீர்மானிக்கின்றது என்று குறிப்பிட்ட முதலாவது நவீன அரசியற் சிந்தனையாளராக மாக்கியவெல்லி குறிப்பிடப்படுகின்றார்.[10] மாக்கியவெல்லியின் அரசியற் கருத்துக்கள் அரசியற் கோட்பாடாக கருதப்படக் கூடியவையா என்ற வாதப் பிரதிவாதங்கள் காணப்படுகின்றன. ஒருசிலர் இவரை தத்துவவாதி என்கின்றனர். இன்னொருசிலர் இவரை இராஜதந்திரி என்கின்றனர். ஆயினும் இவரது அரசியற் கருத்துக்கள் நவீன அரசியற் சிந்தனையின் போக்கை மாற்றியமைத்தது. இவரது கருத்துக்களில் முரண்பாடுகள் காணப்பட்ட போதும் இலட்சிய கருத்துக்களில் இருந்து விடுபட்டு யதார்த்த அடிப்படையில் நடைமுறைக்கு சாத்தியமான பயனுடைய கருத்துகளை முன்வைத்தவர். பிற்கால அரசியல் சிந்தனை வரலாற்றில் மாக்கியவல்லிய சிந்தனைகள் என்ற புதிய மரபு தோற்றம் பெறுவதற்கு காரணமாக இருந்தவர்.

மத்தியகால முடிவுடன் தோற்றம் பெற்ற நவீன காலத்தில் முக்கியமாக இருவிதமான இயக்கங்கள் காணப்பட்டன. அவையாவன ஒன்று மறுமலர்ச்சி இயக்கம் மற்றையது சீர்திருத்த இயக்கம். புராதன அரசியல் கருத்துக்களில் இருந்து விடுபட்டு புதிய அரசியற் கருத்துக் களுடன் மத்திய காலத்தில் மறுமலர்ச்சி கருத்துக்கள் தோற்றம் பெற்றன. மத அடிமைத்தனத்திலிருந்து மனிதனை விடுவிப்பது மத்திய கால அரசியற் கருத்துக்களின் நோக்கமாக காணப்பட்டது. இதனால் மறுமலர்ச்சி இயக்கம் மதத்தினை விடுத்து மனிதனைப் பற்றி பேசத் தொடங்கியது. பகுத்தறிவு அடிப்படையிலான அரசியற் கருத் துக்கள் முன்வைக்கப்பட்டன. மதம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான மனிதனின் நோக்கிலும் மனப்பாங்கிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. நீண்ட கால புராதன அடிமைத்தனத்தில் இருந்தும் மதத்திலிருந்தும் மனிதனை மீட்டெடுப்பதற்காக சீர்திருத்த கருத் துக்கள் தோற்றம் பெற்றன. மதக் கருத்துக்களுக்கு பதிலாக மதச் சார்பின்மைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

10. Gilbert, F. (1965) Machiavelli and Guicciardini: *Politics and History in Sixteenth Century Florance.* New Jersey: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலியில் இத்தகைய மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்த கருத்துக்களை முன்வைப்பதில் முக்கியமானவராக மாக்கியவெல்லி செயற்பட்டார். மத்திய மற்றும் நவீன காலங்களுக்கு இடைப்பட்ட எல்லைக் கோடாக இவர் குறிப்பிடப்படுகின்றார்.[11] மத அடிமைத்தனத்தில் இருந்து அரசியற் கருத்துக்களை விடுவித்து புதிய அரசியல் ஒழுங்கை இவர் நிலைநாட்டினார். அதிகாரமே எல்லாவற்றையும் தீர்மானிக்கின்ற முதன்மையான சக்தி என்ற புதிய கருத்தை முன்வைத்தார். புராதன காலத்தில் நோக்கத்தை அடைவதற்கான கருவியாக மட்டுமே பயன் படுத்தப்பட்டு வந்த அதிகாரத்தை நவீன காலத்தில் முக்கிய அரசியல் நோக்கமாக மாற்றிய பெருமை இவருக்குரியது. இதன்மூலம் நவீன காலத்தில் நோக்கமாகவும் நோக்கத்தை அடைவதற்கான கருவியாகவும் அதிகாரமே இருக்கின்றது என்ற புதிய அரசியல் கருத்தை இவர் முன்வைத்தார்.

### மாக்கியவெல்லியின் அணுகுமுறை

மாக்கியவெல்லி வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் தனது கருத்துக்களை முன்வைத்தவர். ஆயினும் நவீன அரசியல் சிந்தனை வரலாற்றில் புதிய அணுகுமுறையைப் பயன்படுத்தி அரசியற் கருத்து க்களை வெளியிட்டுள்ளார். மதத்திலிருந்து அரசியலைப் பிரித்து மதச் சார்பற்ற அணுகுமுறை மூலம் தனது கருத்துக்களை முன்வைத்தவர். அதிகாரத்தை அடைதலே அரசியலின் முக்கிய நோக்கம் என குறிப்பிட்டு அதிகாரத்தின் அடிப்படையில் அரசியலை நோக்கியவர். யதார்த்த அணுகுமுறையைப் பயன்படுத்தி நடைமுறைக்கு சாத் தியமான அரசியற் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.[12] கோட்பாடு களுக்கு முதன்மை கொடுக்காமல் அரசியற் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அதனூடாக பயனுடைய அரசியற் கருத் துக்களை வழங்கியுள்ளார்.

11. Pocock, G.A. (1975) *The Machiavellian Moment: Florentine Political Thought and the Atlantic Republican Tradition*. New Jersey: Princeton University Press.
12. Isaiah Berlin. (1981) *The Originality of Machiavelli*. Oxford University Press. P.50.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவீன தேசிய அரசு**

தேசியவாதம் மற்றும் தேசிய அரசுகளின் எழுச்சிக்கு மாக்கியவல்லி முன்வைத்த கருத்துக்கள் முக்கியமானவை. தற்கால நவீன அரசு பற்றிய சிந்தனை வருவதற்கு இவரது கருத்துக்கள் உதவியிருக்கின்றன. தேசிய மன்னராட்சி அரசுகளுக்கு இவர் ஆதரவு வழங்கினார். "தேசிய அடிப்படையிலான மன்னராட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான ஒரே வழி நிலப்பிரபுக்களின் அதிகாரத்தையும் தனிப்பட்ட ஆதிக்கம் மிக்கவர்களால் மேற்கொள்ளப்படும் ஊழலையும் கட்டுப்படுத்து வதே" என மாக்கியவல்லி குறிப்பிட்டார். இதன் மூலம் அரசியலில் கிறீஸ்தவ மற்றும் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை ஒழித்து தேசிய அரசாங்கத்தை அமைக்க மாக்கியவல்லி முயன்றார்.

**தேசப்பற்று**

16ம் நூற்றாண்டு ஐரோப்பா பலம் மிக்க நாடுகளைக் கொண்டதாக காணப்பட்டது. பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகள் பலமும் ஒருமைப்பாடும் கொண்டதாக காணப்பட்டன. ஆனால் இத்தாலி மட்டும் ஒற்றுமையில்லாமல் பலமற்ற நாடக காணப் பட்டது. இத்தாலிய சிறிய நகர அரசுகள் ஒன்றுக்கொன்று சண்டை யிட்டன. இதனால் மதக் கருத்துக்களை அரசியலில் இருந்து பிரித்து புதிய அரசியல் ஒழுக்க கருத்துக்களை முன்வைத்து இத்தாலியில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த மாக்கியவல்லி முனைந்தார்.

மாக்கியவல்லி ஒரு சிறந்த தேசப்பற்றாளராக விளங்கினார். இத்தாலியில் பொற்காலத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்து வழிகளிலும் முயன்றார். இத்தாலியின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதே மக்களின் நல்வாழ்வுக்கான வழியாக இருக்கும் என்று கூறி இத்தாலியை பலப்படுத்துவதற்காக அதனை ஒன்றிணைக்க முயன்றார். உள்நாட்டில் வன்முறையை நீக்கி சமாதானத்தை நிலைநாட்டவும் வெளியாரின் தாக்குதல்களில் இருந்து இத்தாலியைப் பாதுகாப்பதற்கும் அவசியமான வழிவகைகள் பற்றி தனது இளவரசன் நூலில் குறிப்பிட் டுள்ளார். அரசியல் அதிகாரத்தை பெருக்குவதும், பாதுகாப்பதும் மற்றும் தக்கவைப்பதுமே ஒன்றுபட்ட இத்தாலியை ஏற்படுத்துவதற்கான ஒரே வழி எனக் குறிப்பிட்டு அதிகாரத்தை பெறுவதினை அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமாக மாக்கியவல்லி மாற்றியமைத்தார். இதுவே வெற்றிகரமான அரசாங்கத்தை தீர்மானிக்கும் முக்கியமான காரணி என்றும் குறிப்பிட்டார்.

### தேசியவாதம்

தேசியவாத எண்ணக்கருவின் தோற்றத்திற்கு அடித்தளமிட்டவர்களில் முக்கியமாக குறிப்பிடப்படுபவர் மாக்கியவல்லி ஆவார். இத்தாலி பலமிழந்து போயிருந்த வேளையில் ஐரோப்பாவில் காணப்பட்ட பலமான நாடுகளினைப் பற்றி கற்பதிலும் அறிவதிலும் மாக்கியவல்லி மிகுந்த ஆர்வம் கொண்டவராக காணப்பட்டார். குறிப்பாக பிரான்சிலும் மற்றும் சுவிற்சர்லாந்திலும் காணப்பட்ட தேசிய இராணுவம் இவரை வெகுவாக கவர்ந்திருந்தது. இதனால் இத்தாலியைப் பலப்படுத்துவதற்காக தேசிய இராணுவம் ஒன்றினை அமைப்பதில் இவர் முன்னின்று உழைத்தார். இது தேசியவாதத்தினை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தது. ஒரு அரசினுடைய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு பலமான ஆட்சியாளனும் சட்டம் ஒழுங்கும் காணப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி பலமுள்ள மன்னராட்சியை இவர் வலியுறுத்தினார். பிற்காலத்தில் அரசின் இறைமை பற்றிய எண்ணக்கருவின் வளர்ச்சிக்கு இவரது கருத்துக்கள் பெரிதும் உதவியிருக்கின்றது.

### மாக்கியவல்லியின் மீதான கண்டனங்கள்

மாக்கியவெல்லி போல் கடுமையான கண்டனத்திற்குள்ளான அரசியல் தத்துவஞானிகள் மிகச் சிலரே, நெடுங்காலமாக அவர், ''மனித உருக்கொண்ட பேய்'' என்று பழிக்கப்பட்டார். வஞ்சகத்தையும், தந்திரத்தையும் குறிப்பதற்கு அவருடைய பெயர் கையாளப்பட்டு வந்தது. மாக்கியவெல்லியின் போதனைகளை நடைமுறையில் தீவிரமாகக் கையாண்டவர்களே அவரை வன்மையாகக் கண்டித்தது வேடிக்கையாக இருந்தது.

அறநெறிக் காரணங்களைக் காட்டி மாக்கியவெல்லி கண்டிக்கப்பட்டதைக் கொண்டு அவர் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை எனக் கூறி விட முடியாது. அவர் கூறிய கருத்துகள் அவருடைய சொந்தக் கருத்துகள் அல்ல என்று ஒரு சாரார் கூறுவர். இது ஓரளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையே. புதிய கொள்கை எதனையும் கூறவில்லை என மாக்கிய வெல்லியே அடிக்கடி குறிப்பிட்டுள்ளார். நினைவுக்கெட்டாத மிகப் பழங்காலம் முதற்கொண்டு, மாபெரும் வெற்றி பெற்ற பல இள வரசர்கள் ஏற்கனவே வெற்றிகரமாகக் கையாண்ட உத்திகளைத்தான் தாம் உரைப்பதாக அவர் கூறினார். உண்மையில் மாக்கியவெல்லி தாம் கூறும் கருத்துகளுக்குப் பொருத்தமான உதாரணங்களை வரலாற்றிலிருந்தும் அண்மைக் கால இத்தாலிய நிகழ்ச்சிகளிலிருந்தும் எடுத்துக்காட்டுகிறார். இளவரசன் நூலில் மாக்கியவெல்லியின் பாராட்டுதலைப் பெறும் சீசரே ''போர்ஜியா தமது தந்திரங்களை மாக்கிய வெல்லியிடமிருந்து கற்றுக் கொள்ளவில்லை. மாறாக, போர்ஜியாவிடமிருந்துதான் மாக்கியவெல்லி அவற்றைக் கற்றுக் கொண்டார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**மாக்கியவெல்லியின் கருத்துக்கள் மீதான விமர்சனங்கள்**

மாக்கியவெல்லி ''கொலைக்குணம் கொண்ட மாக்கியவெல்லி'' என்று சேக்ஸ்பியரின் நாடக மேடைகளில் வர்ணிக்கப்பட்டவர். கொலைகாரன், கொள்ளையன், சதிகாரன், துரோகி மற்றும் கொடுங்கோலன் என்று விமர்சிக்கப்பட்டவர். சேக்ஸ்பியர் முதல் கால்மாக்ஸ் வரை பல சிந்தனையாளர்கள் இவரை கடுமையாக விமர்சித்துள்ளனர். அவையாவன

1. மாக்கியவல்லியின் கருத்துக்கள் முன்னுக்குப்பின் முரணான தாகவும் குழப்பமானதாகவும் காணப்பட்டமை. குறிப்பாக அரசியல், சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகள் எதனையும் முன்வைத்திருக்கவில்லை என குறை கூறப்பட்டமை.

2. அரசினை ஒரு சமூக நிறுவனமாக நோக்காமல் ஒரு தனிமனிதனின் நிறுவனமாக கருதியமை விமர்சிக்கப்பட்டது. ஆட்சியாளனைப் பற்றி மட்டும் குறிப்பிட்டதன் மூலம் ஆட்சியாளனே அரசு என்ற தவறான கருத்து வர வழிவகுத்தமை குறை கூறப்பட்டமை.

3. அரசியலில் ஒழுக்கம் மற்றும் மரபு என்பவற்றின் முக்கியத்து வத்தை குறைத்து மதிப்பிட்டமை. குறிப்பாக மத, சமூக மற்றும் கலாச்சார விழுமியங்களை புறக்கணித்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மதக்கருத்துக்களை குறுகிய கண்ணோட்டத்தில் நோக்கியமையும் தவறாக புரிந்து கொண்டமையும் விமர்சிக்கப்பட்டது.

5. அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியதன் மூலம் ஒரு வன்முறை சமுதாயம் வளர வழிவகுத்தமையும் கூட்டுறவு மற்றும் ஜனநாயகம் போன்ற சிந்தனைகளை மறுத்தமையும் குறை கூறப்பட்டமை.

6. மாக்கியவல்லியின் கருத்துக்கள் அரச செயற்பாடுகளுக்கான தந்திரமாக காணப்பட்டதே தவிர ஒரு அரசியற் கோட்பாடாக காணப்படவில்லை எனவும் விமர்சிக்கப்பட்டது.

ஆயினும் ரூஸோ மற்றும் பேர்கன் போன்ற அறிஞர்கள் மாக்கிய வல்லியின் கருத்துக்களை பாராட்டியுள்ளனர். ''காலத்தின் குழந்தையாக சூழ்நிலையின் வெளிப்பாடாக மாக்கியவெல்லியின் கோட்பாடுகள் அமைகின்றன'' என இன்னிங் என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

> ''எங்கெல்லாம் பெரும்பான்மையினர் ஊழலில் உல்லாசமாக வாழ்கின்றனரோ, ஊழல் செய்வோரை ஒடுக்க வேண்டிய சட்டம் எங்கெல்லாம் சக்தியற்று செயல்படாமல் கிடக்கிறதோ அங்கெல்லாம் அனைத்து அதிகாரங்களையும் தன் கைகளில் எடுத்துக்கொண்டு உண்மையாக செயற்படும் ஒரு அரசாட்சி உருவாகும்''[13]

என தனது உரையாடல் நூலில் மாக்கியவெல்லி அதிகாரத்தின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**மாக்கியவல்லியின் பங்களிப்பு**

மாக்கியவெல்லியைப் பகிரங்கமாகப் பாராட்டிய சில அரசியல் தலைவர்களில் இத்தாலியச் சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியும் ஒருவர். இவரைத் தவிர ஏராளமான புகழ் பெற்ற அரசியல் தலைவர்கள் மாக்கியவெல்லியின் நூலை தமது ஆட்சியியல் வேதமாக கருதி தமது தலையணைக்கு.அடியில் வைத்துக் கொண்டே உறங்கிய வரலாறும் உண்டு. ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர், ரஷியச் சர்வாதிகாரி ஸ்டாலின் ஆகியோர் இதற்கு சிறந்த உதாரணம்.

---

13. Niccolo Machiavelli. (1950) *The Discourses* (Translation: The Prince and the Discourses). New York: Random House. P.63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், அரசியல் நடைமுறைகளில் மாக்கியவெல்லியின் பாதிப்பு தெளிவாகத் தெரியவில்லையெனினும், அரசியல் கோட்பாட்டின் மீது அவர் பெற்ற பெருஞ்செல்வாக்கினை மறுப்பதற்கில்லை. இவ்வாறு பிற்கால அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. அவையாவன

1. அரசியலையும் மதத்தையும் பிரித்தமை. அரச செயற்பாடுகளில் மதத்தின் தலையீடு காணப்படக் கூடாது என்றும் இளவரசன் போபாண்டவரின் கருத்துப்படி செயற்படக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

2. ஒழுக்கத்தை தனியார் மற்றும் பொது ஒழுக்கம் என வேறுபடுத்தி நோக்கியமை. இதனடிப்படையில் குடியுரிமையாளரின் கடமைகள் வலியுறுத்தப்பட்டது.

3. தெய்வீக மற்றும் இயற்கை சட்டங்கள் நிராகரிக்கப்பட்டமை. இயற்கைச் சட்டத்தையும் தெய்வீகச் சட்டத்தையும் முதன் முதலில் நிராகரித்தவர் மாக்கியவல்லி ஆவார். இறைமையுடைய அரசினால் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றனவே அன்றி அது இயற்கையாக தோன்றுவதில்லை எனக் குறிப்பிட்டார்.

4. அரசினை மிகவுயர்ந்த அதிகாரம் மிக்க நிறுவனமாக மாற்றியமை. முதன் முதலில் ஒழுக்கத்தினை மறுத்து பலமிக்க அரசினை உருவாக்குவதைனையே நோக்கமாக கொண்டிருந்தார்;.

5. தேசியவாத எழுச்சிக்கு வழிவகுத்தமை. தேசியவாதத்தின் குறியீடாக மாக்கியவல்லி கருதப்பட்டார். நவீன அரசியல் சிந்தனைகளின் ஆரம்பகர்த்தவாக இவர் இருந்தார்.

6. மதச்சார்பின்மை கருத்துக்களை அரசியலில் கொண்டுவந்தவர் மாக்கியவல்லி. இதனடிப்படையில் மத ஆதிக்கத்தை அரசியலில் இருந்து அகற்றினார்.

7. அரசியலில் உளவியல் ரீதியான கருத்துக்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியவர். மக்களின் மனநிலையை புரிந்து அதற்கு ஏற்றமாதிரி இளவரசன் நடந்து கொள்ளவேண்டும் என்று குறிபிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. குடியரசுவாத அரசாங்கத்தை ஆதரித்து இளவரசன் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தவர்.

9. அதிகாரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி அரசின் இறைமை பற்றிய எண்ணக்கரு வளர்ச்சிக்கு உதவியவர்.

**மாக்கியவெல்லியின் அரசியல் கருத்துக்கள் தொடர்பான மதிப்பீடு**

ஓர் அரசன் தன் அதிகாரத்தை நிலை நாட்டவும் மேன்மேலும் பெருக்கவும் அவன் வஞ்சகம், சூழ்ச்சி, பொய்மை ஆகியவற்றை ஈவிரக்கமற்ற அடக்குமுறையுடன் இணைத்துக் கையாள வேண்டும் என்ற கொடூரமான ஆலோசனையை கூறியதற்காக மாக்கியவெல்லி மிகப்பெரிய கண்டனத்திற்கு உள்ளானார். இவரை ஒரு சாரார் பழி பாவங்களுக்கு அஞ்சாத பாதகன் என்று பழித்தனர்; இன்னொரு சாரார் கூர்த்த மதி கொண்ட உலகியல் உண்மையைத் துணிவுடன் உள்ளவாறே கூறிய உலகியல்வாதி எனப் போற்றினர்.

பிளேட்டோ, புனித ஒகஸ்டின் போன்ற அரசியல் சிந்தனையாளர்கள் அரசியலை மதத்துடனும் நடைமுறைக்கு சாத்தியமற்ற இலட்சியக் கருத்துக்களுடனும் இரண்டற இணைத்திருந்தார்கள். ஆனால் மாக்கியவெல்லி, வரலாற்றையும் அரசியலையும் முற்றிலும் மனித நோக்கில் விவாதித்தார்; அறநெறி நோக்கங்களை அவர் அறவே புறக்கணித்து விட்டார். அவர், ''மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?'' என்ற மைய வினாவை எழுப்பவில்லை மாறாக ''அவர்கள் நடைமுறையில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்?'' என்ற கேள்வியை எழுப்பினார். ''யார் அதிகாரம் கொண்டிருக்க வேண்டும்?'' என்று அவர் கேட்கவில்லை மாறாக ''நடைமுறையில் எவ்வாறு அதிகாரத்தைப் பெறுகிறார்கள்?'' என்று அவர் ஆராய்ந்தார். எனவே அரசியல் கோட்பாடானது தற்காலத்தில் மிகுந்த செயல்முறை நோக்குடன் நடைமுறை யதார்த்தத்தை கருத்தில்கொண்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்றால் அதற்கு ஓரளவுக்குக் காரணம் மாக்கியவெல்லியின் பங்களிப்பே ஆகும். அரசியல் கோட்பாடுகளது செல்நெறியை ஒரு புதிய திசையை நோக்கி திருப்பியவர் இவர். ஆதலாலேதான் நவீன அரசியல் சிந்தனையின் முக்கிய நிறுவனர்களில் ஒருவராக இன்றும் மாக்கியவெல்லி கருதப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''எங்கெல்லாம் பெரும்பான்மையினர் ஊழலில் உல்லாசமாக வாழ்கின்றனரோ, ஊழல் செய்வோரை ஒடுக்க வேண்டிய சட்டம் எங்கெல்லாம் சக்தியற்று செயல்படாமல் கிடக்கிறதோ அங்கெல்லாம் அனைத்து அதிகாரங்களையும் தன் கைகளில் எடுத்துக்கொண்டு உண்மையாக செயற்படும் ஒரு அரசாட்சி உருவாகும்'' ..... ''நம்பிக்கையைக் காப்பாற்றுவது தமது நலனுக்கு எதிரானதாக இருக்கும் என்றால் ஒரு விவேகமுள்ள அரசன் நம்பிக்கையைக் காப்பாற்றாமல் இருத்தலே நலம்''*

*(மாக்கியவெல்லி: ''இளவரசன்'')*

## அத்தியாயச் சுருக்கம்

- நவீன அரசியல் கோட்பாட்டின் தந்தையாக மாக்கியவெல்லி குறிப்பிடப்படுகின்றார். கால சூழ்நிலைக்கேற்ப மரபு ரீதியான அரசியல் கருத்துக்களில் இருந்து விடுபட்டு நவீன அரசியற் கருத்துக்களின் அபிவிருத்திக்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர். கிறீஸ்தவ மதத்தின் ஆதிக்கத்தில் இருந்து அரசினையும் அரசியல் அதிகாரத்தையும் விடுவித்து மதச் சார்பற்ற அரசாங்கத்தை ஏற்படுத்துவதிலும் புதிய தேசிய அரசுகளின் நிலையை உறுதிப்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தவர்.

- இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது மாக்கியவெல்லி வாழ்ந்தார். அவருடைய ஆயுட்காலம் முழுவதிலும் இத்தாலி பல சிறிய சிற்றரசுகளாகப் பிளவுபட்டுக் கிடந்தது. இத்தாலி பண்பாட்டில் உயர்ந்திருந்த போதிலும் இராணுவ வலிமையில் மிகவும் ஆற்றல் குன்றியிருந்தது. இதனால் புளோரன்ஸ் குடியரசின் மீள்வருகைக்காக மிகவும் புகழ்பெற்ற 'இளவரசன்' என்ற நூலை எழுதினார்.

- மாக்கியவெல்லி ஏராளமான நூல்களை எழுதினார். அவற்றுள் ''இளவரசன்'' (1513), ''போர்க்கலை'' ''பிளாரன்ஸ் வரலாறு'' ஆகியவை மிகவும் புகழ் பெற்றவை. இந்த நூல்கள் அனைத்திலும் அவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்தது ''இளவரசன்'' என்ற நூலேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாக்கியவெல்லியின் மிகச்சிறந்த நூல்களில் ஒன்றாக இளவரசன் குறிப்பிடப்படுகின்றது. அரசாங்கத்தை எவ்வாறு ஆட்சி புரிவது என்பது பற்றிய ஆட்சியாளனுக்கான வழிகாட்டியாக இது இருக்கின்றது. சிறந்த ஆட்சிக்கு அவசியமான முக்கிய விடயங்கள் தொடர்பான ஆழமான கலந்துரையாடல்கள் இதில் காணப்படுகின்றன.
- இந்த "இளவரசன்" நூலை "சர்வாதிகாரிகளுக்கான வழிகாட்டி" என்றும் அழைப்பதுண்டு. மாக்கியவெல்லி பொதுவாகச் சர்வாதி காரத்தை விடக் குடியரசு முறை அரசாங்கத்தையே ஆதரித்தார் ஆனால் இத்தாலியின் அரசியல் மற்றும் இராணுவ இயலாமையைக் கண்டு அவர் ஆத்திரம் கொண்டார். நாட்டை ஒற்றுமைப்படுத்து வதற்கும், பலப்படுத்துவதற்கும் வல்லமை வாய்ந்த ஓர் இளவரசன் தேவை என அவர் விரும்பினார்.
- 'இளவரசன்' நூல் விசேட நோக்கம் ஒன்றை மனதிற் கொண்டு அதனை நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட மாக்கியவல்லியின் கருத்துக்களாகும் எனவே அது அறிவியல் பூர்வமாக முன்வைக்கப்பட்ட அரசியற் கோட்பாடல்ல என விமர்சிக்கப்படுகின்றது.
- மனித இயல்பு பற்றி மாக்கியவல்லி குறிப்பிடுகின்ற போது மிருகங்களோடு ஒத்ததான பேராசை கொண்ட சுயநலமிக்க ஒருவனாகவே மனிதனை இவர் காண்கின்றார். மனிதன் சுயநலம், ஆக்கிரமிப்பு, பேராசை, தீய குணம், பயம், பிறர் பொருளை அபகரித்தல், அறியாமை மற்றும் திருப்தியின்மை போன்ற இயல்புகளைக் கொண்டுள்ளதாக மாக்கியவல்லி குறிப்பிடுகின்றார்.
- மதத்தையும் மத செயற்பாடுகளையும் மாக்கியவல்லி ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் கிறீஸ்தவ மதத்தினுடைய ஆதிக்கத்தினை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கிறீஸ்தவ மத நிறுவனம் கிறீஸ்தவ மதத்தின் உயர்வுக்காக செயற்படுவதை விடுத்து அரசியல் செயற்பாடு களில் ஆதிக்கம் செலுத்துவதை இவர் விரும்பியிருக்கவில்லை.
- மரபுரீதியாக நோக்கத்தை அடைவதற்கான கருவியாக ஒழுக்கம் காணப்பட்டது. ஆயினும் முதன்முதலில் ஒழுக்கத்தைக் கருத்திற் கொள்ளாமல் அதிகாரத்தினை முதன்மைப்படுத்தி அதனை அடைவதையே நோக்கமாக மாற்றியவர் மாக்கியவல்லி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு இளவரசன் அதிகாரத்தைப் பெறுதல், பெருக்குதல், தக்கவைத்தல் மற்றும் பேணுதல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதன் மூலமே அவனால் பலமானதும் உறுதி யானதுமான அரசை உருவாக்க முடியும் எனவும் மாக்கியவல்லி குறிப்பிடுகின்றார்.

- மாக்கியவல்லியும் அரசாங்கங்களை வகைப்படுத்தியிருக்கின்றார். சாதாரண மற்றும் தீமையான அரசாங்க வகைகளை இவர் விளக்கியுள்ளார். சாதாரண அரசாங்க வகையாக மன்னராட்சி, பிரபுக்கள் ஆட்சி மற்றும் வரையறைக்குட்பட்ட ஜனநாயகம் அல்லது அரசியலமைப்பிற்குட்பட்ட ஜனநாயகம் என்பவற்றை குறிப்பிடுகின்றார். சிறந்த அரசாங்க முறையாக சிசரோவைப் போன்று கலப்பு அரசாங்க முறையையே இவர் வலியுறுத்துகின்றார்.

- வரலாற்றில் முதல் தடவையாக மத சிந்தனைகளைப் புறக்கணித்து நோக்கமே வழிமுறைகளைத் தீர்மானிக்கின்றது என்று குறிப்பிட்ட முதலாவது நவீன அரசியற் சிந்தனையாளராக மாக்கியவெல்லி குறிப்பிடப்படுகின்றார்.

- மாக்கியவெல்லி மதத்திலிருந்து அரசியலைப் பிரித்து மதச்சார் பற்ற அணுகுமுறை மூலம் தனது கருத்துக்களை முன்வைத்தவர். அதிகாரத்தை அடைதலே அரசியலின் முக்கிய நோக்கம் என குறிப்பிட்டு அதிகாரத்தின் அடிப்படையில் அரசியலை நோக்கியவர்.

- தேசியவாதம் மற்றும் தேசிய அரசுகளின் எழுச்சிக்கு மாக்கியவல்லி முன்வைத்த கருத்துக்கள் முக்கியமானவை. மாக்கியவல்லி ஒரு சிறந்த தேசப்பற்றாளராக விளங்கினார். தேசியவாத எண்ணக் கருவின் தோற்றத்திற்கு அடித்தளமிட்டவர்களில் முக்கியமாக குறிப்பிடப்படுபவர் மாக்கியவல்லி ஆவார். அரசியல் கோட்பாடுகளது செல்நெறியை ஒரு புதிய திசையை நோக்கி திருப்பியவர் இவர். ஆதலாலேதான் நவீன அரசியல் சிந்தனையின் முக்கிய நிறுவனர்களில் ஒருவராக இன்றும் மாக்கியவெல்லி கருதப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஒப்பந்தக் கோட்பாடு
# Social Contract Theory

## அறிமுகம்

அரசின் தோற்றம் பற்றி விளக்குகின்ற பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவை அரசானது சமூக பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகளில் இருந்து தோற்றம் பெற்றவை என குறிப்பிடுகின்றன. ஆயினும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருமித்த கருத்துடைய அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடொன்று காணப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு அறிஞர்களும் தத்தமது அனுபவங்களுக்கேற்ப அரசின் தோற்றம் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவ்வாறு முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளில் சமூக ஒப்பந்தத்தினை அடிப்படையாகக்கொண்டு அரசு தோற்றம் பெற்றது என்ற கருத்தை முன்வைக்கிற கோட்பாடாக சமூக ஒப்பந்தக் கோட்பாடு அமைந்துள்ளது.[1]

மனிதர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே அரசு தோன்றியது என்பது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் கருப் பொருளாகும். இதை ஒழுங்கமைந்த ஒரு கோட்பாடாக முன்வைத்த பெருமை தோமஸ் ஹொப்ஸ் (1588-1679), ஜோன் லொக் (1632-1704) மற்றும் ஜீன் ஜக் ரூசோ (1712-1778) என்ற மூவரையுமே சாரும். இம்மூவரும் மூன்று வேறுபட்ட கருத்துக்

1. Gauthier David. (1986) *Morals by Agreement.* Oxford: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை முன்வைக்கவே இக்கோட்பாட்டைப் பயன்படுத்தினர். ஹொப்ஸ் வரம்பற்ற முடியாட்சியை நிலைநிறுத்தவும், லொக் வரம்புடைய முடியாட்சியை நிலைநிறுத்தவும், ரூசோ மக்கள் இறைமை பொருந்திய மக்கள் ஆட்சி சிறந்தது என்று குறிப்பிடவும் இக்கோட்பாட்டை பயன்படுத்தியுள்ளனர். எனினும் மூவரின் கருத்து களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகும்.

### சமூக ஒப்பந்தம் பற்றிய எண்ணக்கருவின் தோற்றம்

ஆரம்ப காலங்களில் சோக்கிரடீஸ் சமூக ஒப்பந்தம் பற்றிய கருத்துக்களை நிராகரித்திருந்த போதும் பிளேட்டோ மற்றும் கௌடில்யரின் கருத்துக்களில் சமூக ஒப்பந்தம் பற்றிய சிந்தனைகள் காணப்பட்டிருந்தன. பிளேட்டோ தனது ''குடியரசு'' நூலிலும் கௌடில்யர் ''அர்த்த சாஸ்திரம்'' என்ற நூலிலும் இது பற்றி குறிப்பிட்டி ருந்தார்கள். பிளேட்டோ குடியரசு நூலின் இரண்டாம் பாகத்தில் நீதியின் இயல்பை விளக்குவதற்கு சமூக ஒப்பந்தத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். கௌடில்யர் ''அர்த்த சாஸ்திரம்'' என்ற நூலில் மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த மனு என்ற மன்னனுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றி குறிப்பிடுகின்றார். ரோமானிய நீதிபதிகள் சாம்ராஜ்யங்களின் அதிகாரமும் அதன் இருப்பும் மக்களின் கைகளிலும் அவர்களின் சம்மதத்திலுமே காணப்படுகின்றது என குறிப்பிடுவதன் மூலம் சமூக ஒப்பந்தம் பற்றிய கருத்தை முன்வைத்திருந்தார்கள். மறுமலர்ச்சிக் காலத்தில் மார்ட்டின் லூதர் மற்றும் கால்வின் போன்றோர் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் பற்றி குறிப்பிட்டார்கள். இதன் பின்னர் தேசிய அரசுகளின் எழுச்சியைத் தொடர்ந்து அல்தூசியஸ் (Althusius) அரசின் நோக்கம் மக்களின் சமூக வாழ்க்கையினை மேம்படுத்துவதே என்று குறிப்பிட்டு மக்களுக்கும் ஆட்சியாளனுக்குமான உறவையும் சம்மதத்தினையும் வலியுறுத்துவதன் மூலம் சமூக ஒப்பந்த எண்ணக்கரு பற்றி குறிப்பிட்டார். சமூக ஒப்பந்த எண்ணக்கருவினை கோட்பாட்டு ரீதியாக வளர்த்துச் சென்றவர்களுள் தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக் மற்றும் ஜீன் ஜக் ரூசோ போன்றவர்கள் முக்கியமானவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுகின்றார்கள்.[2] இவர்களே தற்காலத்தில் சமூக ஒப்பந்த கோட்பாட்டாளர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். ஆயினும் நவீன காலத்தில் சமூக ஒப்பந்த கோட்பாட்டை வளர்த்துச் சென்ற வர்களுள் முக்கியமானவர்களாக ஜோன் ரோல்ஸ் (John Rawls) மற்றும் டேவிட் கௌதியர் (David Gauthier) போன்றோர் குறிப்பிடப்படுகின் றார்கள். ஜோன் ரோல்ஸ் நீதி பற்றிய கோட்பாட்டினை முன்வைக்கின்ற போது நீதியினை ஏற்படுத்துவதற்கான சமூக அமைப்பின் அவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளார். நீதியான சமூக அமைப்பை ஏற்படுத்து வதற்காக மக்களுடனும் அரசுடனும் சமூக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என இவர் குறிப்பிடுகின்றார். டேவிட் கௌதியர் ''உடன் பாட்டின் மூலமான ஒழுக்கங்கள்'' (Morals by Agreement) என்ற தனது நூலில் ஹொப்சினுடைய சமூக ஒப்பந்தம் பற்றிய கருத்தை நவீன சமூக நிலைக்கேற்ப மறுசீரமைக்க முயன்றார். பலமுடைய ஆட்சி யாளனின் அவசியத்தை வலியுறுத்துகின்ற இவர் அவன் பகுத்தறி வுள்ளவனாகவும் மக்களுடனான சமூக ஒப்பந்தம் மூலம் தோற்று விக்கப்பட்டவனாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடுகின்றார்.

## சமூக ஒப்பந்த கோட்பாட்டின் நோக்கங்கள்

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களான ஹொப்ஸ்,லொக் மற்றும் ரூஸோ ஆகிய மூவரும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட மூன்று அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு சமூக ஒப்பந்த கோட்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டனர். இறுதி அரசியல் நோக்கங்களுக்குப் பொருந்தும் வகையில் மூவரும் தமது இயற்கை நிலை பற்றிய கருத்தை வெளிப்படுத்தினர்; இக் கருத்துக்களின் படி அரசை ஒழுங்கமைத்தல் தொடர்பாக ஹொப்சும் லொக்கும், ரூசோவும் ஒத்த கருத்தினைக் கொண்டிருந்தனர். இயற்கை நிலையிலிருந்து விடுபட்டு சிவில் சமூகமாக ஒழுங்கமைதல் என்பது அரசை அமைத்தலாகும் என்று மூவரும் கருதுகின்றனர். ஆனால் சிவில் அரசாங்கம் பற்றிய மூவரது கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகும். அதற்குக் காரணம் சமூக ஒப்பந்தத்தின் மூலம்

---

2. Hampton Jean. (1986) *Hobbes and the Social Contract Tradition.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மூவரும் நியாயப்படுத்த முயன்ற அரசியல் நோக்கம் வேறுபட்டனவாக இருந்தமையாகும்.[3] இறுக்கமான முடியாட்சி வாதியாக இருந்த ஹொப்ஸ் அவர் காலத்து இங்கிலாந்தின் 2 ஆம் ஜேம்ஸ் மன்னனின் அதிகாரத்தை உறுதிப்படுத்த விரும்பி தன்னிகரற்ற முடியாட்சியை நிர்மாணிப்பதற்கு சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்தினார். பாராளுமன்ற வாதியான லொக் 1688 மாண்புமிகு புரட்சியின் மூலம் இங்கிலாந்து முதலாளித்துவ வகுப்பினர் பெற்ற வெற்றியைப் பாதுகாக்க முயன்றார். அதற்குச் சமாந்திரமான வகையில் மன்னரின் அதிகாரத்தைக் குறைப்பதற்குத் தமது அரசியல் கருத்தை ரூசோ முன்வைத்தார். ரூசோ தாம் வாழ்ந்த பிரான்சின் சர்வாதிகார லூயி மன்னரின் ஆட்சியால் அல்லலுற்றவராவார். லொக் குறிப்பிட்ட கோட்பாட்டின் மூலம் இறுதியில் உண்மையான மக்களாட்சி அன்றி சனநாயகத்தின் பெயரால் சில்லோராட்சியே கொண்டு நடத்தப்பட்டது என்று ரூசோ கண்ணுற்றார். ரூசோ ஒரு தனிமனிதனின் சர்வாதிகார ஆட்சியையும் சொத்து படைத்தோரின் சில்லோராட்சியையும் வன்மையாக எதிர்த்தார். சகலரும் பங்கேற்கும் ஓர் ஆட்சியை நிர்மாணிப்பதே அவரது நோக்கமாகும். அதற்கு ரூசோ தாம் பிறந்த ஜெனீவா நகரில் நிலவிய நேரடி சனநாயகத்தின் அனுபங்களைப் பயன்படுத்திக் கொண்டார்.

### சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் இயல்பு

சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு அரசு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதினை விளக்குகின்றது. மக்களினால் செய்து கொள்ளப்பட்ட சமூக ஒப்பந்தம் ஒன்றின் விளைவாகவே அரசு தோற்றம் பெற்றது என்பதினை இக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. அதாவது அரசு என்பது ஓர் ஒப்பந்தத்தின் மூலம் மனிதனால் உருவாக்கப்பட்டது என குறிப்பிடப்படுகின்றது.[4] இது அரசின் தோற்றம் பற்றிய தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை நிராகரிக்கின்றது. அத்துடன் மக்கள் இயற்கை நிலையில் எவ்வாறு வாழ்ந்தார்கள், எதற்காக அவர்கள்

3. Mills, Charles. (1997) *The Racial Contract*. Cornell University Press.
4. Gauthier, David. (1990) *Moral Dealing: Contract, Ethics, and Reason*. Cornell: Cornell University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அதிகாரங்களை விட்டுக் கொடுத்து ஓர் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள முன்வந்தார்கள், அதன் மூலம் எவ்வாறான அரசாங்கம் ஒன்றை அமைக்க விரும்பினார்கள், அந்த அரசாங்கத்தின் அதிகார எல்லையும் இறமையும் எவ்வாறு காணப்பட்டது என்பது போன்ற அம்சங்களை இக் கோட்பாடு உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் சமூக ஒப்பந்த கோட்பாடானது மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கின்றது அவையாவன 1) அரசுள்ள மற்றும் அரசற்ற சமுதாயம் ஒன்று எவ்வாறு காணப்படும் என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மக்களின் உரிமைகள் எவ்வாறிருக்கும் மற்றும் எவ்வாறு பேணப்படும் எனபதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது 2) இறைமையுள்ள அதிகாரம் ஒன்றின் மூலமே மக்களின் பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு மற்றும் உறுதிப்பாடு என்பன பேணப்பட முடியும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. மக்கள் இயற்கை நிலையில் இருந்து விடுபட்டு சமூக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதன் மூலம் இறைமை அதிகாரத்தை ஏற்படுத்தி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர் என சமூக ஒப்பந்தக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. 3) ஒரு நாட்டின் குடியுரிமையாளர்கள் அரசினை மதிக்கவும் அதற்கு கீழ்ப்படியவும் வேண்டும் என்பதை இக் கோட்பாடு எடுத்துச் சொல்கின்றது. அவ்வாறு செய்வதால் மட்டுமே ஆட்சியானால் பாது காப்பையும் உறுதிப்பாட்டையும் மக்களுக்கு வழங்க முடியும் என்பதனையும் இது குறிப்பிடுகின்றது. இவ்வாறு சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் இயல்பு காணப்படுகின்றது.

### சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் மீதான விமர்சனங்கள்

18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய அரசியல் சிந்தனையில் ஒரு புரட்சி யை ஏற்படுத்துவதில் சமூக ஒப்பந்தக் கோட்பாடு வெற்றி பெற்றாலும் பிற்காலப்பகுதியில் அது பலத்த விமர்சனங்களுக்குட்பட்டதுடன் ஒரு கோட்பாடு என்ற ஏற்புத் தன்மையையும் இழந்தது. சமூக ஒப்பந்தத் தினால் அரசு தோன்றியது என்ற கருத்தை வரலாற்றுக் காரணங்கள் மூலம் நீரூபிக்க முடியாதுள்ளது எனவும் எந்த ஒரு நாட்டிலும் அவ்வாறு நிகழ்ந்ததும் இல்லை எனவும் குறிப்பிட்டு இக்கருத்து உண் மைக்குப் புறம்பானது என கண்டிக்கப்படுகின்றது. இக்கோட்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ரீதியாகவோ, தொல்பொருள் ரீதியாகவோ, பகுத்தறிவு முறையிலோ, சட்ட ரீதியாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது என அறிஞர்கள் வாதிட்டனர்.[5]

சமூக ஒப்பந்தக் கோட்பாடு தர்க்கரீதியற்றதாகும். சமூக ஒப்பந்தம் கூறும் இயற்கை நிலை என்ன மட்டத்தில் நிலவினாலும் அதனை தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஒன்றுமே தெரியாத காட்டு மிராண்டிகள் திடீரென ஓர் ஒப்பந்தத்திற்கு வந்து ஒரு நாட்டையும் அரசையும் தோற்றுவித்தார்கள் என்ற கருத்து பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதாகும் என விமர்சிக்கப்படுகின்றது. ஆயினும் அக்காலத்தில் தெய்வீக உரிமை அடிப்படையில் அரசு தோற்றம் பெற்றது என்ற கருத்தை நிராகரித்து முதன்முதலில் மக்களினால் சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அரசு தோற்றுவிக்கப் பட்டது என்ற தர்க்க ரீதியான பகுத்தறிவு அடிப்படையை அரசியலில் பயன்படுத்தியவர்களுள் முக்கியமானவராக ஹொப்ஸ் குறிப்பிடப் படுகின்றார்.

சமூக ஒப்பந்தமானது ஒரு செயற்கையாக உருவாக்கப்பட்ட தாகும். அதன் மூலம் மனிதனையும் மானுடத்தையும் பற்றி ஒரு பிழையான கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. சமூக ஒப்பந்த கோட்பாட்டாளர்கள் மூவரும் தமது அரசியல் நோக்கங்களுக்கு பொருந்தும் வகையில் இயற்கை நிலைச் சமூகம், சிவில் அரசாங்கம் அமைக்கப்படுதல் என்பன பற்றிய கருத்துகளை வகுத்துள்ளனரே அன்றி அரசின் தோற்றம், வளர்ச்சி பற்றி யதார்த்த பூர்வமான முறையில் ஆராயவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் வேறு சில அறிஞர்கள் செயற்கையாகவும் கற்பனையாகவும் உருவாக்கப்பட்ட கருதுகோள்களின் மூலமும் உண்மையான விஞ்ஞான அறிவு பெறப்படலாம் என குறிப்பிடுகின்றனர்.

5. Braybrooke David. (1976) *The Insoluble Problem of the Social Contract.* Dialogue Vol. XV, No. 1: P 3-37.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினால் ஏற்பட்டுள்ள பங்களிப்புகள்**

அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசு அரசாங்கம், இறைமை பற்றிய எண்ணக்கரு, ஆட்சி முறை பற்றிய கருத்துக்கள், ஜனநாயக அடிப்படை என்பன வளம் பெறுவதற்கு துணை புரிந்துள்ளது.

அரசு பற்றிய மத அடிப்படையிலான கருத்தின் வீழ்ச்சிக்கு துணைபுரிந்தமை முக்கியமான அம்சமாகும். அரசின் ஆரம்பம் முதல் பல நூற்றாண்டு காலமாக நிலையூன்றி இருந்த தெய்வீக உரிமை வாதத்தை பின்தள்ளிவிட்டமை அரசறிவியலுக்கு சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினால் ஏற்பட்ட ஒரு பெரும் பங்களிப்பு ஆகும். அரசானது மக்கள் சம்மதத்தின் பேரில் உருவாகியது என்ற கருத்து அரசு கடவுளின் உருவாக்கம் என்ற தெய்வீக உரிமை வாதத்தின் அடிப்படைத் தளத்தை உடைத்து விட்டது. பொது மக்களே ஆட்சியாளனை நியமித்து அதிகாரத்தை வழங்கினர் என்ற கருத்து கடவுளின் பிரநிதியே அரசன் என்ற தெய்வீக உரிமை வாதத்தையும் நிராகரித்து விட்டது. இதன் காரணமாக அரசு என்பது மனிதர்களால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும் என்ற கருத்து வலுப்பெற உதவியமை முக்கியமான பங்களிப்பாக குறிப்பிடப்படுகின்றது.

மக்கள் சம்மதத்தின் மூலமே அரசு தோன்றியது என்ற கருத்து அரசின் தோற்றத்திற்கு ஒரு ஜனநாயகத் தன்மையை வழங்கியது. இதன் படி அங்கீகாரம் பெற்ற சகல அரசுகளும் மக்களின் விருப்பையும் சம்மதத்தையும் பெற வேண்டும். ஆட்சியாளனுக்கும் மக்களுக்கும் இடையிலான பிரிக்க முடியாத தொடர்பின் காரணமாக இறுதியில் ஆட்சியாளன் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவனாகின்றான். இவ்வாறு நவீன ஜனநாயகக் கருத்துக்களின் ஆரம்பத்துக்கான அடித்தளத்தை சமூக ஒப்பந்தக் கோட்பாடு இட்டு வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- *அரசின் தோற்றம் பற்றி விளக்குகின்ற பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளில் சமூக ஒப்பந்தத்தினை அடிப்படையாகக்கொண்டு அரசு தோற்றம் பெற்றது என்ற கருத்தை முன்வைக்கிற கோட்பாடாக சமூக ஒப்பந்தக் கோட்பாடு அமைந்துள்ளது.*
- *மனிதர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே அரசு தோன்றியது என்பது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் கருப்பொருளாகும். இதை ஒழுங்கமைந்த ஒரு கோட்பாடாக முன்வைத்த பெருமை தோமஸ் ஹொப்ஸ் (1588-1679), ஜோன் லொக் (1632-1704) மற்றும் ஜீன் ஜக் ரூசோ (1712-1778) என்ற மூவரையுமே சாரும்.*
- *இம்மூவரும் மூன்று வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கவே இக்கோட்பாட்டைப் பயன்படுத்தினர். ஹொப்ஸ் வரம்பற்ற முடியாட்சியை நிலைநிறுத்தவும், லொக் வரம்புடைய முடியாட்சியை நிலைநிறுத்தவும், ரூசோ மக்கள் இறைமை பொருந்திய மக்கள் ஆட்சி சிறந்தது என்று குறிப்பிடவும் இக் கோட்பாட்டை பயன்படுத்தியுள்ளனர். எனினும் மூவரின் கருத்துக்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகும்.*
- *ஆரம்ப காலங்களில் சோக்கிரடீஸ் சமூக ஒப்பந்தம் பற்றிய கருத்துக்களை நிராகரித்திருந்த போதும் பிளேட்டோ மற்றும் கௌடில்யரின் கருத்துக்களில் சமூக ஒப்பந்தம் பற்றிய சிந்தனைகள் காணப்பட்டிருந்தன. ரோமானிய நீதிபதிகள் சாம்ராஜ்யங்களின் அதிகாரமும் அதன் இருப்பும் மக்களின் கைகளிலும் அவர்களின் சம்மதத்திலுமே காணப்படுகின்றது என குறிப்பிடுவதன் மூலம் சமூக ஒப்பந்தம் பற்றிய கருத்தை முன்வைத்திருந்தார்கள்.*
- *நவீன காலத்தில் சமூக ஒப்பந்த கோட்பாட்டை வளர்த்துச் சென்றவர்களுள் முக்கியமானவர்களாக ஜோன் ரோல்ஸ்* (John Rawls) *மற்றும் டேவிட் கௌதியர்* (David Gauthier) *போன்றோர் குறிப்பிடப்படுகின்றார்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதினை விளக்குகின்றது. மக்களினால் செய்து கொள்ளப்பட்ட சமூக ஒப்பந்தம் ஒன்றின் விளைவாகவே அரசு தோற்றம் பெற்றது என்பதினை இக் கோட்பாடு குறிப்பிடுகின்றது.*
- *அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசு அரசாங்கம், இறைமை பற்றிய எண்ணக்கரு, ஆட்சி முறை பற்றிய கருத்துக்கள், ஜனநாயக அடிப்படை என்பன வளம் பெறுவதற்கு துணை புரிந்துள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 11*

# தோமஸ் ஹொப்சின் அரசியல் கருத்துக்கள்

## Thomas Hobbes (1588-1679)

### அறிமுகம்

தோமஸ் ஹொப்ஸ் வன்முறைகளும் பிரச்சனைகளும் நிறைந்த சூழ்நிலையில் 1588இல் இங்கிலாந்தில் மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். தந்தையின் புறக்கணிப்பினால் சித்தப்பாவுடன் வாழ்ந்து வந்தார். சிறு வயதிலேயே கல்வியில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய இவர் Oxford பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று பட்டம் பெற்றார். ஐரோப்பாவில் மத சீர்திருத்தங்களும் மறுமலர்ச்சியும் இடம்பெற்ற காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

### மத சீர்திருத்த இயக்கம்

இவர் பிறந்த காலப்பகுதியிலேயே மார்ட்டின் லூதரின் மத சீர்திருத்த இயக்கம் பிரபல்யம் பெற தொடங்கியிருந்தது. மார்ட்டின் லூதரின் மத சீர்திருத்த இயக்கம் மத விடயங்களில் திருச்சபையின் ஆதிக்கத்தைக் குறைப்பதில் அதிக பங்காற்றியது. இது அரசியல் விடயங்களிலும் திருச்சபையின் ஆதிக்கத்தைக் குறைத்தது. மார்ட்டின் லூதர் திருச்சபையின் ஊடாகவே கடவுளை அடையமுடியும் என்ற கருத்தை மாற்றி நேரடியாக ஒவ்வொரு தனிநபரும் கடவுளை அடைவதற்கான வழிவகைகளை எடுத்து விளக்கினார். ஆயினும் இந்த மதசீர்திருத்த இயக்கம் துரதிஸ்டவசமாக கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தியர்களுக்கும் இடையில் வன்முறை ஏற்படுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுத்தது. இதுவே பின்னர் ஐரோப்பிய சிவில் யுத்தமாகவும் மாற்றமடைந்தது. இவ்வாறு காணப்பட்ட மத சீர்திருத்த இயக்கமும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் ஹொப்சினுடைய அரசியல் கருத்துக்களினைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகித்தன.[1]

**மத சீர்திருத்த இயக்கம் அரசியலில் ஏற்படுத்திய தாக்கம்**

மத அடிப்படையில் இந்த மறுமலர்ச்சி இயக்கம் ஒரு பெரிய விடயமாக காணப்பட்டிருக்கவில்லை. ஆனால் அரசியலில் இது ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியது. இது நவீன தேசிய அரசுகளின் தோற்றத்திற்கான முக்கியமான அடித்தளமாக அமைந்தது.[2] இது ஐரோப்பிய மன்னர்கள் மதத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கு வழிவகுத்தது. ஹொப்ஸ் வாழ்ந்த இங்கிலாந்திலும் இந்த மறுமலர்ச்சி இயக்கம் காணப்பட்டது. இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்தியர்கள் மன்னருக்கு வரம்பற்ற அதிகாரத்தினை வலியுறுத்தியதுடன் மதம் அரசியலில் தலையிடுவதனை முற்றாக நிறுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டனர். இதுமட்டுமன்றி புரட்டஸ்தாந்தியர்கள் பின்னர் பாராளுமன்றவாதிகளுக்கும் தமது ஆதரவை வழங்கினர். இது இங்கிலாந்தில் மன்னருக்கும் பாராளுமன்றவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற வன்முறைக்கும் 1688ல் இடம்பெற்ற இரத்தம் சிந்தா புரட்சிக்கும் (Glorious Revolution) வழிவகுத்தது. இரத்தம் சிந்தா புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் மன்னரின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டதுடன் அரசியலமைப்புக்குட்பட்ட மன்னராட்சியும் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் ஹொப்ஸ் இங்கிலாந்தில் மன்னராட்சிக்கு தனது ஆதரவை வழங்கியிருந்ததுடன் வரம்பற்ற முடியாட்சியையும் வலியுறுத்தினார்.

---

1. Howard Warrender. (1957) *The Political Philosophy of Hobbes: His Theory of Obligation.* Oxford: Clarendon press.
2. Sheldon.S. Wolin. (1960) *Politics and Vision: Continuity and Innovation in Western Political Thought.* Boston.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbes (1588–1679)**



ஆங்கில அரசியற் சிந்தனையாளர்களுள் முதன்மை யானவர். நடுத்தர குடும்பத்திற் பிறந்தவர். ஹொப்ஸ் குடும்பத்தைக் கைவிட்ட திருச்சபை போதகர் ஒருவருடைய மகன் ஆவார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். வேல்சின் இளவரசர் சார்லசினுடைய ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். ஆங்கிலப் புரட்சியினால் ஏற்பட்ட உள்நாட்டு குழப்பங்கள் மற்றும் உறுதியற்ற ஆட்சி என்பன இங்கிலாந்தில் நிலவிய காலத்தில் தனது கருத்துக் களை முன்வைத்துள்ளார். அரிஸ்டோட்டலுக்கு பின்னர் மனித இயல்பு மற்றும் நடத்தை பற்றி மிக விரிவாக ஆராய்ந்து கோட்பாட்டு ரீதியான கருத்துக்களை இவர் வெளியிட்டுள்ளார். சமூக ஒப்பந்தம் பற்றிய எண்ணக்கருவை முதன் முதலில் கோட்பாட்டு ரீதியாக மாற்றியமைத்த பெருமை இவருக்குரியது. தெய்வீக உரிமை பற்றிய கருத்துக்கள் காணப்பட்ட வேளையில் பகுத்தறிவு அடிப்படையில் அரசியற் கருத்துக்களை வெளியிட்டு அரசியலை விஞ்ஞான ரீதியாக மாற்றியமைத்தவர். இவரது நூலான ''லெவியதான்'' என்பதன் மூலம் வரம்பற்ற முடியாட்சியை இவர் முன்வைத்துள்ளார்.

### வாழ்க்கைப் பின்னணியும் வரம்பற்ற முடியாட்சியும்

ஹொப்ஸ் வாழ்ந்த காலத்தில் ஜனநாயக அடிப்படையிலான பாராளு மன்றவாதிகளின் செயற்பாடுகள் காணப்பட்டிருந்த போதும் இவர் தனது அரசியல் கோட்பாட்டின் மூலம் மன்னராட்சிக்கே ஆதரவை வழங்கியிருந்தார். வரம்பற்ற முடியாட்சியை இவர் ஆதரித்தார்.[3] இங்கு சில முக்கியமான வினாக்கள் காணப்படுகின்றன. ஏன் ஹொப்ஸ் ஜனநாயக அடிப்படையிலான பாராளுமன்றவாதிகளை ஆதரிக்காமல் வரம்பற்ற முடியாட்சியை ஆதரித்தார்? அதற்கான காரணங்கள் என்ன? அவர் வாழ்ந்த கால சூழலும் அவருடைய வாழ்க்கைப் பின்னணியும் இதில் ஏற்படுத்திய தாக்கங்கள் யாவை என்பது போன்ற வினாக்களுக்கு விடைகாண்பது அவசியமானது.

3. Hampton. Jean. (1986) *Hobbes and the Social Contract Tradition.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொப்ஸ் வாழ்ந்த காலத்து இங்கிலாந்தின் சூழ்நிலை பல முக்கிய அம்சங்களைக் கொண்டு காணப்பட்டிருந்தது. அவையாவன

1. ஆங்கில சிவில் யுத்தம் இடம்பெற்றமை. (The English Civil War 1642-1651) இது மன்னராட்சிக்கு ஆதரவு வழங்கிய பிரபுக்களுக்கும் ஜனநாயக அடிப்படையினை வலியுறுத்திய பாராளுமன்றவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தமாகும். இறுதியில் பாராளுமன்றவாதிகளின் வெற்றியுடன் இந்த யுத்தம் முடிவுக்கு வந்தது.

2. வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை. (Peace of Westphalia 1648) இது ஐரோப்பாவில் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த இரு பெரும் போர்களை முடிவுக்கு கொண்டுவந்திருந்தது. இதில் ஒன்று முப்பது வருடப் போரை முடிவுக்கு கொண்டுவந்தமை. (Thirty Years' War 1618-1648) ஆரம்பத்தில் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தியர்களுக்கும் இடையில் தோன்றிய இந்த யுத்தம் பின்னர் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான யுத்தமாக மாற்றமடைந்தது. இரண்டாவது எண்பது வருடப் போரை முடிவுக்கு கொண்டுவந்தமை. (Eighty Years' War 1568-1648) இது ஸ்பானியர்களுக்கும் ஒல்லாந்தர்களுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தமாகும்.

3. இரத்தம் சிந்தா புரட்சி இடம்பெற்றமை (Glorious Revolution-1688) இது மன்னராட்சிக்கும் பாராளுமன்றவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற புரட்சி ஆகும். பாராளுமன்றவாதிகள் குழு ஒன்று புரட்சியொன்றின் மூலம் இங்கிலாந்தின் இரண்டாம் ஜேம்ஸ் மன்னரை பதவில் இருந்து அகற்றிய நிகழ்வே இரத்தம் சிந்தா புரட்சி ஆகும்.

4. ஆங்கில உரிமைகள் மசோதா கொண்டு வரப்பட்டமை. (The English Bill of Rights - 1689) இது இங்கிலாந்து பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும். மக்களின் மனித உரிமைகளையும் சிவில் உரிமைகளையும் உறுதிப்படுத்தி மன்னரின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்ட சட்டம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலப்பகுதியில் நிகழ்ந்த இந்த முக்கிய அம்சங்களைப் பார்க்கும்போது இதில் பெரும்பகுதி வன்முறையும் புரட்சியும் யுத்தங்களும் நிறைந்த காலப்பகுதியாகவே இருந்திருக்கின்றது. 1648ல் வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதும் அங்கு உடனடியாக அமைதி ஏற்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஓரளவுக்கு அமைதி ஏற்பட்டாலும் வன்முறைகளும் காணப் பட்டன. அங்கு முற்றாக அமைதி நிலை காணப்பட்டிருக்கவில்லை. உண்மையில் ஹொப்ஸ் இறந்ததன் பின்னர் தான் 1689இல் ஓரளவுக்கு அமைதிநிலை ஏற்படத் தொடங்கியிருந்தது. இங்கிலாந்தில் இக்காலத்தில் மதத்திற்கும் அரசுக்கும் இடையிலும், மன்னருக்கும் பாராளுமன்றவாதிகளுக்கும் இடையிலும், கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தியர்களுக்கும் இடையிலும் வன்முறைகள் நிறைந்து காணப்பட்டன. இவ்வாறு வன்முறைகள் அதிகமாக காணப்பட்ட இந்நிலையில் உண்மையான அமைதி ஏற்படுவதற்கு வரம்பற்ற முடியாட்சியே ஒரே வழி என ஹொப்ஸ் நினைத்திருக்கலாம். பலமிக்க அரசொன்றை அமைப்பதன் மூலமே வன்முறையை கட்டுப்படுத்த முடியும் என ஹொப்ஸ் நினைத்ததன் விளைவே அவரது வரம்பற்ற முடியாட்சி ஆகும்.

17ஆம் நூற்றாண்டு இங்கிலாந்து வர்த்தக வாணிபத்தின் மையமாகவும் விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களின் தலைமையகமாகவும் காணப்பட்டது. இந்நிலை இங்கிலாந்தில் தொடர்வதற்கு அமைதி தேவைப்பட்டது. இதனால் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான அமைதியை ஏற்படுத்த வரம்பற்ற முடியாட்சியை ஹொப்ஸ் தெரிவு செய்திருந்தார்.

வரம்பற்ற முடியாட்சியை ஹொப்ஸ் ஆதரித்ததற்கு அவர் எதிர்கொண்ட பாதுகாப்பு பிரச்சனைகளும் காரணங்களாக குறிப்பிடப்படுகின்றன. இங்கிலாந்திலும் பிரான்சிலும் ஹொப்ஸ் பெருமளவுக்கு பாரதூரமான பாதுகாப்பு பிரச்சனைகளை எதிர்கொண்டிருந்தார். இங்கிலாந்தில் மன்னராட்சிக்கு ஆதரவாக இருந்த இவர் பாராளுமன்றவாதிகளின் வெற்றியைத் தொடர்ந்து 1640ல் பிரான்சுக்கு தப்பியோடினார். பிரான்சில் 1646-1648க்கும் இடைப்பட்ட காலத்தில் பாதுகாப்பு பிரச்சனைகளை எதிர்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1651இல் மீண்டும் இங்கிலாந்திற்கு திரும்பி பாதுகாப்புமிக்க உறுதியான ஆட்சியை அமைப்பதற்காக உழைத்தார். இதற்காக 1651ல் ''லெவியாதன்'' (Leviathan) என்ற நூலை எழுதி அதில் பாதுகாப்புமிக்க உறுதியான ஆட்சியை அமைப்பதற்கான ஒரே வழி வரம்பற்ற முடியாட்சியே என குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இந்நூல் அவர் இறந்ததன் பின்னரே 1688இல் முதன் முதலில் நெதர்லாந்தில் வெளியிடப்பட்டது.

**''லெவியாதன்'' (Leviathan)**

தோமஸ் ஹொப்ஸ் சட்டம், வரலாறு, அரசியல் போன்ற பல துறைகள் சார்ந்த பல நூல்களை வெளியிட்டிருந்தாலும் அரசியல் சார்ந்து வெளியிட்ட நூல்களில் பிரதானமானது ''லெவியாதன்'' ஆகும். ''லெவியாதன்'' என்ற நூல் ஹொப்ஸ் கொண்டுள்ள அரசியல் கருத்தின் குறியீடாக குறிப்பிடப்படுகின்றது. [4]''லெவியாதன்'' என்பது பைபிளின் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் கடல் விலங்கு ஆகும். அது பிற உயிரினங்களை அழித்துவிடும் ஆற்றல் மிக்க கொடிய விலங்காகும். எனவே ''லெவியாதன்'' என்ற பெயரை தனது நூலின் பெயராக வைத்து அதன் மூலம் அரசியல் அதிகாரம் பலமுடையவனின் கைகளில் இருக்கின்ற பொழுது நாட்டை உறுதியாக பாதுகாக்க முடியும் என்பதைக் ஹொப்ஸ் குறிப்பிட்டுள்ளார். ஹொப்ஸ் தனது நாட்டிலிருந்து பிரான்சிற்கு இடம்பெயர்ந்து வாழ்ந்த காலத்தில் இந்நூலை எழுதினார். மீண்டும் பிரித்தானியாவில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்துவதே இந்நூலின் பிரதானமான நோக்கமாக காணப்பட்டது.

''லெவியாதன்'' நூல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதி மனித இயல்பைப் பற்றி விரிவாக ஆராய்கின்றது. இரண்டாம் பகுதி அரசியல் பற்றியும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் பற்றியும் ஆராய்கின்றது. மூன்றாம் பகுதி கிறீஸ்தவ மதம் பற்றியும் அதனுடைய செயற்பாடுகள் பற்றியும் ஆராய்கின்றது. நான்காம் பகுதி மன்னராட்சி பற்றியும் அதனுடைய இருண்ட காலம் பற்றியும் ஆராய்கின்றது. உலகின் மிகச்சிறந்த அரசியல் நூல்களுள்

---

4. Hobbes. (1651) "*Leviathan*". Createspace Publishing Platform.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகவும் பகுத்தறிவு அடிப்படையில் அமைந்த நூலாகவும் இவரது நூல் போற்றப்படுகின்றது.

இவரது நூல் மன்னருக்கு வரம்பற்ற அதிகாரத்தை வலியுறுத்து கின்ற நூலாக இருப்பதால் மன்னர்களின் ஆதரவு இதற்கு இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டாம் சார்ல்ஸ் மன்னனின் ஆதரவு இவருக்கு கிடைக்கவில்லை. அத்துடன் மதவாதிகள் பிரான்சிலும் பிரித்தானியாவிலும் இந்நூலை மிகவும் கடுமையாக விமர்சித்தார்கள். ஆயினும் பிற்காலத்தில் மன்னராட்சி நிலைபெறுவதற்கும் தேசிய அரசுகளின் எழுச்சிக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாக விளங்கியது.

### தோமஸ் ஹொப்சின் அணுகுமுறை

அரசறிவியல் ஆய்வில் புதிய அணுகுமுறையை பயன்படுத்தி அரசறி வியல் கற்கை நெறியினை விஞ்ஞானத் தன்மையுடையதாக மாற்றியவர் ஹொப்ஸ் ஆவார். ஹொப்ஸ் தனது ஆய்விற்கு கடந்தகால வரலாற்று நிகழ்வுகளையும் அனுபவங்களையும் (வரலாற்று ஆதாரங்களை) அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையைப் பயன்படுத்தாது கற்பனையான கருதுகோள்களை உருவாக்கி அதன்மூலம் உண் மையைக் கண்டறியும் பகுப்பாய்வு அணுகுமுறையைப் பயன்படுத் தினார். இதன்மூலம் அரசறிவியல் ஆய்வில் முதன்முதலாக பகுத்தறிவு ரீதியான அறிவியலைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டார்.[5]

இயற்கை விஞ்ஞானத்தினை அடிப்படையாகக் கொண்ட கணிதவியல் ஆய்வுகளில் எவ்வாறு அறியப்படாத மாறி ஒன்றைக் கொண்டு (x மாறி) அறிந்த மாறி கண்டறியப்படுகின்றதோ அதே போன்று சமூக விஞ்ஞான ஆய்வுகளிலும் கருதுகோள்களின் ஊடாக அறியப்படாத கற்பனை நிகழ்வுகளைக் கொண்டு யதார்த்தமான உண்மையைக் கண்டறிவதற்கு ஹொப்ஸ் வழிகாட்டினார்.[6] இவரது இந்த அணுகுமுறை சமூக விஞ்ஞான ஆய்வுகள் விஞ்ஞானத் தன்மை உடையதாக விளங்குவதற்கு வழிவகுத்தது.

5. Macpherson.C.B. (1962) *The Political Theory of Possessive Individualism:* Hobbes to Locke. Oxford: Oxford University Press.
6. Sommerville. Johann. P. (1992) *Thomas Hobbes:* Political Ideas in Historical Context. New York: St. Martin's Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ''லெவியாதன்'' (Leviathan)




தோமஸ் ஹொப்ஸ் அரசியல் சார்ந்து வெளியிட்ட நூல்களில் பிரதானமானது ''லெவியாதன்'' ஆகும். ''லெவியாதன்'' என்ற நூல் ஹொப்ஸ் கொண்டுள்ள அரசியல் கருத்தின் குறியீடாக குறிப்பிடப்படுகின்றது. ஹொப்ஸ் தனது நாட்டிலிருந்து பிரான்சிற்கு இடம்பெயர்ந்து வாழ்ந்த காலத்தில் இந்நூலை எழுதினார். மீண்டும் பிரித்தானியாவில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்துவதே இந்நூலின் பிரதானமான நோக்கமாக காணப்பட்டது. சமூக அமைப்பு பற்றியும், சட்டரீதியான அரசாங்கம் பற்றியும், சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றியும் மற்றும் பகுத்தறி அடிப்படையான அரசியற் கருத்துக்களின் அவசியம் பற்றியும் இந்நூல் விளக்குகின்றது. ''லெவியாதன்'' நூல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதி மனித இயல்பைப் பற்றி விரிவாக ஆராய்கின்றது. இரண்டாம் பகுதி அரசியல் பற்றியும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் பற்றியும் ஆராய்கின்றது. மூன்றாம் பகுதி கிறீஸ்தவ மதம் பற்றியும் அதனுடைய செயற்பாடு கள் பற்றியும் ஆராய்கின்றது. நான்காம் பகுதி மன்னராட்சி பற்றியும் அதனுடைய இருண்ட காலம் பற்றியும் ஆராய்கின்றது. உலகின் மிகச்சி றந்த அரசியல் நூல்களுள் ஒன்றாகவும் பகுத்தறிவு அடிப்படையில் அமைந்த நூலாகவும் இவரது நூல் போற்றப்படுகின்றது. பிற்காலத் தில் இவரது நூல் கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்டது. ஆயினும் இங்கிலாந்தில் உறுதியான ஆட்சி நிலைபெறுவதற்கும் தேசிய அரசுகளின் எழுச்சிக்கும் இவரது நூல் பெரிதும் துணை புரிந்துள்ளது.

### விஞ்ஞான புரட்சி (Scientific Revolution)

ஐரோப்பாவில் மதத்தின் ஆதிக்கம் அரசியல் ரீதியாக மட்டுமன்றி கருத்தியல் ரீதியாகவும் காணப்பட்டது. அரசியலில் காணப்பட்ட மத ஆதிக்க நிலையினை இல்லாமல் செய்வதற்காக பல்வேறு போராட் டங்களும் புரட்சிகளும் இடம்பெற்றன. இதில் மார்ட்டின் லூதர் முன்னெடுத்த மறுமலர்ச்சி இயக்க செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கன. மதத்தை அரசியலில் இருந்து விடுவித்து தூய்மையான மத செயற்பாடு களை முன்னெடுப்பதற்காக இவர் போராட்டங்களை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மதத்தின் ஆதிக்கத்தில் இருந்து அரசு விடுபடுவதற்கும் பின்னர் மன்னராட்சி நிலைபெறுவதற்கும் பாராளுமன்றவாதிகளின் ஆட்சி இடம்பெறுவதற்கும் வழிவகுத்தது. ஆனால் மதத்தின் ஆதிக்கம் கருத்தியல் ரீதியாக தொடர்ந்தும் அரசியலில் காணப்பட்டது. அரசியல் கருத்துக்களையும் அதிகாரத்தையும் தீர்மானிப்பதில் இறையியல் கருத்துக்கள் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இதை மாற்றுவதற்காக முதலில் கருத்தியல் ரீதியாக புரட்சி செய்த வர்களில் முக்கியமானவர் மாக்கியவல்லி ஆவார். இவருக்கு பின்னர் இறையியல் கருத்துக்களை மறுத்து அறிவியல் கருத்துக் களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி விஞ்ஞான அடிப்படையில் கருத்துக்களை முன்வைத்தவர்களில் ஹொப்ஸ் முக்கியமானவராக குறிப்பிடப்படுகின்றார்.

ஐரோப்பிய பல்கலைக்கழக பாடத்திட்டங்களில் சென் தோமஸ் அக்வைனசின் செல்வாக்கின் காரணமாக இறையியலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஹொப்ஸ் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இணைந்த காலத்திலும் இதே நிலைமையே காணப்பட்டது. இதை அவர் பெரிதாக விரும்பியிருக்க வில்லை. அதேசமயம் புதிய விஞ்ஞானத்தன்மை கொண்ட அறிவியல் ரீதியான விடயங்களில் இவர் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இதற்கு கலிலியோவின் செல்வாக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது. உலகியலை விளங்கிக்கொள்வதற்கு இறையியல் முக்கியமில்லை என்ற கலிலியோவின் விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்பை ஹொப்ஸ் மிக இலகுவாக அரசியலில் பயன்படுத்தி அரசியலை அறிவியல் ரீதியாக மாற்றியமைத்தார். இதனால்தான் ஹொப்சின் அரசியற் கோட்பாடு தர்க்க ரீதியான அடிப்படையில் அறிவியல் ரீதியாக கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

ஹொப்ஸ் வரம்பற்ற முடியாட்சியை ஆதரித்தபோது பிரபுத்து வவாதிகளும் முடியாட்சியை ஆதரித்து பாராளுமன்றவாதிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். ஆயினும் ஹொப்ஸ் இவர் களுடன் முரண்பட்டார். பிரபுத்துவவாதிகள் முடியாட்சியை ஆதரித்த போது தெய்வீக உரிமை அடிப்படையிலான முடியாட்சியையே ஆதரித்தனர். இதனால் ஹொப்ஸ் இதனை மறுத்து அதிகாரம் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பற்ற முடியாட்சியை வலியுறுத்தினார். இதன்மூலம் அரசியலில் தெய்வீக உரிமைக் கருத்தை மறுத்து அதிகாரத்தின் முக்கியத்துவத்தை அறிவியல் ரீதியாக விளக்கினார்.

**உண்மை பற்றிய தேடல்**

வரலாற்று ரீதியாக எது உண்மை என்ற தேடல் தொடர்ந்து கொண்டே யிருக்கின்றது. இந்த அடிப்படையில் ஹொப்ஸ் உண்மை என்பது அக ரீதியான மற்றும் புற ரீதியான கலவை என்று விஞ்ஞான ரீதியாக நிறுவினார். பிளேட்டோ புற ரீதியான விடயங்களைப் புறக்கணித்து அக ரீதியான விடயங்களே உண்மை என்று குறிப் பிட்டார். அரிஸ்டோட்டல் அக ரீதியான விடயங்களை முழுமையாக புறக்கணிக்காத போதும் உண்மை என்பது புற ரீதியானதும் நடைமுறை அனுபவங்களின் ஊடாகவும் ஏற்படுவது என்று குறிப்பிட்டார். மாக்கியவல்லி உண்மை என்பது முழுமையாக நடைமுறை ரீதியானது என்று வாதிட்டார். ஆனால் ஹொப்ஸ் உண்மை என்பது அகம் மற்றும் புறம் ஆகிய இரண்டினதும் கலவை என்று குறிப்பிடுகின்றார்.[7]

ஹொப்சினுடைய உண்மை பற்றிய தேடல் கலிலியோவின் உடலியக்க கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. (Galileo's Body Motion Theory) உடலியக்கம் என்பது தனியே புற ரீதியானது மட்டுமல்ல. அது அக ரீதியானதும் ஆகும். அக ரீதியான தூண்டுதலின் விளைவே புற ரீதியான அசைவியக்கம் ஆகும். இதனடிப்படையில் ஹொப்ஸ் உண்மை என்பது புற ரீதியானது மட்டுமல்ல அது அக ரீதியானதும் ஆகும் என குறிப்பிட்டார். அக ரீதியான விடயங்கள் உண்மையானதாகவும் விஞ்ஞான ரீதியானதாகவும் இருக்க முடியும் என ஹொப்ஸ் வாதிட்டார். நவீன விஞ்ஞானம் என்பது அளவு ரீதியானது மட்டுமல்ல அது பண்பு ரீதியானதும் ஆகும் என இவர் குறிப்பிடுகின்றார். இதில் ஹொப்சை கவர்ந்த மிக முக்கியமான விடயம் புற ரீதியான விடயங்களின் உண்மைத்தன்மையை விளங்கிக் கொள்வதற்கு அக ரீதியான விளக்கம் அவசியம் என்பதாகும்.[8]

---

7. Tuck.Richard. (1989) *Hobbes.* Oxford: Oxford University Press.
8. Warrender. Howard. (1957) *The Political Philosophy of Hobbes: His Theory of Obligation.* Oxford: Clarendon Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையும் அவர் கலிலியோவிடம் இருந்தே பெற்றுக்கொண்டார். கலிலியோ கணித ரீதியான ஆய்வுகளின் கணிப்பீடுகள் அனைத்தும் புற ரீதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இடம்பெறுகின்றன என குறிப்பிடுகின்ற போதும் அவற்றின் முடிவுகளை விளங்கிக்கொள்வதற்கு அக ரீதியான விளக்கம் மிக அவசியமானது என்று குறிப்பிடுகின்றார். இதனடிப்படையிலேயே புறத்தைப் போல அகமும் விஞ்ஞானத்தன்மை கொண்டது என ஹொப்ஸ் விளக்குகின்றார்.

இவ்வாறு ஹொப்ஸ் தனது அரசியல் கோட்பாட்டை மனித இயல்பு மற்றும் மனித நடத்தை என்பவற்றை ஆய்வு செய்வதனூடாக தர்க்க ரீதியாகவும் விஞ்ஞான அடிப்படையிலும் விளக்குவதை காணலாம். மனித இயல்பு மற்றும் மனித நடத்தை என்பன பற்றி ஆய்வு செய்ததன் மூலம் உளவியல் அடிப்படையில் அக ரீதியாகவும் வரம்பற்ற முடியாட்சியை வலியுறுத்தியதன் மூலம் சமூக அடிப்படையில் புற ரீதியாகவும் ஆய்வை மேற்கொண்டு அகம் மற்றும் புறம் இரண்டையும் இணைத்து விஞ்ஞான அடிப்படையில் அரசியல் ஆய்வை ஹொப்ஸ் நெறிப்படுத்தினார்.

**இயற்கை நிலை பற்றிய கருத்துக்கள்**

ஹொப்ஸ் சித்தரித்த இயற்கை நிலை மிக மோசமானதாக இருந்தது. ஹொப்சின் கருத்துப்படி மனிதன் என்பவன் தனது அறிவு, தனிப்பட்ட அனுபவங்கள் என்பவற்றின் அடிப்படையில் தனது இருப்பை மட்டும் கருத்தில் கொண்டு வாழும் ஒரு சுயநலமியாவான். இங்கு உணர்வுகளும் உணர்ச்சிகளுமே மனிதனை வழிப்படுத்துகின்றன. தனது விருப்பு வெறுப்புக்களையன்றி ஏனையோரின் விருப்பு வெறுப்புக்களை விளங்கிக் கொள்ளும் சக்தி மனிதனுக்கில்லை. மனிதன் ஏனையவர்களோடு ஒப்பிட்டே தன்னைப் பற்றிய முடிவு களுக்கு வருகிறான். அவ்வாறு செய்யும் போது அவன் தனக்கு மேல் நிலையில் இருப்பவர்கள் மீது பொறாமை கொள்ளுதலும் தனக்குக் கீழ் நிலையில் இருப்பவர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைவதும் மனிதனின் இயல்புப் பண்பாகும். மனிதனின் இந்த ஆசை எல்லையற்றதாகும். மனிதன் தனக்குக் கிடைத்ததிலிருந்து திருப்தியடையாமையே இதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் காரணம் ஆகும். இதன் விளைவாக மனிதன் போட்டித் தன்மை வாய்ந்த பிராணியாக மாறியுள்ளான்.

முறையில்லாத ஆட்சி நிலவுகின்ற சூழ்நிலையில் அருமையான வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சுயநலத்துடன் மனிதன் போராடும் போது அவர்கள் ஒருவருக்கொருவர் எதிரியாக மாறுவதைத் தவிர்க்க முடியாது. அங்கு ஒருவருக்கொருவர் நம்பிக்கையோடு செயற்பட மாட்டார்கள். சகல மனிதர்களும் ஏனையவர்களை ஏமாற்றுக்காரர்களாகவும் தீங்கு விளைவிப்பவர்களாகவுமே கருதுவர். அதனால் சகலரும் மரண அச்சத்துடன் வாழ்கின்றனர். தமது இருப்பு பொதுப் பாதுகாப்பின் மூலம் பாதுகாக்கப்படாத சூழ்நிலையில் மனிதர் தனது தனிப்பட்ட சக்தியின் மீதே நம்பிக்கை வைப்பர். அதனால் சகலரும் ஏனையவர்களை வீழ்த்திவிட்டு தமக்கு அதிக சக்தியையும் பலத்தையும் பெற்றுக் கொள்ள முயல்வர். இதன் படி இயற்கை நிலையில் மனிதன் மரணம் வரை அதிகாரத்துக்காக அதிகாரத்தின் பின்னால் ஓடும் கடும் போட்டியில் ஈடுபடுகின்றான். அச்சூழ்நிலையில் எவ்வித பொருளாதார சமூக முன்னேற்றங்களும் ஏற்படமாட்டாது. அங்கு மனித வாழ்க்கை கொடூரமாகவும் மிருகத் தன்மையும், இழிவும் குறுகிய ஆயுளும் நிறைந்ததாகக் காணப்பட்டது.

மனித இயல்பு பற்றி ஹொப்ஸ் வெளியிட்ட கருத்து பெரும் பாலும் உண்மைக்குப் புறம்பாயினும் அவை அவரது இறுதி அரசியல் இலக்கினுக்கு அதிகம் பொருந்தியது. அவ்விலக்கினை நியாயப்படுத்துவதற்கான தர்க்கரீதியானதும் பலமானதுமான தளத்தை வழங்கியது. ஹொப்ஸ் கூறியதன் படி மரணத்தின் மீதிருந்த அச்சமே இயற்கை நிலையிலிருந்த மனிதன் சிவில் சமூகத்துக்குள் நுழைந்து அரசை அமைத்துக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய ஒரே காரணியாகும். ஆனால் சிவில் சமூகத்துக்குள் நுழைந்தமையால் மட்டும் மனிதன் சிறந்தவனாக மாறுவதில்லை. தமது இயல்புப் பண்பு களுடனேயே மனிதன் சிவில் சமூகத்தக்குள் நுழைவான். அதனால் அவர்களை நல்ல மனிதர்களாக ஆக்குவதற்கு அவர்களை இறுக்கமான கட்டுப்பாட்டுக்குட்படுத்த வேண்டும். அதற்கு வாளேந்திய, பலம் மிக்க கரங்களைக் கொண்ட ஓர் ஆட்சியாளனும் இறுக்கமான சட்ட முறையும் அவசியமாகும். இதற்கு இறைமை அதிகாரத்தை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மட்டும் பிரயோகிக்கும் முடியாட்சியே பொருத்தமானது என ஹொப்ஸ் நம்பினார்.

### சமூக ஒப்பந்தம்

ஹொப்சின் கருத்துப் படி சமூக ஒப்பந்தத்தின் ஊடாக சிவில் சமூகத்துக்குள் நுழையும் மக்கள் தமக்கிடையிலிருந்து ஒருவரை ஆட்சியாளராகத் தெரிவு செய்து சிவில் சமூகத்தில் தாம் அனுபவித்த சகல அதிகாரங்களையும்; உரிமைகளையும் ஆட்சியாளனிடம் ஒப்படைத்தனர். அங்கு ஆட்சியாளன் ஒப்பந்தத்தின் கட்சிக்காரராக இருக்கவில்லை. அதனாலேயே ஆட்சியாளன் தனது செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்படவில்லை. அதனால் ஆட்சியாளன் தன்னிகரற்ற அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டான். சட்டம் அவனது கட்டளைகளாகும். ஆட்சியாளன் தன்னிச்சையானவனாயினும் அவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் உரிமை மக்களுக்கில்லை. ஏனெனில், அச்செயல் ஒப்பந்தத்தின் நோக்கிற்கு முரணானதாக அமைதலாகும். இவ்வாறு தன்னிகரற்ற ஆட்சிமுறையின் சிறப்புத் தன்மையை நியாயப்படுத்துவதற்கு ஹொப்ஸ் சமூக ஒப்பந்தத்தைப் பயன்படுத்தியுள்ளார்.[9] இதன்மூலம் மன்னனுக்கு அளவற்ற அதிகாரங்களை வழங்குகின்ற வரம்பற்ற முடியாட்சியையே ஹொப்ஸ் வலியுறுத்துகின்றார்.

### அரசாங்க வகைப்பாடு

ஏனைய அறிஞர்களைப் போன்றே ஹொப்சும் அரசாங்க வகைப்பாடுகளை மேற்கொண்டு சிறந்த அரசாங்கம் எவ்வாறிருக்க வேண்டும் என்பது பற்றி குறிப்பிட்டிருக்கின்றார். எனினும் மக்களுக்கு பாதுகாப்பும் அமைதியும் நிறைந்த வாழ்க்கையைத் தரக்கூடிய அரசாங்க முறை பற்றி ஹொப்ஸ் கவனம் செலுத்தினார். அரசின் அதிகாரம் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டால் அது உறுதியற்ற அரசு ஏற்பட வழிவகுக்கும் எனக் குறிப்பிட்டு உச்ச அதிகாரம் ஒரு நிறுவனத்திடம் மட்டும் காணப்படும் போதே

9. David Gauthier. (1988) *Hobbes's Social Contract: Perspectives on Thomas Hobbes.* Oxford: Clarendon Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு உறுதியான ஆட்சியும் பாதுகாப்பும் நிலவும் என ஹொப்ஸ் குறிப்பிடுகின்றார். இங்கிலாந்தில் ஆட்சியதிகாரம் மன்னர்கள், பிரபுக்கள் மற்றும் மக்கள் (பாராளுமன்றம்) என பிரிந்திருந்தமையால் அங்கு நீண்டகாலமாக போர்கள் இடம்பெற்று உறுதியான ஆட்சி இடம்பெற முடியாது போய்விட்டது. எனவே உச்ச அதிகாரம் கொண்ட மன்னராட்சி அரசாங்க முறையை ஹொப்ஸ் சிறந்த அரசாங்க முறையாக குறிப்பிடுகின்றார். எனினும் இவர் மூன்று வகையான அரசாங்க முறைகள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அவையாவன முடியாட்சி, சிறு குழுவாட்சி மற்றும் மக்களாட்சி என்பனவாகும். இந்த அரசாங்க முறைகளை ஆய்வு செய்து அதன் நன்மை தீமைகளை எடுத்துக் கூறி மன்னராட்சியே (முடியாட்சி) சிறந்த ஆட்சிமுறை என ஹொப்ஸ் வலியுறுத்துகின்றார்.[10]

**இறைமை அதிகாரம்**

ஹொப்ஸ் உச்ச அதிகாரம் கொண்ட மன்னராட்சி பற்றி குறிப்பிடு கின்றார். இங்கு மன்னரிடமே இறைமை அதிகாரம் குவிந்து காணப்படும். ஹொப்ஸ் மேற்கொண்ட சமூக ஒப்பந்தப்படியும் அவர் குறிப்பிட்ட மன்னராட்சி முறைப்படியும் உச்ச அதிகாரம் கொண்டவராக மன்னரே காணப்படுகின்றார். மக்கள் அனைவரும் தமக்கிடையே ஒப்பந்தம் செய்து கொண்டு தமது பிறப்புரிமைகளை இழக்கின்றனர். மன்னன் இந்த ஒப்பந்த வரையறைக்குள் இல்லை என்பதால் அவர் தமது பிறப்புரிமைகளை இழக்க மாட்டார். மக்கள் தாம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அனைத்து உரிமைகளையும் அரச னுக்கு ஒப்படைப்பதால் மன்னன் மக்கள் எல்லோரைக் காட்டிலும் இறைமை அதிகாரம் கொண்டவராக காணப்படுகின்றார். இவ்வாறு இறைமை அதிகாரம் மன்னனிடம் குவிந்து காணப்படுவதாக ஹொப்ஸ் குறிப்பிடுகின்றார்.

---

10. John Plamenatz. (1963) *Man and Society: Political and Social Theory: Machiavelli through Rousseau.* New York: McGraw-Hill.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமைகளும் சட்டங்களும்**

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதை ஹொப்ஸ் ஏற்கவில்லை. ஒரு தனிமனிதனிற்கு மறுக்கப்பட்ட உரிமை இன்னொருவருக்கு வழங்கப்படலாம். இதை யாரும் விமர்சிக்க முடியாது. பேச்சு உரிமை சொத்து உரிமை போன்ற தனி உரிமைகளை ஹொப்ஸ் மறுக்கிறார். இவைகள் சமுதாயத்துக்கு பொதுவான உரிமைகள் என குறிப்பிடுகிறார். அரசின் கட்டளைகளுக்கு கீழ் படிந்து செயற்படு கின்ற உரிமைகளே மக்களுக்கு காணப்படுகின்றது. அதே போன்று எதை வேண்டுமானாலும் செய்வதற்கான உரிமை அரசுக்கு காணப்படுகின்றது. இங்கு அரசின் கூற்றுக்களும் ஆணைகளும் சட்டங்கள் ஆகும். சட்டங்களை உருவாக்கும் ஒரே நிறுவனமாக அரசு மட்டுமே காணப்படும்.

**மதமும் அரசும்**

மதங்கள் நாட்டில் ஒற்றுமையை இல்லாமல் செய்கின்றன மற்றும் அவை அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டுகின்றன என ஹொப்ஸ் குறிப்பிடுகின்றார். இதனால் அரசுக்கெதிரான மதச் செயற்பாடுகளை இவர் அனுமதிக்கவில்லை. ஆனால் மக்களின் மத வழிபாடுகளை இவர் அனுமதிக்கின்றார். மத வழிபாடு புனிதமானது என்பதினை ஏற்றுக்கொள்கின்ற ஹொப்ஸ் அதனைவிட புனிதமானது அரசின் ஆணைக்கு கீழ்ப்படிதல் எனக் குறிப்பிடுகின்றார். மதம் மற்றும் வழிபாட்டு முறைகளை அரச அதிகாரங்களில் தலையீடு செய்ய அனுமதிக்காத ஹொப்ஸ் அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு செயற்பட மதங்களுக்கு அனுமதி வழங்குகின்றார்.

**ஹொப்சினுடைய கருத்துக்கள் மீதான விமர்சனம்**

மனிதர்கள் இயல்பாகவே அதிகார ஆசை கொண்டவர்கள் என்ற இவருடைய கருத்து விமர்சிக்கப்படுகின்றது. மனிதர்கள் நீதி மற்றும் ஒழுக்க அடிப்படையை விரும்புகிறவர்கள் என்ற பிளேட்டோவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. மனிதர்கள் இயல்பாகவே ஒன்றாக வாழ விரும்புகின்றவர்கள் என்றும் அவர்கள் அமைதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்றவர்கள் என்றும் இவர்கள் வாதிடுகின்றார்கள். இதனால் மனிதர்கள் இயல்பாகவே அதிகார ஆசை கொண்டவர்கள் என்ற ஹொப்சின் கருத்தை இவர்கள் மறுக்கின்றார்கள். ஆயினும் ஹொப்ஸ் இந்த விமர்சனம் யதார்த்தத்திற்கு புறம்பானது என குறிப்பிடுகின்றார்.

ஹொப்சினுடைய வரம்பற்ற முடியாட்சியும் எல்லையற்ற முழு இறைமையும் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது. ஹொப்ஸ் உண்மை, அறிவு மற்றும் விஞ்ஞான அடிப்படை என்பவற்றை தர்க்க ரீதியாக அடைய வேண்டும் எனக் குறிப்பிட்டுவிட்டு மக்களின் முழு அதிகாரத்தையும் ஆட்சியாளன் ஒருவனிடம் ஒப்படைப்பதானது அர்த்தமில்லாதது எனவும் ஆட்சியாளனிடம் முழு அதிகாரமும் ஒப்படைக்கப்படுமாயின் அங்கு ஒழுக்கம், மரபு, அறிவு, விஞ்ஞானத் தன்மை மற்றும் நீதி என்பவற்றை எதிர்பார்க்க முடியாது என்றும் கண்டிக்கப்படுகிறது.

ஹொப்சினுடைய சட்டம் பற்றிய கருத்துக்களும் கண்டிக்கப் படுகின்றது. மக்கள் இயல்பாகவே சட்டத்திற்கு கீழ்படிபவர்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் அதிகாரமுள்ள ஆட்சியாளன் ஒருவனாலேயே மக்களை சட்டத்திற்கு கீழ்படிய வைக்க முடியும் எனவும் இவர் குறிப்பிட்டார். ஆயினும் அதிகாரமுள்ள ஆட்சியாளன் எவ்வாறு இருப்பான் மற்றும் எவ்வகையான சட்டங் களை பிறப்பிப்பான் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் காணப்படவில்லை என்று குறிப்பிட்டு சட்டத்தினால் மக்கள் ஒடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன என விமர்சிக்கப்படுகின்றது.

ஹொப்சினுடைய கோட்பாடு சமூக ஒப்பந்தத்தை அடிப்படையாக கொண்டது என்பதை ஏற்க முடியாது எனவும் விமர்சிக்கப்படுகின்றது. உண்மையில் அங்கு ஒப்பந்தம் ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. ஒப்பந்தம் என்பது இரு தரப்புக்களுக்கிடையில் இடம்பெற வேண்டும். ஆயினும் இங்கு மக்கள் தமது அதிகாரத்தை ஆட்சியாளனிடம் ஒப்படைத்திருக்கிறார்களே தவிர ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டிருக்கவில்லை என கண்டிக்கப்படுகின்றது.

ஹொப்சினுடைய கோட்பாட்டிற்கு எந்தவிதமான வரலாற்று ஆதாரமும் காணப்பட்டிருக்கவில்லை என்றும் அது முழுவதுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையாக வடிவமைக்கப்பட்ட ஒன்று என்றும் ஆகையால் அதனை விஞ்ஞான தன்மை மிக்கது எனக் குறிப்பிட முடியாது எனவும் கண்டிக்கப்படுகின்றது. எனினும் இந்த விமர்சனத்தினை பல அறிஞர்கள் மறுத்துள்ளனர்.[11] எந்த ஆய்விலும் கருதுகோள் என்ற விடயம் காணப்படுகின்றது என்றும் அது முற்று முழுதாக ஆதாரத்தினை அடிப்படையாக கொண்டிராமல் கற்பனையாகவே வடிவமைக்கப் படுகின்றது என்றும் இதுவே ஆய்வினை மேற்கொள்ள வழிகாட்டியாக திகழ்கின்றது என்றும் குறிப்பிடப்படுகின்றது. எனவே ஆய்வு செயன்முறை ஒன்றில் கருதுகோளை விஞ்ஞான தன்மையுடையது என ஏற்றுக்கொள்ள முடியுமாயின் ஹொப்சினுடைய கற்பனையாக வடிவமைக்கப்பட்ட கருதுகோளும் கோட்பாடும் விஞ் ஞான தன்மையுடையது என வாதிடுகின்றனர்.

ஹொப்ஸ் வரம்பற்ற அதிகாரத்தினை ஆட்சியாளனுக்கு வழங்குகின்றார் எனவும் அது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் எனவும் கண்டிக்கப்படுகின்றது. ஆயினும் ஹொப்ஸ் இதனை மறுக்கின்றார். ஆட்சியாளனுக்கு அதிகாரத்தினை வழங்குவதால் மட்டும் அவனது ஆட்சி சர்வாதிகார ஆட்சி எனக் குறிப்பிட்டு விட முடியாது என்றும் ஆட்சியாளனது முடிவுகளையும் செயல்களையும் கொண்டே அவன் சர்வாதிகாரமாக செயற்படுகின்றானா இல்லையா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். முழுமையான அதிகாரத்தினைக் கொண்ட ஆட்சியாளன் நீதியான ஆட்சியை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதினையும் மறுக்க முடியாது என்பது இவரது கருத்து.

ஹொப்ஸ் தனிமனித சுதந்திரத்திற்கு எதிரானவர் என்று கண் டிக்கப்படுகின்றார். இவர் வரம்பற்ற முடியாட்சியை ஆதரிப்பதன் மூலம் மன்னனுக்கு அளவற்ற அதிகாரங்களை வழங்கி தனிமனித சுதந்திரம் பறிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர் என கண்டிக்கப் படுகின்றார். ஆயினும் ஹொப்ஸ் வரம்பற்ற முடியாட்சியை ஆதரித்து மன்னனுக்கு அளவற்ற அதிகாரங்களை வழங்கி ஏனைய நாடுகளின் படையெடுப்பில் இருந்தும் அச்சுறுத்தலில் இருந்தும் தமது நாட்டினை

11. John Aubrey. (1994) *The Brief Life in Thomas Hobbes: The Elements of Law,* Natural and Politic. Oxford: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்து மக்களின் தனிமனித சுதந்திரத்தினை உறுதிப்படுத்தினார் என குறிப்பிடுகின்றவர்களும் காணப்படுகின்றனர்.

ஹொப்ஸ் ஒரு பகுத்தறிவுவாதி மற்றும் இவர் அரசியலில் பகுத்தறிவு அடிப்படையை முதன்முதலில் கொண்டு வந்தவர் என குறிப்பிடப்படுகின்ற போதும் அரசாங்கத்தின் தன்மை மற்றும் ஆட்சி முறை பற்றி குறிப்பிடுகின்ற போது பகுத்தறிவு அற்ற விதத்தில் இலட்சிய ரீதியாக கருத்து தெரிவித்துள்ளார் எனவும் கண்டிக்கப்படுகின்றார். வரம்பற்ற முடியாட்சியை ஆட்சி முறையாக குறிப்பிட்டமை பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது என விமர்சிக்கப்படுகின்றது. அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலை அவரை இத்தகைய முடிவுக்கு இட்டுச் சென்றிருக்கலாம் எனவும் சில அறிஞர்கள் வாதிடுகின்றனர். மிக முக்கியமாக பிரான்சில் அவர் வாழ்ந்த காலத்தில் கத்தோலிக்க திருச்சபையினால் ஒரு மன்னர் (King Hentry IV) கொலை செய்யப்பட்டிருந்தார். இச் சம்பவம் இவரை பெரிதும் பாதித்திருந்தது. இதனால் மத ஆதிக்கத்தில் இருந்து மன்னரையும்/மன்னராட்சியையும் விடுவிக்க வேண்டும் என உறுதி பூண்டார். இதன் விளைவே வரம்பற்ற முடியாட்சி என குறிப்பிடப்படுகின்றது. உண்மையில் இவர் மதத்திற்கு எதிரானவர் அல்லர். ஆனால் மத ஆதிக்கம் அரசின் மீது காணப்படுவதை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

### ஹொப்சின் பங்களிப்புகள்

தாராண்மைவாத சிந்தனைகளின் வளச்சிக்கு பங்களித்தமை முக்கிய மானதாக குறிப்பிடப்படுகின்றது. இவர் எந்தவகையிலும் தாராண்மை வாத சிந்தனையாளராக இருக்கவில்லை. எனினும் தாராண்மைவாத அரசியல் தத்துவத்தின் அடிப்படை விடயங்களைப் பற்றி இவர் குறிப்பிட்டுள்ளார். இது தாராண்மைவாத சிந்தனைகளின் வளர்ச் சிக்கு பங்களித்துள்ளது. தாராண்மைவாத அரசியல் தத்துவத்தின் அடிப்படை விடயங்களான அரசின் அடிப்படை தனிமனிதன் என்பதும் தனிமனிதன் தர்க்க ரீதியான சிந்தனையுடைய சுய புத்தியு டையவன் என்பதும் அரசு என்பது சமூக ரீதியிலான மனிதர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாகும் என்பதுமான கருத்துக்களின் முன்னோடியாக ஹொப்ஸ் காணப்படுகின்றார்.

யதார்த்தவாத அணுகுமுறையின் வளர்ச்ச்சிக்கு இவரது கருத்துக்கள் வழிகாட்டியாக அமைந்த சிறப்பு காணப்படுகின்றது. தேசிய அரசுகளின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அதிகாரத் தின் அவசியத்தினை விளக்கி தேசிய அரசுகள் அதிகாரத்தினை பெறுவதனை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றது என குறிப்பிட்டதன் மூலம் யதார்த்தவாத அணுகுமுறையின் வளர்ச்சிக்கு இவரது கருத்துக்கள் உதவியிருக்கின்றன.

தேசிய அரசுகள் எழுச்சி பெற்ற காலப்பகுதியில் அரசுகளை பலப்படுத்த வேண்டிய தேவை காணப்பட்ட பொழுது வரம்பற்ற முடியாட்சி பற்றிய கருத்துக்களை தெரிவித்து மன்னனுக்கு அளவற்ற அதிகாரங்களை வழங்கி அரசின் இறைமை பற்றிய சிந்தனை வளர்ச்சியடைவதற்கு பங்களித்துள்ளார். வரம்பற்ற அதிகாரம் பற்றி குறிப்பிடுவதன் மூலம் பிற்காலத்தில் பாசிசம் மற்றும் மார்க்சிச தத்துவங்களுக்கான அடிப்படையாகவும் இவரது கருத்துக்கள் காணப்பட்டிருக்கின்றன.

இவரது கருத்துக்கள் தேசிய அரசுகளின் அடிப்படையை வரை யறுக்க உதவியிருக்கின்றன. குடியுரிமையாளர்களுக்கான பாது காப்பையும் ஒழுங்கையும் வலியுறுத்தியதன் மூலம் தேசிய அரசுகளின் அடிப்படையை வரையறுக்க உதவியிருக்கின்றார்.

அரசியல் தலைமைத்துவம் பற்றிய சிந்தனைகளின் வளர்ச் சிக்கும் இவர் வழிவகுத்துள்ளார். யுத்தத்தின் அவசியம் பற்றியும் விளக்கியுள்ளார். அமைதியான சமூகத்தை ஏற்படுத்த யுத்தம் அவசியம் என குறிப்பிட்டு ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து ஒரு நாட்டைப் பாதுகாக்க யுத்தம் அவசியம் என குறிப்பிடுவதன் மூலம் கூட்டுப் பாதுகாப்பு எண்ணக்கருவின் வளர்ச்சிக்கும் இவர் பங்களித்திருக்கின்றார். அதிகார அரசியல் பற்றியும் சிவில் சமூகம் பற்றியும் குறிப்பிட்டு இந்த எண்ணக்கருக்களின் வளர்ச்சிக்கும் உதவியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொப்சினுடைய கருத்துக்கள் பற்றிய மதிப்பீடு

மக்கள் சம்மதத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அரசு தோற்றம் பெற்றது என்ற கருத்தை முதன் முதலில் கோட்பாட்டு ரீதியாக எடுத்துச் சொன்ன பெருமை இவருக்குரியது. அத்துடன் தர்க்கரீதியான அடிப்படையில் பகுத்தறிவு ரீதியாக கருத்துக்களை முன்வைத்த சிறப்பும் இவருக்குரியது. ஆயினும் இவரது கருத்துக்களுக்கு வரலாற்று ஆதாரம் காணப்படவில்லை என விமர்சிப்பவர்களும் காணப்படுகின்றனர். சில அறிஞர்கள் வரலாற்று ஆதாரம் இல்லாமல் கற்பனையாக கருதுகோளின் அடிப்படையில் ஆய்வை மேற்கொள்வதும் விஞ்ஞானத் தன்மையுடையதே என வாதிடுகின்றனர். ஹொப்ஸ் மன்னனுக்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கியமையும் பலமாக கண்டிக்கப்படுகின்றது. ஆயினும் ஒரு நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்பதே இவரது நோக்கம். இதனை இவர் வரம்பற்ற அதிகாரங்களை மன்னனுக்கு வழங்குவதன் மூலம் நிலைநாட்ட முயன்றார். ஒரு நாட்டில் உறுதியான ஆட்சி ஏற்பட வழிவகுத்தார். இதற்காக இவர் கையாண்ட வழிமுறை பிழையானது என விமர்சிக்கப்பட்ட போதும் ஒரு நல்ல நோக்கத்தை அடையவே இவர் முயன்றுள்ளார் என குறிப்பிடப்படுகின்றது. இதனால் நவீன அரசியற் கருத்துக்களின் வளர்ச்சிக்கும் மற்றும் தேசிய அரசுகளின் எழுச்சிக்கும் இவரது கருத்துக்கள் பெரிதும் உதவியிருக்கின்றன என்பதில் எதுவித ஐயமுமில்லை.

> *''அறிவின் விளைவே விஞ்ஞானம் அது தரவுகளை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.''.......... ''இயற்கையும் ஒழுக்கமுமே அதிகாரத்தைப் பெறுகின்ற கருவிகள் அதேபோன்று அதிகாரமே அவற்றைப் பாதுகாக்கின்றது.''*
>
> *(தோமஸ் ஹொப்ஸ் - ''லெவியாதன்'')*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயச் சுருக்கம்

- *தோமஸ் ஹொப்ஸ் வன்முறைகளும் பிரச்சனைகளும் நிறைந்த சூழ்நிலையில் 1588ல் இங்கிலாந்தில் மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். ஐரோப்பாவில் மத சீர்திருத்தங்களும் மறுமலர்ச்சியும் இடம்பெற்ற காலப்பகுதியில் வாழ்ந்தவர். இவ்வாறு காணப்பட்ட மத சீர்திருத்த இயக்கமும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் ஹொப்சி னுடைய அரசியல் கருத்துக்களினைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகித்தன.*

- *இரத்தம் சிந்தா புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் மன்னரின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டதுடன் அரசியலமைப்புக்குட்பட்ட மன்ன ராட்சியும் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் ஹொப்ஸ் இங்கிலாந்தில் மன்னராட்சிக்கு தனது ஆதரவை வழங்கியிருந்தது டன் வரம்பற்ற முடியாட்சியையும் வலியுறுத்தினார். பலமிக்க அரசொன்றை அமைப்பதன் மூலமே வன்முறையை கட்டுப்படுத்த முடியும் என ஹொப்ஸ் நினைத்ததன் விளைவே அவரது வரம்பற்ற முடியாட்சி ஆகும்.*

- *தோமஸ் ஹொப்ஸ் சட்டம், வரலாறு, அரசியல் போன்ற பல துறைகள் சார்ந்த பல நூல்களை வெளியிட்டிருந்தாலும் அரசியல் சார்ந்து வெளியிட்ட நூல்களில் பிரதானமானது ''லெவியாதன்'' ஆகும். ''லெவியாதன்'' என்ற நூல் ஹொப்ஸ் கொண்டுள்ள அரசியல் கருத்தின் குறியீடாக குறிப்பிடப்படுகின்றது.*

- *அரசறிவியல் ஆய்வில் புதிய அணுகுமுறையை பயன்படுத்தி அரச றிவியல் கற்கை நெறியினை விஞ்ஞானத் தன்மையுடையதாக மாற்றியவர் ஹொப்ஸ் ஆவார். ஹொப்ஸ் தனது ஆய்விற்கு வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட அணுகு முறையைப் பயன்படுத்தாது கற்பனையான கருதுகோள்களை உருவாக்கி அதன்மூலம் உண்மையைக் கண்டறியும் பகுப்பாய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தினார்.*

- *இறையியல் கருத்துக்களை மறுத்து அறிவியல் கருத்துக்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி விஞ்ஞான அடிப்படையில் கருத்து க்களை முன்வைத்தவர்களில் ஹொப்ஸ் முக்கியமானவராக குறிப்பிடப்படுகின்றார். இதனால்தான் ஹொப்சின் அரசியற்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு தர்க்க ரீதியான அடிப்படையில் அறிவியல் ரீதியாக கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

- ஹொப்ஸ் உண்மை என்பது அக ரீதியான மற்றும் புற ரீதியான கலவை என்று விஞ்ஞான ரீதியாக நிறுவினார். அக ரீதியான தூண்டுதலின் விளைவே புற ரீதியான அசைவியக்கம் ஆகும். இதனடிப்படையில் ஹொப்ஸ் உண்மை என்பது புற ரீதியானது மட்டுமல்ல அது அக ரீதியானதும் ஆகும் என குறிப்பிட்டார்.

- ஹொப்ஸ் சித்தரித்த இயற்கை நிலை மிக மோசமானதாக இருந்தது. ஹொப்சின் கருத்துப்படி மனிதன் என்பவன் தனது அறிவு, தனிப்பட்ட அனுபவங்கள் என்பவற்றின் அடிப்படையில் தனது இருப்பை மட்டும் கருத்தில் கொண்டு வாழும் ஒரு சுயநல மியாவான். இங்கு உணர்வுகளும் உணர்ச்சிகளுமே மனிதனை வழிப்படுத்துகின்றன.

- ஹொப்ஸ் கூறியதன் படி மரணத்தின் மீதிருந்த அச்சமே இயற்கை நிலையிலிருந்த மனிதன் சிவில் சமூகத்துக்குள் நுழைந்து அரசை அமைத்துக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய ஒரே காரணியாகும். இதற்கு இறைமை அதிகாரத்தை ஒரு மனிதன் மட்டும் பிரயோகிக்கும் முடியாட்சியே பொருத்தமானது என ஹொப்ஸ் நம்பினார்.

- ஹொப்சின் கருத்துப்படி சமூக ஒப்பந்தத்தின் ஊடாக சிவில் சமூகத்துக்குள் நுழையும் மக்கள் தமக்கிடையிலிருந்து ஒருவரை ஆட்சியாளராகத் தெரிவு செய்து சிவில் சமூகத்தில் தாம் அனுபவித்த சகல அதிகாரங்களையும் உரிமைகளையும் ஆட்சியாளனிடம் ஒப்படைத்தனர். இதன்மூலம் மன்னனுக்கு அளவற்ற அதிகாரங்களை வழங்குகின்ற வரம்பற்ற முடியாட்சியையே ஹொப்ஸ் வலியுறுத்து கின்றார்.

- ஹொப்ஸ் மூன்று வகையான அரசாங்க முறைகள் பற்றி குறிப்பிட் டுள்ளார். அவையாவன முடியாட்சி, சிறு குழுவாட்சி மற்றும் மக்க ளாட்சி என்பனவாகும். இந்த அரசாங்க முறைகளை ஆய்வு செய்து அதன் நன்மை தீமைகளை எடுத்துக் கூறி மன்னராட்சியே (முடியாட்சி) சிறந்த ஆட்சிமுறை என ஹொப்ஸ் வலியுறுத்துகின்றார்.

- ஹொப்ஸ் உச்ச அதிகாரம் கொண்ட மன்னராட்சி பற்றி குறிப்பிடு கின்றார். இங்கு மன்னரிடமே இறைமை அதிகாரம் குவிந்து காணப்படும். ஹொப்ஸ் மேற்கொண்ட சமூக ஒப்பந்தப்படியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் குறிப்பிட்ட மன்னராட்சி முறைப்படியும் இறைமை அதிகாரம் மன்னனிடம் குவிந்து காணப்படுவதாக ஹொப்ஸ் குறிப்பிடுகின்றார்.

- சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதை ஹொப்ஸ் ஏற்கவில்லை. பேச்சு உரிமை சொத்து உரிமை போன்ற தனி உரிமைகளை ஹொப்ஸ் மறுக்கிறார். இங்கு அரசின் கூற்றுக்களும் ஆணைகளும் சட்டங்கள் ஆகும். சட்டங்களை உருவாக்கும் ஒரே நிறுவனமாக அரசு மட்டுமே காணப்படும்.
- மதங்கள் நாட்டில் ஒற்றுமையை இல்லாமல் செய்கின்றன மற்றும் அவை அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டுகின்றன என ஹொப்ஸ் குறிப்பிடுகின்றார். இதனால் அரசுக்கெதிரான மதச் செயற்பாடுகளை இவர் அனுமதிக்கவில்லை.
- சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அரசு தோற்றம் பெற்றது என்ற கருத்தை முதன் முதலில் கோட்பாட்டு ரீதியாக எடுத்துச் சொன்ன பெருமை இவருக்குரியது. அத்துடன் தர்க்கரீதியான அடிப்படையில் பகுத்தறிவு ரீதியாக கருத்துக்களை முன்வைத்த சிறப்பும் இவருக்குரியது. ஆயினும் இவரது கருத்துக்களுக்கு வரலாற்று ஆதாரம் காணப்படவில்லை என விமர்சிப்பவர்களும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தியாயம் - 12*

# ஜோன் லொக்கின் அரசியல் கருத்துக்கள்

## John Locke (1632-1704)

**அறிமுகம்**

சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றிய கருத்துக்களை முன்வைத்த அறிஞர்களுள் ஜோன் லொக் முக்கியமானவர் ஆவார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் இங்கிலாந்தின் சூழ்நிலைகளையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். தாராண்மைவாதத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர். பிரான்சிய புரட்சி, அமெரிக்க புரட்சி மற்றும் அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றிற்கு இவரது கருத்துக்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. இவரது நூல்களில் முக்கியமானவையாக ''சிவில் அரசாங்கம் பற்றிய இரண்டு உடன்படிக்கைகள்'' (Two Treatises of Government), ''சகிப்புத்தன்மை பற்றிய கடிதங்கள்'' (A Letter Concerning Toleration) என்பன குறிப்பிடப்படுகின்றன. பிற்கால அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் இவரது கருத்துக்கள் வழிகாட்டியாக இருந்திருக்கின்றன.

**வாழ்க்கைப் பின்னணி**

ஜோன் லொக்கும் தோமஸ் ஹொப்சும் சமகாலத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும் இவர்களது கருத்துக்கள் ஒரே மாதிரியானதாக காணப்படவில்லை. இவர்கள் இருவருடைய கருத்துக்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஹொப்சினதும் லொக்கினதும் இந்த கருத்தியல் வேறுபாட்டுக்கு அவர்களின் மேல் செல்வாக்கு செலுத்திய அவர்களது வாழ்க்கைப் பின்னணி முக்கிய காரணியாக குறிப்பிடப்படுகின்றது. லொக் அரசியல் செல்வாக்குள்ள செல் வந்த குடும்பத்தில் இருந்து வந்தவர். இவரது குடும்பம் ஆங்கில புரட்சி மற்றும் உள்நாட்டு யுத்தம் என்பவற்றுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தது. லொக்கின் தந்தை பாராளுமன்ற இராணுவத் தின் தலைவராக செயற்பட்டார். அத்துடன் பாராளுமன்ற இராணுவ குழுவான ''சமப்படுத்துபவர்கள்'' (Levellers) என்ற குழுவின் கருத்துக் களாலும் நேரடியாகக் கவரப்பட்டிருந்தார். குறிப்பாக இக் குழுவினர் ஜனநாயகத்தின் தரம், அளவு மற்றும் தனிமனித சுதந்திரம் என்பன பற்றி அதிகமாக விவாதித்தார்கள். இந்த விடயங்கள் லொக்கை அதிகமாகப் பாதித்திருந்தது. இதனால் ஹொப்சைப் போலல்லாமல் லொக் ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் பற்றி அதிகமாக சிந்திப்பவராக காணப்பட்டார்.

லொக் ஒக்ஸ்போர்ட் (Oxford) பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். இங்கு அவர் அரிஸ்டாட்டிலின் கருத்துக்களால் அதிகமாக கவரப்பட்டிருந்தார். அதுமட்டுமன்றி பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான அடிப்படையிலும் அதிகமான நம்பிக்கை கொண்டிருந்தார். இதனால் மரபுரீதியான மற்றும் நவீன அரசியற் கருத்துக்களை சமப்படுத்து வதற்கு இவர் அதிகமான பங்களிப்பை வழங்கியுள்ளார். இதனை அவர் அவரது பல்கலைக்கழக காலத்தில் எழுதி வெளியிட்ட "An Essay Concerning Human Understanding" என்ற கட்டுரை மூலம் வெளிப்படுத் தினார். இக்கட்டுரை பின்னர்பல்கலைக்கழகத்தில் மிகப்பெரிய வாதப்பிரதிவாதங்களை தோற்றுவித்திருந்தது.

1682இல் இங்கிலாந்தில் இடம்பெற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக இரண்டாம் சார்ல்ஸ் மன்னனின் வெற்றியைத் தொடர்ந்து 1683ல் லொக் இங்கிலாந்தை விட்டு வெளியேறி Hollandல் வாழ்ந்தார். 1688இல் இடம்பெற்ற மாண்புமிகு புரட்சியைத் தொடர்ந்தே அவர் மீண்டும் இங்கிலாந்துக்கு திரும்பினார். இந்த புரட்சி லொக்கின் கருத்துக்களுக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்கியது. இது அரசியலமைப்பு ரீதியாக வரையறுக்கப்பட்ட அதிகாரமுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜோன் லொக் (John Locke (1632–1704)**



*லொக் பிரித்தானிய அரசியல் சிந்தனையாளர்களுள் முக்கியமானவர். சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றிய கருத்துக்களை முன்வைத்தவர். இவர் அரசியல் செல்வாக்குள்ள செல்வந்த குடும்பத்தில் இருந்து வந்தவர். இவரது குடும்பம் ஆங்கில புரட்சி மற்றும் உள்நாட்டு யுத்தம் என்பவற்றுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தது. லொக் ஒக்ஸ்போர்ட்* (Oxford) *பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். தாராண்மைவாதத்தின் தந்தை எனவும் போற்றப்படுபவர். பிரான்சிய புரட்சி, அமெரிக்க புரட்சி மற்றும் அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றிற்கு இவரது கருத்துக்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் முன்னோடியாகவும் இவர்கருதப்படுகின்றார். இவரது நூல்களில் முக்கியமானவையாக ''சிவில் அரசாங்கம் பற்றிய இரண்டு உடன்படிக்கைகள்''* (Two Treatises of Government), *''சகிப்புத்தன்மை பற்றிய கடிதங்கள்''* (A Letter Concerning Toleration) *என்பன குறிப்பிடப்படுகின்றன.*

அரசாங்கத்தை வலியுறுத்தியதுடன் வரம்பற்ற மன்னனின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் பாராளுமன்ற அதிகாரத்தை அறிமுகப் படுத்தியது. இதன்பின்னர் லொக் 1704இல் அவர் இறக்கும் வரை இங்கிலாந்திலேயே வாழ்ந்தார்.

### தாராண்மைவாத சிந்தனைக்கான அடிப்படை

இங்கிலாந்தில் தாராள ஜனநாயகத்திற்கான அடிப்படையாக மாண்புமிகு புரட்சி காணப்பட்டது. மாண்புமிகு புரட்சிக்கு பங்களித்த பெரும்பாலான கருத்துக்கள் லொக்கினுடைய பிரதான நூலான ''சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்'' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களோடு பெரிதும் ஒத்திருந்தன. இதனாலேயே தாராண்மைவாதத்தின் தந்தையாக லொக் குறிப்பிடப்படுகின்றார்.[1] ஆயினும் நவீன தாராண்மைவாத கருத்துக்களின் அடிப்படையில்

1. Ashcraft. Richard. (1986) *Revolutionary Politics and Locke's Two Treatises of Government*. Princeton: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொக்கை "தாராண்மைவாதி" அல்ல என மறுப்பவர்களும் காணப்படுகின்றனர்.[2] உதாரணமாக சட்டமன்றுக்கான தெரிவை பெரும்பான்மை அடிப்படையில் மேற்கொள்வதனை வலியுறுத்துகின்ற லொக் ஒரு ஜனநாயகவாதியென்று குறிப்பிடப்படுகின்ற போதும் சொத்துடமை உள்ளவர்களுக்கே வாக்குரிமையை வலியுறுத்துவதானது நவீன ஜனநாயக அம்சங்களோடு பொருந்தவில்லை எனக் குறிப்பிடப் படுகின்றது. ஆயினும் நவீன தாராள ஜனநாயகத்தின் தந்தையாக லொக்கே குறிப்பிடப்படுகின்றார். 19ஆம் நூற்றாண்டு வரைக்கும் லொக்கின் கருத்துக்களே தாராண்மைவாத சிந்தனைக்கான அடிப்படையாக காணப்பட்டன.

### ஜோன் லொக்கும் தோமஸ் ஹொப்சும்

இவர்கள் இருவரும் சமகாலத்தைச் சேர்ந்தவர்களாயினும் இவர்கள் இருவருவருடைய காலப்பகுதியிலும் வேறுபட்ட சூழ்நிலைகள் காணப்பட்டன. லொக்கின் காலப்பகுதியில் இடம்பெற்ற மாறுபட்ட சம்பவங்கள் ஹொப்சைப் போலல்லாமல் லொக்கினை வேறுபட்ட முடிவுகளையும் கருத்துக்களையும் முன்வைப்பதற்கு வழிவகுத்தது. இவருடைய கருத்துக்கள் ஹொப்சினுடைய கருத்துக்களை விட மாறுபட்டு காணப்படுகின்றது.[3] வரம்பற்ற முடியாட்சி பற்றிய கருத்துக் களின் ஆரம்ப கர்த்தாவாக ஹொப்ஸ் குறிப்பிடப்படுகின்றார். ஆனால் லொக் இதிலிருந்து மாறுபட்டு வரம்புள்ள முடியாட்சி பற்றி குறிப்பிட்டதன் மூலம் தாராள ஜனநாயக கருத்துக்களின் முன்னோடியாக குறிப்பிடப்படுகின்றார். லொக் எவ்வாறு தாராள ஜனநாயக சிந்தனைகளின் வளர்ச்சிக்கு நேரடியாக உதவினார் என்ற வாதப்பிரதிவாதங்கள் காணப்பட்ட போதும் தற்கால தாராள ஜனநாயக சிந்தனைகளை முதன் முதலில் வெளிப்படுத்தியவராக லொக் காணப்படுகின்றார்.

---

2. Dunn. John. (1969) *The Political Thought of John Locke: An Historical Account of the Argument of the Two Treatises of Government.* Cambridge: Cambridge University Press.
3. Waldron. Jeremy.G. (2002) *Locke and Equality: Christian Foundations of John Locke's Political Thought.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொப்ஸ் மற்றும் லொக்: ஒற்றுமைகள்

இவ்வாறு ஹொப்சின் கருத்துக்களில் இருந்து லொக் பெருமளவுக்கு வேறுபட்டு காணப்பட்ட போதும் அவர்கள் பல விடயங்களில் ஒருமித்த கருத்துக்களையும் கொண்டிருந்தனர். ஹொப்சைப் போல இவரது கருத்துக்கள் பகுத்தறிவு அடிப்படையைக் கொண்டிருந்தது. இவர்கள் சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அரசு ஒன்றினை தோற்றுவிக்க முயன்றார்கள். லொக்கும் ஹொப்சும் அரசு இயற்கையானது அல்ல அது மனிதனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். அதேபோல இவர்கள் இருவரும் தேசிய அரசு எவ்வாறு உருவானது மற்றும் அதன் அதிகாரங்கள் யாவை என்பதில் வேறுபட்டாலும் தேசிய அரசையே சிறந்த அரச மாதிரியாக குறிப்பிட்டுள்ளார்கள். விஞ்ஞான அடிப்படையை அரசியல் ஆய்வுகளில் புகுத்துவதில் இருவரும் முதன்மையானவர்களாக காணப்படுகின்றார்கள். அதே போன்று நடைமுறை மற்றும் அனுபவ விடயங்களுக்கும் இவர்கள் முன்னுரிமை வழங்கியிருக்கின்றார்கள்.

## ஹொப்ஸ் மற்றும் லொக் : வேறுபாடுகள்

பல்வேறு விடயங்களில் இவர்களது கருத்துக்கள் வேறுபட்டு காணப் படுகின்றன. அரசாங்கம் ஒன்றினை உருவாக்குவதற்காக சமூக ஒப்பந்தம் ஒன்று எவ்வாறு இடம்பெற்றது என்பதில் இவர்கள் இருவரும் வேறுபடுகின்றனர். ஹொப்ஸ் முற்று முழுதாக மக்கள் தமது அதிகாரங்களை மன்னனிடம் ஒப்படைக்கின்றனர் என சமூக ஒப்பந்தம் பற்றி விளக்க லொக் இரு ஒப்பந்தங்கள் இடம்பெற்றதாக குறிப்பிடுகின்றார். அதில் முதலாவது ஒப்பந்தம் மக்களுக்கிடையில் இடம்பெறுவதாகவும் இரண்டாவது ஒப்பந்தம் மன்னருக்கும் மக்க ளுக்கும் இடையில் இடம்பெறுவதாகவும் குறிப்பிடுகின்றார். இங்கு மக்கள் மன்னனைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் கொண்ட வர்களாக காணப்படுகின்றனர்.

லொக் ''சிவில் அரசாங்கத்தின் இரண்டு உடன்படிக்கைகள்'' என்ற நூலை எழுதியதன் நோக்கம் மன்னர்களின் வரம்பற்ற அதிகாரங்களை மறுப்பதற்கேயாகும். ஆயினும் இவர் நேரடியாக ஹொப்சின் ''லெவியதான்'' நூலை மறுத்து தனது நூலை எழுதவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக Sir Robert Filmer என்பவரின் "The Natural Power of King" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பற்ற மன்னனின் அதிகாரத்தை மறுப்பதற்காகவே தனது நூலை எழுதினார். இதுவும் ஹொப்ஸ் லொக்கில் இருந்து வேறுபடுவதையே எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும் இந்த விடயத்தில் எந்தவிதமான நேரடியான மறுப்பையும் ஹொப்ஸ் மீது லொக் வெளியிட்டிருக்கவில்லை.

**இயற்கைச் சட்டம்**

சமூக வாழ்வை ஒழுங்குபடுத்துகின்ற சட்டங்களை இயற்கைச் சட்டங்கள் என லொக் குறிப்பிடுகின்றார். இந்த இயற்கைச் சட்டங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் அல்ல. இயற்கை நிலையில் மனிதன் தனது வாழ்வை ஒழுங்குபடுத்த இயற்கையாக காணப்படுகின்ற சட்டங்கள் ஆகும். இவை மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானவை. மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் மற்றும் சுதந்திரம் உடையவர்கள் என்பதை இயற்கைச் சட்டங்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்த இயற்கைச் சட்டம் பகுத்தறிவு அடிப்படையை கொண்டது என லொக் குறிப்பிடுகின்றார். இதனை லொக் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''இயற்கைச் சட்டங்களே இயற்கை நிலையைத் தீர்மானிக்கின்றன. அதுவே சுதந்திரத்தின் தன்மையையும் தீர்மானிக்கின்றது. இது மற்றவர்களின் வாழ்க்கைக்கு பாதிப்பற்றதாகவும் மனித இனத்தை வழிநடத்தும் சட்டமாகவும் இருக்கிறது''[4]

எனினும் இயற்கை சட்டம் மீறப்படும்போது தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்ற லொக் தண்டனை வழங்குபவர்கள் யார் என்பதை தெளிவாக குறிப்பிட வில்லை என குறை கூறப்படுகின்றது. அத்துடன் இயற்கை உரிமைகளையும் இயற்கை சட்டத்தையும் தெளிவாக வேறுபடுத்த லொக் தவறிவிட்டார் எனவும் கண்டிக்கப்படுகின்றது.[5]

---

4. Locke. (1988) *Two Treatises of Government. Cambridge:* Cambridge University Press.
5. Simmons.A. John. (1992) *The Loekean Theory of Rights.* Princeton: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவை மற்றும் உரிமை மீறல்களை தண்டிக்கின்ற பணியை இயற்கை சட்டங்கள் மேற்கொள்ளும் என குறிப்பிடுகின்ற லொக் இன்னோரிடத்தில் இயற்கை உரிமைகளை இயற்கை சட்டங்கள் கட்டுப்படுத்துவதாகவும் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும் இயற்கை சட்டங்கள் தொடர்பாக காணப்படுகின்ற தெளிவின்மையே பிற்கால அரசியலமைப்பு சட்டங்கள் இயற்றப்படுவதற்கும் மற்றும் மக்களுக்கும் அரசிற்கும் இடையிலான உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்படுவதற்கும் காரணமாக அமைந்தன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

### இயற்கை நிலை பற்றிய கருத்துக்கள்

மன்னரின் அதிகாரத்தை வரையறுக்க வேண்டும் எனக் கருதிய லொக் அதற்கு மனிதனைப் பற்றி ஒரு சிறந்த கருத்தை உருவாக்குவதே நல்லது என அவர் எண்ணினார். அதன்படி மனிதன் நல்லது கெட்டதை இனம் காணும் சக்தியை இயல்பாகப் பெற்றவன், தனது சகோதர மனிதர்களுடன் ஒத்துழைப்புடன் வாழ விருப்பமுடையவன், ஏனையவர் மீது அன்பும், கருணையும் காட்டுபவன், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க முறைப்படி அமைதியாக வாழ்பவன் என்று கூறினார். மனிதன் சுயநலமியன்று. போட்டித் தன்மை வாய்ந்தவனும் அல்ல. உண்மை நிலை யாதெனில் மனிதன் ஒரு சமூகப் பிராணியாக இருப்பதாகும். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வையும் சுதந்திரத்தையும் சொத்தையும் பாதுகாத்துக் கொண்டு சிறந்த சமூக வாழ்க்கையை மேற்கொள்ளவே முயற்சி செய்கின்றான். இவ்வாறான நல்ல மனிதர்களையும் சமமான மனிதர்களையும் கொண்ட ஓர் இயற்கை நிலையையே லொக் கண்டார். இதனை பற்றி லொக் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "இயற்கை நிலையும் யுத்த நிலையும் ஒன்றல்ல. அவற்றுக் கிடையில் சிறிய வேறுபாடு காணப்படுகின்றது. அரசற்ற ஒரு பொதுவான சமூக நிலையே இயற்கை நிலை ஆகும். பாதுகாப்பை பெறுவதற்காக இயற்கை நிலையோடு இணைந்திருக்கும் நிலையே யுத்த நிலை ஆகும்"[6]

6. Marshall.John. (1994) *John Locke: Resistance, Religion and Responsibility.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை நிலையில் அனுபவித்த சிறந்த மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மேலும் சிறந்த முறையில் பாதுகாத்துக் கொள்வதற்கே மனிதன் சிவில் சமூகத்திற்குள் நுழைந்து ஆட்சி முறையினை ஏற்படுத்திக் கொண்டான். இவ்வாறான நல்ல மனிதர்களை ஆளுவதற்கு தன்னிகரற்ற அதிகாரமோ இறுக்கமான சட்டமோ அவசியமாவதில்லை. மனிதனின் அமைதி வாழ்க்கைக்கு பங்கம் ஏற்படுத்தும் நிலைகளை கட்டுப்படுத்துவதற்கு மட்டுமே சாதாரண அதிகாரம் தேவைப்படுகிறது. இவ்வாறு வரையறுக்கப்பட்ட அதிகாரம் பொருந்திய அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சியை நிறுவுவதற்கு ஏதுவான வகையில் இயற்கை நிலையை தாம் விரும்பியவாறு ஒழுங்குபடுத்தினார்.

**சமூக ஒப்பந்தம்**

ஹொப்சை விட வேறுபட்ட வகையில் லொக் அரசு ஒழுங்கமைவதும் சிவில் அரசாங்கம் அமைக்கப்படுதலும் இரு ஒப்பந்தங்களின் அடிப்படையில் நிகழ்ந்துள்ளது என்று கூறுகிறார். மக்கள் மத்தியில் மட்டும் உருவாகும் முதலாவது ஒப்பந்தத்தின் மூலம் இயற்கை நிலையில் வாழ்ந்த மக்கள் சிவில் சமூகத்துக்குள் நுழைந்து அரசை அமைத்து ஓர் ஆட்சியாளனைத் தெரிவு செய்து கொண்டனர். பின்னர் ஆட்சியாளனுக்கும் மக்களுக்குமிடையில் இடம்பெற்ற இரண்டாவது ஒப்பந்தத்தின் மூலம் மக்கள் ஆட்சியாளனுக்கு அதிகாரத்தை ஒப்படைத்தனர். ஆட்சியாளன் ஒப்பந்தத்தின் கட்சிக்காரராகையால் அவன் தமது ஆட்சி தொடர்பாக மக்களுக்கு பொறுப்புக் கூறக் கடமைப்பட்டவனாவான். இது ஹொப்சுக்கும் லொக்குக்குமிடையில் தென்படும் பிறிதொரு வேறுபாடாகும். மறுபுறம் மனிதர் இயற்கை நிலையில் அனுபவித்த சகல அதிகாரங்களையும் உரிமைகளையும் ஆட்சியாளனிடம் ஒப்படைக்கவில்லை. பிரசைகளின் வாழ்க்கை, சொத்து, சுதந்திரம் என்ற மூன்று விடயங்கள் தொடர்பாகச் சட்ட வாக்கம் செய்யும் அதிகாரத்தை மட்டுமே ஒப்படைத்தனர் என்று கூறுகிறார். ஆட்சியாளனின் சட்டங்கள் மக்கள் விருப்பை வெளிப் படுத்த வேண்டும். அவ்வாறின்றேல், ஆட்சியாளனை எதிர்க்கும் உரிமை மக்களுக்குண்டு என லொக் குறிப்பிடுகின்றார். ''இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினால் ஏற்படுத்த முடியாத நீதியான ஆட்சியை ஏற்படுத் துவதற்கான சரியான தீர்வாக சிவில் அரசாங்கம் அமையும்'' என லொக் சிவில் அரசாங்கத்தின் நிறுவன அமைப்பைப் பற்றியும் விளக்கியுள்ளார்.[7] அரசாங்கமானது சட்டத்துறை, நிறைவேற்றுத் துறை, நீதித் துறை ஆகிய மூன்று நிறுவனங்களைக் கொண்டதாகும். நீதித் துறையானது ஏனைய இரு துறைகளினதும் செல்வாக்கிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமானதாக இருத்தல் வேண்டும். சட்டத்துறை இறுதியாக மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். இவ்வாறு லொக் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தையுடைய ஒரு அரசியலமைப்பிற் குட்பட்ட முடியாட்சியை நியாயப்படுத்துவதற்குச் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்தினார்.

**சிவில் அரசாங்கம் பற்றிய இரண்டு உடன்படிக்கைகள்**
**(Two Treatises of Government)**




*ஜோன் லொக்கினால் வெளியிடப்பட்ட முக்கிய மான நூல்களுள் இதுவும் ஒன்றாகும். Sir Robert Filmer என்பவரின் "The Natural Power of King" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பற்ற மன்னனின் அதிகாரத்தை மறுப்பதற்காகவே இந்த நூலை லொக் எழுதியுள்ளார். சிவில் அரசாங் கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட சமூக ஒப்பந்தம் பற்றி இந்நூல் குறிப்பிடுகின்றது. இந்நூலின் முதலாவது பகுதியிலுள்ள ஒப்பந்தம் ஆணாதிக்க சமுதாயம் பற்றியும் சர்வதிகார ஆட்சிமுறை பற்றியும் கடுமையான கண்டனத்தை முன்வைக்கின்றது. இரண்டாவது பகுதியிலுள்ள ஒப்பந்தம் நாகரீகமான சமுதாயம் பற்றியும் மக்களின் இயற்கை உரிமைகள் பற்றியும் மக்களினால் மேற்கொள்ளப்பட்ட சமூக ஒப்பந்தம் பற்றியும் குறிப்பிடுகின்றது. அரசின் இயற்கை நிலை, மக்களின் சுதந்திரம், சொத்துரிமை, பிரதிநிதித்துவ அரசாங்கம் மற்றும் மக்களின் உரிமைகள் என்பன பற்றியும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

7. Simmons. A. John. (1993) *On the Edge of Anarchy: Locke, Consent and the Limits of Society.* Princeton: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமை அதிகாரம்

இறைமை அதிகாரம் பற்றி குறிப்பிடுகின்ற லொக் ''உச்ச அதிகாரம்'' என்ற சொல்லை இதனை விளக்க பயன்படுத்தியுள்ளார்.[8] ஆனால் தோமஸ் ஹொப்ஸ் இறைமை அதிகாரத்தை விளக்க ''மீயுயர் அதிகாரம்'' என்ற சொல்லை பயன்படுத்தியிருக்கிறார். அதாவது எந்த கட்டுப்பாடும் அற்றது என்பதை குறிப்பிடுவதற்கு ஹொப்ஸ் ''மீயுயர் அதிகாரம்'' என்ற சொல்லை பயன்படுத்துகின்றார். அதேசமயம் லொக் ''உச்ச அதிகாரம்'' கொண்ட சட்டசபை காணப்படும் எனக் குறிப்பிடுகின்றார். இங்கு இறைமை மக்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது. அத்துடன் ''உச்ச அதிகாரம்'' ஓரிடத்தில் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட முடியாது. இந்த ''உச்ச அதிகாரம்'' கொண்ட இறைமை சில சமயம் சட்டசபையிடமும் சில சமயம் மக்களிடமும் காணப்படும் என லொக் விளக்குகின்றார்.

ஹொப்சைப் போன்று வரம்பற்ற அதிகாரமுடைய இறைமையை லொக் ஏற்கவில்லை. இறைமை அதிகாரம் வரம்புடையது என அவர் குறிப்பிடுகின்றார். மக்களாட்சியில் சட்டசபையிடம் காணப்படும் இறைமை அதிகாரம் தேவைக்கும் கால சூழ்நிலைக்கும் ஏற்ப ஒவ்வொருவரால் கட்டுப்படுத்தப்படுகின்றது. மக்களினால் சட்டசபையும் சட்டசபையினால் மக்களும் கட்டுப்படுத்துவதை லொக் குறிப்பிடுகின்றார். எனவே இதனடிப்படையில் வரம்புள்ள மன்னராட்சி முறைக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலமும் வரையறுக்கப்பட்ட அரசாங்க முறைக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலமும் லொக் வரையறுக்கப்பட்ட இறைமை அதிகாரத்தின் தன்மையை தெளிவுபடுத்துவதை அவதானிக்கலாம்.

## வரையறுக்கப்பட்ட அரசாங்கம்

அரசியலமைப்பு ரீதியாக வரையறுக்கப்பட அரசாங்கத்தை லொக் வலியுறுத்துகின்றார். உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழிமுறையாக வரையறுக்கப்பட்ட அரசாங்க எண்ணக்கரு காணப்படுகின்றது. ஒரு நாட்டினுடைய அரசாங்கம் செயற்திறனாகவும் சுதந்திரமாகவும் செயற்படுகின்ற அதேநேரம் தம்மை கட்டுப்படுத்திக்கொள்ளும்

8. Locke. (1983) *A Letter Concerning Toleration.* Ed. J. H. Tully, Indianapolis: Hackett Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பையும் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு செயற்படுகின்றபோதே ஒரு நாடு சுதந்திரமாகவும் ஜனநாயகத்தன்மைமிக்கதாகவும் செயற்பட முடியும் என லொக் குறிப்பிடுகின்றார். ஒரு அரசாங்கம் சர்வாதிகாரத் தன்மை யுடன் செயற்படுகின்ற போது அந்த அரசாங்கத்தினை எதிர்த்து புரட்சி செய்வதற்கான உரிமையையும் அதனை மாற்றியமைப்ப தற்கான வழிமுறையையும் வரையறுக்கப்பட்ட அரசாங்க எண்ணக்கரு வழங்குகின்றது. ஒரு அரசாங்கத்தின் உயர்ந்த அதிகாரம் கொண்ட நிறுவனமாக சட்டசபை காணப்படுகின்றது. சட்டசபையினுடைய பிரதானமான கடமை மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகும். எனவே சட்டசபையில் திருப்தியில்லாத போது அதனை மாற்றியமைக் கின்ற உரிமை மக்களிற்கு உண்டு என லொக் குறிப்பிடுகின்றார். இங்கு வரையறுக்கப்பட்ட அரசாங்க எண்ணக்கருவானது மக்களையே மீயுயர் அதிகாரம் கொண்டவர்களாக குறிப்பிடுகின்றது. வரையறுக்கப் பட்ட அரசாங்கமானது சட்டத்தின் படி ஆட்சி புரியவும் மக்களுடைய உரிமைகளை பாதுகாக்கவும் வழிவகுக்கின்றது. பிற்கால தாராள ஜனநாயக சிந்தனைகளின் வளர்ச்சிக்கு லொக்கினுடைய வரையறுக்கப் பட்ட அரசாங்க எண்ணக்கரு மிகவும் பங்களித்திருக்கின்றது.[9]

## அரசாங்கத்தை வரையறுப்பதற்கான வழிவகைகள்

வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தை (Limited Government) வலியுறுத்து கின்ற லொக் அரசாங்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதற்கான வழிவகைகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார். அவையாவன

1. அரசாங்கத்தை கட்டுப்படுத்துகின்ற வழிவகைகளில் மிகவும் முக்கியமானது அது ஜனநாயக தத்துவங்களுக்கு உட்பட்டிருத்தல் ஆகும் என லொக் குறிப்பிடுகிறார். சட்டசபையானது மக்களால் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனவும் அந்த சட்ட சபை மக்கள் சம்மதத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். இதனடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் சட்டசபை தங்கியிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு அரசாங்க அதிகாரங்களை வரையறுக்கின்றார்.

9. Julian.H.Frankilin. (1978) *John Locke and the Theory of Sovereignty.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சட்டசபையின் ஆயுட்காலத்தை வரையறுப்பதனூடாகவும் அரசாங்க அதிகாரத்தை கட்டுப்படுத்தலாம் எனக் குறிப்பிடுகின்றார். மக்கள் காலத்துக்குக் காலம் சட்டசபையை மாற்றியமைக்கவும் மக்கள் பிரதிதிநிதிகளை தெரிவு செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என லொக் குறிப்பிடுகின்றார்.

3. அரசாங்க அதிகாரத்தினை வரையறுக்கின்ற இன்னொரு முக்கியமான காரணியாக அதிகாரப் பிரிவினைத் தத்துவம் குறிப்பிடப்படுகின்றது. சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையிலான அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என லொக் குறிப்பிடுகின்றார். இதனை பின்வருமாறு லொக் குறிப்பிடுகின்றார் "சட்டவாக்க அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் ஒருவரிடமே காணப்படுவது மக்களை மிகக் கூடுதலாக பலவீனப்படுத்தும்" எனக் குறிப்பிடுவதன் மூலம் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருந்தால் அது அரசாங்கத்தை கட்டுப்படுத்தி மக்கள் அதிகாரத்தை அதிகரிக்கும் என லொக் குறிப்பிடுகின்றார். ஆயினும் அதிகாரப் பிரிவினையொன்றினை லொக் வலியுறுத்தியிருந்தாரே தவிர அதனை அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டு அடிப்படையில் அவர் பயன்படுத்தியிருக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. எனினும் பிற்காலத்தில் பிரித்தானிய பாராளுமன்றம் ஓரளவுக்காயினும் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டு அடிப்படையைக் கொண்டிருந்ததற்கு இவரது கருத்துக்களே காரணமாக அமைந்திருக்கின்றது. அத்துடன் பிற்காலத்தில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு மொண்டஸ்கியூவினால் முன்வைக்கப்படுவதற்கும் இவரது கருத்துக்கள் வழிகாட்டியாக காணப்பட்டிருக்கிறன.

4. பலமான நிர்வாகத்துறையின் அதிகாரம் பற்றியும் லொக் குறிப்பிட்டிருக்கின்றார். அரசாங்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையில் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்ற லொக் சட்டத்துறையை விட நிர்வாகத்துறை அதிகாரம் உள்ளதாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். இதை லொக் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "நிர்வாகத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் உள்ளதாக எப்பொழுதும் காணப்படவேண்டும். ஏனென்றால் சட்டங்களை ஆக்குவதற்கான தேவை எல்லா நேரங்களிலும் காணப்படுவதில்லை. ஆனால் சட்டங்களை அமுல்படுத்த வேண்டிய தேவை எப்பொழுதும் காணப் படுகின்றது'' எனக் குறிப்பிட்டு நிர்வாகத்துறையிடம் அதிகாரம் காணப்படவேண்டும் என லொக் குறிப்பிடுகின்றார். எனவே நிர்வாகத்துறை சட்டத்துறையை கட்டுப்படுத்தும் இயல்பு கொண் டதாக காணப்படவேண்டும் எனக் குறிப்பிடுவதன் மூலம் அரசாங்க அதிகாரங்களை கட்டுப்படுத்தும் வழியை லொக் விளக்குகின்றார்.

**தனியார் சொத்துடமை**

தனியார் சொத்துடமை பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்து க்களை குறிப்பிட்டிருக்கின்றார்கள். பிளேட்டோ ஆட்சியாளர்களுக்கு சொத்துடமையை மறுக்கின்றார். அரிஸ்டோட்டல் சொத்துடமையை அனுமதித்திருந்த போதும் சொத்துள்ள வர்க்கம் அரசியல் உறுதிப்பாட் டுக்கு பாதகமானது என்று குறிப்பிடுகின்றார். சென் தோமஸ் அக்கு வைனஸ் இயற்கைச் சட்டங்களுக்கு எதிரானது என்ற அடிப்படையில் சொத்துடமையை நிராகரிக்கின்றார். ஹொப்ஸ் தனியார் சொத்து டமையை ஆதரித்திருந்த போதும் அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மன்னனுக்கு காணப்படுவதாக குறிப்பிடுகின்றார். லொக் தனிமனித மற்றும் சமூக அபிவிருத்திக்கு தனியார் சொத்துடமையின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். அரிஸ்டோட்டலின் தனியார் சொத்துடமை பற்றிய கருத்தோடு உடன்படாத லொக் ரூசோவின் தனியார் சொத்துடமை பற்றிய கருத்தை ஏற்றுக் கொள்கின்றார். இதனடிப்படையில் மக்களின் நல்வாழ்விற்கு தனியார் சொத்து டமையின் அவசியத்தை லொக் வலியுறுத்துகின்றார்.

ஜோன் லொக் தனது ''சிவில் அரசாங்கம் பற்றிய இரு உடன்படிக் கைகள்'' என்ற நூலில் ''மனிதர்கள் பகுத்தறிவுள்ளவர்கள் மற்றும் அவர்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள உரிமையுடையவர்கள்'' எனக் குறிப்பிடுகின்றார். இது தனியார் சொத்துடமை பற்றி லொக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ள கருத்தாகும்.[10] இவருடைய நூலின் அத்தியாயம் 5ல் காணப்படுகின்ற ''சொத்துடமை'' (On Property) என்ற பகுதியில் தனியார் சொத்துடமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''மனிதர்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள உரிமையுடையவர்கள்'' என குறிப்பிடுவதன் மூலம் லொக் தனிமனிதர்களுக்கான ''வாழ்வதற்கான உரிமை'' (Right to Life) பற்றி குறிப்பிடுகின்றார். வாழ்வதற்கான உரிமை காணப்படுவதன் காரணமாக அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான தேவை இருக்கின்றது எனவும் அதற்கான முக்கியமான அம்சமாக ''சொத்துடமை'' காணப்படுகின்றது எனவும் லொக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் தனியார் சொத்துடமையை லொக் அறிமுகப்படுத்துகின்றார். வாழ்வதற்கான உரிமை என்பதன் கருத்து ''ஒவ்வொரு மனிதனும் சொந்தமாக சொத்துடமை வைத்திருப்பதாகும்'' என லொக் குறிப்பிடுகின்றார். இதை லொக் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த ''சமப்படுத்துபவர்கள்'' (Levellers) என்ற குழுவிடம் இருந்தே பெற்றுக்கொண்டார். எனவே எல்லா மனிதர்களும் சொத்து சேர்ப்பதற்கும் அதனை வைத்திருப்பதற்கும் உரிமையுடையவர்கள் என்பதை லொக் வலியுறுத்தினார். இதனை அவர் பின்வருமாறு விளக்குகின்றார். ''மனிதன் அவனுடைய கைகளாலும் உடலாலும் பெற்ற உழைப்பே அவனது சொத்தாகும். இதுவே இயற்கைநிலை. இது ஒவ்வொரு மனிதனும் தனக்கு தேவையான சொத்தை கொண்டிருப்பதற்கான உரிமையை வழங்குகின்றது'' என குறிப்பிடுகின்றார்.[11]

### தனியார் சொத்துடமைக்கு ஆதரவான வாதங்கள்

1. மத அடிப்படையில் தனியார் சொத்துடமையை லொக் வலியுறுத்துகின்றார். ''உலகிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி சொத்து சேர்ப்பதற்கான உரிமையை கடவுள் மனிதனுக்கு வழங்கியுள்ளார். ஆகையால் மனிதர்கள் தம்மை அபிவிருத்தி

10. Tully. James. (1980) *A Discourse on Property: John Locke and his Adversaries. Cambridge:* Cambridge University Press.
11. John Locke. (1963) *Essay Concerning Human Understanding in John Locke Works. Germany:* Scientia Verlag Aalen Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவும் நல்வாழ்வு வாழவும் தனியார் சொத்துடமையை பயன்படுத்தவேண்டும்'' என லொக் குறிப்பிடுகின்றார்.

2. தொழிலாளர்களின் உழைப்பின் விளைவே சொத்து என்ற அடிப்படையில் தனியார் சொத்துடமையை லொக் வலியுறுத்து கின்றார். ''ஒவ்வொரு மனிதர்களும் தம்முடன் சொத்தை வைத்திருக்கின்றார்கள். அவர்களது உடல், கைகள், அவற்றின் உழைப்பு எல்லாமே அவர்களது சொத்துக்கள். அவற்றை அவர்களிடமிருந்து பிரிக்க முடியாது'' என குறிப்பிட்டு லொக் தனியார் சொத்துடமையை வலியுறுத்துகின்றார்.

3. மனிதர்கள் சமூகத்தில் வாழ்கின்றார்கள். அவர்கள் சமூக அந்தஸ்த்தை பெற்றுக்கொள்வதற்கும் சமூகத்தில் வாழ்வதற்கான வழிவகைகளை அடைந்து கொள்வதற்கும் தனியார் சொத்துடமை அவசியம் என லொக் குறிப்பிடுகின்றார்.

பிற்காலத்தில் நவீன தேசிய அரசுகளின் தோற்றத்திற்கும் வளர்ச் சிக்கும் இவரது தனியார் சொத்துடமை எண்ணக்கரு பெருமளவுக்கு பங்களித்திருக்கின்றது. இயற்கை சட்டம் தனியார் சொத்துடமையை கட்டுப்படுத்துவதாக லொக் குறிப்பிடுகின்றார். ஆயினும் ஒருவன் இயற்கை சட்டத்தை மீறாமல் அதற்குட்பட்டு எவ்வளவு சொத்தையும் வைத்திருக்க முடியும் என்பது அவரது கருத்தாகும். எனினும் தனியார் சொத்துடமை பொதுச்சொத்திற்கு வழிவகுத்து தேசிய அரசின் வளர்ச்சிக்கும் உதவும் என்ற லொக்கின் கருத்து பிற்காலத்தில் பலமான கண்டனத்திற்கு உள்ளானது. தனியார் சொத்துடமையின் வளர்ச்சி பொதுச்சொத்தை உருவாக்குவதற்கு பதிலாக இயற்கையாக காணப்படும் சமத்துவத்தை இல்லாமல் செய்யும் எனவும் சமூக வர்க்கங்களை இது உருவாக்கும் எனவும் கண்டிக்கப்படுகின்றது. ஆயினும் நவீன முதலாளித்துவத்தின் எழுச்சிக்கு லொக்கின் கருத் துக்கள் பங்களித்திருக்கின்றன. தனியார் சொத்துடமை சமத்துவமின் மைக்கு வழிவகுக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றபோதும் லொக் இதனை ''சமத்துவ உரிமை'' என்றும் இது அனைவருக்கும் பொது வானது என்றுமே குறிப்பிடுகின்றார். இங்கு சொத்துடமை என்பது ''சமமானது'' என்ற அர்த்தத்தினைத் தருகின்றது என்பதனை விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அனைவருக்கும் சம சந்தர்ப்பமான வாய்ப்பினை'' வழங்குகின்றது என்பதையே லொக் வலியுறுத்துகின்றார் என வாதிடுபவர்களும் காணப்படுகின்றனர். இதனால்தான் சில அறிஞர்கள் ''லொக் வரையறுக்கபட்ட அரசாங்கங்கள் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை மாறாக முதலாளித்துவ முறையின் தோற்றம் பற்றியும் குறிப்பிட் டுள்ளார்'' என குறிப்பிடுகின்றனர்.

**அரசாங்கம் பற்றிய வகைப்பாடுகள்**

லொக்கினுடைய அரசாங்கம் பற்றிய வகைப்படுத்தல் அரிஸ்டோட் டலின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டே அமைந்திருக்கின்றது. அரசாங்க நிறுவனங்களில் சட்டத்துறை உயர்ந்த அதிகாரம் கொண்டது என்ற அடிப்படையில் அதனை மையமாக கொண்டு அரசாங்கம் பற்றிய வகைப்படுத்தல்களை லொக் மேற்கொண்டுள்ளார். சட்ட மியற்றும் அதிகாரம் ஒருவரிடம் மட்டுமே காணப்பட்டால் அதனை முடியாட்சி எனவும் சிறு குழு ஒன்றிடம் சட்டமியற்றும் அதிகாரம் காணப்பட்டால் அதனை குடியாட்சி எனவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் சட்டமியற்றும் அதிகாரம் காணப்பட் டால் அதனை மக்களாட்சி எனவும் இவர் குறிப்பிடுகின்றார்.[12]

நீதித்துறையையும் நிர்வாகத்துறையையும் அடிப்படையாகக் கொண்டு அரசாங்க வகைப்படுத்தல்களை மேற்கொள்ள முடியாது என்றும் ஏனெனில் அவை சட்டத்துறையின் வழிகாட்டுதலின்படி செயற்படுகின்றன என்றும் குறிப்பாக சட்டத்துறையை அடிப்படையாக கொண்டே அரசாங்கம் தொடர்பான வகைப்படுத்தல்கள் மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். மன்னராட்சியில் சர்வாதிகாரத்தன்மை ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்றும் குடியாட்சியில் சுயநலனை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தை தவறாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டு அவற்றை நிராகரிக்கின்றார். மக்களாட்சி முறையையே சிறந்த ஆட்சி முறையாக குறிப்பிடுகின்றார். ஏனெனில் அதுவே பெரும்பான்மை மக்களின் நலனை பிரதிபலிக்கும் என்றும் அங்கு தவறுகள் இடம்

12. Macpherson, C.B. (1962) *The Political Theory of Possessive Individualism: Hobbes to Locke*. Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவானது என்றும் வலியுறுத்து கின்றார்.

**லொக்கினுடைய கருத்துக்கள் தொடர்பான விமர்சனங்கள்**

தனியார் சொத்துடமை மற்றும் தாராண்மைவாதம் பற்றிய கருத்துக்கள் லொக்கினால் முன்வைக்கப்பட்ட போதும் அவை பிற்காலத்தில் பெருமளவுக்கு விமர்சிக்கப்பட்டன. அவையாவன

1. தனியார் சொத்துடமையை அறிமுகப்படுத்திய லொக் சொத்துடைய வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதனையே நோக்கமாகக் கொண்டிருந்தார் என கண்டிக்கப்படுகின்றது. நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் இது ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

2. மனித இயல்பு பற்றி லொக் தவறான விளக்கத்தைக் கொண் டிருந்தார் என விமர்சிக்கப்படுகின்றது. ஹொப்சைப் போல லொக்கும் மனித இயல்பை தவறாக விளங்கிவிட்டார் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஹொப்ஸ் மனிதர்களைக் காட்டு மிராண்டித்தனமானவர்கள் என குறிப்பிட்டார். அதேபோன்று லொக் மனிதர்களை நாகரீகமானவர்களாக சித்தரித்தார். இவையிரண்டும் யதார்த்தத்திற்கு புறம்பானது எனவும் மனிதன் எப்பொழுதும் முழுமையாக காட்டுமிராண்டியாகவோ மற்றும் நாகரீகமானவனகவோ இருப்பது சாத்தியமற்றது என்றும் விமர் சிக்கப்படுகின்றது.

3. லொக் உண்மையில் உருவாக்கியது அரசாங்கமா அல்லது அரசாங்கம் என்ற பெயரிலான சமூகமா என கண்டிக்கப்படு கின்றது. பொதுவாக அரசாங்கமானது சட்டத்துறை, நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று முகவர் நிறுவனங்களை உள்ளடக்கியதாக காணப்படும். ஆனால் லொக் சட்டத்துறை பற்றியும் சட்டத்துறையின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவது பற்றியும் நிர்வாகத்துறை அதிகாரங்கள் பற்றியும் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். எனவே இவர் இறைமையுள்ள அரசாங்கம் பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை என கண்டிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சட்ட இறைமையை மக்கள் இறைமையாக மாற்றுவதில் லொக் தோல்வியடைந்து விட்டார் எனக் குறை கூறப்படுகின்றது. சட்ட இறைமைக்கும் மக்கள் இறைமைக்கும் இடையிலான வேறுபாட்டை லொக் தெளிவாக விளக்கவில்லை என்றும் உண்மையில் இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலையே காணப்படுகின்றது என்றும் குறை கூறப்படுகின்றது.

5. மனிதர்களுக்கு அதிகளவான உரிமைகளை லொக்கினுடைய கருத்துக்கள் வழங்குகின்றன என கண்டிக்கப்படுகின்றது. அரசு மற்றும் அரசாங்க அதிகாரங்களையும் சட்டங்களையும் புறக்கணித்து அதிகளவான உரிமைகளை தனிமனிதர்களிடம் வழங்குவது ஆபத்தானது என்றும் இன்னொரு வகையில் இது தேசிய அரசு பற்றிய கருத்தியலைப் புறக்கணிக்கிறது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

6. லொக் குறிப்பிட்ட இறைமை பற்றிய கருத்துக்கள் இறைமை எண்ணக்கருவுக்கு முரணாக காணப்படுகின்றது என விமர்சிக்கப்படுகின்றது. தனிமனிதர்களும் மற்றும் சட்டத்துறையும் இறைமை அதிகாரத்தைக் கொண்டிருப்பார்கள் என லொக் குறிப்பிடுவது இறைமை பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதையே குறிப்பிடுகின்றது. ஆனால் இது இறைமை பிரிக்கப்பட முடியாதது என்ற இறைமை பற்றிய எண்ணக்கருவின் இயல்புக்கு முரணாக காணப்படுகின்றது என கண்டிக்கப்படுகின்றது

7. சிறுபான்மையினரின் உரிமைகளை லொக் மறுக்கிறார் எனவும் குறை கூறப்படுகின்றது. பெரும்பான்மையினரின் விருப்பங்களையும் முடிவுகளையும் ஜனநாயகத்தன்மை மிக்கவை எனக் குறிப்பிடுவதன் மூலமும் அரசாங்கத்திற்கெதிராக புரட்சி செய்வதற்கான உரிமையை பெரும்பான்மையினருக்கு வழங்குவதன் மூலமும் சிறுபான்மையினரின் உரிமைகளை லொக் கருத்திற் கொள்ளவில்லை என குறை கூறப்படுகின்றது.

8. சகிப்புத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மையின்மை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை லொக் தெளிவாக விளக்க தவறி விட்டார் என குறை கூறப்படுகின்றது. மதங்களுக்கிடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிப்புத்தன்மையை வலியுறுத்திய லொக் அதேசமயம் மதங்களின் சுதந்திரம் பற்றிக் கவனத்திற் கொள்ளவில்லை எனக் குறை கூறப்படுகின்றது. அத்துடன் அரசாங்கங்களுக்கு எதிராக புரட்சி செய்வதற்கு மக்களுக்கு உரிமை உண்டு எனக் குறிப்பிடுவதன் மூலம் சகிப்புத்தன்மையின்மை பற்றி லொக் குறிப்பிடுகின்றார். எனவே சகிப்புத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மையின்மை என்பவற்றில் லொக் எதை வலியுறுத்துகின்றார் என்பதில் தெளிவின்மை காணப்படுவதாக குறை கூறப்படுகின்றது.

## லொக்கினுடைய பங்களிப்புக்கள்

லொக்கினுடைய கருத்துக்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்த போதும் நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் அளப்பரியன. அவையாவன

1. அனுபவவாதத்தின் (Empiricism) ஸ்தாபகராக லொக் குறிப்பிடப் படுகின்றார். அறிவு என்பது அனுபவத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப் படுகின்றது எனவும் அனுபவத்தின் அடிப்படையில் பெறப்படும் இந்த அறிவே உண்மையான அறிவு எனவும் குறிப்பிட்டு பிற்கால ஆய்வு செயன்முறைகளின் வளர்ச்சிக்கு இவர் உதவியுள்ளார்.

2. தனிமனிதவாதத்தினுடைய (Individualism) வளர்ச்சிக்கு லொக் பங்களிப்பாற்றியிருக்கிறார். சமூகத்தில் தனிமனிதர்களின் நிலை, தனிமனிதர்களின் நலனை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இருப்பு, அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பிரித்து தனிமனிதர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் புரட்சி செய்வதற்கான உரிமை என்பன போன்ற விடயங்களைக் குறிப்பிட்டு தனிமனிதவாதத்தினுடைய வளர்ச்சிக்கு லொக் உதவியிருக்கின்றார்.

3. ஜெரமி பெந்தமினுடைய பயனுடைமைவாதக் கோட்பாட்டின் தோற்றத்திற்கும் பொது நலன் பற்றிய கருத்தின் வளர்ச்சிக்கும் இவரது கருத்துக்கள் உதவியிருக்கின்றன. முதலாவது பயனுடமைவாதியாக லொக் குறிப்பிடப்படுகின்றார். ''இன்பமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமும் மனித செயற்பாடுகளைத் தூண்டுகின்ற இரு பிரதானமான அம்சங்கள்'' எனக் குறிப்பிடுவதன் மூலம் லொக் முதலாவது பயனுடமை வாதியாக இருந்து பயனுடைமைவாதத் தின் வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கிறார்.

4. இயற்கைச் சட்டங்களைப் பற்றி குறிப்பிட்டது மட்டுமல்லாமல் அவற்றை அரசுகள் பாதுகாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி அரசியலமைப்பு சட்டத்தின் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றார்.

5. சட்ட மற்றும் நிர்வாக துறைகளுக்கிடையில் அதிகாரங்கள் பிரிந்திருக்க வேண்டும் என குறிப்பிட்டதன் மூலம் பிற்கால அதிகாரப் பிரிவினைத் தத்துவ எண்ணக்கருவின் வளர்ச்சிக்கும் வழிவகுத்திருக்கிறார்.

6. சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் மூலம் மக்களிடம் அதிகாரம் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டதனால் பிற்காலத்தில் மக்கள் இறைமை எண்ணக்கரு வளர்ச்சியடைவதற்கும் பங்களித் திருக்கின்றார்

7. முதன்முதலாக அரசு, அரசாங்கம் மற்றும் சமூகம் என்ப வற்றை வேறுபடுத்திய சிறப்பு இவருக்குரியது. அத்துடன் தாராண்மைவாத கோட்பாட்டின் தந்தை எனவும் லொக் போற்றப்படுகின்றார்.

## லொக்கினுடைய அரசியற் கருத்துக்கள் தொடர்பான மதிப்பீடு

லொக் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை யதார்த்தமாக்கியவர் எனக் குறிப்பிடப்படுகிறார். இரண்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டதன் மூலம் உண்மையான ஒப்பந்தம் ஒன்றின் இயல்பை இவர் வெளிப்படுத்தினார். மக்களிடம் அதிகாரம் காணப்பட வேண்டும் என்பதையும் அரசாங்கங்கள் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதனையும் முதன் முதலில் எடுத்துக் கூறியவராக லொக் காணப்படுகின்றார். வரையறுக்கப்பட்ட அரசாங்கம் மற்றும் மக்களின் உரிமைகள் என்பவற்றிற்கான அடிப்படையை வழங்கியவராகவும் லொக் குறிப்பிடப்படுகின்றார். ஆயினும் தனியார் சொத்து டமையை இவர்ஆதரித்தமை கடுமையாக கண்டிக்கப்பட்டது. இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துள்ளவர்களின் வர்க்க நலனையே பிரதிபலிக்கின்றார் எனக் குறை கூறப்பட்டார். ஆயினும் தாராண்மைவாத கோட்பாட்டின் தந்தையாக இவர் போற்றப்படுகின்றார். பாராளுமன்ற ஜனநாயகத்தின் குறியீடாகவும் இவர் இருக்கின்றார். தற்கால நவீன அரசியற் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு இவர்ஆற்றியுள்ள பங்களிப்பு அளப்பரியது.

*''சட்டவாக்க அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் ஒருவரிடமே காணப்படுவது மக்களை மிகக் கூடுதலாக பலவீனப்படுத்தும்''...... 'சட்டம் எப்பொழுது முடிவுக்கு வருகிறதோ அப்பொழுது சர்வாதிகாரம் தொடங்குகின்றது''*

*ஜோன் லொக் - 'சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்''*

## அத்தியாயச் சுருக்கம்

- *சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றிய கருத்துக்களை முன்வைத்த அறிஞர்களுள் ஜோன் லொக் முக்கியமானவர் ஆவார். தாராண்மைவாதத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர். பிரான்சிய புரட்சி, அமெரிக்க புரட்சி மற்றும் அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றிற்கு இவாது கருத்துக்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.*
- *இவரது நூல்களில் முக்கியமானவையாக ''சிவில் அரசாங்கம் பற்றிய இரண்டு உடன்படிக்கைகள்''* (Two Treatises of Government), *''சகிப்புத்தன்மை பற்றிய கடிதங்கள்''* (A Letter Concerning Toleration) *என்பன குறிப்பிடப்படுகின்றன. பிற்கால அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் இவரது கருத்துக்கள் வழிகாட்டியாக இருந்திருக்கின்றன.*
- *ஜோன் லொக்கும் தோமஸ் ஹொப்சும் சமகாலத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும் இவர்களது கருத்துக்கள் ஒரே மாதிரியானதாக காணப்படவில்லை. ஹொப்சினதும் லொக்கினதும் இந்த கருத்தியல் வேறுபாட்டுக்கு அவர்களின் மேல் செல்வாக்கு செலுத்திய அவர்களது வாழ்க்கைப் பின்னணி முக்கிய காரணியாக குறிப்பிடப்படுகின்றது.*
- *இங்கிலாந்தில் தாராள ஜனநாயகத்திற்கான அடிப்படையாக மாண்புமிகு புரட்சி காணப்பட்டது. மாண்புமிகு புரட்சிக்கு பங்களித்த*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான கருத்துக்கள் லொக்கினுடைய நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களோடு பெரிதும் ஒத்திருந்தன. இதனாலேயே தாராண்மைவாதத்தின் தந்தையாக லொக் குறிப்பிடப்படுகின்றார்.

- இவருடைய கருத்துக்கள் ஹொப்சினுடைய கருத்துக்களை விட மாறுபட்டு காணப்படுகின்றது. வரம்பற்ற முடியாட்சி பற்றிய கருத்துக்களின் ஆரம்ப கர்த்தாவாக ஹொப்ஸ் குறிப்பிடப்படுகின்றார். ஆனால் லொக் இதிலிருந்து மாறுபட்டு வரம்புள்ள முடியாட்சி பற்றி குறிப்பிட்டதன் மூலம் தாராள ஜனநாயக கருத்துக்களின் முன்னோடியாக குறிப்பிடப்படுகின்றார்.
- ஹொப்ஸ் மற்றும் லொக் பல விடயங்களில் ஒருமித்த கருத்துக்களையும் கொண்டிருந்தனர். ஹொப்சைப் போல இவரது கருத்துக்கள் பகுத்தறிவு அடிப்படையைக் கொண்டிருந்தது. இவர்கள் சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அரசு ஒன்றினை தோற்றுவிக்க முயன்றார்கள். லொக்கும் ஹொப்சும் அரசு இயற்கையானது அல்ல அது மனிதனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள்.
- சமூக வாழ்வை ஒழுங்குபடுத்துகின்ற சட்டங்களை இயற்கைச் சட்டங்கள் என லொக் குறிப்பிடுகின்றார். இந்த இயற்கைச் சட்டங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் அல்ல. இவை மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானவை. மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் மற்றும் சுதந்திரம் உடையவர்கள் என்பதை இயற்கைச் சட்டங்கள் எடுத்துக் கூறுகின்றன.
- மனிதன் நல்லது கெட்டதை இனம் காணும் சக்தியை இயல்பாகப் பெற்றவன், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க முறைப்படி அமைதியாக வாழ்பவன் என்று லொக் கூறினார். இவ்வாறான நல்ல மனிதர்களையும் சமமான மனிதர்களையும் கொண்ட ஓர் இயற்கை நிலையையே லொக் கண்டார். வாக் அரசு ஒழுங்கமைவதும் சிவில் அரசாங்கம் அமைக்கப்படுதலும் இரு ஒப்பந்தங்களின் அடிப்படையில் நிகழ்ந்துள்ளது என்று கூறுகிறார்.
- இறைமை அதிகாரம் பற்றி குறிப்பிடுகின்ற லொக் ''உச்ச அதிகாரம்'' என்ற சொல்லை இதனை விளக்க பயன்படுத்தியுள்ளார். லொக் ''உச்ச அதிகாரம்'' கொண்ட சட்டசபை காணப்படும் எனக் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இறைமை மக்களால் கட்டுப்படுத்தப் படுகின்றது. இந்த ''உச்ச அதிகாரம்'' கொண்ட இறைமை சில சமயம் சட்டசபையிடமும் சில சமயம் மக்களிடமும் காணப்படும் என லொக் விளக்குகின்றார்.

- அரசியலமைப்பு ரீதியாக வரையறுக்கப்பட அரசாங்கத்தை லொக் வலியுறுத்துகின்றார். உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழிமுறையாக வரையறுக்கப்பட்ட அரசாங்க எண்ணக்கரு காணப்படுகின்றது.
- லொக் தனிமனித மற்றும் சமூக அபிவிருத்திக்கு தனியார் சொத்துடமையின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். அரிஸ்டோட்டலின் தனியார் சொத்துடமை பற்றிய கருத்தோடு உடன்படாத லொக் ரூசோவின் தனியார் சொத்துடமை பற்றிய கருத்தை ஏற்றுக் கொள்கின்றார். இதனடிப்படையில் மக்களின் நல்வாழ்விற்கு தனியார் சொத்துடமையின் அவசியத்தை லொக் வலியுறுத்துகின்றார்.
- அரசாங்க நிறுவனங்களில் சட்டத்துறை உயர்ந்த அதிகாரம் கொண்டது என்ற அடிப்படையில் அதனை மையமாக கொண்டு அரசாங்கம் பற்றிய வகைப்படுத்தல்களை லொக் மேற்கொண்டுள்ளார். சட்ட மியற்றும் அதிகாரம் ஒருவரிடம் மட்டுமே காணப்பட்டால் அதனை முடியாட்சி எனவும் சிறு குழு ஒன்றிடம் சட்டமியற்றும் அதிகாரம் காணப்பட்டால் அதனை குடியாட்சி எனவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் சட்ட மியற்றும் அதிகாரம் காணப்பட்டால் அதனை மக்களாட்சி எனவும் இவர் குறிப்பிடுகின்றார்.
- தனியார் சொத்துடமை மற்றும் தாராண்மைவாதம் பற்றிய கருத்துக்கள் லொக்கினால் முன்வைக்கப்பட்ட போதும் அவை பிற்காலத்தில் பெருமளவுக்கு விமர்சிக்கப்பட்டன. ஆயினும் தாராண்மைவாத கோட்பாட்டின் தந்தையாக இவர் போற்றப்படுகின்றார். பாராளுமன்ற ஜனநாயகத்தின் குறியீடாகவும் இவர் இருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - 13

# ரூசோவின் அரசியல் கருத்துக்கள்

## Rousseau (1712-1778)

### அறிமுகம்

பிரான்சிய புரட்சிக்கு அறிவியல் ரீதியான பங்களிப்பை வழங்கியவர்களுள் முக்கியமானவராக ரூசோ குறிப்பிடப்படுகின்றார். இதனால் பிரான்சியப் புரட்சியின் தந்தை எனவும் அழைக்கப்படுகின்றார். சமூக ஒப்பந்த கோட்பாட்டாளர்களுள் முக்கியமானவராகவும் நவீன மக்களாட்சித் தத்துவத்தின் முன்னோடியாகவும் இவர் காணப்படுகின்றார்.[1] இவர் ஹொப்சை போலவோ அல்லது லொக்கை போலவோ முறையாக பல்கலைக்கழகக்கல்வி கற்றவர் அல்ல. அத்துடன் தன்னை ஒரு அரசியல் கோட்பாட்டாளராக எக்காலத்திலும் கருதிக்கொண்டவரும் அல்ல. இவரது கருத்துக்கள் அனைத்தும் அவரது அனுபவத்தின் ஊடாகவே வெளியிடப்பட்டன.

### சமுதாய சூழ்நிலை

ரூசோவின் காலத்தில் பிரான்சில் செழிப்பான ஆட்சிமுறையொன்று காணப்பட்டது. 14ஆம் லூயி மன்னன் (Louis XIV King of France) பிரான்சை சிறப்பாக ஆட்சி புரிந்தான். இந்த மன்னன் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியதிகாரங்களை தன்னகத்தே வைத்துக் கொண்டு ஆட்சி செய்தான். இக்காலம் பிரான்சின் பொற்காலம்

1. Chapman.John. W. (1956) *Rousseau-Totalitarian or Liberal?* New York: Columbia University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் வர்ணிக்கப்படுகின்றது. ஆயினும் பிரான்சில் இவரது ஆட்சிக் காலத்தில் மதவிடயங்களுக்கு பெருமளவான சுதந்திரம் காணப்பட்டிருக்கவில்லை. கிறிஸ்தவ மதத்தினை சீர்திருத்தம் செய்கின்ற இயக்கங்களுக்கு தடை விதிக்கப்பட்டன. கிறிஸ்தவ மதத்தைச் சாராதவர்கள் துன்புறுத்தப்பட்டனர். ஆனால் இக்காலத்தில் பிரித்தானியாவின் அரசியல் நிலை வேறு விதமாகக் காணப்பட்டது. பாராளுமன்ற ஆட்சி அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அரசியல் புரட்சிகள் இடம்பெற்றன. மாண்புமிகு புரட்சிக்கு பின்னர் மக்கள் எழுச்சி அங்கு ஏற்பட்டிருந்தது. எனினும் இந்த விடயங்கள் பிரான் சில் அவ்வளவாக தெரிந்திருக்கவில்லை. இங்கிலாந்தின் இந்த மக்கள் எழுச்சியை இங்கிலாந்தில் சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டதன் மூலம் பிரான்சிற்கு தெரியப்படுத்திய முக்கியமான பணியை ரூசோ மேற்கொண்டார். வோல்டையர் (Valtaire 1694-1778) மொண்டேஸ்கியு (Montesquieu 1689-1775) போன்றவர்களுடன் இணைந்து ரூசோ இந்த பணியை மேற்கொண்டார். இதுவே பிற்காலத்தில் பிரான்சிய புரட்சி ஏற்படுவதற்கும் மக்களாட்சி மலர்வதற்கும் காரணமாக அமைந்தது.

**வாழ்க்கைப் பின்னணி**

ரூசோ ஜெனிவாவில் ஒரு சாதாரண மத்தியதர வர்க்க குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய பிறப்பினால் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக அவரது தாயார் இறந்துவிட்டார். இது ரூசோவுக்கு ஒருவிதமான குற்றவுணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இவரது தந்தை ஒரு மணிக்கூட்டு தொழிற்சாலையில் வேலை செய்தார். ஆனால் நடனத்தில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக நீண்டகாலமாக குடும்பத்தை விட்டு விலகி இருந்தார். தந்தையார் ரூசோவுக்கு கல்வி கற்பதற்கு துணைபுரிந்தபோதும் அவரை நாட்டியத்தில் ஈடுபடுத்து வதற்கு பலவந்தமாக முயற்சித்தார். இதனால் 10வது வயதில் ரூசோ அவரது மாமனாரின் கவனிப்பில் வளர்ந்தார். 13வது வயதில் மாமனாரால் தொழிற்சாலையில் பலவந்தமாக வேலைக்கமர்த்தப்பட் டார். இதனால் இவர் 16வது வயதில் வீட்டைவிட்டு வெளியேறினார். பின்னர் ஒரு இளைஞனாக தொழில் தேடும் முயற்சியில் ஈடுபட் டார். பல வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன் ஜாக் ரூசோ (Jean-Jacques Rousseau (1712–78)**



இவர் ஜெனீவாவில் பிறந்த பிரான்சிய அரசியல் சிந்தனையாளர். பிரான்சியப் புரட்சிக்கு இவரது அரசியல் கருத்துக்கள் பெருமளவுக்கு பங்களிப்பாற்றியுள்ளது. பிரான்சியப் புரட்சியின் தந்தை எனவும் ரூசோ அழைக்கப்படுகின்றார். அனுபவ அறிவின் மூலம் அரசியற் கருத்துக்களை வெளியிட்ட பெருமை இவருக்குரியது. சமூக ஒப்பந்த கோட்பாட்டாளர்களுள் முக்கியமானவராகவும் நவீன மக்களாட்சித் தத்துவத்தின் முன்னோடியாகவும் இவர் காணப்படுகின்றார். சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசு, மக்கள் இறைமை, அரசியல் சமுதாயம், பொதுவிருப்பு மற்றும் மக்களாட்சி பற்றி இவர் தெரிவித்த கருத்துக்கள் பிற்கால நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளன. ரூசோ பல முக்கிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். அவற்றில் ''சமத்துவமின்மை பற்றிய கலந்துரையாடல்கள்'' (Discourse on Inequality) ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) மற்றும் ''எமிலி'' (Emile) என்பன மிகவும் முக்கியமானவை ஆகும். ரூசோவின் அரசியல் சிந்தனையின் அடிப்படையாக ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) என்ற நூல் காணப்படுகின்றது.

வெற்றியளிக்கவில்லை. 1728இல் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பல இடங்களுக்கு சுற்றுபயணம் மேற்கொண்டார். இதன் பின்னர் வியன்னாவில் உள்ள பிரான்சிய தூதரகத்தில் வேலைக்கு சேர்ந்தார். ஆனால் மிக விரைவிலேயே அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். இதன்பின்னர் மீண்டும் பிரான்சிற்கு திரும்பி பாரிஸ் நகரில் ஒரு உணவுவிடுதி ஒன்றை ஆரம்பித்தார். இந்த சந்தர்ப்பத்திலேயே 1742இல் திசோன் பல்கலைக்கழகம் நடத்திய மானுடவியல் தொடர்பான ஒரு கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி முதல் பரிசை வென்றார். இச்சம்பவம் அவரது வாழ்வையே மாற்றியமைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திய ரூசோ

சில அரசியல் சிந்தனையாளர்கள் நோக்கத்துடனும் குறிக்கோளுடனும் செயற்பட்டு அரசியல் சிந்தனையாளர்களாக ஆகின்றனர். சிலர் வாழ்க்கையின் சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தி அரசியல் சிந்தனையாளர்கள் ஆகின்றனர். ரூசோ அரசியல் சிந்தனையாளராக ஆகவேண்டும் என்ற எந்தவிதமான குறிக்கோளுடனும் செயற் பட்டவர் அல்ல. காலமும் இடமும் சந்தர்ப்பமும் வாய்த்தபோது அதனை சரியாக பயன்படுத்தி அரசியல் சிந்தனையாளராக மாறினார்.[2] ஏற்கனவே அரசியல், தத்துவம் போன்றவற்றில் ஆர்வம் கொண்டிருந்த இவர் உணவுவிடுதியை நடாத்திவந்த போதும் திசோன் பல்கலைக்கழகம் நடத்திய மானுடவியல் தொடர்பான கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்றார். இது இவரது வாழ்வை மாற்றியமைத்ததுடன் இவரை முக்கியமான அரசியல் சிந்தனையாளராகவும் ஆக்கியது. இந்த கட்டுரைப்போட்டிக்கு இவர் எழுதிய ''கலை மற்றும் விஞ்ஞானத்தின் முன்னேற்றம்'' (Progress of Science and Arts) என்ற கட்டுரையே இவரை அரசியல் கோட்பாட்டாளராக மாற்றியமைத்தது. இதில் ரூசோ முற்றிலும் வேறுபட்ட கருத்தை உலகத்திற்கு முன்வைத்தார். ''மனிதர்கள் இயல்பாக நல்லவர்கள். ஆனால் சமுதாய அமைப்புக்களும் கட்டுப்பாடுகளும் மனிதனைக் கெடுத்துவிட்டன'' என ரூசோ குறிப்பிட்டார்.[3] இதன்பின்னர் 1753இல் இவர் எழுதிய ''மனிதர்களுக்கிடையில் சமத்துவமின்மையின் தோற்றம் யாது மற்றும் அது இயற்கைச் சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது'' (what is the origin of inequality among men and it is authorized by natural laws) என்ற கட்டுரை இவரை பிரபல்யப்படுத்தியது. ரூசோ 1755க்கும் 1761க்கும் இடைப்பட்ட காலத்தில் பல முக்கிய நூல்களை எழுதி பிற்கால அரசியல் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பாற்றியிருக்கிறார்.

---

2. Cranston.Maurice. (1987) *Jean-Jacques: The Early Life and Work of Jean-Jacques Rousseau 1712-1754.* Harmondsworth: Peregrine.
3. Jean Jacques Rousseau. (1954) *The Confessions. Trans by J.M.Cohen,* Baltimore: Penguin Books.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரூசோவின் நூல்கள்**

ரூசோ பல நூல்களை எழுதி வெளியிட்டிருந்தாலும் அவற்றில் 1755இல் வெளியிட்ட ''சமத்துவமின்மை பற்றிய கலந்துரையாடல்கள்'' (Discourse on Inequality) 1762இல் வெளியிட்ட ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) மற்றும் ''எமிலி'' (Emile) 1782இல் வெளியிட்ட ''ஒப்புதல்கள்'' (Confessions) என்பன மிகவும் முக்கியமானவை ஆகும். இதில் மிகவும் முக்கியமானது ''அரசியல் பொருளாதாரம் பற்றிய கலந்துரையாடல்கள்'' ஆகும். (Discourse on Political Economy). இதனைவிட ரூசோவின் அரசியல் சிந்தனையின் அடிப்படையாக ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) என்ற நூல் காணப்படுகின்றது. இவர் ''போலந்து அரசாங்கம்'' (The Government of Poland) என்ற நூலையும் எழுதியுள்ளார். அத்துடன் பல நூல்கள், கட்டுரைகள், சுயசரிதைகள், கல்வியியல் கட்டுரைகள் என பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இதில் ''எமிலி'' (Emile) என்ற நூல் கல்வியியல் தொடர்பான மிக முக்கியமான வெளியீடாக குறிப்பிடப்படுகின்றது. ''எமிலி'' (Emile) மற்றும் ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) ஆகிய இரு நூல்களும் ரூசோவின் வாழ்வையே மாற்றியமைத்தது. இவரது நூல்களும் கருத்துக்களும் பலத்த கண்டனங்களுக்கு உள்ளாகின. பிரான்சிலும் ஜெனிவாவிலும் இவரது நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டு கொளுத்தப்பட்டன. இவரது சமகாலத்தவர்கள் எல்லோரும் இவரை விமர்சித்தனர். இவரது கருத்துக்கள் தடை செய்யப்பட்டன. இவ்வாறு ரூசோவின் நூல்கள் அக்கால சூழ்நிலையில் ஏற்படுத்திய தாக்கம் குறிப்பிடத்தக்கது.

**ரூசோவின் நூலான ''சமூக ஒப்பந்தம்''**

ரூசோவின் ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) என்ற நூல் ஆரம்பத்தில் ''சமூக ஒப்பந்தம் அல்லது அரசியல் உரிமைகள் பற்றிய கொள்கைகள்'' (On the Social Contract or Principles of Political Rights) என்ற பெயரிலேயே 1762ல் வெளியிடப்பட்டது. ரூசோவின் ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) நூல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது பகுதி சமூகம் பற்றியும் இரண்டாவது பகுதி இறைமை பற்றியும் மூன்றாவது பகுதி அரசாங்கம் பற்றியும் நான்காவது பகுதி பொது விருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு பற்றியும் குறிப்பிடுகின்றது வர்த்தக சமூகத்தின் இருப்பு காரணமாக தோற்றம் பெற்ற சமத்துவமின்மை தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான அரசியல் சமூகமொன்றை இந்த நூலின் மூலம் ரூசோ முன்மொழிந்தார். சமூக அரசியல் முறைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன மற்றும் அவற்றின் அரசியல் விளைவுகள் யாவை என்பன போன்ற விடயங்களை ஆராய்ந்து சமூக சமத்துவம் மற்றும் மக்களாட்சி என்பன ஏற்படுவதற்கான வழிவகைகளை ரூசோ விளக்கினார். இந்நூலின் மூலம் சட்ட ரீதியான அரசியல் அதிகாரத்தினை ஏற்படுத்த ரூசோ முனைந்தார். இதனை ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) நூலின் முதலாம் பகுதியில் அத்தியாயம் மூன்றில் ரூசோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''பலவந்தத்தின் மூலம் சரியானதை உருவாக்க முடியாது அதனால் சட்ட ரீதியான அதிகாரத்திற்கு கீழ்படியவே நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' எனக் குறிப்பிடுகின்றார்.[4] தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையிலான மன்னராட்சிக்கு எதிரான கருத்துக்களை ரூசோ இந்நூலில் முன்வைத்துள்ளார். மக்கள் இறைமைத் தத்துவத்தின் அடிப்படைகளை இந்நூல் விளக்குகின்றது. அரசியல் சீர்திருத்தங்களும் புரட்சிகளும் ஐரோப்பாவில் ஏற்படுவதற்கு இந்நூல் வழிகாட்டியாக அமைந்தது.

### அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு

நவீன அரசியல் கோட்பாடுகளில் காணப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளை விளக்கி அவற்றிற்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை ரூசோ வலியுறுத்தினார். இதனை தனது ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.[5]

> ''மனிதர்கள் சுதந்திரமானவர்களாக பிறக்கின்றனர். ஆனால் அவர்கள் எல்லா இடங்களிலும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை அடக்கி ஆள்பவர்கள் எங்கும் காணப்படு கின்றார்கள். இது எப்படி இடம்பெற்றது என்று எனக்கு தெரியவில்லை. இதற்கான காரணத்தை கண்டறிந்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதே என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.''

4. O'Hagen.Timothy. *(1999) Rousseau. London:* Routledge.
5. Dent.N. J. H. (1992) *A Rousseau Dictionary. Oxford:* Blackwell.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract)**




தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையிலான மன்னராட்சிக்கு எதிரான கருத்துக்களை ரூசோ இந்நூலில் முன்வைத்துள்ளார். மக்கள் இறைமைத் தத்துவத்தின் அடிப்படைகளை இந்நூல் விளக்குகின்றது. அரசியல் சீர்திருத்தங்களும் புரட்சிகளும் ஐரோப்பாவில் ஏற்படுவதற்கு இந்நூல் வழிகாட்டியாக அமைந்தது. இந்த நூல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது பகுதி சமூகம் பற்றியும் இரண்டாவது பகுதி இறைமை பற்றியும் மூன்றாவது பகுதி அரசாங்கம் பற்றியும் நான்காவது பகுதி பொது விருப்பு கோட்பாடு பற்றியும் குறிப்பிடுகின்றது வர்த்தக சமூகத்தின் இருப்பு காரணமாக தோற்றம்பெற்ற சமத்துவமின்மை தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான அரசியல் சமூகமொன்றை இந்த நூலின் மூலம் ரூசோ முன்மொழிந்தார். சமூக அரசியல் முறைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன மற்றும் அவற்றின் அரசியல் விளைவுகள் யாவை என்பன போன்ற விடயங்களை ஆராய்ந்து சமூக சமத்துவம் மற்றும் மக்களாட்சி என்பன ஏற்படுவதற்கான வழிவகைகளை ரூசோ விளக்கினார். இந்நூலின் மூலம் சட்ட ரீதியான அரசியல் அதிகாரத்தினை ஏற்படுத்த ரூசோ முனைந்தார்.

இக்கூற்றின் மூலம் ரூசோ மனிதர்களின் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக செயற்படப்போவதாக குறிப்பிடுகின்றார். இது பல கேள்விகளை நம்மிடையே ஏற்படுத்துகின்றது. பரம்பரை மன்னராட்சி தொடர்ச்சியாக காணப்பட்டு வந்தபோது மறுமலர்ச்சியும் சுதந்திரத்திற்கான போராட்டங்களும் சிறிதளவேனும் இடம்பெறவில்லையா? நவீன அரசியல் சிந்தனையாளர்கள் எவரும் முன்னர் இது பற்றி குறிப்பிட்டிருக்கவில்லையா? என்பதாகும். உண்மையில் ஜோன் லொக் ரூசோவுக்கு முன்னரே சுதந்திரம் பற்றி அதிகமாக குறிப்பிட்டிருக்கிறார். மக்கள் இறைமை என்பது 18ஆம் நூற்றாண்டில் மிக முக்கியமான அம்சமாக இருந்திருக்கிறது. அவ்வாறாயின் ரூசோ குறிப்பிடுகின்ற முக்கியமான அடிப்படை பிரச்சினை என்ன? சமூகத்தில் மனிதர்கள் எல்லோரும் அடிமைச் சங்கிலிகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைக்கப்பட்டிருக்கின்றனர் என ரூசோ எவ்வாறு குறிப்பிடுகின்றார்? இக்கேள்விகள் முக்கியமானவை. இவற்றிற்கு விடை காண்பது அவசியமானது. ரூசோவுக்கு முன்னர் மக்களின் சுதந்திரம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தாலும் உண்மையில் சமூகத்தில் மக்களுக்கு சுதந்திரம் காணப்பட்டதா? மக்கள் என்ன நிலையில் சமூகத்தில் வாழ்ந்தார்கள்? அவர்கள் உண்மையில் சுதந்திரமாக வாழ்ந்தார்களா? என்ற யதார்த்தமான கேள்வியை ரூசோ முன்வைக்கின்றார்.[6] அக்கால சமூகத்தின் யதார்த்தமான நடைமுறையை விளக்குவதாக ரூசோவின் கேள்வி அமைந்திருக்கின்றது.

ரூசோ தனது ''சமூக ஒப்பந்தம்'' (The Social Contract) என்ற நூலில் ஏன் நடைமுறையில் மக்கள் சுதந்திரம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற கேள்வியை முன்வைக்கிறார். ஆனால் அவருடைய இன்னொரு நூலான ''மனிதர்களுக்கிடையில் சமத்துவமின்மையின் தோற்றம் மற்றும் அடிப்படைகள் பற்றிய இரண்டாவது கலந்துரையாடல்'' (Second discourse on the origin and foundations of inequality among men) என்ற நூலில் இதுபற்றி குறிப்பிட்டுள்ளார். தனியார் சொத்துடமையினால் ஏற்பட்ட சமத்துவமின்மையே சுதந்திரமின்மைக்கும் அடிமைநிலைக்கும் காரணம் என அவர் குறிப்பிடுகின்றார்.[7] புராதனகால சமுதாயத்தில் சொத்துடமை காணப்பட்டிருக்கவில்லை. இதனால் எல்லோரும் சமத்துவமுடையவர்களாகவும் சுதந்திரமானவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால் பிற்காலத்தில் சொத்துடமையின் வருகை அரசியல் பொருளாதார மற்றும் சமூக ரீதியான சமத்துவமின்மையைத் தோற்றுவித்ததுடன் வர்க்கங்களையும் உருவாக்கி மனிதர்களின் சுதந்திரமின்மைக்கும் அடிமைநிலைக்கும் வழிவகுத்துவிட்டது என ரூசோ குறிப்பிடுகின்றார்.

சொத்துடமை சமமாக பங்கீடு செய்யப்படாமையின் காரணமாக தோன்றிய அதிகாரமுடைய வர்க்கம் மற்றவர்களை ஆதிக்கத்திற்கு

6. Strong.Tracy. B. (1994) *Jean-Jacques Rousseau: The Politics of the Ordinary.* London: Sage.
7. Crocker, L. G. (1968) *Rousseau's Social Contract: An Interpretive Essay.* Cleveland Ohio: Western Reserve University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்தியமையே அரசியல் சுதந்திரமின்மைக்கு காரணமாக அமைந்தது. அத்துடன் இதனால் ஏற்பட்ட பொருளாதார நலன்களுக் கான போட்டியும் சமூகத்தில் கூட்டுறவை விட முரண்பாடுகளுக்கே வழிவகுக்கின்றது. இவையெல்லாவற்றுக்குமான பிரதானமான காரணம் சமூகத்தில் வாழ்கின்ற மனிதர்கள் சமூக அக்கறையற்று சுயநலமாக செயற்படுவதாகும் என ரூசோ விளக்குகின்றார்.

### பிரான்சிய புரட்சியும் ரூசோவும்

18ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மிகமுக்கியமான நிகழ்வாக 1789ல் இடம்பெற்ற பிரான்சிய புரட்சி குறிப்பிடப்படுகின்றது. இதற்கான தத்துவார்த்த அடிப்படையை வழங்கியவர்களுள் மூன்று தலைமுறைகளை சேர்ந்த அரசியல் சிந்தனையாளர்களான வோல்டையார் (Valtaire 1694-1778), மொண்டசஸ்கியூ (Montesquieu 1689-1775), ரூசோ (Rousseau 1712-1778) என்போர் முக்கியமானவர்களாக குறிப்பிடப்படுகின்றார்கள். இவர்களுள் வோல்டையார் (Valtaire 1694-1778) மற்றும் மொண்டசஸ்கியூ (Montesquieu 1689-1775) போன்றோர் உயர்குழாம் வகுப்பினை சேர்ந்தவர்கள். இவர்கள் பிரான்சிய புரட்சிக்கான தத்துவ அடிப்படையை வழங்குவதில் பங்களித்திருந்தாலும் பிரான்சில் ஓர் மக்கள் புரட்சி ஏற்படுவதை அவ்வளவாக விரும்பியிருக்கவில்லை. ஆயினும் ரூசோ பிரான்சிய புரட்சிக்கான தத்துவ அடிப்படையை வழங்கியது மட்டுமின்றி மக்கள் புரட்சி ஒன்றுக்கான அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.[8]

1782 ல் பிரான்சிய புரட்சிக்கு அடித்தளமிட்ட முக்கியமான தத்துவவாதிகளை ரூசோ பிரான்சில் சந்தித்தார். இவர்களுள் பிரான்சிய தத்துவவாதியான டெனிஸ் டிடேரெட் (Denis Diderot) என்பவர் மிகவும் முக்கியமானவர். இவர் பகுத்தறிவை வலியுறுத்தி வெளியிட்ட கலைக்களஞ்சியம் (The founder of the Encyclopedia. A multi volume work of knowledge) மிகவும் முக்கியமானது. இந்த கலைக்களஞ்சியத்திற்கு பல கட்டுரைகளை ரூசோ எழுதியிருக்கிறார்.

8. Hendel, C. W. (1934) *Jean-Jacques Rousseau: Moralist. London:* Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் கோட்பாட்டுக்கான மூலங்கள்**

ரூசோ தனது அரசியல் கோட்பாட்டுக்கான அடித்தளத்தை பல்வேறு மூலங்களில் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார். அவையாவன

1. கம்யூனிசம் : அவரது காலத்தில் காணப்பட்ட கம்யூனிச கருத்துக் களால் ரூசோ கவரப்பட்டுள்ளார். பொருளாதார சமத்துவத்தை வலியுறுத்துகின்ற கம்யூனிச கருத்துக்களை அடிப்படையாக கொண்டு தனது அரசியற் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதனடிப்படையில் ''பொருளாதார சமத்துவம் அற்ற அரசியல் பயனற்றது'' என்ற கருத்தை இவர் வலியுறுத்தினார்.

2. தனிப்பட்ட வாழ்க்கை : தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் சமத்துவமற்ற சமூகம் ஒன்றின் மூலமே ஏற்பட்டது என்பதனால் ''அனைவருக்கும் சமூக சமத்துவம்'' என்ற படிப்பினையை பெற்றுக்கொண்டு தனது அரசியற் கருத்துக் களை முன்வைத்தார்.

3. ஹொப்ஸ் மற்றும் லொக்கின் கருத்துக்கள் : ஹொப்ஸ் மற்றும் லொக்கின் கருத்துக்களினால் கவரப்பட்டு சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் சிறந்த அரசியல் சமுதாயத்தை உருவாக்குவதற்கு முயன்றார். அதன் மூலம் மக்களாட்சி பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தினார்.

4. பிளேட்டோவின் கருத்துக்கள் : பிளேட்டோ தனியுடமைக் கருத்துக்களை எதிர்த்தார். பிளேட்டோ அனைவருக்கும் சொத்து டைமையயும் பொருளாதார சமத்துவத்தையும் வலியுறுத்து கின்றார். இதனால் பிளேட்டோவிடம் காணப்பட்ட தனியுடமைக் கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்களாலும் மற்றும் அவரது பொதுவுடைமை கருத்துக்களாலும் கவரப்பட்டு தனது அரசியற் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

5. மொண்டஸ்கியுவின் கருத்துக்கள் : மொண்டஸ்கியுவின் அரசியலமைப்புவாதம், அதிகாரப்பிரிவினை மற்றும் ஜனநாயகம் போன்ற கருத்துக்களால் கவரப்பட்டு அதனடிப்படையில் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இக்கருத்துக்கள் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமை பற்றிய கருத்தை ரூசோ முன்வைப்பதற்கு பெரிதும் உதவியிருக்கின்றன.

## இயற்கை நிலை பற்றிய கருத்துக்கள்

ரூசோ ஒரு பூரண மக்கள் ஆட்சியை நிறுவுவதற்கு உருவாக்கிய இயற்கை நிலை பெருமளவு லொக்கினதை ஒத்ததாகும். லொக்கை போன்று ரூசோவும் மனிதனை கட்டுப்படுத்துவதற்கு தன்னிகரற்ற அதிகாரம் அவசியம் இல்லை என்று கருதியமையே அதற்கு காரணமாகும். ரூசோ சமூக ஒப்பந்தத்தின் மூலம் ஒரு மனிதனுக்கன்றி முழுச் சமூகத்திற்கும் அதிகாரத்தை பெற்றுக் கொடுக்கிறார். இதன் மூலம் அவர் இயற்கை நிலையில் நிலவிய மனித சமத்துவத்தையும் தனிமனித சுதந்திரத்தையும் சிவில் சமூகத்திலும் அவ்வாறே பாது காப்பதற்கு முயற்சி செய்தார்.[9] சகல மனிதரையும் ஆட்சியின் பங்காளிகளாக ஆக்குவதன் மூலம் அதனை மேற்கொள்ள முடியும் என்றே ரூசோ நம்பினார். இதன்படி சகல மனிதரிடத்திலும் நல்லது கெட்டது பற்றிய உணர்வு காணப்படுகிறது. இயல்பாகவே மனிதன் கொண்டுள்ள சமூகத் தன்மை காரணமாக மனிதன் இயற்கை நிலையில் அமைதியானதும் ஒழுக்க ரீதியானதுமான வாழ்க்கையை அனுபவித்தான். இயற்கை நிலையில் காணப்பட்ட பிறிதொரு பண்பு மனிதனின் சமூக வாழ்க்கை சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருந்தமையாகும். இயற்கை நிலையில் தனியார் சொத்துரிமை ஆரம்பமானதன் பின்னர் இந்நிலை அழிவுற்றது. அதனால் தமது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பாது காத்துக் கொள்வதற்கு மனிதர் அரசியல் சமூகத்திற்குள் நுழைந்தனர். இதற்கான ஒரே வழி முறை சகல மனிதரும் ஆட்சியில் பங்கேற்கக் கூடிய நேரடி ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆட்சி முறையை உருவாக்குவதாகும் என்று ரூசோ கருதினார்.

## சமூக ஒப்பந்தம் பற்றிய ரூசோவின் கருத்துக்கள்

ஹொப்சைப் போன்று ரூசோ, இயற்கை நிலையிலிருந்து சிவில் சமூகத்துக்குள் நுழைதல், அரசை உருவாக்குதல், சிவில் அரசாங்கத்தை

9. Ernst Cassirer. (1989) *The Question of Jean Jacques Rousseau*. New Haven: Yale University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தல் என்பன ஒரு தனி ஒப்பந்தத்தின் மூலமே நிகழ்ந்தது என்று கூறுகிறார். பின்னர் ஹொப்சையும் லொக்கையும் விட வேறுபட்டு இயற்கை நிலையிலிருந்து சிவில் சமூகத்துக்குள் நுழையும் போது மக்கள் இயற்கை நிலையில் அனுபவித்த சகல அதிகாரங்களையும் முழுச் சமூகத்திடம் ஒப்படைத்தனர் என்றும் ரூசோ கூறுகிறார். அதன் படி முழுச் சமூகமும் இறைமை பொருந்தியதாகும். சமூகத்தின் பொது விருப்பினை வெளிப்படுத்தும் ''பொதுச் சித்தத்தின்'' மூலம் இறைமை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு சகல மனிதரும் ஆட்சியில் பங்கேற்கும் ஓர் உண்மையான மக்கள் ஆட்சியே சிறந்தது என்று காட்டுவதற்கு ரூசோ சமூக ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி உள்ளார்.

### பொது விருப்பக் கோட்பாடு (Theory of General will)

ரூசோ சமூக ஒப்பந்தத்தின் ஊடாக பெரும்பான்மையோரின் விருப்பத் தின் அடிப்படையில் அமைந்த மக்களாட்சியே சிறந்தது எனக் குறிப்பிடுகின்றார். இதனை பொதுவிருப்பக் கோட்பாட்டினூடாக (Theory of General will ) விளக்குகின்றார். மக்கள் தமது உரிமைகளை சமுதாயத்திடம் அதாவது மக்களாட்சி அரசிடம் ஒப்படைப்பதனை ''பொது விருப்பு'' (General will) என்பதன் மூலம் ரூசோ விளக்குகின்றார்.

ரூசோவின் கருத்துப்படி சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அரசு என்பது சர்வாதிகார தன்மை மிக்க அரசு அல்ல. அது மக்களினுடைய அரசாகும். இங்கு தனிமனிதர் அனைவருக்கும் சுதந்திரம் காணப்படும். இந்த அரசு ''பொது விருப்பக் கோட்பாட்டின்'' அடிப்படையில் செயற்படும் என ரூசோ குறிப்பிடுகின்றார். ''பொது விருப்பு'' என்பது எல்லோருக்கும் பொதுவானதாகவும் சமமானதாகவும் காணப்படும். இதுவே அரசி னுடைய அடிப்படைச் சட்டமாகவும் இருக்கும். ரூசோ குறிப்பிடுகின்ற அரசினை இயக்குகின்ற முக்கிய கருவியாகவும் இந்த ''பொது விருப்பக் கோட்பாடே'' காணப்படும்.[10]

''பொது விருப்பம்'' என்பது சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தனிமனிதர்கள் தமது அதிகாரம் அனைத்தையும் சமூகத்திற்கு விட்டுக் கொடுத்த பொழுது சமூகத்தில் காணப்படும் அந்த மக்கள்

10. Riley. Patrick. (1986) *The General Will before Rousseau.* Princeton: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமையை ''பொது விருப்பு'' எனக் குறிப்பிடுகின்றார். ரூசோ வின் கருத்துப்படி தனிமனிதர்கள் தமது எல்லா அதிகாரங்களையும் சமூகத்திடம் ஒப்படைக்கின்றார்கள. அவ்வாறு சமூகத்திடம் ஒப்படை க்கப்பட்ட வரம்பற்ற மக்கள் இறைமையை ''பொது விருப்பு'' என்று ரூசோ குறிப்பிடுகின்றார்.

"பொது விருப்பக் கோட்பாட்டை" (Theory of General Will) தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமாயின் அதனுள் காணப்படுகின்ற Actual Will மற்றும் Real Will போன்ற எண்ணக்கருக்களையும் அதற்கிடையிலான வேறுபாட்டையும் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். Actual Will என்பது சுயநலமான பகுத்தறிவற்ற தனி மனிதனுக்கு மட்டும் நன்மை தரக்கூடிய விருப்பம் என்று ரூசோ குறிப்பிடுகின்றார்.[11] இது தனிமனிதனை மட்டுமே கவனத்தில் கொள்கின்றது. சமூகத்தினையோ சமூகப் பொதுநலனையோ இது கவனத்தில் கொள்ளவில்லை. இதற்கு மாறாக Real Will என்பது Actual Will ஐ விட சற்று மேலானது. இது அனைவரின் பொதுநலன் தொடர்பாக ஓரளவுக்கு கவனம் செலுத்துகின்றது. Actual Will ஐ போன்று Real will தனிமனிதர்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளாது அனைவரினதும் பொதுநலன் தொடர்பாக ஓரளவுக்கு கவனத்தில் கொள்கின்றது. ஓரளவுக்கு சமூகநலனில் அக்கறை கொண்டதாக காணப்படுகின்றது.

ரூசோவின் கருத்துப்படி ''பொது விருப்பம்'' (General will) என்பது எல்லா Real Will னதும் மொத்த வடிவமாகும். இது முழுக்க முழுக்க சமூக நலனையே கருத்தில் கொள்ளும். சமூக நலன் மற்றும் பொதுநலனின் ஊடாக தனிமனிதர்களின் உரிமைகளையும் சமத்துவத்தையும் பேணும் என இவர் குறிப்பிடுகின்றார்.[12] பொது விருப்பு என்பது சமூகத்தின் பெரும்பான்மையினரின் விருப்பு என்று கொள்ளமுடியாது எனவும் அத்துடன் இது தனிமனிதர்களின் நன்மை மற்றும் தீமைகளை உள்ளடக்கிய விருப்பும் அல்ல எனவும் ரூசோ

11. Michael. C. Williams. (1989) *Rousseau: Realism and Realpolitik.* Millennium Press.

12. Arthur M. Melzer. (1983) *Rousseau's Moral Realism: Replacing Natural Law with the General Will.* American Political Science Review.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார். எனவே பொது விருப்பு என்பது பெரும்பான்மை மக்களின் விருப்பு அல்ல. அத்துடன் தனிமனிதர்களின் நன்மை மற்றும் தீமை என்பவற்றை உள்ளடக்கிய விருப்பமும் அல்ல. அது பொதுவான நன்மையை மட்டும் உள்ளடக்கிய விருப்பு ஆகும். எனவே ''பொது விருப்பு'' என்பது பெரும்பான்மையோரின் நன்மையினை மட்டும் கருத்தில் கொண்ட மற்றும் சமூக பொது நன்மையினை அடிப்படையாக கொண்ட விருப்பு ஆகும். ரூசோ இதனை Will of all என்பதில் இருந்து வேறுபடுத்தி நோக்குகின்றார். Will of all என்பது பெரும்பான்மையினரின் விருப்பம் ஆகும். இங்கு பெரும்பான்மையினரின் நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டும் காணப்படும். ஆனால் ''பொது விருப்பு'' பெரும்பான்மையினரின் விருப்பாக அல்லாமல் சமூகத்தின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டதாக இருக்கும். ரூசோ இதனை சமூக ஒப்பந்தம் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''General will க்கும் (பொது விருப்பு) Will of all க்கும் இடையே எப்போதும் வேறுபாடு காணப்படும். General will (பொது விருப்பம்) எப்போதும் பொதுநலனை அடிப்படையாக கொண்டது. Will of all தனியார் நலனை அடிப்படையாக கொண்டது. பொதுநலன் சமூக பொதுநன்மையை மட்டும் கருத்தில் கொள்ள தனியார்நலன் நன்மை மற்றும் தீமைகளைக் கொண்ட தனியாள் நலனை மட்டும் கருத்தில் கொள்கின்றது.''[13]

ரூசோ குறிப்பிடுகின்ற பொதுவிருப்பமானது (General will) பின்வரும் இயல்புகளை கொண்டுள்ளது.

1. ஒருமைப்பாடு (Unity) : சமூக பொதுநன்மையின் அடிப்படையிலான சமூக ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றது.

2. நிரந்தரமானது (Permanant) : இது சமூகப் பொதுநன்மையை கருத்தில் கொள்வதாலும் தீமையானவற்றை விளக்குவதாலும் நிரந்தரமானது எனக் குறிப்பிடப்படுகின்றது.

3. பகுத்தறிவுடன் கூடியதாகவும் (Rational) சரியானவற்றை சமுதாயத்திற்கு வழங்குவதாகவும் (Right will) மக்களிடமிருந்து

13. Jean Jacques Rousseau. (1947) *The Social Contract. Trans by Charles Frankel,* New York: Hafner Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியமாகாததாகவும் (Inalienable) காணப்படுகின்றது என இதன் இயல்பு குறிப்பிடப்படுகின்றது.

### பொதுவிருப்பக் கோட்பாடு தொடர்பான விமர்சனங்கள்

ரூசோவின் பொதுவிருப்பக் கோட்பாடு (Theory of general will) பிற்காலத்தில் பலத்த கண்டனங்களுக்கு உள்ளானது. பல அறிஞர்கள் இதை கடுமையாக விமர்சித்துள்ளார்கள்.[14] அவையாவன

1. இது குழப்பமான ஒன்று எனக் குறிப்பிடப்படுகின்றது. General will, Actual will, Real will என ஒன்றோடொன்று தொடர்பு பட்ட விடயங்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது எனக் குறிப்பிடப் படுகின்றது.

2. General will ஐயும் Will of all ஐயும் ரூசோ வேறுபடுத்த முயற் சித்தபோதும் உண்மையில் அவற்றை வேறுபடுத்த முடியாது என்றும் இரண்டும் ஒன்றே எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

3. ரூசோ பலவகையான விருப்புக்கள் பற்றி (General will, Actual will, Real will) குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் விருப்புக்களை பிரிக்க முடியாது என்றும் அவற்றை நன்மையானவை மற்றும் தீமையானவை என்று வேறுபடுத்த முடியாது என்றும் அவை கால ஓட்டத்தில் மாறும் இயல்புள்ளவை என்றும் விமர்சிக் கப்படுகின்றது.

4. General will காணப்படும் இடத்தில் சமத்துவம், நீதி, சுதந்திரம் என்பன காணப்படும் என ரூசோ குறிப்பிட்டுள்ள போதும் General will க்கும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்திற்கும் எவ்வாறு தொடர்பு காணப்படுகின்றது என்பதை அவர் தெளிவாக விளக்கவில்லை எனவும் கண்டிக்கப்படுகின்றது.

ஆயினும் ''பொதுவிருப்பக் கோட்பாடு'' ஜனநாயகத்திற்கு அடிப்ப டையானதாகவும் சமூக பொதுநன்மைக்கான அடித்தளமாகவும்

14. Wolder. Robert. (2001) *Rousseau: A Very Short Introduction*. Oxford: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்கால சமூக மற்றும் சோசலிச அரசுகளின் வருகைக்கான வழிகாட்டி யாகவும் சமதர்ம கோட்பாட்டின் அடித்தளமாகவும் அமைந்து காணப்படுகின்றது.

**ரூசோவின் இறைமை பற்றிய கருத்துக்கள்**

ரூசோ ''பொது விருப்பு'' கோட்பாட்டையே உச்ச அதிகாரம் உடையது எனக் குறிப்பிடுகின்றார். அதுவே அரசின் இறைமையை வெளிப்படுத்தும் மூலம் எனவும் வலியுறுத்துகின்றார்.[15] அத்துடன் அரசின் அதிகாரங்களும் ஆணைகளும் பொதுவிருப்பிற்கு உட்பட்டே காணப்படவேண்டும் எனவும் பொதுவிருப்பு இறைமையை மீறி எந்த அமைப்பும் செயற்பட முடியாது எனவும் அவ்வாறு செயற்பட்டால் அது தண்டனைக்குரிய குற்றம் எனவும் குறிப்பிடுகின்றார்.

ரூசோ குறிப்பிடுகின்ற இறைமைக் கோட்பாடு தன்னளவில் முரண்பாடுடையதாகவும் குழப்பமானதாகவும் காணப்படுகின்றது. இது இரு தன்மைகளைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது இறைமையானது ''வரம்பற்ற மேலான அதிகாரம்'' என்ற கருத்தைப் பிரதிபலிக்கின்றது. இக்கருத்து மரபுரீதியான இறைமைக் கோட்பாட் டோடு ஒத்ததாக இருக்கின்றது. அதாவது இறைமையின் இருப்பிடம் அரசு என்பதும் அரசின் கட்டுப்பாட்டிற்கு மக்கள் எல்லோரும் அடிபணிய வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாவது முதற்சொன்ன இறைமை பற்றிய கருத்துடன் முரண் படுவதாக இருக்கின்றது. இது மக்கள் இறைமை பற்றிய கருத்தை வெளிப்படுத்துகின்றது. இங்கு மக்களே மேலான அதிகாரம் படைத்த வர்கள் என்பதும் பொது விருப்பின் அடிப்படையில் அரசு கட்டுப் படுத்தப்படும் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. பொது விருப்பின் அடிப்படையிலான மக்களின் மேலான அதிகாரமே இங்கு இறை மையாக குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் இறைமை எங்கு காணப்படுகின்றது என்பது குழப்பமானதாக காணப்பட்ட போதும் அது வரம்பற்ற மேலான அதிகாரமுடையது என்பது தெளிவாக

15. Joan McDonald. (1965) *Rousseau and the French Revolution: 1762-1791. London:* The Athlone Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை ரூசோ பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

> "இறைமை அதிகாரமே அரசியல் வாழ்வினுடைய கொள்கையாக இருக்கின்றது. அரசினுடைய இதயமாக சட்டத்துறை அதிகாரம் காணப்படுகின்றது. நிர்வாகத் துறை அதிகாரம் அரசின் மூளையாக செயற்படுகின்றது. மூளை இயங்காவிட்டால் கூட மனிதன் வாழ முடியும் ஆனால் இதயம் நின்றுவிட்டால் எல்லாம் முடிந்துவிடும்." [16]

இங்கு இறைமை அதிகாரம் வரம்பற்ற மேலானது எனக் குறிப்பிடுகின்ற ரூசோ அது எங்கு காணப்படுகின்றது என்பதில் தெளிவான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. மக்களிடம் கனப்படுகின்றதா? மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள சட்ட சபையிடம் காணப்படுகின்றதா அல்லது சட்ட மற்றும் நிர்வாகத் துறைகளைக் கொண்டுள்ள அரசாங்கத் திடம் காணப்படுகின்றதா என்பது பற்றி தெளிவான விளக்கத்தை ரூசோ முன்வைத்திருகவில்லை.

### ரூசோவின் மக்கள் இறைமை பற்றிய கருத்துக்கள்

மரபுரீதியான இறமைக் கோட்பாடு இறைமையின் இருப்பிடமாக அரசையும் அரசாங்கத்தையுமே குறிப்பிடுகின்றது. ஆனால் ரூசோ இறைமையின் இருப்பிடமாக மக்களையே குறிப்பிடுகின்றார். அரசின் மீது அதிருப்தி கொண்டிருந்த ரூசோ அதற்கு பதிலாக மக்கள் சமுதாயம் ஒன்றை அமைக்க முயன்றார். இதனை ரூசோ "இறைமை ஒருவரிடமும் காணப்படமாட்டாது. அது மக்களிடமே காணப்படும்" எனக் குறிப்பிடுகின்றார். ஆயினும் தல்மன் என்ற அறிஞர் கோட்பாட்டு ரீதியாக மக்களிடம் இறைமை அதிகாரம் காணப்படும் என்பதினை ஏற்றுக்கொண்டாலும் நடைமுறை ரீதியாக இது சாத்தியமற்றது எனக் குறிப்பிடுகின்றார். இன்னும் சில அறிஞர்கள் ரூசோ மக்களிடம் இறைமை காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டாலும் உண்மையில் இறைமை அரசாங்கத்திடமே காணப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றனர். வேறு சில அறிஞர்கள் ரூசோ குறிப்பிடுகின்ற இறைமையானது ஓரிடத்தில் அன்றி அரசிடமும்

16. Jean Jacques Rousseau. (1978) *Discourse on Political Economy. Trans by Judith R.Masters,* New York: St.Martin's Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிட,மும் காணப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றனர். ரூசோவின் "பொதுவிருப்பு" மக்கள் இறைமையாக கொள்ளப்பட முடியுமா என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகின்றது. இறைமையானது அதிகாரத் துடன் தொடர்புடையது என்பது விளங்கிக்கொள்ளக் கூடியது. மக்கள் அதிகாரம் சிலசமயம் இறைமையாக குறிப்பிடப்படலாம். ஆனால் மக்கள் விருப்பு எவ்வாறு இறைமையுடன் தொடர்புபடுகின்றது என்பது தெளிவற்று காணப்படுகின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு ரூசோவின் மக்கள் இறமைக் கோட்பாடு பற்றி பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதும் பிற்கால ஜனநாயக எண்ணக்கருவின் வளர்ச்சிக்கு பெருமளவுக்கு பங்களித்திருக்கிறது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

**அரசாங்க வகைப்பாடுகள்**

பிரதிநிதித்துவ அரசாங்க முறை காணப்பட்ட ஜெனீவாவில் ரூசோ பிறந்த போதும் அவர் பிரதிநிதித்துவ அரசாங்க முறையை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. தீவிரமான ஜனநாயகவாதியாகக் கருதப்பட்ட ரூசோ நேரடி ஜனநாயக முறையையே ஏற்றுக்கொண்டிருந்தார். இவர் மேற்கொண்ட சமூக ஒப்பந்தம் மக்களுடனேயே இடம்பெற்றது. மக்களுக்கே இவர் இறைமை அதிகாரத்தை வழங்கினார். இதனால் பொது விருப்பின் அடிப்படையில் எல்லா மக்களும் பங்கு பெறக் கூடிய நேரடி ஜனநாயக அரசாங்க முறையையே இவர் வலியுறுத்து கின்றார். இவர் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட நகர அரசு முறையை மனதிற் கொண்டே இவர் நேரடி ஜனநாயக அரசாங்க முறையை வலியுறுத்தினார்.

மூன்று வகையான அரசாங்க முறைகளை ரூசோ குறிப்பிடுகின்றார். அவையாவன ஜனநாயகம் (Democracy) பிரபுத்துவ உயர்குடி ஆட்சி (Aristocracy) மற்றும் மன்னராட்சி (Monarchy) என்பனவாகும். பெரும்பான்மையான மக்கள் நீதியானவர்களாக காணப்பட்டால் அதை ஜனநாயக ஆட்சி என்றும் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் நீதியானவர்களாக காணப்பட்டால் அதை பிரபுத்துவ உயர்குடி ஆட்சி என்றும் சிறியளவிலான மக்கள் நீதியானவர்களாக காணப்பட்டால் அதை மன்னராட்சி என்றும் ரூசோ குறிப்பிடுகின்றார். அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அரசுகளுக்கு மன்னராட்சி முறையும் இடைத்தரமான அரசுகளுக்கு பிரபுத்துவ உயர்குடி ஆட்சி முறையும் சிறிய அரசுகளுக்கு ஜனநாயக முறையும் பொருத்தமானதாக இருக்கும் என்று கூறி நகர அரசு முறையை மனதிற் கொண்டு நேரடி ஜனநாயக அரசாங்க முறையை ரூசோ முன்வைத்தார்.

**ரூசோவின் கருத்துக்கள் தொடர்பான விமர்சனங்கள்**

பொதுவிருப்பு மற்றும் மக்கள் இறைமை பற்றிய கருத்துக்கள் ரூசோவினால் முன்வைக்கப்பட்ட போதும் அவை பிற்காலத்தில் பெருமளவுக்கு விமர்சிக்கப்பட்டன. அவையாவன

1. ரூசோ குறிப்பிடுகின்ற ''பொதுவிருப்பக் கோட்பாடு'' சிறிய சமூகத்திற்கும் மற்றும் சிறிய அரசுகளுக்கும் பொருந்துமே தவிர தற்கால தேசிய அரசுகளுக்கு பொருத்தமில்லை எனக் கண்டிக்கப்படுகின்றது.

2. ரூசோ குறிப்பிடுகின்ற மக்கள் இறைமைக் கோட்பாடும் கண்டிக்கப்படுகின்றது. மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்து அவர்கள் தமக்கிடையே சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் செயற்படுவார்கள் என எதிர்பார்ப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என குறிப்பிடப்படுகின்றது.

3. இது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு எதிரானது எனக் கண்டிக்கப்படுகின்றது. இங்கு ஒப்பந்தம் ஒன்று இடம்பெற்றதாக சொல்லப்பட்டபோதும் மக்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகின்ற செயற்பாடே இடம்பெறுகின்றது எனவும் அந்த மக்கள் அதிகாரம் மேலானது இறைமையுடையது எனக் குறிப்பிடப்படுகின்றமையும் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு எதிரானது எனக் கண்டிக்கப்படுகின்றது.

4. மக்களுக்கு அளவற்ற அதிகாரங்களை ரூசோ வழங்குவதும் விமர்சிக்கப்படுகின்றது. மக்களின் பொது விருப்பம் என்பது எப்போதும் நீதியானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு நீதியாக இல்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மக்களின் அளவற்ற அதிகாரங்கள் அராஜக நிலைக்கே வழிவகுக்கும் என விமர்சிக்கப்படுகின்றது.

5. ரூசோ நேரடி ஜனநாயக முறையிலான அரசாங்கத்தை வலியுறுத்திய போதும் இது தற்காலத்திற்கு பொருத்தமற்றது என கண்டிக்கப்படுகின்றது. நேரடி ஜனநாயக முறை சிறிய அரசுகளுக்கு பொருந்துமே தவிர தற்கால தேசிய அரசுகளுக்கு இது பொருத்தமற்றது என குறை கூறப்படுகின்றது.

6. இவருடைய மக்கள் இறமைக் கோட்பாடு தத்துவ ரீதியாக வரவேற்கப்பட்ட போதும் நடைமுறை ரீதியாக பொருத்தமற்றது எனக் குறை கூறப்படுகின்றது.

**ரூசோவின் பங்களிப்புகள்**

ரூசோவினுடைய கருத்துக்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்த போதும் நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் அளப்பரியன. அவையாவன

1. ரூசோ மக்களின் சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பவற்றை வலியுறுத்தியதன் மூலம் பிரான்சிய புரட்சிக்கு பங்களித்துள்ளார். அவரது சுதந்திரம் மற்றும் சமத்துவ கருத்துக்கள் பிரான்சிய புரட்சியை ஊக்குவித்ததுடன் பிரான்சிய புரட்சியின் பின்னரான அரசியல் சமூகத்தை கட்டியெழுப்பவும் உதவியது.

2. ரூசோவின் கருத்துக்களின் அடிப்படையில் அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டமை முக்கியமானதாகும். 19ஆம் நூற்றாண்டில் ரூசோவின் கருத்துக்களால் கவரப்பட்ட ஜெபர்ஷன் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தையும் மற்றும் உரிமைப் பிரகடனத்தையும் அதனடிப்படையில் இடம்பெற்ற அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கத்தையும் ரூசோவின் கருத்துக்களின் அடிப்படையில் மேற்கொண்டிருந்தார்.

3. பயனுடைமை கோட்பாடு பற்றிய ஜெரமி பெந்தமின் கருத்துக் களுக்கு ரூசோவின் பொது விருப்பு பற்றிய கருத்துக்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாக அமைந்திருந்தன. பொதுவிருப்பு என்பது நன்மையானவைகளின் கூட்டாகும் என்று குறிப்பிட்டதன் மூலம் பயன் மற்றும் பயனுடைமை பற்றிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கு இவர் உதவியுள்ளார்

4. கூட்டுடமைவாத சிந்தனைகளின் (Collectivism) வளர்ச்சிக்கு இவரது கருத்துக்கள் அடிப்படையாக அமைந்தமை குறிப்பிடத் தக்கது. தனிமனிதன் ஒருவனிடமோ அல்லது தனிமனிதர்க ளிடமோ அதிகாரத்தை வழங்காது அரசியல் சமூகம் ஒன்றிடம் அதிகாரத்தை வழங்கும் ரூசோவின் முடிவானது தனிமனிதர்களுக் கன்றி ஒரு குழுவுக்கு முன்னுரிமை வழங்கும் கூட்டுடமைவாத சிந்தனையின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

## ரூசோவின் அரசியல் கருத்துக்கள் பற்றிய மதிப்பீடு

தற்கால அரசியல் சிந்தனை வரலாற்றில் ரூசோவுக்கு முக்கியமான இடம் காணப்படுகின்றது. ரூசோவின் அரசியற் கருத்துக்கள் பிற்கால அரசியல் சிந்தனை வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றது. சமூக ஒப்பந்தத் தின் அடிப்படையிலான அரசு, மக்கள் இறைமை, அரசியல் சமுதாயம், பொதுவிருப்பு மற்றும் மக்களாட்சி பற்றி இவர் தெரிவித்த கருத்துக்கள் பிற்கால நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளன. சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அரசு தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்தினை வெளிப்படுத்திய ரூசோ மக்களிடம் முழு அதிகாரத்தையும் ஒப்படைத்து மக்களாட்சியை வலியுறுத்தினார். இது பிற்கால ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்து ள்ளது. சுதந்திரம் மற்றும் சமத்துவம் போன்ற எண்ணக்கருக்களை வலியுறுத்தி பிற்கால பிரான்சிய, ரஷ்ய மற்றும் அமெரிக்க புரட்சி களுக்கு வழிவகுத்த சிறப்பும் இவருக்குரியது. ஆயினும் மக்களிடம் ஒப்படைத்த அதிகாரங்களை எவ்வாறு செயற்படுத்துவது என்பதினை ரூசோ தெளிவாக குறிப்பிடவில்லை. பொது விருப்பக் கோட்பாடு பற்றியும் அவர் தெளிவாக விளக்கவில்லை. இறைமை அதிகாரம் மக்களிடமா அல்லது அரசாங்கத்திடமா காணப்படுகின்றது என்பதும் குழப்பமாக இருக்கின்றது. ஆயினும் மக்கள் பிரதிநிதித்துவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No
Acc No 1579

அடிப்படையாக கொண்ட நவீன ஜனநாயக சிந்தனையின் வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு முக்கியமானதாக குறிப்பிடப்படுகின்றது. பிற்காலத்தில் மனித உரிமைகள் பற்றிய சிந்தனையின் வளர்ச்சிக்கும் இவர் அதிகம் பங்காற்றியிருக்கிறார்.

*''மனிதர்கள் சுதந்திரமானவர்களாக பிறக்கின்றனர். ஆனால் அவர்கள் எல்லா இடங்களிலும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை அடக்கி ஆள்பவர்கள் எங்கும் காணப்படுகின்றார்கள்.''.....''மனிதர்கள் இயல்பாக நல்லவர்கள். ஆனால் சமுதாய அமைப்புக்களும் கட்டுப்பாடுகளும் மனிதர்களைக் கெடுத்துவிட்டன''*

*(ரூசோ - ''சமூக ஒப்பந்தம்'')*

## அத்தியாயச் சுருக்கம்

- *பிரான்சிய புரட்சிக்கு அறிவியல் ரீதியான பங்களிப்பை வழங்கியவர்களுள் முக்கியமானவராக ரூசோ குறிப்பிடப்படுகின்றார். இதனால் பிரான்சியப் புரட்சியின் தந்தை எனவும் அழைக்கப்படு கின்றார்.*
- *ரூசோ காலமும் இடமும் சந்தர்ப்பமும் வாய்த்தபோது அதனை சரியாக பயன்படுத்தி அரசியல் சிந்தனையாளராக மாறினார். திசோன் பல்கலைக்கழகம் நடத்திய மானுடவியல் தொடர்பான கட்டுரைப்போட்டியில் பங்குபற்றி இவர் எழுதிய ''கலை மற்றும் விஞ்ஞானத்தின் முன்னேற்றம்''* (Progress of Science and Arts) *என்ற கட்டுரையே இவரை அரசியல் கோட்பாட்டாளராக மாற்றியமைத்தது.*
- *ரூசோ பல நூல்களை எழுதி வெளியிட்டிருந்தாலும் அவற்றில் 1755ல் வெளியிட்ட ''சமத்துவமின்மை பற்றிய கலந்துரை யாடல்கள்''* (Discourse on Inequality) *1762ல் வெளியிட்ட ''சமூக ஒப்பந்தம்''* (The Social Contract) *மற்றும் ''எமிலி''* (Emile) *1782ல் வெளியிட்ட ''ஒப்புதல்கள்''*(Confessions) *என்பன மிகவும் முக்கியமானவை ஆகும்.*
- *நவீன அரசியல் கோட்பாடுகளில் காணப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளை விளக்கி அவற்றிற்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை ரூசோ வலியுறுத்தினார். ரூசோ தனது ''சமூக ஒப்பந்தம்''*

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(The Social Contract) என்ற நூலில் ஏன் நடைமுறையில் மக்கள் சுதந்திரம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற கேள்வியை முன்வைக்கிறார். தனியார் சொத்துடமையினால் ஏற்பட்ட சமத்துவமின்மையே சுதந்திரமின்மைக்கும் அடிமைநிலைக்கும் காரணம் என அவர் குறிப்பிடுகின்றார்.

- ரூசோ பிரான்சிய புரட்சிக்கான தத்துவ அடிப்படையை வழங்கியது மட்டுமின்றி மக்கள் புரட்சி ஒன்றுக்கான அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.
- ரூசோ தனது அரசியல் கோட்பாட்டுக்கான அடித்தளத்தை பல்வேறு மூலங்களில் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார். கம்யூனிசம், தனிப்பட்ட வாழ்க்கை, ஹொப்ஸ் மற்றும் லொக்கின் கருத்துக்கள், பிளேட்டோவின் கருத்துக்கள், மொண்டஸ்கியுவின் கருத்துக்கள் போன்ற கருத்துக்களால் கவரப்பட்டு அதனடிப்படையில் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.
- ரூசோ மனிதனை கட்டுப்படுத்துவதற்கு தன்னிகரற்ற அதிகாரம் அவசியம் இல்லை என்று கருதி சமூக ஒப்பந்தத்தின் மூலம் ஒரு மனிதனுக்கன்றி முழுச் சமூகத்திற்கும் அதிகாரத்தை பெற்றுக் கொடுக்கிறார். இதன் மூலம் அவர் இயற்கை நிலையில் நிலவிய மனித சமத்துவத்தையும் தனிமனித சுதந்திரத்தையும் சிவில் சமூகத்திலும் அவ்வாறே பாதுகாப்பதற்கு முயற்சி செய்தார்.
- சமூகத்தின் பொது விருப்பினை வெளிப்படுத்தும் "பொதுச் சித்தத்தின்" மூலம் இறைமை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று ரூசோ கூறுகிறார். அதன் படி முழுச் சமூகமும் இறைமை பொருந்தியதாகும்.
- ரூசோ சமூக ஒப்பந்தத்தின் ஊடாக மக்களாட்சியே சிறந்தது எனக் குறிப்பிடுகின்றார். இதனை பொதுவிருப்பக் கோட்பாட்டினூடாக (Theory of General will) விளக்குகின்றார். மக்கள் தமது உரிமைகளை சமுதாயத்திடம் அதாவது மக்களாட்சி அரசிடம் ஒப்படைப்பதனை "பொது விருப்பு" (General will) என்பதன் மூலம் ரூசோ விளக்குகின்றார்.
- ரூசோவின் பொதுவிருப்பக் கோட்பாடு (Theory of general will) பிற்காலத்தில் பலத்த கண்டனங்களுக்கு உள்ளானது. ஆயினும் "பொதுவிருப்பக் கோட்பாடு" ஜனநாயகத்திற்கு அடிப்படையானதாகவும் சமூக பொது நன்மைக்கான அடித்தளமாகவும் பிற்கால சமூக மற்றும் சோசலிச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரசுகளின் வருகைக்கான வழிகாட்டியாகவும் சமதர்ம கோட்பாட்டின் அடித்தளமாகவும் அமைந்து காணப்படுகின்றது.*

- *ரூசோ ''பொது விருப்பு'' கோட்பாட்டையே உச்ச அதிகாரம் உடையது எனக் குறிப்பிடுகின்றார். அதுவே அரசின் இறைமையை வெளிப்படுத்தும் மூலம் எனவும் வலியுறுத்துகின்றார்.*
- *ரூசோ இறைமையின் இருப்பிடமாக மக்களையே குறிப்பிடுகின்றார். இதனை ரூசோ ''இறைமை ஒருவரிடமும் காணப்படமாட்டாது. அது மக்களிடமே காணப்படும்'' எனக் குறிப்பிடுகின்றார். ரூசோவின் மக்கள் இறமைக் கோட்பாடு பிற்கால ஜனநாயக எண்ணக்கருவின் வளர்ச்சிக்கு பெருமளவுக்கு பங்களித்திருக்கிறது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.*
- *இவர் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட நகர அரசு முறையை மனதிற் கொண்டே இவர் நேரடி ஜனநாயக அரசாங்க முறையை வலியுறுத்தினார். ஆயினும் மூன்று வகையான அரசாங்க முறைகளைப் பற்றி ரூசோ குறிப்பிடுகின்றார். அவையாவன ஜனநாயகம்* (Democracy) *பிரபுத்துவ உயர்குடி ஆட்சி* (Aristocracy) *மற்றும் மன்னராட்சி* (Monarchy) *என்பனவாகும்.*
- *தற்கால அரசியல் சிந்தனை வரலாற்றில் ரூசோவுக்கு முக்கியமான இடம் காணப்படுகின்றது. சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசு, மக்கள் இறைமை, அரசியல் சமுதாயம், பொதுவிருப்பு மற்றும் மக்களாட்சி பற்றி இவர் தெரிவித்த கருத்துக்கள் பிற்கால நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - 14

# மார்க்சிசக் கோட்பாடு : கால்மாக்ஸ்
# Marxism : Karl Marx

**கால்மாக்ஸ் : அறிமுகம்**

நவீன அரசியல் சிந்தனை வரலாற்றில் கால்மாக்ஸ் மிகவும் முக்கிய மானவராக குறிப்பிடப்படுகின்றார். இவர் மாக்சிச கருத்தியலின் குறியீடாகவும் அதன் ஸ்தாபகராகவும் கருதப்படுகின்றார். பிற்கால அரசியல் கருத்துக்களும் அரசியல் சிந்தனையாளர்களும் தோற்றம் பெறுவதற்கு வழிகாட்டியாக அமைந்தவர். 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டின் அரசியல் பிரச்சனைகளை வெளிப்படுத்தும் அடிப்படை மூலமாக இவரது அரசியல் கருத்துக்கள் காணப்பட்டன. கால்மாக்ஸ் மனிதத்துவத்தின் அடையாளமாகவும் மனித குலம் எதிர்நோக்குகின்ற பெருமளவிலான பிரச்சனைகளை வெளிக்கொண்டு வந்தவராகவும் குறிப்பிடப்படுகின்றார். இவர் மனித குலத்தின் ஒருமைப்பாடு, அன்னிய மயமாதல், தொழிலாளர் வகுப்பின் நியாயங்கள், சமூக நிலமைகளை நிலைமாற்றுவதற்கான புரட்சியின் அவசியம், மனித இயல்பு, நீதி, ஒழுக்கம், உரிமைகள், ஜனநாயகம், சொத்து, வர்க்கம், வருமான பங்கீடு மற்றும் பெண்ணுரிமை போன்ற பல சமூக பிரச்சனைகள் தொடர்பான விவாதங்களை முன்வைத்தவராக காணப்படுகின்றார்.[1]

ஆயினும் கால்மாக்ஸ் தொடர்பான பிற்கால ஆய்வுகள் அவரது கருத்துக்களை பல வழிகளில் கண்டிப்பதாகவும் தற்கால

1. Suchting, W. A. (1983) *Marx: An Introduction. Brighton: Harvester;* New York: New York University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பாடு பற்றி விமர்சிப்பதாகவும் அமைந்துள்ளது. எவ்வா றெனினும் நவீன அரசியல் சிந்தனை வளர்ச்சிக்கான கால்மாக் சின் பங்களிப்புக்கள் குறைத்து மதிப்பிடப்பட முடியாதவை. அரசிய லையும் பொருளாதாரத்தையும் இணைத்து சமூக பிரச்சனைகளை அடையாளப்படுத்தியவர். விமர்சன ரீதியாக சமூகப் பிரச்சனைகளை வெளிக்கொண்டு வந்தவர். புரட்சியின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை விளக்கியவர். இவ்வாறு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவர் மாக்சிசத்தின் தந்தையாகவும் முதலாளித்துவ சமூகத்தினை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்தவராகவும் சமத்துவமுடைய கம்யூனிஸ சமுதாயத்தை உருவாக்க உழைத்தவராகவும் குறிப்பிடப்படுகின்றார்.

### வாழ்க்கைப் பின்னணி

1818இல் ஜெர்மனியில் பிறந்தவர். சட்டம் தத்துவம் பற்றி ஜேர்மனி யிலுள்ள பேர்ண் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். தனது 23ஆம் வயதில் “On the difference between the natural philoshophy of Democritus and Epicurus”என்ற கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற் கொண்டு 1841இல் தத்துவத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். கெஹலின் தத்துவங்களால் கவரப்பட்டவர். 1848இல் புகழ்பெற்ற ''மூலதனம்'' என்ற நூலை வெளியிட்டார். 1883இல் தமது இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார். இவரது வாழ்க்கை வறுமையும் துன்பமும் நிறைந்த கொடுமை நிறைந்த வாழ்வாக இருந்தது.

### கால்மாக்சின் நூல்கள்

முதன் முதலாக 1847ல் பிரான்சில் இருந்தபோது ''தத்துவத்தில் வறுமை'' (The Poverty of Philoshophy) என்ற நூலை வெளியிட்டார். பின்னர் 1849ல் லண்டனில் ஏங்கெல்சுடன் இணைந்து ''பொது வுடைமை அறிக்கை'' (The Communist Manifesto) யை வெளியிட் டார். பின்னர் 1860ல் ''அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்ச னத்திற்கு ஒரு பங்கு'' (Contributions to a Critique of Political Economy) என்ற நூலையும் 1867இல் மிகவும் பிரசித்திபெற்ற அவரது நூலான ''மூலதனம்'' (Das Capital) என்ற நூலின் முதல் பாகத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கால்மாக்ஸ் (Karl Marx (1818–83)**



*கால்மாக்ஸ் ஜேர்மனிய அரசியல் சிந்தனையாளர்களுள் முக்கியமானவர். அரசியல் பொருளாதாரம் பற்றிய ஆய்வுகளின் முன்னோடியாக கருதப்படுபவர். இருபதாம் நூற்றாண்டு கம்யூனிசத்தின் தந்தை என இவர் குறிப்பிடப்படுகின்றார். பல்கலைக்கழக ஆசிரியராகவும் பத்திரிகையாளராகவும் கடமையாற்றிய இவர் சோஷலிச இயக்க செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். புரட்சிகர எழுத்தாளராக அறியப்பட்ட கால்மாக்ஸ் அவரது புகழ்பெற்ற வெளியீடுகளான கம்யூனிச கட்சி அறிக்கை மற்றும் மூலதனம் என்பவற்றின் மூலம் மார்க்சிச கோட்பாட்டை முன்வைத்தார். சோஷலிச கருத்துக்களை விஞ்ஞான ரீதியாக மாற்றியமைத்த இவர் பிற்கால சோஷலிச கருத்துக்களின் அபிவிருத்திக்கான முன்னோடியாகவும் கருதப்படுகின்றார்.*

வெளியிட்டார். இதன் பின்னர் 1875இல் அவரது இறுதி நூலான ''திட்டம் பற்றிய திறனாய்வு''(Critique of the Gotha program) என்ற நூல் வெளிவந்தது. கால்மாக்ஸ் இறந்த பின்னர் ''மூலதனம்'' (Das Capital) என்ற நூலின் இரண்டாம் பாகம் அவரது நண்பர் எங்கெல்சினால் தொகுத்து வெளியிடப்பட்டது.

**மார்க்சிசக் கோட்பாடு**

மார்க்சிசக் கோட்பாடானது மார்க்ஸிசம் என்றும் விஞ்ஞான சோசலிசம் என்றும் பாரம்பரிய மார்க்ஸிசம் என்றும் அழைக்கப்படுகின்றது. கால்மாக்ஸினால் தோற்றுவிக்கப்பட்ட கோட்பாடு என்பதால் மார்க்ஸிசம் என்றும் கற்பனாவாத சிந்தனைகளுக்கு எதிரானது என்பதால் விஞ்ஞான சோசலிசம் என்றும் தற்காலத்தில் நவ மார்க்சிச கருத்துக்கள் தோற்றம் பெற்றுவிட்டதால் கால்மாக்ஸ், லெனின், மாவோசேதுங் போன்றோரால் வளர்த்துச் செல்லப்பட்ட மார்க்சிசக் கருத்துக்கள் பாரம்பரிய மார்க்ஸிசம் என்றும் அழைக்கப்படுகின்றது.[2]

2. Avineri.Shlomo. (1970) *The Social and Political Thought of Karl Marx.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்மாக்சினது இந்த மார்க்சிச கருத்துக்கள் மார்க்ஸ் உயிரோடிருந்த போது அவராலும் பின்னர் அவரது நண்பர் ஏங்கெல்சினாலும் வளர்த்தெடுக்கப்பட்டது. இது 20ஆம் நூற்றாண்டில் நடைமுறைக்கு சாத்தியமானது என நிரூபிக்கப்பட்டு உலகையே உலுக்கிய ஒரு தத்துவம். ஆனால் தற்காலத்தில் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியோடு கீழ்நிலைக்கு சென்று முக்கியத்துவத்தை இழந்திருக்கின்றபோதும் அண்மைக்காலத்தில் சில மாற்றங்களைப் பெற்று இன்றும் நிலைத் திருக்கின்றது. ஒரு காலத்தில் உலகின் அரைப்பகுதி நாடுகளால் மார்க்சிசக் கருத்துக்கள் பின்பற்றப்பட்ட போதும் இன்று நிலைமை அவ்வாறில்லை ஆயினும் மார்க்சிசக் கொள்கையை பின்பற்றுகின்ற நாடுகள் இன்றும் உள்ளன.

**கோட்பாட்டு பின்னணி**

கால்மாக்ஸ் வாழ்ந்த காலத்தில் அறிவியற் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துகொண்டிருந்தது. மதம் அதனுடையை மதிப்பை இழந்தது. சமத்துவமின்மையால் ஒரு சிலரிடம் செல்வம் குவிந்து பெரும்பான்மையோர் வறுமையில் உழன்றனர். சமத்துவமின்மைக்கான உண்மையான காரணங்கள் உணரப்பட்டிருக்கவில்லை. சிறிது சிறிதாக புரட்சிகள் தோன்றத் தொடங்கியிருந்தது. பிரான்சிய புரட்சி, இங்கிலாந்து அமைதிப் புரட்சி என்பன தோன்றியது. புரட்சி போராட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. தொழிலாளர்கள் சுரண்டப்பட்டும் உரிமை மறுக்கப்பட்டும் இருந்தனர். தொழிலாளர் வர்க்கம் தமக்கென தொழிற்சங்கங்களை உருவாக்கி போராட முயன்றது. இந்த காலத்தில் கால்மாக்ஸ் தோன்றி தொழிலாளர்களின் உண்மை நிலையை தெளிவுபடுத்த உழைத்தார். தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி போராட முயன்றார். தொழிலாளர்களுக்கென ஒரு அரச மைக்க முயன்றார். இதுவே மார்க்ஸிசம் என்று அழைக்கப்படுகின்றது. இதனால்தான் மார்க்ஸ் ''தொழிலாளர்கள் தமது பிணைச் சங்கிலி களைத் தவிர இழக்கவேண்டியது ஒன்றுமில்லை என்றும் அவர்கள் ஜெயிப்பதற்கு ஓர் உலகம் உண்டு என்றும் கூறி உலகப் பாட்டாளி களே ஒன்றுபடுங்கள்''[3] என்று அறைகூவல் விடுத்தார்.

3. Marx and Engels. (1962) *Selected Writings in Two Volumes. Moscow:* Foreign Languages Publishing House.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கால்மாக்ஸின் எழுத்துக்களில் அகஸ்ட் காம்டே**
**(Karl Marx and Auguste Comte)**

கால்மாக்ஸ் மனித சமுதாயத்தின் மீதான அக்கறையினையும் சமூக ஈடுபாட்டினையும் அவரோடு சமகாலத்தில் பிரான்சில் வாழ்ந்த அகஸ்ட் காம்டேயிடம் இருந்து பெற்றுக் கொண்டார். கால்மாக்ஸின் எழுத்துக்களில் அகஸ்ட் காம்டேயின் பாதிப்பு அதிகமாக காணப்பட்டது.[4] இவர்கள் இருவருமே மனித சமூகத்தின் பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்திருந்தார்கள். அகஸ்ட் காம்டே கைத்தொழில் சமூகத்தின் பிரச்சனைகளை ஆய்வு செய்ய கால்மாக்ஸ் நவீன சமூகத்தின் பிரச்சனைகளை ஆய்வு செய்திருந்தார். அகஸ்ட் காம்டே மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியானது மூன்று படிநிலைகளின் அடிப்படையில் இடம்பெற்றது எனக் குறிப்பிடுகின்றார். நேர்மறைத் தத்துவம் (The Positive Philoshophy) என்ற நூலில் இறையியல் நிலை, மனோதத்துவ நிலை, சாதகமான நேர்மறை நிலை என்ற மூன்று விதமான மனநிலைகளில் ஏற்படும் மாற்றம் மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்துகின்றது என அகஸ்ட் காம்டே குறிப்பிடுகின்றார். இதேபோன்று கால்மாக்ஸ் மனித வரலாற்றின் பரிணாம வளர்ச்சியை புராதன ஆதிகால சமுதாயம், ஆண்டான் அடிமை சமுதாயம், நிலமானிய சமுதாயம் மற்றும் முதலாளித்துவ சமுதாயம் என்ற நான்கு படிநிலைகளின் ஊடாக விளக்கியுள்ளார். மனித சிந்தனைகளின் வழிமுறையானது (thinking way of human) மனித மனநிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது என அகஸ்ட் காம்டே குறிப்பிட உற்பத்தி முறைகளின் அடிப்படையில் ஏற்படும் உற்பத்தி உறவுகளினாலேயே மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சி ஏற்படுகின்றது என கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடு பற்றியும் அதனால் ஏற்படும் சமூக விளைவுகள் பற்றியும் அகஸ்ட் காம்டே குறிப்பிட்ட கருத்துக்களை தனது மாக்சிச கோட்பாட்டின் அடிப்படையாக கால்மாக்ஸ் மாற்றியமைத்தார்.

---

4. Carver. Terrell. (1982) *Marx's Social Theory. Oxford:* Opus Books and Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கால்மாக்ஸின் எழுத்துக்களில் அகஸ்ட் காம்டேயின் செல்வாக்கு அதிகமாக காணப்பட்டது.

**கால்மாக்ஸின் எழுத்துக்களில் ஹெகல் (Karl Marx and Hegel)**

ஜேர்மன் தத்துவவியலாளரான ஹெகலின் செல்வாக்கு கால்மாக்சினுடைய எழுத்துக்களில் காணப்பட்டது. கால்மாக்சின் மாக்சிசக் கோட்பாட்டுக்கு அடிப்படையான இயக்கவியல் தத்துவத்தை இவர் ஹெகலிடம் இருந்தே பெற்றுக்கொண்டார்.[5] ஹெகல் அக ரீதியான மனித சிந்தனைகளின் வளர்ச்சியை விளக்குவதற்கு இயக்கவியல் தத்துவத்தை பயன்படுத்த கால்மாக்ஸ் அதை புற ரீதியான மனித வரலாற்றின் அபிவிருத்தியை விளக்குவதற்கு பயன்படுத்தியிருக்கிறார். தத்துவ நிலையில் காணப்பட்ட இயக்கவியல் கோட்பாட்டை ஹெகலிடம் இருந்து கடன்வாங்கி சமூகவியல் தளத்திற்கு கொண்டுவந்த பெருமை கால்மாக்சையே சாரும்.

**மூலதனம் (Das Kapital (Capital)**



*அரசியல் பொருளாதாரம் தொடர்பான கால்மாக்சினுடைய கோட்பாட்டை விளக்குகின்ற நூல் இதுவாகும். முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையிலான பொருளாதார நிலைகளை இந்த நூலின் மூலம் கால்மாக்ஸ் வெளிப்படுத்தினார். மரபுரீதியான அரசியல் பொருளாதாரவாதிகளுக்கு மாறாக பொருளாதார சமத்துவம் பற்றியும் பொருளாதார ஏற்றத்தாழ்வு பற்றியும் இவர் விவாதித்தார். இதன் முதலாம் பகுதி கால்மாக்ஸ் உயிரோடிருந்த போது வெளியிடப்பட்டது. அதன் இரண்டாம் மற்றும் மூன்றாம் பாகங்கள் கால்மாக்ஸ் இறந்தபின்னர் அவரது நண்பர் ஏங்கல்சினால் வெளியிடப்பட்டன. மிக அதிகமானோர் பயன்படுத்திய புகழ்பெற்ற நூலாக இந்நூல் குறிப்பிடப்படுகின்றது. முதலாளித்துவ அர்சியல் பொருளாதாரம் தொடர்பான விமர்சனமாக இந்நூல் அமைந்துள்ளது.*

5. Marx and Engels. (1965) *The German Ideology, Trans by Sala Ryanskaya,* London: Lawrence & Wishart.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கம்யூனிஸ கட்சி அறிக்கை (Communist Manifesto)**

வரலாற்றை மாற்றியமைத்த முக்கியமான ஆவணங்களில் கம்யூனிஸ கட்சி அறிக்கையும் ஒன்றாகும். மார்க்சிஸவாதிகளின் பைபிள் என இது வர்ணிக்கப்பட்டது. இது உலகத் தொழிலாளர்களை ஒன்று கூடும்படி அறைகூவல் விடுத்தது. '' ஐரோப்பாவினை கம்யூனிஸம் என்ற ஒரு செங்கோல் வேட்டையாட வருகின்றது''[6] என கம்யூனிஸ கட்சி அறிக்கை தொடங்குகின்றது. கால்மாக்ஸ் கம்யூனிஸ கட்சி அறிக்கையில் உற்பத்திமுறையும் பொருளாதாரமும் வர்க்க முரண்பாடுகளின் மூலம் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கின்றன என குறிப்பிடுகின்றார். கம்யூனிஸ கட்சி அறிக்கையில் வர்க்க முரண்பாடு பற்றி மார்க்ஸ் குறிப்பிடுகின்ற போது ''எல்லா சமூகங்களின் வரலாறும் வர்க்க முரண்பாட்டின் வரலாறே'' எனக் கூறுகின்றார். இதனை வரலாற்று காலகட்டங்களினூடாக எடுத்துக்காட்டி முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் வர்க்க முரண்பாட்டு வரலாற்றின் ஒரு வளர்ச்சிக் கட்டமே என விளக்குகின்றார்.[7]

கம்யூனிஸ கட்சி அறிக்கையின் அறைகூவல்களாக தனியார் சொத்துடமையை ஒழித்து பொதுச் சொத்துடமையை ஏற்படுத்துதல், வருமான உச்ச வரியை ஏற்படுத்துதல், பரம்பரைச் சொத்துரிமையை இல்லாதொழித்தல், குடிபெயர்வோரின் அனைத்து சொத்துக்களையும் பறிமுதல் செய்தல், போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் மூலதனம் என்பவற்றை அரசுடமையாக்குதல், தொழிலாளர் சமத்துவத்தை உறுதிப்படுத்துதல், அரச பாடசாலைகளில் அனைவருக்கும் இலவசக் கல்வியை ஏற்படுத்துதல் என்பனவற்றை மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். இதனடிப்படையில் வர்க்கங்கள் அற்ற சமுதாயத்தை உருவாக்க கால்மாக்ஸ் முயன்றார். இதற்காக கம்யுயூனிஸ கட்சி அறிக்கையில் தனியார் சொத்துடமையை அகற்றி வர்க்கங்கள் இல்லாத அரசற்ற

6. Meszaros Istvan. (1972) *Alienation: Marx's Conception of Man in Capitalist Society.* London: Merlin.
7. Marx. (1968) *The Poverty of Philosophy.* Moscow: Foreign Languages Publishing House.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ சமுதாயத்தை உருவாக்க "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்"[8] என அறைகூவல் விடுத்தார்.

**மார்க்சிசக் கோட்பாட்டுக்கான அடிப்படை**

மார்க்சினது வாழ்வும் அவரது நூல்களுமே மார்க்சிசக் கோட்பாட்டுக்கான பிரதானமான அடிப்படை ஆகும். ஏங்கெல்ஸ் என்றொரு நண்பர் அவருக்கு கிடைத்திருக்காவிட்டால் மார்க்ஸிசம் என்ற தத்துவம் வந்திருக்காது. கால்மாக்சையும் எமக்கு தெரிந்திருக்காது. மார்க்சை மிகக் கொடிய வறுமை வாட்டியபோதும் அவரை பொலிஸ் துரத்தியபோதும் அவருக்கு ஆதரவளித்து மாக்சிசக் கோட்பாட்டை உலகிற்கு தர ஆதரவாக நின்றவர் ஏங்கெல்ஸ். ஆகவேதான் மாக்சிச தத்துவத்தின் தந்தையாக மார்க்ஸ் மட்டுமன்றி ஏங்கெல்சும் குறிப்பிடப்படுகின்றார்.[9]

மார்க்சிசக் கோட்பாடு சமத்துவத்தை வலியுறுத்துகின்றது. சமத்துவமும் மார்க்சிச கோட்பாட்டிற்கான அடிப்படைகளில் ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது. மார்க்சிசக் கோட்பாடு முதலாளிகள் தொழிலாளர்கள் என்பவர்களுக்கிடையிலான சமத்துவமின்மையை எடுத்துக்காட்டி அதனை விளங்கப்படுத்தி அதற்கான தீர்வையும் வலியுறுத்துகின்றது. இத் தீர்வு நடைமுறைக்கு சாத்தியமாக இருந்ததால் இக்கோட்பாடு விஞ்ஞான சோசலிசம் என்று அழைக்கப்பட்டது.

**பொருளியல் மற்றும் இயக்கவியல் அடிப்படை பற்றிய விளக்கம்**

மாக்சிசக் கோட்பாடானது இரு முக்கியமான அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஒன்று பொருளாதார அடிப்படை மற்றொன்று இயக்கவியல் அடிப்படை. வரலாறும் வரலாற்று மாற்றங்களும் தனித்து பொருளாதார காரணிகளாலும் இயக்கவியல் அடிப்படையினாலுமே தீர்மானிக்கப்படுகின்றது

8. Marx and Engels. (1975) *Selected Correspondence.* Moscow: Progress Publishers.
9. Paul Thomas. *(1999) Engels and Scientific Socialism in Engels after Marx (eds.).* University Park: Penn State University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இவர் வாதிடுகின்றார்.[10] பொருளாதாரமே எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றது என்பது மார்க்சினது கருத்து. அதாவது வரலாற்றை, அரசின் தோற்றத்தை, வர்க்கங்களை, சமுதாய நிலையை எல்லா வற்றையும் பொருளாதாரமே தீர்மானிக்கிறது என மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

இயக்கவியல் அடிப்படையை முதலில் பயன்படுத்தியவர் ஹெகல் ஆவார். இவர் மனதில் தோன்றும் எண்ணங்களின் செயற் பாட்டை விளக்க இயக்கவியலை பயன்படுத்தினார். ஆனால் மார்க்ஸ் வரலாற்றையும் வரலாற்று மாற்றத்தினையும் விளக்க இயக்கவியலை பயன்படுத்தினார். இயக்கவியல் என்பது மாற்றத்தின் போக்கை விளக்குவதாகும். இது மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. முதல் நிலை (Thesis) இரண்டாம் நிலை (Anti-Thesis) மூன்றாம் நிலை (Synthesis). முதல் நிலை ஒன்று தோற்றம் பெறுகின்றபோது அதற்கு எதிரான இரண்டாம் நிலையும் தோற்றம் பெறும். பின்னர் இரண்டு நிலைகளும் முட்டி மோதி மூன்றாம் நிலை உருவாகும். இந்த மூன்றாம் நிலை முன்னைய இரண்டு நிலைகளின் மோதலின் விளைவாக ஏற்பட்டதாகும். பின்னர் இந்த மூன்றாம் நிலை முதலாவது நிலையாகக் கருதப்படும். எனவே இந்த செயற்பாடு ஒரு சுற்றோட்ட மாக தொடர்ந்து இடம்பெறும். இதுவே இயக்கவியல் தத்துவம் (இயக்கவியல் பொருள்முதல்வாதம்) எனப்படுகின்றது. கால்மாக்ஸ் இந்த இயக்கவியல் தத்துவத்தை பயன்படுத்தி வரலாற்றின் போக்கை விளக்கினார். அதன்மூலம் கம்யூனிஸ சமுதாயத்தினை எதிர்வு கூறினார்.[11]

### இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றிய விமர்சனங்கள்

கால்மாக்சினுடைய இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றிய கருத்து க்கள் பல்வேறு அடிப்படையில் விமர்சிக்கப்பட்டது. அவையாவன

1. அக ரீதியான அம்சங்களை விடுத்து புற ரீதியான அம்சங் களுக்கே இது அதிக முக்கியம் கொடுக்கிறது என விமர்சிக்கப்

10. Parekh Bhikhu. (1981) *Marx's Theory of Ideology*. London: Croom Helm; johns Hopkins university Press.
11. Marx. (1975) *Early Writings. Trans by Rodney Livingstone and Gregor Benton*, London: Penguin and New Left Review

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. புற ரீதியான அம்சங்கள் மிக முக்கியமானவையாக காணப்படுகின்ற போதும் அக ரீதியான அம்சங்களை புறக் கணிக்க முடியாது என்றும் அக ரீதியான அம்சங்களும் தீர்மானிக்கின்ற சக்தியாக காணப்படுகின்றது என்றும் குறை கூறப்படுகின்றது.

2. கால்மாக்ஸ் மூளைத் தொழிலாளர்களை புறக்கணித்துவிட்டார் எனவும் குறைகூறப்படுகின்றது. கால்மாக்சினுடைய கருத்துக்கள் தொழிலாளர் வர்க்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்திருந்த போதும் அவர் உடல் ரீதியான உழைப்பினை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர்களைப் பற்றி மட்டுமே கருத்திற் கொண்டிருந்தார். மூளையை அடிப்படையாக கொண்டு தொழில் புரியும் தொழிலாளர்களை புறக்கணித்து விட்டார் எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

3. இயக்கவியல் செயன்முறையில் காணப்படும் முரண்நிலை கண்டிக்கப்படுகின்றது. இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றி விளக்குகின்ற போது கால்மாக்ஸ் முதலாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை எனக் குறிப்பிட்டு இயக்கவியல் செயன்முறையானது தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெறும் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் மாக்சிசக் கோட்பாட்டில் இயக்கவியல் அடிப்படையைப் பயன்படுத்துகின்ற போது இயக்கவியல் செயன்முறையானது கம்யூனிஸ சமுதாயத்துடன் முற்றுப் பெற்று விடும் எனக் குறிப்பிடுவது முற்சொன்ன கருத்துக்கு முரணானது என கண்டிக்கப்படுகின்றது.

4. வர்க்க முரண்பாட்டின் பின்னர் கம்யூனிஸ சமுதாயம் தோற்றம் பெறும் எனக் குறிப்பிட்டமை கண்டிக்கப்படுகின்றது. முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் பின்னர் அதன் விளைவாக கம்யூனிஸ சமுதாயம் தோற்றம் பெறும் எனக் குறிப்பிட்டமை அதிகமாக விமர்சிக்கப்பட்டது. கம்யூனிஸ சமுதாயம் அன்றி தொழிலாளர் வர்க்கத்தை பிரதிபலிக்கின்ற பாசிச அடிப்படையிலான சமுதாயம் ஒன்று தோன்றுவதற்கான சாத்தியப்பாடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன என குறிப்பிட்டு கால்மாக்ஸ் அதனைக் கவனத்திற் கொள்ளவில்லை என கண்டிக்கப்படுகின்றது.

**வரலாற்று பொருள்முதல்வாதமும் இயக்கவியல் பொருள்முதல்வாதமும்**

பொருளியலை அடிப்படையாகக்கொண்டு வரலாற்றின் போக்கை விளக்குவதை வரலாற்று பொருள்முதல்வாதம் என்றும் பொருளியலை அடிப்படையாகக்கொண்டு இயக்கவியல் செயற்பாட்டை விளக்கு வதை இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றும் மார்க்ஸ் குறிப்பிடு கின்றார்.[12] இதனடிப்படையில் வரலாற்றை ஐந்து காலகட்டங்களாக பிரித்து மார்க்சிசக் கோட்பாட்டை முன்வைக்கிறார். அவையாவன புராதன கம்யூனிச சமுதாயம், அடிமைமுறைச் சமுதாயம், நிலமானிய சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் மற்றும் கம்யூனிச சமுதாயம் என்பனவாகும்.

**புராதன கம்யூனிச சமுதாயம்**

இது வரலாற்றில் மிகவும் ஆரம்பகாலம். இங்கு மக்கள் உற்பத்தியில் சமநிலை கொண்டிருந்தனர் ஆகவே இங்கு சொத்துடமை தோற்றம் பெற்றிருக்கவில்லை. இதனால் வர்க்க வேறுபாடும் காணப்படவில்லை சுரண்டலும் இருக்கவில்லை. சமத்துவமின்மையும் இருக்கவில்லை. வர்க்க வேறுபாடு இன்மையால் வர்க்க நலன் பேணும் கருவியாக அரசும் இங்கு தோற்றம் பெற்றிருக்கவில்லை ஆனால் இத்தகைய சமத்துவமான புராதன கம்யூனிச சமுதாயம் நீண்டகாலத்திற்கு தொடர்ச்சியாக நிலைக்கவில்லை. உற்பத்தி கருவிகளிலேற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றம் உலோக கருவிகளை தோற்றுவித்த போது அது அடிமையுடமை சமுதாயத்திற்கு வழிவகுத்தது.

**அடிமையுடமை சமுதாயம்**

இங்கு உற்பத்தி கருவிகளிலேற்பட்ட முன்னேற்றம் உலோக கருவிகளை தோற்றுவித்து உற்பத்தி அதிகரிப்புக்கு காரணமாகி சொத்துடமைக்கு வழிவகுத்தது. இது சமத்துவமின்மையை ஏற்படுத்

12. Anthony Giddens. (1971) *Capitalism and Modem Social Theory:* An Analysis of the Writings of Marx. Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியது. இந்த சொத்துடமை வர்க்க வேறுபாட்டுக்கு வழிவகுத்தது. அடிமை மற்றும் அடிமையுடமையாளர் என்ற வர்க்க வேறுபாடு தோன்றியது. அடிமையுடமையாளர் அடிமைகளை சுரண்டினர். உதாரணமாக யுத்த கைதிகள் கொலை செய்யப்படாமல் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டனர். மிகவும் சிறிய எண்ணிக்கையான அடிமையுடமையாளர் பெரும்பான்மையான அடிமைகளின் உழைப்பில் பெற்ற சொத்துக்களைக் கொண்டு ஆளும் வர்க்கமாக மாறினர். எனவே அடிமையுடமையாளர்களைக் காப்பாற்ற அரசு தோற்றம் பெற்றது. ஆரம்ப கால ரோம, ஏதென்ஸ் அரசுகளும் கிரேக்கர் காலத்தில் இடம்பெற்ற அடிமைகள் போராட்டமும் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

**நிலமானிய சமுதாயம்**

விவசாய வளர்ச்சியினால் அடிமைமுறை சமுதாயம் நிலமானிய சமுதாயமாக மாற்றம் பெற்றது. இங்கும் சொத்துடமை காரணமாக வர்க்க வேறுபாடு ஏற்பட்டது. நிலத்துக்கு சொந்தமானவர்கள் நிலப்பிரபுக்கள் எனவும் அவர்களது நிலங்களில் வேலை செய்தவர்கள் குடியானவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். குடியானவர்களின் உழைப்பு நிலப்பிரபுக்களினால் சுரண்டப்பட்டது. இதனடிப்படையில் நிலப்பிரபுக்களின் நலன்பேண நிலப்பிரபுத்துவ அரசு தோற்றம் பெற்றது. இதற்கு உதாரணமாக ஜேர்மனியிலும் பிரான்சிலும் இடம்பெற்ற விவசாயிகள் போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

**முதலாளித்துவ சமுதாயம்**

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி கைத்தொழில் சமுதாயத்தினை தோற்றுவித்தது. அதாவது கைத்தொழில் புரட்சி நிலமானிய சமூகத்தை கைத்தொழில் சமூகமாக மாற்றியது. இங்கு சொத்துடமை முதலாளிகள் வசம் காணப்பட்டது. இதனால் முதலாளிகள், தொழிலாளர்கள் என்ற வர்க்கங்கள் தோற்றம் பெற்றன. தொழிலாளர்கள் முதலாளிகளால் சுரண்டப்பட்டனர். முதலாளிகள் நலன் பேண அரசு தோன்றியது. இக்காலப்பகுதியிலேயே வர்க்க வேறுபாடும் சுரண்டலும் உச்ச கட்டத்தில் காணப்பட்டது. மதிப்புக் கோட்பாடும் (Theory of Value)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகைப் பெறுமதிக் கோட்பாடும் (Theory of Surplus Value) இதற்கு நல்ல உதாரணங்கள் ஆகும்.[13]

முதலாளித்துவ சமுதாயத்தின் கொடுமையான சுரண்டலைப் பொறுக்கமுடியாது தொழிலாளர்கள் கொதித்தெழுவர் என்றும் முதலாளித்துவ அடக்குமுறையை உடைக்க தொழிலாளர்கள் புரட்சி செய்வர் என்றும் அந்த புரட்சி முதலாளித்துவ சமுதாயத்தை ஒழித்துவிடும் என்றும் கால்மார்க்ஸ் எதிர்வு கூறினார். இதன்மூலம் முதலாளித்துவத்திற்கு எதிராக தொழிலாளர்கள் பாட்டாளிவர்க்க சர்வதிகார அரசை உருவாக்குவர் என்றும் அது சோஷலிச அரசு என அழைக்கப்படும் என்றும் மார்க்ஸ் குறிப்பிட்டார். முதலாளித்துவ சமுதாயத்தை முற்றாக ஒழிக்கவும் கம்யூனிச சமுதாயத்தை ஒழுங்கு படுத்தவும் சோஷலிச அரசு செயற்படும் எனக் கூறி முதலாளித்துவம் முற்றாக தோற்கடிக்கப்படும்போது "அரசு உதிர்ந்து மறைந்துவிடும்" என குறிப்பிட்டு கம்யூனிச சமுதாயத்தினை கால்மாக்ஸ் வலியுறுத்து கின்றார்.

### மிகைப் பெறுமதிக் கோட்பாடு (Theory of Surplus Value)

கால்மாக்ஸ் மிகைப்பெறுமதிக் கோட்பாட்டின் மூலம் முதலாளிகளின் சுரண்டல் செயற்பாட்டினை வெளிப்படுத்தினார். மிகைப்பெறுமதி என்பது தொழிலாளர்களின் உழைப்புக்கும் வழங்கப்படும் கூலிக்கும் இடையிலான வேறுபாடாகும். இங்கு உழைப்பு அதிகமாக காணப்பட வழங்கப்படுகின்ற கூலி குறைவாகக் காணப்படும். இதனையே மார்க்ஸ் சுரண்டல் என குறிப்பிடுகின்றார்.

தொழிலாளர் வர்க்கத்திற்கு எப்போதும் நியாயமான சம்பளம் வழங்கப்படுவதில்லை. அவர்களுடைய உழைப்புகேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு மிகக்குறைந்தளவான சம்பளமே வழங்கப்படுகின்றது. முதலாளிகள் இவ்வாறு தொழிலாளர்களின் ஊதியத்தை சுரண்டுவதால் தொழிலாளர்கள் எப்போதும் முதலாளிகளில் தங்கியிருக்க வேண்டி ஏற்படுகின்றது. முதலாளிகள் இலாபம் ஈட்டு வதற்காக இவ்வாறு சுரண்டலில் ஈடுபடுவது மிகைப்பெறுமதியை

13. Marx. (1976) *Capital.* Trans by Ben Fowkes, London: Penguin and New Left Review.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துகின்றது என மிகைப்பெறுமதிக் கோட்பாட்டை கால்மாக்ஸ் முன்வைத்தார். மிகைப்பெறுமதியின் காரணமாக செல்வந்தர் செல்வந்தர்களாகவும் ஏழைகள் ஏழைகளாகவுமே இருப்பதாக கூறி சமத்துவமுள்ள சமுதாயத்தை ஏற்படுத்த கால்மாக்ஸ் முயன்றார்.

**வர்க்க முரண்பாடு**

கால்மாக்ஸ் சமூகத்தின் அமைப்பை வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே நோக்கினார். வர்க்கமும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுமே சமூக அமைப்பை தீர்மானிக்கிறது எனவும் அதை மாற்றுகின்ற கருவியாக செயற்படுகின்றது எனவும் குறிப்பிட்டார். சொத்துடமையின் அடிப்படையிலேயே வர்க்கம் தீர்மானிக்கப் படுகின்றது. வர்க்கம் பொதுவாக சொத்துள்ள வர்க்கம் எனவும் சொத்தற்ற வர்க்கம் எனவும் பிரித்து நோக்கப்படுகின்றது. இதனடிப் படையில் மக்கள் குழுக்கள் பொருளாதார உற்பத்தி செயன்முறையில் எத்தகைய பங்கினை வகிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்து வர்க்க அமைப்பும் அடிப்படையும் தீர்மானிக்கப்படுகின்றது. கால்மாக்ஸ் உற்பத்தி கருவிகளின் இருப்பு மற்றும் தொழிலாளர்களின் கட்டுப்பாடு ஆகிய இரு காரணிகளின் அடிப்படையில் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் தொழிலாளர் வர்க்கம் ஆகியன காணப்படுகின்றன என குறிப்பிடுகின்றார்.

**புரட்சி**

மாக்சிச கோட்பாட்டின் முக்கிய அம்சமாக புரட்சி குறிப்பிடப் படுகின்றது. சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய ஆயுதமாக கால்மாக்ஸ் புரட்சியை குறிப்பிடுகின்றார். புரட்சியின் மூலமே முதலாளித்துவ சமுதாயம் தோற்கடிக்கப்பட்டு தொழிலாளர் அரசு உருவாக்கப்படும் என மார்க்ஸ் எதிர்வு கூறுகின்றார்.[14] ஆனால் புரட்சி எவ்வாறு இடம்பெறும்? அது ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமா? இல்லையா என்பது பற்றி மார்க்ஸ் எதுவும் குறிப்பிடவில்லை. வரலாற்று அடிப்படையில் புரட்சி தானாக இடம்பெறும் என்று

14. Paul Thomas. (1994) *Alien Politics: Marxist State Theory Retrieved. London:* Routledge.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸ் நம்பினார். இரு வகையான புரட்சிகளை மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். அவையாவன அரசியல் புரட்சி மற்றும் சமுதாயப் புரட்சி என்பனவாகும். முதலாளித்துவ சமுதாயம் தோற்கடிக்கப்பட்டு சோஷலிச அரசு ஏற்படுத்தப்படும் போது அங்கு அரசியற் புரட்சி ஏற்படும் எனவும் அதன்பின்னர் சமுதாயம் ஒழுங்குபடுத்தப்பட்டு சமத்துவமான கம்யூனிஸ சமூதாயம் ஏற்படுத்தப்படும் போது அங்கு சமுதாயப் புரட்சி ஏற்படும் என மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். புரட்சி இடம்பெறுவதற்கு பலாத்காரம் அவசியம் என்பது மார்க்சின் கருத்து. தொழிலாளர் புரட்சியில் பலாத்காரத்தின் அவசியத்தை கால்மாக்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''எந்தவொரு பழைய சமூகத்தில் இருந்தும் புதிய சமூகம் பிறப்பதற்கு பலாத்காரம் மருத்துவ மாதாக செயற்படுகின்றது'' எனக் கூறியுள்ளார். இவ்வாறு தொழிலாளர் புரட்சி ஒன்றின் மூலமே முதலாளித்துவம் தோற்கடிக்கப்பட முடியும் என மார்க்ஸ் உறுதியாக நம்பினார்.

### பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

தொழிலாளர் புரட்சி ஒன்று இடம்பெற்று முடிந்தவுடன் சோஷலிச அரசு ஏற்படுத்தப்பட்டு அங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலை நிறுத்தப்படும் என கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார். முதலாளித்துவம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அது முற்றுமுழுதாக இல்லாமல் போய் விடும் என்று சொல்வதற்கில்லை. முதலாளிகள் எதிர்ப்புரட்சி செய்து மீண்டும் முதலாளித்துவத்தை நிலைநிறுத்தவே முயற்சிப்பார். ஆகவே முதலாளித்துவத்தை முற்றாக முறியடிக்கவும் சுரண்டலை இல்லாதொழிக்கவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம் என கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார். இதனை அவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

> ''முதலாளித்துவத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் இடைப்பட்ட காலம், சமுதாயம் ஒன்றில் இருந்து இன்னொன்றுக்கு மாற்றமுறும் காலப்பகுதியாகும். இவ்வரசியல் நிலைமாற்ற காலம் புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகவன்றி வேறொன்றாக இருக்க முடியாது''[15]

15. Sidney Hook. (1962) *From Hegel to Marx: Studies in the Intellectual Development of Karl Marx*. Ann Arbor: University of Michigan Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ சமுதாயத்தை அடைவதையே இது இலக்காக கொண்டிருக்கும். கம்யூனிஸ சமுதாயம் அடையப்பட்டவுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இல்லாதொழிந்துவிடும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை செயற்படுத்துகின்ற நிறுவனமாக சோஷலிச அரசில் கம்யூனிஸ கட்சி காணப்படும்.

**சோஷலிச சமுதாயம்**

முதலாளித்துவ சமுதாயத்தில் தொழிலாளர் புரட்சியொன்று இடம்பெற்றதன் பின்னர் சோஷலிச சமுதாயம் உருவாகும். அங்கு தொழிலாளர்களின் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு உருவாக்கப்படும். முதலாளித்துவத்தை முற்றாக ஒழிப்பதற்கும் கம்யூனிஸ சமுதாயத்தை அடைவதற்காக தொழிலாளர்களை ஒழுங்குபடுத்துவதற்கும் இந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு அவசியமாகும். சோஷலிச சமுதாயத்தில் தொழிற்சாலைகள், உற்பத்திக் காரணிகள் யாவும் முதலாளிகளிடமிருந்து பறிக்கப்பட்டு சமூகத்திற்கு பொதுவானதாக மாற்றப்படும். இங்கு உற்பத்தி கூட்டுமுயற்சியின் மூலம் இடம்பெறுவதனால் சுரண்டல், வர்க்க வேறுபாடு என்பன முற்றாக நீக்கப்படும். சோஷலிச சமுதாயம் கம்யூனிஸ சமுதாயத்தின் ஆரம்ப படியாக செயற்படும். சோஷலிச சமுதாயத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு உதிர்ந்து மறைந்து விட கம்யூனிஸ சமுதாயம் உருவாகும்.

**கம்யூனிச சமுதாயம்**

முதலாளித்துவ சமுதாயத்தில் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும். ஆனால் வழங்கப்படவில்லை. அங்கு சுரண்டல் இடம்பெற்றது. சோஷலிச சமுதாயத்தில் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட்டது. அங்கு ''திறமைக்கேற்றது பெறப்பட்டு வேலைக்கேற்றது வழங்கப்படும்'' கம்யூனிச சமுதாயத்தில் தேவைக்கேற்ற ஊதியம் கிடைக்கும் எனக் கூறப்பட்டது. இங்கு ''திறமைக்கேற்றது பெறப்பட்டு தேவைக்கேற்றது வழங்கப்படும்''[16] எனவே கம்யூனிச

16. Marx and Engels. (2010) *Manifesto of the Communist Party,* Public Domain Books.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் சொத்துடமை தோற்றம் பெறாததால் சுரண்டல் இருக்காது. வர்க்க வேறுபாடும் இருக்காது. சமத்துவம் நிலவும் என கால்மாக்ஸ் எதிர்வு கூறினார். எனவே பொருளாதார காரணிகள் இயக்கவியல் அடிப்படையில் வரலாற்று மாற்றங்களை ஏற்படுத்து கின்றது எனக்கூறி இதனடிப்படையில் கம்யூனிச சமுதாயத்தின் தோற்றத்தை கால்மாக்ஸ் வலியுறுத்துகின்றார்.

**கால்மாக்ஸ் எதிர்வுகூறும் கம்யூனிச சமுதாயத்தின் இயல்புகள்**

1. சோஷலிச அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட அனைவருக்கும் சமமான கல்வி முறை காணப்படும்.

2. சோஷலிச அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர் அமைப்பு காணப்படும். இங்கு அனைவருக்கும் சமமான தேவைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

3. இங்கு தனியார் சொத்துடமை காணப்படமாட்டாது. நிலமும் சொத்தும் சோஷலிச அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்படும்.

4. சொத்துரிமை காணப்படமாட்டாது. சொத்துரிமை வழங்கப்படுவது சமத்துவத்தை சீர்குலைக்கும் என்பதால் சொத்துரிமையை கால்மாக்ஸ் அனுமதிக்கவில்லை.

**மாக்சினுடைய கோட்பாடு பற்றிய விமர்சனங்கள்**

கம்யூனிசம் மற்றும் வர்க்க முரண்பாடு பற்றிய கருத்துக்கள் கால்மாக்சினால் முன்வைக்கப்பட்ட போதும் அவை பிற்காலத்தில் பெருமளவுக்கு விமர்சிக்கப்பட்டன. அவையாவன

1. புரட்சியானது கால்மாக்ஸ் குறிப்பிடுவது போல வர்க்க முரண் பாட்டினால் மட்டும் ஏற்படும் என்று குறிப்பிட முடியாது என விமர்சிக்கப்படுகின்றது. புரட்சி ஏற்படுவதற்கு ஏனைய காரணிகளும் காணப்படலாம். அதிகாரத்தின் தன்மையும் புரட்சி யை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதேசமயம் புரட்சி வன்முறையினால் மட்டும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதும் கண்டிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கால்மாக்ஸ் சமூக நிலைமைகளை கருத்திற்கொள்ளவில்லை எனவும் சமூக மற்றும் பொருளாதார நிலைகளுக்கிடையில் தெளிவான வேறுபாட்டை அடையாளப்படுத்த தவறிவிட்டார் எனவும் கண்டிக்கப்படுகின்றது. இவர் பொருளாதார அடிப்படைகளை மட்டும் கவனத்திற் கொண்டே வர்க்க வேறுபாடுகளை வகைப்படுத்தியிருக்கிறார் என குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் "எல்லா முரண்பாடுகளும் வர்க்க முரண்பாடுகளே" என இவர் குறிப்பிடுவதும் விமர்சிக்கப்படுகின்றது.

3. முரண்பாடுகளினால் மட்டுமே அபிவிருத்தி ஏற்படுகின்றது என கால்மாக்ஸ் குறிப்பிடுவதும் கண்டிக்கப்படுகின்றது. முரண்பாடுகளினால் மட்டுமன்றி கூட்டுறவின் மூலமும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட முடியும் என இவரது கருத்துக்கள் கண்டிக்கப்படுகின்றன.

4. கால்மாக்ஸ் இரு வர்க்கங்களைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் முதலாளி மற்றும் தொழிலாளர் வர்க்கங்களை விட தற்காலத்தில் மூன்றாவது வர்க்கமான நடுத்தர வர்க்கம் காணப்படுகின்றது என்றும் அதைப்பற்றி கால்மாக்ஸ் எதுவும் குறிப்பிடவில்லை என்றும் கண்டிக்கப்படுகின்றது.

**கால்மாக்சின் பங்களிப்புகள்**

கால்மாக்சின் கருத்துக்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்த போதும் நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் அளப்பரியன. அவையாவன

1. மார்க்சிசக் கோட்பாடு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவமாகவும் உலகின் பெரும்பாலான நாடுகளில் பின்பற்றப்படும் கருத்தியலாகவும் தொழிலாளர் சித்தாந்தமாகவும் அமைந்து காணப்படுகின்றமை.

2. பொருளாதரக் காரணியின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கியமை. இறையியல் கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்று விளங்கிய காலப்பகுதியில் முதன்முதலில் சமூகத்தில் பொருளாதாரக் காரணியின் முக்கியத்துவத்தை எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியமை. இன்றும் அனைத்து விடயங்களிலும் பொருளாதரக் காரணியின் முக்கியத்துவம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

3. சமூக பிரச்சனைகளை விஞ்ஞான அடிப்படையில் ஆய்வு செய்தமை. இது பிற்காலத்தில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

4. பல நாடுகளின் அடிப்படைக் கருத்தியலாக மாக்சிச கருத்துக்கள் காணப்பட்டமை. சோவியத் ரஷ்யா, சீனா மற்றும் போலந்து என்பன தமது அரசையும் அரசாங்கத்தையும் கருத்தியல் ரீதியான கொள்கையையும் வெளிப்படுத்த மாக்சிச கருத்துக்களையே பயன்படுத்தின.

5. பல்துறை ஆய்வுகளுக்கு வழிவகுத்தமை. இவரது எழுத்துக்கள் சமூகவியல், அரசியல், பொருளாதாரம், தத்துவம் மற்றும் வரலாறு என்பவற்றை அடிப்படையாக கொண்டிருந்தமையால் பிற்காலத்தில் பல்துறை ஆய்வுகளின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தமை.

6. தொழிலாளர்களின் ஒற்றுமையை வலியுறுத்தியவர். தொழிலாளர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உலகளாவிய ரீதியில் தொழிலாளர்களை ஒன்றுபடும்படி அறைகூவல் விடுத்தார்.

### மார்க்சிசக் கோட்பாடு தொடர்பான மதிப்பீடு

உலகத்தில் கருத்தியற் புரட்சியை ஏற்படுத்திய தத்துவமாக மாக்சிசக் கோட்பாடு காணப்பட்டிருந்த போதும் தற்காலத்திற்கு மார்க்சிசக் கோட்பாடு பொருத்தமில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. ஏனெனில் மார்க்ஸ் குறிப்பிட்ட முதலாளித்துவம் இன்று இல்லை. இது நலன் பேணும் முதலாளித்துவமாக மாறிவிட்டது. இதனால் வர்க்க முரண்பாடு தணிந்துவிட்டது. எனவே மார்க்ஸ் குறிப்பிட்ட புரட்சிக்கு சாத்தியமில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. அதேபோன்று இன்று சொத்துடமைப் பெருக்கத்தை தடுப்பதற்கான வருமான உச்ச வரம்புச் சட்டங்கள் வந்துவிட்டன. வர்க்க முரண்பாட்டை விட இன முரண்பாடு கூர்மையடைந்துவிட்டது. பொருளாதார அடிப்படையோடு கலாச்சார அடிப்படையும் முக்கியத்துவமுடையதாக மாறிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தர வர்க்கத்தின் தோற்றமும் ஸ்டாலின் போன்றோரே கம்யூனிச தத்துவத்தை புறக்கணித்தமையும் மாக்சிச கோட்பாட்டின் மீதான நம்பிக்கையை இல்லாது செய்துவிட்டது. அத்துடன் சோவியத்ரஷ்யாவின் வீழ்சிக்குப் பின்னர் மார்க்சின் கோட்பாடு தொடர்பான கடைசி நம்பிக்கையும் இல்லாது போய்விட்டது எனவும் குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் இவ்வாறு பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் கால்மாக்ஸ் மாக்சிசக் கோட்பாட்டை விஞ்ஞான அடிப்படையில் விளக்கி எதிர்வு கூறி நடைமுறைக்கு சாத்தியமாக்கியும் காட்டியவர். இன்றும் உலகில் சோஷலிச அரசுகள் காணப்படுகின்றன என்பது மார்க்சினுடைய முக்கியத்துவத்தையே எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் மாக்சிசம் இன்னும் மறைந்துவிடவில்லை அது கால மாற்றத்திற்கேற்ப வேறுவடிவத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

> *''தொழிலாளர்கள் தமது பிணைச் சங்கிலிகளைத் தவிர இழக்கவேண்டியது ஒன்றுமில்லை அவர்கள் ஜெயிப்பதற்கு ஓர் உலகம் உண்டு உலகப் பாட்டாளிகளே ஒன்றுபடுங்கள்''. ... ''அறிஞர்கள் உலக பிரச்சனைகளை பலவழிகளில் விளக்கியுள்ளார்கள் ஆனால் அவற்றை மாற்ற முயற்சிப்பதே முக்கியமானது''.*
>
> *(கால்மாக்ஸ் - ''கம்யூனிஸ கட்சி அறிக்கை'')*

## அத்தியாயச் சுருக்கம்

- *நவீன அரசியல் சிந்தனை வரலாற்றில் கால்மாக்ஸ் மிகவும் முக்கியமானவராக குறிப்பிடப்படுகின்றார். இவர் மாக்சிச கருத்தியலின் குறியீடாகவும் அதன் ஸ்தாபகராகவும் கருதப்படுகின்றார். 19ம் மற்றும் 20ம் நூற்றாண்டின் அரசியல் பிரச்சனைகளை வெளிப்படுத்தும் அடிப்படை மூலமாக இவரது அரசியல் கருத்துக்கள் காணப்பட்டன.*
- *முதன் முதலாக 1847ல் பிரான்சில் இருந்தபோது ''தத்துவத்தில் வறுமை''* (The Poverty of Philoshophy) *என்ற நூலை வெளியிட்டார். 1867ல் மிகவும் பிரசித்திபெற்ற அவரது நூலான ''மூலதனம்''* (Das Capital) *என்ற நூலின் முதல் பாகத்தையும் வெளியிட்டார். கால்மாக்ஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த பின்னர் "மூலதனம்" (Das Capital) என்ற நூலின் இரண்டாம் பாகம் அவரது நண்பர் ஏங்கெல்சினால் தொகுத்து வெளியிடப்பட்டது.

- மார்க்சிசக் கோட்பாடானது மார்க்ஸிசம் என்றும் விஞ்ஞான சோசலிசம் என்றும் பாரம்பரிய மார்க்ஸிசம் என்றும் அழைக்கப்படுகின்றது. கால்மாக்ஸ் மனித சமுதாயத்தின் மீதான அக்கறையினையும் சமூக ஈடுபாட்டினையும் அவரோடு சமகாலத்தில் பிரான்சில் வாழ்ந்த அகஸ்ட் காம்டேயிடம் இருந்து பெற்றுக் கொண்டார். மாக்சிசக் கோட்பாட்டுக்கு அடிப்படையான இயக்கவியல் தத்துவத்தை இவர் ஹெகலிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.
- வரலாற்றை மாற்றியமைத்த முக்கியமான ஆவணங்களில் கம்யூனிஸ கட்சி அறிக்கையும் ஒன்றாகும். மார்க்சிஸவாதிகளின் பைபிள் என இது வர்ணிக்கப்பட்டது. இது உலகத் தொழிலாளர்களை ஒன்று கூடும்படி அறைகூவல் விடுத்தது. கால்மாக்ஸ் கம்யூனிஸ கட்சி அறிக்கையில் உற்பத்திமுறையும் பொருளாதாரமும் வர்க்க முரண்பாடுகளின் மூலம் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கின்றன என குறிப்பிடுகின்றார்.
- மார்க்சிசக் கோட்பாடு முதலாளிகள் தொழிலாளர்கள் என்பவர்களுக்கிடையிலான சமத்துவமின்மையை எடுத்துக்காட்டி அதனை விளங்கப்படுத்தி அதற்கான தீர்வையும் வலியுறுத்துகின்றது. இத் தீர்வு நடைமுறைக்கு சாத்தியமாக இருந்ததால் இக்கோட்பாடு விஞ்ஞான சோசலிசம் என்று அழைக்கப்பட்டது.
- மாக்சிசக் கோட்பாடானது இரு முக்கியமான அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஒன்று பொருளாதார அடிப்படை மற்றொன்று இயக்கவியல் அடிப்படை. வரலாறும் வரலாற்று மாற்றங்களும் தனித்து பொருளாதார காரணிகளாலும் இயக்கவியல் அடிப்படையினாலுமே தீர்மானிக்கப்படுகின்றது என இவர் வாதிடுகின்றார்.
- பொருளியலை அடிப்படையாகக்கொண்டு வரலாற்றின் போக்கை விளக்குவதை வரலாற்று பொருள்முதல்வாதம் என்றும் பொருளியலை அடிப்படையாகக்கொண்டு இயக்கவியல் செயற்பாட்டை விளக்குவதை இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றும் மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். இதனடிப்படையில் வரலாற்றை ஐந்து கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டங்களாக பிரித்து மார்க்சிசக் கோட்பாட்டை முன்வைக்கிறார். அவையாவன புராதன கம்யூனிச சமுதாயம், அடிமைமுறைச் சமுதாயம், நிலமானிய சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் மற்றும் கம்யூனிச சமுதாயம் என்பனவாகும்.

- கால்மாக்ஸ் மிகைப்பெறுமதிக் கோட்பாட்டின் மூலம் முதலாளிகளின் சுரண்டல் செயற்பாட்டினை வெளிப்படுத்தினார். மிகைப்பெறுமதி என்பது தொழிலாளர்களின் உழைப்புக்கும் வழங்கப்படும் கூலிக்கும் இடையிலான வேறுபாடாகும். இங்கு உழைப்பு அதிகமாக காணப்பட வழங்கப்படுகின்ற கூலி குறைவாகக் காணப்படும். இதனையே மார்க்ஸ் சுரண்டல் என குறிப்பிடுகின்றார்.
- கால்மாக்ஸ் சமூகத்தின் அமைப்பை வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே நோக்கினார். வர்க்கமும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுமே சமூக அமைப்பை தீர்மானிக்கிறது எனவும் அதை மாற்றுகின்ற கருவியாக செயற்படுகின்றது எனவும் குறிப்பிட்டார்.
- மாக்சிச கோட்பாட்டின் முக்கிய அம்சமாக புரட்சி குறிப்பிடப்படு கின்றது. சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய ஆயுதமாக கால்மாக்ஸ் புரட்சியை குறிப்பிடுகின்றார். புரட்சியின் மூலமே முதலாளித்துவ சமுதாயம் தோற்கடிக்கப்பட்டு தொழிலாளர் அரசு உருவாக்கப்படும் என மார்க்ஸ் எதிர்வு கூறுகின்றார்.
- தொழிலாளர் புரட்சி ஒன்று இடம்பெற்று முடிந்தவுடன் சோஷலிச அரசு ஏற்படுத்தப்பட்டு அங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநிறுத்தப்படும் என கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார். கம்யூனிஸ சமுதாயம் அடையப்பட்டவுடன் சோஷலிச அரசும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இல்லாதொழிந்துவிடும் என எதிர்வு கூறினார்.
- கம்யூனிச சமுதாயத்தில் சொத்துடமை தோற்றம் பெறாததால் சுரண்டல் இருக்காது. வர்க்க வேறுபாடும் இருக்காது. சமத்துவம் நிலவும் என கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார். எனவே பொருளாதாரக் காரணிகள் இயக்கவியல் அடிப்படையில் வரலாற்று மாற்றங்களை ஏற்படுத்துகின்றது எனக்கூறி இதனடிப்படையில் கம்யூனிச சமுதாயத் தின் தோற்றத்தை கால்மாக்ஸ் வலியுறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *கால்மாக்ஸ் தொடர்பான பிற்கால ஆய்வுகள் அவரது கருத்துக்களை பல வழிகளில் கண்டிப்பதாகவும் தற்கால பொருத்தப்பாடு பற்றி விமர்சிப்பதாகவும் அமைந்துள்ளது. எவ்வாறெனினும் நவீன அரசியல் சிந்தனை வளர்ச்சிக்கான கால்மாக்சின் பங்களிப்புக்கள் குறைத்து மதிப்பிடப்பட முடியாதவை. அரசியலையும் பொருளாதாரத்தையும் இணைத்து சமூக பிரச்சனைகளை அடையாளப்படுத்தியவர். புரட்சியின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை விளக்கியவர். இவ்வாறு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்
# BIBLIOGRAPHY


Agrawal, K.M. ( 1990) *Kautilya on Crime and Punishment.* Uttarakhand: Shree Almora Book, Depot Publishing.

Andrew Hacker, (1969) *Political Theory: Philosophy, Ideology, Science.* New York: Macmillan.

Anthony Giddens. (1971) *Capitalism and Modem Social Theory: An Analysis of the Writings of Marx.* Cambridge: Cambridge University Press.

Arnold Brecht. (1959) *Political Theory: The Foundation of the Twentieth – Century Political Thought.* Princeton University Press.

Arthur M. Melzer. (1983) *Rousseau's Moral Realism: Replacing Natural Law with the General Will.* American Political Science Review.

Ashcraft. Richard. (1986) *Revolutionary Politics and Locke's Two Treatises of Government.* Princeton: Princeton University Press.

Avineri.Shlomo. (1970) *The Social and Political Thought of Karl Marx. Cambridge:* Cambridge University Press.

Baker, E. (1958) *Aristotle's Politics (translated),* London: Oxford University Press.

Barry, B. and Hardin, R. (eds) (1982) *Rational Man and Irrational Society? Beverley Hills,* CA: Sage.

Barry, N. (1989) *An Introduction to Modern Political Theory.* Basingstoke: Palgrave Macmillan.

Basham, A. L. (1956) *Aspects of Ancient Indian Culture.* Bombay: Asia Publishing House.

Bauman, Z. (1999) *In Search of Politics. Cambridge:* Polity Press.

Bedau, H. A. (ed.) (1971) *Justice and Equality.* Englewood Cliffs, NJ: Prentice-Hall.

Bellamy, R. and Mason, M. (eds) (2003) *Political Concepts.* Manchester University Press.

Benjamin Jowett. (1953) *Aristotle's Politics. (translation)* New York: Random House.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Benn, S. and Peters, R. (1959) *Social Principles and the Democratic State.* London: Allen & Unwin.

Benoychandra Sen. (1974) *Studues in the Buddhist Jiitakas, Calcutta:* Saraswati Library.

Berlin, I. (1969) 'Two Concepts of Liberty' in *Four Essays on Liberty.* Oxford University Press.

Berry, C. (1986) *Human Nature.* Basingstoke: Palgrave Macmillan.

Bertrand Russell. (1967) *A History of Western Philosophy.* Simon & Schuster.

Bharati Mukherjee. ( 1976) *Kautilya's Concept of Diplomacy.* Calcutta: Minerva Associates Publications.

Birch, A. H. (1993) *The Concepts and Theories of Modern Democracy.* London: Routledge.

Brannigan , M. C. ( 2010 ) *Striking a Balance: A Primer in Traditional Asian Values.* Lanham, MD: Lexington.

Braybrooke David. (1976) The Insoluble Problem of the Social Contract. Dialogue Vol. XV, No. 1.

Carver. Terrell. (1982) *Marx's Social Theory. Oxford:* Opus Books and Oxford University Press.

Chan,W.T. (1969) *Source Book in Chinese Philosophy.* London: Princeton University Press.

Chapman.John. W. (1956) *Rousseau-Totalitarian or Liberal?* New York: Columbia University Press.

Cranston.Maurice. (1987) *Jean-Jacques: The Early Life and Work of Jean-Jacques Rousseau 1712-1754.* Harmondsworth: Peregrine.

Crocker, L. G. (1968) *Rousseau's Social Contract: An Interpretive Essay.* Cleveland Ohio: Western Reserve University Press.

David Gauthier. (1988) *Hobbes's Social Contract: Perspectives on Thomas Hobbes.* Oxford: Clarendon Press.

David Grene. (1950) *Greek Political Theory: The Image of Man in Thucydides and Plato.* University of Chicago Press.

Dent.N. J. H. (1992) *A Rousseau Dictionary.* Oxford: Blackwell.

Dunn. John. (1969) *The Political Thought of John Locke: An Historical Account of the Argument of the Two Treatises of Government.* Cambridge: Cambridge University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Earnest Barker. (1959) *The Political Thought of Plato and Aristotle.* NewYork: Dover Publications.

Earnest Barker. (2009) *Greek Political Theory.* Routledge.

Eduard Zeller. (2009) *Outlines of the History of Greek Philosophy.* BiblioLife.

Ernst Cassirer. (1946) T*he Myth of State. London:* Yale University Press.

Ernst Cassirer. (1989) T*he Question of Jean Jacques Rousseau.* New Haven: Yale University Press.

Federico Chabod. (1958) *Machiavelli and The Renaissance.* New York: Harper & Row.

Gauthier David. (1986) *Morals by Agreement.* Oxford: Oxford University Press.

Gauthier, David. (1990) *Moral Dealing: Contract, Ethics, and Reason.* Cornell: Cornell University Press.

George Modelski. (1964 ) *Kautilya: Foreign Policy and International System in the Ancient Hindu World.* The American Political Science Review, Vol. 58, No. 3.

Gettell. R.G. (1943) *Political Science.* Boston.

Gilbert, F.(1965) *Machiavelli and Guicciardini: Politics and History in Sixteenth Century Florance.* New Jersey: Princeton University Press.

Gokhale, B. G. (1987) *The Concept of Disorder in Early Buddhist Political Thought.* Sri Lanka Journal of Buddhist Studies: Vol. I.

Graham, A.C. (1989) *Disputers of the Tao: Philosophical Argument in Ancient China.* Chicago: Open Court.

Grube, G.M.A. (1935) *Plato's Thought. London:* Methuen&Co.Ltd.

Gupta, V.K. (1987) *Kautilyan Jurisprudence. Kanpur:* B.D.Gupta Publishers.

Guthrie, W.K.C.(1971) *Socrates.* Cambridge University Press.

Hampton Jean. (1986) *Hobbes and the Social Contract Tradition.* Cambridge: Cambridge University Press.

Hampton. Jean. (1986) *Hobbes and the Social Contract Tradition.* Cambridge: Cambridge University Press.

Hegel, G.W.F. (1956) *The Philosophy of History.* Dover Publications.

Held, D. (ed.) (1991) *Political Theory Today.* Oxford: Polity Press.

Hendel, C. W. (1934) *Jean-Jacques Rousseau*: Moralist. London: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Henry.B.V. (1974) *Aristotle: A Contemporary Apprecian.* Indiana University Press.

Herrlee, G. C. (1953) *Chinese Thought: from Confucius to Mao Tse- Tung.* Chicago: University of Chicago Press.

Heywood, A. (2003) *Political Ideologies: An Introduction.* Basingstoke and New York: Palgrave Macmillan.

Hobbes. (1651) *"Leviathan".* Createspace Publishing Platform.

Hoffmann, S. (1981) *Duties Beyond Borders: On the Limits and Possibilities of Ethical International Politics.* N.Y.: Syracuse University Press.

Howard Warrender. (1957) *The Political Philosophy of Hobbes: His Theory of Obligation.* Oxford: Clarendon press.

Hsiao, K.G. (2016) *History of Chinese Political Thought.* London: Princeton University Press.

Isaiah Berlin. (1981) *The Originality of Machiavelli.* Oxford University Press.

Jacob Burckhardt. (1958) *The Civilaization of the Renaissance in Italy.* New York: Harper & Row.

Jean Jacques Rousseau. (1947) *The Social Contract. Trans by Charles Frankel,* New York: Hafner Press.

Jean Jacques Rousseau. (1954) *The Confessions.* Trans by J.M.Cohen, Baltimore: Penguin Books.

Jean Jacques Rousseau. (1978) *Discourse on Political Economy.* Trans by Judith R.Masters, New York: St.Martin's Press.

Joan McDonald. (1965) *Rousseau and the French Revolution*: 1762-1791. London: The Athlone Press.

John Aubrey. (1994) *The Brief Life in Thomas Hobbes:* The Elements of Law, Natural and Politic. Oxford: Oxford University Press.

John Locke. (1963) *Essay Concerning Human Understanding in John Locke Works.* Germany: Scientia Verlag Aalen Press.

John Plamenatz. (1963) *Man and Society: Political and Social Theory:* Machiavelli through Rousseau. New York: McGraw-Hill.

John Plamenatz.(1963) *Machiavelli: Man and Society.* New York:McGraw-Hill.

Joseph Chan. (2007) *"Democracy and Meritocracy: Toward a Confucian Perspective,"* Journal of Chinese Philosophy 34, no. 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Julian.H.Frankilin. (1978) *John Locke and the Theory of Sovereignty. Cambridge:* Cambridge University Press.

Kam, P. V. (1973) *History of Dharmasiistra. Poona:* Bhandarkar Oriental Research Institute.

Kraut, R. (2003) *Aristotle: Political Philosophy.* Oxford University Press.

Lau, D.C. (2000) *Confucius: Introduction to the Analects. Columbia:* Columbia University Press.

Ling, T. (1981) *The Buddha's Philosophy of Man:* Early Indian Buddhist Dialogues. London: Everyman Library.

Locke. (1983) *A Letter Concerning Toleration. Ed. J. H. Tully,* Indianapolis: Hackett Press.

Locke. (1988) *Two Treatises of Government.* Cambridge: Cambridge University Press.

Loy, D. ( 2003 ) *Great Awakening: A Buddhist Social Theory.* Boston: Wisdom Press.

Macpherson, C.B. (1962) *The Political Theory of Possessive Individualism:* Hobbes to Locke. Oxford: Oxford University Press.

Macpherson.C.B. (1962) *The Political Theory of Possessive Individualism:* Hobbes to Locke. Oxford: Oxford University Press.

Marjorie Grene. (1963) *A Portrait of Aristotle.* University of Chicago Press.

Marshall.John. (1994) *John Locke: Resistance,* Religion and Responsibility. Cambridge: Cambridge University Press.

Marx and Engels. (1962) *Selected Writings in Two Volumes.* Moscow: Foreign Languages Publishing House.

Marx and Engels. (1965) *The German Ideology,* Trans by Sala Ryanskaya, London: Lawrence & Wishart.

Marx and Engels. (1975) *Selected Correspondence.* Moscow: Progress Publishers.

Marx and Engels. (2010) *Manifesto of the Communist Party,* Public Domain Books.

Marx. (1968) *The Poverty of Philosophy.* Moscow: Foreign Languages Publishing House.

Marx. (1975) Early Writings. *Trans by Rodney Livingstone and Gregor Benton,* London: Penguin and New Left Review.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Marx. (1976) *Capital. Trans by Ben Fowkes,* London: Penguin and New Left Review.

Max Weber. (1958 ) *'Politics as a Vocation' in H.H. Gerth and C.W. Mills,* From Max Weber: Essays in Sociology. N.Y.: Oxford University Press.

Meszaros Istvan. (1972) *Alienation: Marx's Conception of Man in Capitalist Society.* London: Merlin.

Michael Collins. (2008) *China's Confucius and Western Democracy.* Contemporary Review.

Michael. C. Williams. (1989) *Rousseau: Realism and Realpolitik.* Millennium Press.

Miller, F.D. (1995) Nature, *Justice and Rights in Aristotle's Politics.* Oxford Clarendon Press.

Mills, Charles. (1997) *The Racial Contract.* Cornell University Press.

Mukoupathya, A. k. (2019) *An Introduction to Political Theory.* SAGE Publications India Pvt Ltd.

Nakamura , H. ( 1997 ) *Ways of Thinking of Eastern Peoples.* London: Kegan Paul International.

Niccolo Machiavelli. (1950) The Discourses (Translation: The Prince and the Discourses). New York: Random House.

Niccolo Machiavelli. (1950) *The Prince* (Translation: The Prince and the Discourses). New York: Random House.

Nisbett , R. ( 2003 ) T*he Geography of Thought:* How Asians and Westerners Think Differently …and Why . New York: Free Press.

O'Hagen.Timothy. (1999) *Rousseau.* London: Routledge.

Owen, R. (1972) *A New View of Society or Essays on the Formation of the Human Character.* Basingstoke: Palgrave Macmillan.

Pande, G. C. (1974) *Studies in the Origin of Buddhism,* Delhi: Motilal Banarsidass.

Parekh Bhikhu. (1981) *Marx's Theory of Ideology.* London: Croom Helm; johns Hopkins university Press.

Paul Thomas. (1994) *Alien Politics: Marxist State Theory Retrieved.* London: Routledge.

Paul Thomas. (1999) *Engels and Scientific Socialism in Engels after Marx (eds.).* University Park: Penn State University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Plamenatz, J. (1960 ) *'The Use of Political Theory' in Political Studies.* Sage: Vol. 08.

Plant, R. (1991) *Modern Political Thought.* Oxford: Blackwell.

Plato. (1941) *From The Republic of Plato. Translated by Francis MacDonald Cornford.* NewYork: Oxford University Press.

Pocock, G.A. (1975) *The Machiavellian Moment: Florentine Political Thought and the Atlantic Republican Tradition.* New Jersey: Princeton University Press.

Quentin Skinner. (1978) *The Foundation of Modern Political Thought.* Cambridge University Press.

Richard Robinson. (1969) *Essays in Greek Philosophy.* Oxford: Clarendon Press.

Riley. Patrick. (1986) *The General Will before Rousseau.* Princeton: Princeton University Press.

Roger Boesche. ( 2003) *Kautilya's Arthashastra on War and Diplomacy in Ancient India.* The Journal of Military History, Vol. 67.

Roger Boesche. (2002) *Moderate Machiavelli? Contrasting The Prince with Arthshastra of Kautilya.* Critical Horizons: Vol. 3.

Roger D. Spegele. (1987) *Three forms of Political Realism.* Political Studies: Vol. 35.

Rose, W.D. (1941) *The Basic Works of Aristotle* (Translation), New York: Random House.

Sabine, G.H. (1980) *A History of Political Theory.* Thomson Learning.

Sabine, G.H. (1980) *A History of Political Theory.* Thomson Learning.

Schecter, J. (1967 ) *The New Face of Buddha:* Buddhism and Political Power in Asia. London: Victor Galancz.

Schwartz, B.I. (1985) *World of Thought in Ancient China.* Belknap Press: An Imprint of Harvard University Press.

Sheldon.S. Wolin. (1960) *Politics and Vision:* Continuity and Innovation in Western Political Thought. Boston.

Sidney Hook.(1962) *From Hegel to Marx:* Studies in the Intellectual Development of Karl Marx. Ann Arbor: University of Michigan Press.

Simmons. A. John. (1993) *On the Edge of Anarchy:* Locke, Consent and the Limits of Society. Princeton: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Simmons.A. John. (1992) *The Loekean Theory of Rights.* Princeton: Princeton University Press.

Sommerville. Johann. P. (1992) *Thomas Hobbes: Political Ideas in Historical Context.* New York: St. Martin's Press.

Spengler, J. J. (1969) Kautilya, *Plato and Lord Shang.* Comparative Political Economy, Vol. 113, No. 6.

Spiro, M. E. (1982 [1970]) *Buddhism and Society:* A Great Tradition and Its Burmese Vicissitudes. Berkeley: University of California Press.

Stirk, P. and Weigall, D. (eds) (1995) *An Introduction to Political Ideas. London:* Pinter.

Strong.Tracy. B. (1994) *Jean-Jacques Rousseau:* The Politics of the Ordinary. London: Sage.

Suchting, W. A. (1983) *Marx: An Introduction.* Brighton: Harvester; New York: New York University Press.

Sukumaran, S. (1977) *Political Buddhism in South East Asia: t*he Role of the Sangha in the Modernization of Thailand. London: Hurst.

Suzuki, B.L. (1963) *Mahayana Buddhism:* A Brief Outline. New York: Collier.

Swaris, N. (1999) *The Buddha's Way to Human Liberation.* Colombo: Siridevi.

Sydney Anglo. (1969) *Machiavelli: A Dissection.* New York: Harcourt Brace.

Tan, S.H. (2012) *Democracy in Confucianism. Philosophy Compass:* Blackwell Publishing Ltd.

Taylor, A.E. (2011) *Plato: The Man and His Works.* Dover Publications.

Thomson, J.A.K. (1955) *The Ethics of Aristotle.* Penguin Books Ltd.

Tuck.Richard. (1989) *Hobbes. Oxford:* Oxford University Press.

Tully. James. (1980) *A Discourse on Property: John Locke and his Adversaries.* Cambridge: Cambridge University Press.

Waldron. *Jeremy.G. (2002) Locke and Equality:* Christian Foundations of John Locke's Political Thought. Cambridge: Cambridge University Press.

Walshe, M.O.C (1987) *Thus Have I Heard: The Long Discourses of the Buddha. London:* Wisdom.

Walter, E. V. (1964) *Power and Violence.* The American Political Science Review, Vol. 58, No. 2.

Warder, A.K. (1970) *Indian Buddhism.* New Delhi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Warmington, E.H. (1950) *Great Dialogues of Plato.* New York: Signet Classic.

Warrender. Howard. (1957) *The Political Philosophy of Hobbes:* His Theory of Obligation. Oxford: Clarendon Press.

Wayper, C.L. (1958) *Political Thought.*The English Universities Press.

Wells, H.G. (1951) *The Outline of History.* Cassell & Co Limited.

Werner Jaeger. (1934) *Aristotle: Fundamentals of the History of His Development.* Oxford: Clarendon Press.

Wijesekera, O.H. A. (1952) *Buddhism and Society.* Kandy: Buddhist Publication Society.

Williams. P.M. (1989) *Mahayana Buddhism: The Doctrinal Foundations. London:* Routledge.

Wolder. Robert. (2001) *Rousseau: A Very Short Introduction.* Oxford: Oxford University Press.

Young, W. K. (1994) *'The Legacy of Confucian Culture and South Korean Politics and Economics: An Interpretation'*, Paper presented at the 8th International Conference on Korean Studies.

Zirruner, H. (1951) *The Philosophy of India.* London: Princeton University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சொல் அகராதி


அபிவிருத்தி 12, 16, 63, 97, 98, 112, 115, 127, 184, 235

அரிஸ்டோட்டில் 11, 74, 75, 77, 78, 92, 95, 96, 97, 98, 99, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114

அணுகுமுறை 129, 138, 154

அதிகாரத்துவம் 7, 54

அரசு 11, 18, 35, 36, 37, 38, 42, 44, 46, 51, 52, 57, 59, 61, 66, 68, 69, 71, 74, 75, 77, 79, 80, 81, 82, 83, 84, 85, 88, 89, 90, 92, 93, 94, 95, 99, 100, 101, 104, 109, 110, 111, 112, 113, 119, 123, 127, 130, 132, 139, 142, 143, 144, 145, 146, 147, 156, 160, 162, 165, 167, 170, 175, 178, 188, 190, 192, 196, 205, 209, 211, 212, 214, 217, 229, 230, 231, 232, 233, 239

அரசியல் கோட்பாடு 3, 8, 10, 12, 16, 18, 20, 21, 71

அரசியல் சிந்தனை 9, 43, 45, 80, 91, 117, 128, 129, 135, 214, 217, 218, 219, 237, 240

அரசியல் எண்ணக்கருக்கள் 5, 6, 8, 20

அரசியல் முறை 25, 90, 199

அரசியல் தத்துவம் 8, 9, 12, 20, 62, 63

அரசியலமைப்பு 4, 65, 69, 76, 103, 104, 105, 109, 171, 172, 173, 177, 180, 190, 191, 193, 213

அரசியற் கோட்பாடுகள் 1, 2, 4, 5, 14, 17, 18, 19, 22, 27, 75, 76

அரசியற் கருத்தியல் 8, 9, 20, 25

அரசாங்கம் 4, 51, 54, 57, 58, 59, 60, 61, 68, 79, 92, 127, 130, 141, 143, 144, 145, 147, 155, 160, 171, 173, 175, 178, 179, 180, 181, 183, 186, 187, 190, 191, 192, 193, 198, 200

அரசாங்க வகைப்பாடுகள் 160, 186, 193, 211

அரசின் தோற்றம் 12, 34, 46, 51, 52, 57, 139, 142, 144, 145, 146, 147

அரசின் இயல்பு 35, 46

அதிகாரம் 1, 7, 10, 19, 25, 30, 31, 32, 35, 37, 44, 45, 46, 52, 122, 134, 135, 143, 149, 153, 156, 160, 161, 166, 168, 169, 170, 175, 178, 180, 181, 182, 183,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186, 190, 192, 193, 204, 205, 209, 210, 211, 212, 214, 216, 217
ஆட்சியாளன் 37, 38, 46, 60, 62, 63, 64, 65, 67, 80, 89, 91, 109, 145, 160, 163, 164, 178
ஆட்சிமுறை 38, 47, 51, 53, 57, 62, 63, 65, 68, 105, 106, 161, 169, 179
இயற்கைச் சட்டம் 176, 177
இயற்கை உரிமைகள் 177, 179
இயற்கை நிலை 34, 141, 144, 158, 169, 177, 179, 204
இயக்கவியல் பொருள்முதல்வாதம் 226, 227, 228, 238
இந்து மதம் 24, 28
இறைமை 12, 131, 135, 140, 143, 145, 146, 147, 159, 161, 166, 169, 170, 180, 188, 190, 192, 193, 196, 198, 200, 204, 205, 209, 210, 211, 212, 214, 216, 217
இராஜதந்திரம் 39
உரிமை 7, 26, 144, 145, 150, 156, 160, 162, 170, 177, 178, 181, 184, 185, 189, 221
ஒழுக்கம் 1, 19, 24, 26, 28, 33, 34, 40, 42, 43, 47, 53, 59, 61, 62, 66, 67, 68, 70, 75, 77, 98, 99, 112, 124, 128, 132, 134, 137, 163, 218
கல்வி 33, 66, 67, 69, 78, 79, 84, 95, 96, 109, 126, 148, 150, 172, 173, 195, 219, 234
கடமை 64, 65, 69, 89, 181, 199, 220
கால்மாக்ஸ் 132, 218, 220, 221, 222, 223, 224, 226, 227, 228, 230, 231, 232, 234, 235, 237, 238, 239, 240
கன்பூசியஸ் 26, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70
கிரேக்கர் காலம் 11, 22, 27, 71, 75, 77
கீழைத்தேச அரசியல் 22, 23, 27, 43
கன்பூசியவாதம் 59, 61, 68
கௌடில்யர் 10, 25, 30, 31, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 45, 46, 47, 140
சட்டம் 1, 7, 11, 19, 24, 28, 37, 51, 61, 62, 67, 70, 108, 127, 131, 133, 136, 151, 153, 160, 163, 168, 176, 185, 191, 219
சமத்துவம் 7, 8, 13, 17, 18, 44, 59, 61, 68, 74, 76, 108, 199, 200, 203, 208, 213, 214, 223, 234, 239
சர்வதேச உறவுகள் 39, 47
சர்வாதிகாரம் 40, 47, 191, 232, 239
சமூக அமைப்பு 40, 47, 155
சமூக ஒப்பந்தம் 140, 141, 142, 143, 144, 146, 147, 150, 160, 167, 170, 175, 178, 179, 192, 196, 198, 199, 200, 201, 203, 204, 205, 207, 211, 214, 215

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் 7, 12, 61, 67, 70, 81, 82, 92, 144, 166, 190, 198, 200, 203, 214, 232

சிவில் யுத்தம் 151

சுதந்திரம் 7, 13, 16, 17, 18, 49, 76, 77, 118, 164, 172, 176, 178, 179, 189, 192, 195, 200, 201, 204, 205, 208, 213, 214, 216

சொத்துடமை 85, 106, 107, 114, 126, 174, 183, 184, 185, 187, 193, 201, 228, 229, 234, 239

சோசலிசம் 220, 225, 238

தனியார் சொத்துடமை 85, 183, 184, 185, 187, 193, 234

தாராண்மைவாதம் 12, 15, 187, 193

தேசியவாதம் 130, 131, 138

தேசிய அரசு 130, 175, 188

தோமஸ் ஹொப்ஸ் 12, 139, 140, 146, 148, 150, 153, 155, 167, 168, 180

நகர அரசு 79, 84, 99, 211, 212, 217

நவீன அரசியல் 42, 44, 91, 94, 109, 115, 128, 129, 134, 135, 136, 138, 189, 196, 199, 200, 213, 214, 215, 217, 218, 219, 235, 237, 240

நீதி 1, 7, 13, 16, 19, 33, 38, 43, 53, 59, 61, 66, 68, 74, 79, 81, 82, 83, 84, 87, 89, 91, 92, 93, 94, 108, 126, 141, 162, 163, 187, 208, 218

நேர்மறைவாதம் 13, 253

பகுத்தறிவு 3, 15, 31, 45, 75, 76, 77, 99, 100, 103, 108, 113, 128, 144, 150, 154, 155, 165, 167, 170, 172, 175, 176, 192

பகுப்பாய்வு 5, 13, 19, 20, 154, 168, 219, 222, 253

பாசிசம் 9, 88, 166

பாதுகாப்பு 40, 50, 91, 143, 152, 166

பிளேட்டோ 11, 18, 37, 41, 71, 74, 75, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 97, 101, 104, 105, 107, 108, 109, 110, 111, 112, 135, 140, 146, 157, 183, 203

புரட்சி 13, 15, 21, 151, 155, 156, 171, 172, 173, 181, 188, 189, 191, 195, 202, 216, 221, 229, 230, 231, 232, 234, 239

பொதுக்கொள்கை 15, 21

பொருளாதாரம் 37, 46, 198, 219, 220, 223, 236

பொதுநலன் 53, 57, 106, 206, 207

பௌத்தமதம் 10, 21

மக்கள் 4, 5, 35, 39, 42, 43, 46, 51, 64, 66, 69, 86, 87, 99, 100, 106, 107, 113, 118, 122, 126, 135, 140, 142, 143, 145, 146, 160, 161, 163, 167, 169, 175, 178,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181, 182, 188, 190, 195, 196, 199, 200, 201, 202, 203, 204, 205, 206, 209, 210, 211, 212, 213, 214, 216, 217, 228, 231

மதம் 1, 19, 24, 25, 28, 29, 43, 48, 123, 128, 149, 153, 155, 162, 221

மக்களாட்சி 40, 142, 161, 169, 186, 193, 195, 196, 199, 200, 203, 205, 214, 216, 217

மனித உரிமைகள் 7, 38, 44, 215

மதச்சார்பின்மை 25, 76, 134

மாக்கியவெல்லி து, 30, 115, 116, 117, 119, 120, 121, 128, 129, 131, 132, 133, 135, 136, 137, 138

முடியாட்சி 38, 47, 142, 152, 161, 165, 166, 168, 169, 174, 186, 192, 193

முதலாளித்துவம் 230, 232, 236

மேற்கத்தைய அரசியல் 10, 11, 21, 22, 23, 24, 27, 28, 55, 56, 58, 71, 77, 109

யதார்த்தம் 80

யுத்தம் 35, 36, 41, 46, 47, 72, 77, 151, 166, 172, 173

ராஜதந்திரம் 39, 40

ரூசோ 139, 140, 142, 146, 194, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206, 207, 208, 209, 210, 211, 212, 213, 214, 215, 216, 217

வரலாற்று பொருள்முதல்வாதம் 228, 238

வர்க்கம் 91, 183, 201, 218, 221, 231, 235

வன்முறை 60, 133, 148

விஞ்ஞானம் 4, 37, 46, 157, 167

விமர்சனம் 109, 162, 163

ஜனநாயகம் 5, 8, 41, 61, 64, 76, 86, 87, 99, 106, 127, 133, 138, 172, 203, 211, 214, 217, 218

ஜோன் லொக் 12, 139, 140, 146, 171, 173, 183, 191, 200

Class No:
Acc No 1579
Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1579

Class No:
Acc No 1579

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்

**கலாநிதி ச. பாஸ்கரன்**

'அரசியல் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்' என்ற இந்த நூலில் அரசியல் கோட்பாடுகள் பற்றிய அறிமுகமும் புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடு களும் கிரேக்கர் கால அரசியற் கோட்பாடுகளும் நவீன கால அரசியற் கோட் பாகளில் சமூக ஒப்பந்தக் கோட்பாடும் மாக்சிசக் கோட்பாடும் உள்ளடக்கப்பட் டுள்ளன. அரசியற் சிந்தனையாளர்களில் கௌடில்யர், கன்பூசியஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில், மாக்கியவல்லி, தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், ரூசோ, கால்மாக்ஸ் போன்றவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அரசறிவியலைக் கற்கும் உயரர்தர மாணவர்களுக்கும் அரசறிவியலை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பயிலும் மாணவர்களுக்கும் அரசியற் கோட்பாடுகள் என்ற பகுதி புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மற்றும் உயர்தர மாணவர்களுக்கும் அரசியல் கோட்பாடுகளிலும் சிந்தனைகளிலும் ஆர்வ முள்ள வாசகர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும்.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரியும் கலாநிதி ச.பாஸ்கரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது சிறப்பு கலை மாணிப் பட்டத்தையும் சீனாவின் லியோனிங் பல்கலைக் கழகத்தில் சர்வதேச உறவுகள் துறையில் முதுகலைமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை அரசியல், அரசியற் கோட்பாடுகள், அரசியற் கருத்தியல், சர்வதேச உறவுகள், தெற்காசிய அரசியல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன் தேசிய மற்றும் சர்வதேச ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். பல்கலைக்கழக கற்பித்தலிலும் ஆராய்ச்சிகளிலும் அனுபவம் மிக்க அவரது எழுத்து நடை அவரின் புலமை மற்றும் ஆளுமையின் வெளிப் பாடாகும். அதனை இந்நூலாசிரியரின் எழுத்துக்கள் அழுத்தமாக வெளிப்படுத் தியுள்ளன.

PBD
Rs. 550.00
485025900
ARASIY KOTPADUG SINTHANAI
050920

குமரன் புத்தக இல்லம்

விடயம்: அரசியல்

ISBN 955659658-5

விலை ரூபா 550.00

#846

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org